ஸ்ரீ

# தண்டியலங்காரம்.

## பொருளணியியல்.

[illegible]

[illegible]

(குறிப்பு) [illegible]

## பொருளணிகள்.

க. தன்மை யுவமை யுருவகந் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப் பொருள்வைப் பே வேற்றுமை விபாவனை
யொட்டே யதிசயந் தற்குறிப் பேற்றம்
ஏது நுட்ப மிலேச நிரனிறை
ஆர்வ மொழிசுவை தன்மேம் பாட்டுரை
பரியா யம்மே சமாகித முதாத்த
மவநுதி சிலேடை விசேட
மொப்புமைக் கூட்ட மெய்ப்படு விரோத
மாறுபடு புகழ்நிலை புகழாப் புகழ்ச்சி
நிதரிசனம் புணர்நிலை பரிவருத் தனையே
வாழ்த்தொடு சங்கீ ரணம்பா விகமென
ஏற்ற செய்யுட் கியன்ற வணியே.*

என்பது சூத்திரம்.

இவ்வியல் என்னபெயர்த்தோ எனின், பொருளாகும் அணிகளது இயல்பு உணர்த்தினமையால், பொருளணியிய லென்னும் பெயர்த்து. அஃதேல், சொல்லானுணரப்படும் அணி ஈண்டு உணர்த்திலரோ எனின், மிகுதி பொருண்மேல தாகலான் மிக்கதனாற் பெயர்கொடுக்கப்பட்டது.

இவ்வியலினுள் இச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின்,—அலங்காரங்களின் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தன்மையும் உவமையும் உருவகமும் தீவகமும் பின்வருநிலையும் முன்னவிலக்கும் வேற்றுப்பொருள்வைப்பும் வேற்றுமையும் விபாவனையும் ஒட்டும் அதிசயமும் தற்குறிப்பேற்றமும் ஏதுவும் நுட்பமும் இலேசமும் நிரனிறையும் ஆர்வமொழியும் சுவையும் தன்மேம்பாட்டுரையும் பரியாயமும் சமாகிதமும் உதாத்தமும் அவநுதியும் சிலேடையும் விசேடமும் ஒப்புமைக்கூட்டமும் விரோதமும் மாறுபடுபுகழ்நிலையும் புகழாப்புகழ்ச்சியும் நிதரிசனமும் புணர்நிலையும் பரிவருத்தனையும் வாழ்த்தும் சங்கீரணமும் பாவிகமும் என இவை முப்பத்தைந்தும் மேற்கூறிய செய்யுட்கு ஏற்ற அலங்கார மென்று சொல்லப்படும்; (எ - று)

இவையெல்லாம் உம்மைதொகுத்த எண்ணேகாரம் இடையிட்டு எண்ணப்பட்டவற்றை அவ்வும்மைவிரித்து உரைக்கப்பட்டன.

அஃதேல், இந் முறைமையாயினவாறு என்னையோ எனின்,—இயல்பு விகாரம் என்று இரண்டலவே அவற்றுள், தன்மை - இயல்பாதலான், முற்படு முறைமைத்தாய், தன்மையென்றும் சொன்னடையென்றுஞ் சொல்லப்படும்: உவமை, விகாரமாய் மிக்கவரவிற்றாய்ப் பிற வக்கிரநடையலங்காரங்கட்கு உபகாரமுடைத்தாதலால், தன்மையின்பின்னர் வைக்கப்பட்டது. ஒழிந்தனவும் வைத்தவாறு உய்த்துணர்ந்துகொள்க, ஈண்டு உரைப்பிற் பெருகும். அல்லதூஉம், தொல்லாசிரியர் சொல்லிய நெறி யெனினும் அமையும்.

இனி, 'இயன்ற' என்றதனால், சில செய்யுட்கு ஏற்றுச் சில செய்யுட்கு ஏலாதனவும் உள ஒருதிறத்து அணி யெனக் கொள்க.

* 'ஏற்ற செய்யுட் கணியே யெழுந்தே' என்றும் பாடமுண்டு.

RangaRakes tamilnavarasam.com

'அரிதுணாவனுதி' என்று சிறப்பித்தவதனால், சிறப்புமுதலாயினவற்று உண்மை மறுக்குங்கால் அம்மறையானே ஒருபுகழ்தோன்ற வைக்கப்படுமென்பது; அஃது, அதனிலக்கணங்கூறும்வழியே உணர்ந்துகொள்க. 'மெய்ப்படு விரோதம்' என்று எடுத்தது - இதனைத் தமிழாசிரியர் முரண்டொடையென்று தொடைப்பாற்படுத்துச் செய்யுட்கு உறுப்பாக்கினர்: இவ்வாசிரியர் இதனை அலங்காரத்தின்பாற் படுத்தினராதலின், அவ்வேறுபாடு அறிவித்தற்கு எனக் கொள்க. இவையெல்லாம் மேற்சூத்திரக்கருத்து நோக்கி ஈண்டு உரைக்கப்பட்டன.

ஒழிந்தஅகலம் உரையிற் கொள்க.

(கு - பு) காப்பியம் அழகுபெறுதற்குக் காரணமாகுகிற அணிகள் சொல்லையும் பொருளையும் பற்றி நிற்றலால் சொல்லணியும் பொருளணியும் என இருவகைப்படுமென்று கொண்டு, அவற்றுள் பொருளணிகளின் இலக்கணத்தை இவ்வியலில் விளக்குகிறார். சொல்லணிகளின் இலக்கணம் அடுத்த இயலில் விளக்கப்படும். இதிற் கூறப்படும் பொருளணிகளுள் தீவகம், பின்வருநிலை, நிரனிறை, சிலேடை, விரோதம் முதலிய சில அணிகள் ஒருசார் சொல்லையும்பற்றி நிற்றலால், 'மிகுதி பொருளமேலதாதலால், மிக்கதனாற் பெயர்கொடுக்கப்பட்டது' என்றார். 'தமிழாசிரியர்' என்றது, தொல்காப்பியர் முதலியோரை. மற்றும் பலவாறு நூற்றுக்கணக்காக விரித்துக்கூறப்படும் அணிவிகற்பமனைத்தும் இம்முப்பத்தைந்தனுள்ளே அடங்கிவிடுமென்பது,இவ்வாசிரியர் துணிபு. அங்ஙனம் அடங்குமாற்றை உய்த்துணர்ந்துகொள்க. 'செய்யுட்குஇயன்ற அணி' என்றவிடத்து, செய்யுளென்றது, கவியினாற் செய்யப்பட்டது என்னும் பொருள்மேலதாதலால், அதிலே வசனமும் அடங்கும்; காவ்யமென்ற வடமொழியும் கவியின்செய்கைபாலாகிய பிரபந்தமென்றயாத்திரமாய் யாப்பிற்குங் கட்டுரைக்கும் பொதுவாதலுணர்க. தன்மைமுதல் வாழ்த்து ஈறாகவுள்ள முப்பத்துமூன்று அணிகளும் தனியேவருவன; சங்கீரணமும் பாவிகமும் முறையே பலஅணிகள் சேர்ந்தும் காப்பியமுழுவதிலும அமைந்தும் வருவன. இவ்வேறுபாடுதோன்ற, இடையில் 'ஒடு' கொடுத்துப் பிரித்தார்: சங்கீரணம் பாவிகமென்ற முறைமைக்குங் காரணமும் இதனால் விளங்கும். (உஎ)

## க. தன்மையணி.

உ. எவ்வகைப் பொருண் மெய்வகை விளக்குஞ்
சொன்முறை தொடுப்பது தன்மை யாகும.

என்பது: நிறுத்தமுறையானே தன்மை யென்னும் அலங்காரந்தன் பொதுவிலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு) எவ்வகைப்பட்டபொருளும் மெய்ம்மைக்கூறுபாட்டான் விளக்குஞ்சொன்முறையாற் பாடப்படுவது தன்மையென்னும்அலங்காரமாம் (எ - று.)

(கு - பு) நிறுத்தமுறை - மேற்சூத்திரத்தில் வைத்த முறைமை. தன்மையெனினும், தன்மைநவிற்சி யெனினும் ஒக்கும். இதனை வடநூலார் ஸ்வபாவோக்தி யென்பர். அது - பொருளின் இயல்பை நேரிற்பார்த்தாற்போலத் தோன்றுமாறு உள்ளபடி விளங்கச் சொல்வது. அங்ஙனம் சொல்லுங்கால், 'உண்டுவளர்ந்தான்', 'இரண்டுகண்ணன்', 'ஓடிவந்தேன்' என்றாற்போல யாதொரு சமத்காரத்துக்கும் இடமில்லாதபடி கூறின் அது அணியாகாதென்றும், ரசிகர்கள் கேட்டு உவக்கும்படியானதோர் தன்மைநிறைக் கூறினால்மாத்திரமே அணியாகுமென்றும் அறிக. இது, எல்லாவணிகளுக்கும் பொதுவாம். (உஅ)

RangaRakes tamilnavarasam.com

ங. அதுவே,

பொருள்குணஞ் சாதி தொழிலெனப் படூஉம். *

என்பது: தன்மையது பகுதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) அத்தன்மை, பொருளும் குணமும் சாதியும் தொழிலும் என்னும் இவைபற்றித் தோன்றும், (எ - று)

(கு - பு.) பொருள்முதலிய நான்கும் இவ்வணிக்கு நிலைக்களமெனப்படும்.

அவற்றுள்,

(க) பொருட்டன்மைவருமாறு—"நீல மணிமிடற்றன் னீண்ட சடைமுடியன், நூலணிந்த மார்பனுதல்விழியன் - தோலுடையன், கைமமான் மறியன் கனன் மழுவன் கச்சாலை, யெம்மா னிமையோர்க் கிறை" எனவரும். (இதன்பொருள். கருங்குவளைபோன்ற அழகிய மிடற்றினையும் முடியின்கண்ணே நீண்ட சடையினையும் மார்பினிடத்தே அணியப்பட்ட முப்புரிநூலினையும் நெற்றியின்கண்ணே சேர்ந்த விழியினையும் உடையாக அசைத்த தோலினையும் கரதலத்தேந்திய மானினையும் கனல்போன்ற மழுவினையும் திருக்கச்சாலையென்னுந் திருப்பதியினையுமுடையனாய் எம்மைஆண்டுகொண்ட பெரியோன், இமையவர்களுக்குத் தலைவன், என்றவாறு. அன் - சாரியை. நீலமணிபோன்ற மிடற்றினையுடையனெனவும், நீலத்தையுடைய அழகிய மிடற்றினனெனவும் அமையும். மிடற்றன் சடையன் மார்பன் விழியன எனச் செவ்வெண்ணாக்கினும் அமையும். மணி - அழகு. 'கனமழு' எனப் பாடமோதி, பெரியமழு என்பாருமுளர். கனலையும் மழுவையும் என்றாக்கினும் அமையும். நீலம் - கருங்குவளை; அஃது, ஆகுபெயரால, பூவெனக்கொள்க. 'கச்சாலையெம்மான்' என்றது, கச்சாலையிலே யுறையும் பெரியோனெனினும் அமையும்)

(கு - பு.) மிடறு - கழுத்து. அசைத்த - கட்டிய. தோல் - புலித்தோலும், யானைத்தோலும். இப்பாட்டிலுள்ள 'மிடற்றன்' முதலியவற்றை அன் விகுதிபெற்ற ஆண்பாற்பெயர்களாகக் கொள்ளுதலே நேர். செவ்வெண் - எண்ணும்மைதொக்கது. நீலம் அணி மிடறு எனப்பிரித்து, நீலநிறத்தை யணிந்த கண்டமெனினுமாம். கனல் மழு - சொலிக்கின்ற எரியிரும்புப்படை. இது - ஒருருவின் தன்மையைக் கூறியதனால், பொருட்டன்மையாம்.

(உ) குணத்தன்மை—"உள்ளங் குளிர வுரோமஞ் சிலிர்த்துரையுந், தள்ளவிழி நீர்ததும்பத் தன்மறந்தாள் - புள்ளலைக்குந், தேந்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடஞ்செய். பூந்தாமரைதொழுத பொன்" எனவரும். (இ - ள். நெஞ்சம்குளிர மெய்ம்மயிரரும்பி மாற்றமுந்தளரக் கண்ணின்கண்ணே புனல்தோன்றத் தன்னுருவத்தையும மறந்தாள், புட்குலம் அலைக்காநின்ற மதுநிறைந்த தாமரையையுடைய பழனஞ் சூழ்ந்த தில்லைப் பொதுவின்கண்ணே அழகுடைத்தாகிய கூத்தை யாடுகின்ற (சபாபதியின்) பொலிவினையுடைய (திருவடித்)தாமரையை வணங்கின பொன்னையொப்பாள்; எ - று. பொன் தன்னை மறந்தாள் எனக் கூட்டுக. பூந்தாமரை - சீர்பாதம். 'உரையுந்தளர' என்னும் உம்மையால், நாணம் மடம் அச்சம் பயிர்ப்பும் எனவுந் தளரவெனக் கொள்க. புள்ளலைக்கும் வயல் புள்ளலைக்குந் தாமரை யெனினும் அமையும்.)

(கு - பு.) தில்லைப்பொது - சிதம்பரசபை. 'பூந்தாமரைத்தொழுதபொன்' என்று பாடமோதி, அழகிய கொன்றைப்பூமாலையையுடைய சிவபெருமானைத் தொழுத பெண்ணென்று உரைப்பாருமுளர். இது - கடவுளைத்தொழுதலாலாகும் ஆனந்தத்தின் தன்மையைக் கூறியதனால், குணத்தன்மையாம்.

* 'தொழிலொடு புணரும்' என்றும் பாடமுண்டு.

RangaRakes tamilnavarasam.com

(ரு) சாதித்தன்மை:—"பத்தித்த கட்ட கறைமிடற்ற பைவிரியுந், துத்திக் கவைநாத் துளையெயிற்ற - மெய்த்தவத்தோர், ராகத்தா னம்பலத்தா னூரா வமு தனைக்கின், பாகத்தான் சாத்தும பணி" எனவரும். (இ - ள். பத்திபாகிய வரைகள் பொருந்திய வயிற்றினையுடையனவாய்க் கருமையாகிய மிடற்றினை யுடையனவாய்ப் படத்தின்கண் விரிந்த பொறிநிறத்தையும் இரண்டுபிரிவான நாவையும் புரையையுடைய பல்லினையு முடையனவாயிருப்பன: மெய்யாகிய தவத்தினை யுடையோர் ரகத்தின்கணுள்ளான், அம்பலத்திலே நிற்பான், பருகாத அமுதமன்ன உமாதேவியின் பாகத்தை யுடையான் சாத்தும் பணிகள்; எ - று. பத்திகித்த அகட்ட என்பது, பத்தித்தகட்ட வென விகாரமாயிற்று. அகடு - வயிறு, துத்தி - நிறம். அகத்தான என்பது, ஆகத்தான் என முதல்நீண்டது. ஆர்தல - உண்ணல்.)

(கு - பு) அகம் - மனம். பணி யென்றது - ஆபரண மென்றும், பாம் பென்றும் பொருள்படும். இது - சர்ப்பசாதியின் தன்மையைக் கூறியதனால், சாதித்தன்மை.

(சு) தொழிற்றன்மை:—"சூழ்ந்து முரன்றணவி வாசந் துதைந்தாடித், தாழ்ந்து மதுநுகர்ந்து தாதருந்தும - வீழ்ந்தவிழ்ந்த, பாசத்தார் நீங்காப் பரஞ் சுடரின் பைங்கொன்றை, வாசத்தார் நீங்காத வண்டு" எனவரும். (இ - ள். தன்னைவிரும்புதலாலே கட்டுவிட்டுப்போன சுற்றத்தொடர்ச்சியாகிய பாசத் தளையை யுடையார் பிரியாதேயிருக்கப்பட்ட பெரிய விளக்கத்தை யுடையா னுடைய செவ்வியுடைத்தாகிய கொன்றையின் நறுநாற்றத்தையுடைய மாலை யைப் பிரியாத வண்டு, (தேனைச்) சூழ்ந்து பண்ணை முரன்று சேரச்சென்று மணத்தைச் செறிந்து மீதேபறந்து விரும்பி மதுவையுண்டு தாதைக் கோதா நிற்கும், எ - று. துதைதல் - செறிதல். ஆடுதல் - பறத்தல். தாழ்தல், வீழ்தல்- விரும்புதல். நுகர்தல் - உண்டல். அருந்துதல் - கோதுதல)

(கு - பு.) இது - வண்டின் தொழிலைக் கூறினதனால், தொழில்தன்மை.

அல்லதூஉம் "மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி, யீன்பிணை வொழி யப் போகி நோன்காழ், இரும்புதலை யார்த்த திருந்துகணை விழுக்கோல், உளிவா ய்ச் சுரையின் மிளிர மிண்டி, விடுநிலக் கரம்பைப் படுநீ றாடி, நுண்புல் லடக் கிய வெண்பல் லெயிற்றியர், பார்வை யார்த்த பறைதாள் விளவின், னீழன் முன்றி னிலவுரற் பெய்து" என்பதூஉம் அவ்வலங்காரம்.

இஃது, இலக்கியத்திற் சிறுபான்மை; இலக்கணத்துள்ளே பயின்றுவரு மெனக் கொள்க.

(கு - பு.) இ-ள். ஈன் பிணை - பிள்ளைபெற்ற வேட்டுவமகள், மான் றோல் பள்ளி - மான்றோலாகிய படுக்கையிலே, மகவொடு முடங்கி ஒழிய - அக்குழந் தையுடனே முடங்கிக்கிடக்க, போகி - (மற்றையோராகிய தாம்) சென்று,— இரும்பு தலை ஆர்த்த - இருப்புப்பூண் தலையிலே அழுந்தப் பதிக்கப்பெற்ற, திருந்து கணை நோன் காழ் விழு கோல் - நன்றாகிய திரட்சியையும் வலிமை யையும் வயிரத்தையுமுடைய சீரிய கோல் செருகின, உளி வாய் சுரையின் - உளிபோலும வாயையுடைய பாரைகளால், மிளிர மிண்டி - கட்டிகள் கீழ் மேலாம்படி குத்துதலினால்,— இரு நிலம் கரம்பை படு நீறு ஆடி - கருநில மாகிய கரம்புநிலத்தி லுண்டாகிய புழுதியை யளைந்து,—நுண் புல அடக்கிய - மெல்லிய புல்லரிசியை வாரியெடுத்துக்கொண்ட,—வெண் பல் எயிற்றியர் - வெள்ளிய பல்லையுடைய வேட்டுவக்குடியிற்பிறந்தமகளிர்,—பார்வை ஆர்த்த பறை தாள் விளவின் நீழல் முன்றில - பார்வைமான் கட்டிநின்ற தேய்ந்த

அடியையுடைய விளாமரத்தினது நிழலையுடைய முற்றத்திடத்துத் தோண்டின, நிலம் உரல் - நிலவுரலிலே, பெய்து - (அப்புல்லரிசியைச்) சொரிந்து, எ - று.

ஒழியப் போகி மிண்டி ஆடி அடக்கிய எயிற்றியர் பெய்து என்க. வேட்டுவமகளிருள் ஈன்றணிமையையுடையவரொழிய மற்றையோர் அனைவரும் இரைதேடச் செல்லுதலும், மிகவிளைந்துதிர்ந்த புல்லரிசியை எறும்பு இழுத்துச்சேர இட்டுவைத்த இடத்தை யறிந்து குறிஞ்சிநிலமாக்கள் அங்கு நிலத்தைக் கருவியாற் சுழிபறித்து அவ்வரிசியை யெடுத்துக்கொள்ளுதலும், இயல்பு. நிலவுரல் - நிலத்திலே உரல்போலத் தோண்டப்பட்ட குழி. பிணா - மகள்பெண்மைப்பெயர்; அது, பிண எனக் குறுகி நின்றது: வகரம் - உடம்படுமெய். மகவு - மக்களிளமைப்பெயர். இரும்பு - பூணுக்கு, கருவியாகுபெயர். 'இரும்புதலையாத்த' என்றும், 'பார்வையாத்த' என்றும் பாடமுண்டு. கணை - திரட்சி. விழுமம் - சீர்மை. உளி, பாரை - கருவிவிசேடங்கள். கோல்செருகப்படுகின்ற சுரையையுடைமையின், சுரை யென்றார்: ஆகுபெயர்; சுரை - குழை. பார்வை - வேட்டைக்காரர் மிருகபக்ஷிகளைப் பிடித்தற்பொருட்டுத் தாம் உடன்கொண்டுள்ள பழகியமிருகபக்ஷிகள்; இவற்றைக்கண்டும் இவற்றின்ஒலியைக்கேட்டும் நம்பிக்கைகொண்டு மற்றைமிருகபக்ஷிகள் வந்துசேரும்: இவை, தீபகமெனவும் படும். பறைதாள் - வினைத்தொகை.

இப்பெரும்பாணாற்றுப்படையடிகளில் பலவகையியற்கைகள் விளங்குமாறு காண்க. (௨௧)

## தன்மையலங்காரம் முற்றும்.

---

## ௨. உவமையணி.

௪. பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றி
னொன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்ந்
தொப்புமை தோன்றச் செப்புவ துவமை.*

என்பது: உவமை யென்னும் அலங்காரத்துப் பொதுவிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) பண்பு தொழில் பயன் என்பன காரணமாக ஒன்றாகியும் பலவாகியும் வரும் பொருளோடு பொருள் இயையவைத்து ஒப்புமையுலப்படப் பாடுவது, உவமையென்னும் அலங்காரமாம்; (எ - று.)

(கு - பு.) உவமை - உபமா என்ற வடசொல்லின் திரிபு அஃதாவது - ஒருபொருளோடு மற்றொருபொருட்கு ஒப்புமை விளக்குவது.

ஒன்றும் பலவும் பொருளொடுபொருள்புணர்த்தலாவது - ஒருபொருளோடு ஒருபொருளும், ஒரு பொருளோடு பலபொருளும், பலபொருளோடு பலபொருளும், பலபொருளோடு ஒரு பொருளும் இயையவைத்துப் பாடுவது.

அவற்றுள்,

(௧) பண்புவமை:—"பவளத் தன்ன மேனி" எனவும், "வேய்புரை பணைத்தோள்" எனவும், "தெம்முனையிடத்திற் சேயகொ, லம்மா வரிவை யவர் சென்ற நாடே" எனவும் வரும்.

(கு - பு.) பவழம்போன்ற உருவம் என்றும், மூங்கில்போன்ற பருத்த தோள் என்றும், மாதே! அத்தலைவர்சென்ற தேசம் பகைவர்மேற்பொருமிடம்

---

* 'செப்பினஃதுவமை' என்றும் பாடமுண்டு.

RangaRakes tamilnavarasam.com

டோற் சேய்மையு முடையனவோ? என்றும் முறையே கொள்க. இவற்றுள் முதலாவது வண்ணப்பண்பும், இரண்டாவது வடிவுப்பண்பும், மூன்றாவது அளவுப்பண்புமாம்.

(உ) தொழிலுவமை:—"அரியா மன்ன வனங்குடைத் தடக்கைத், திருமா வளவன்" எனவும், "களிற்றுநிரை தெரிந்து பார்வ லொதுங்கி, யொளித்தியங்கு மரபின் வயப்புலி போல" எனவும் வரும்.

(கு - பு.) ஆண்சிங்கம்போன்ற பெருத்த அரும் வலிமையையுடைய செல்வப்பெருமையுள்ள கரிகாற்சோழன் என்றும், யானைகளாகிய உணவைத் தேடிக் காணும்பொருட்டுப் பக்கப்பார்வையுடனே பதுங்கிச்செல்லுகின்ற முறைமையையுடைய வலிய புலிபோல என்றும் பொருள்கொள்க. சிங்கமும் புலியும் தொழில்பற்றி ஒப்பிக்கப்பட்டன; தோலும் வாலும் காலும் முதலாகிய வடிவும் வண்ணமும் பயனும் ஒவ்வாவாம்.

(௩) பயனுவமை:—"மாரி யன்ன வண்மைத், தேர்வே ளாயைக் காணிய சென்மே" எனவும், 'பொருநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை' எனவும் வரும்.

(கு—பு.) மழைபொழியும் மேகம்போன்ற கைம்மாறு கருதாக் கொடையையும் தேரையுமுடைய வேள் ஆய் என்னும் வள்ளலைக் காணச்செல்லுவாயாக என்றும், பகைவரை அழித்த இடியைப்போன்ற பெருமையையுடைய கை என்றும் பொருள்படும். ஆய் - கடையெழுவள்ளல்களில் ஒருவன்; அரசராற் கொடுக்கப்படும் வேள் என்னும் உரிமையை யடைந்தவன். மாரியால் விளைக்கப்படும் பயனோடு வண்மையாற் பெறும் பயனும், இடியால் விளையும் பயனோடு கையாற் பெறும் பயனும் ஒத்தலாற் பயனுவமையாயிற்று. 'மாரியன்ன வண்கை' என்றும் பிரதிபேதமுண்டு.

அன்றிச்செல், 'வேய்புரை பணைத்தோள்' என்பது வடிவுவமை யெனவும், 'தெம்முனையிடத்திற் சேயசெயல்' என்பது எல்லையுவமை யெனவும் சொல்லுவா ரெனின்,—* "வண்ணத்தின் வடிவி னளவிற் சுவையின், என்ன பிறவு மதன்குண நுதலி, யின்ன திதுவென வருஉ மியற்கை, யென்ன கிளவியும் பண்பின் றொகையே" என்புழி வடிவும் பண்பெனக் கூறினார், ஆசிரியர் தொல்காப்பியனார். சேய்மை அண்மை யென்பனவும், அளவாதலால், பண்பெனப்படும்.

(கு - பு.) தொல்காப்பியனார் "வினை பயன் மெய் யுரு வென்ற நான்கே, வகைபெற வந்த வுவமத் தோற்றம்" என்றாற்போல இவர் உவமையை நான்காக வகுக்காது அவற்றில் வடிவு வண்ணம் என்ற இரண்டையும் குணத்தில் அடக்கிப் பண்பு தொழில் பயன்என மூன்றாகக்கூறியதற்குக் காரணங்காட்டியவாறு இது. வடிவு கட்புலனாம்பண்பும், உரு உற்றுணரும்பண்பு மாதலின், இரண்டும் பண்பில் அடங்கின.

இனி, ஒருபொருளோடு ஒருபொருள் - "செவ்வானன்ன மேனி" எனவும், ஒருபொருளோடு பலபொருள்- "அவ்வா, னிலங்குபிறை யன்ன விலங்கு வால்வை யெயிறு" எனவும், பலபொருளோடு பலபொருள் - "களிறே ........ சுரும்பினத் தன்ன வாயோர் மொய்ப்ப, மரீஇயோ ரறியாது மைந்துபட் டன்றே" எனவும், பலபொருளோடு ஒருபொருள்- "பெரும்பெயர்க் கரிகாலன் முன்னிலைச் செல்லாப், பீடின் மன்னர் போல, வோடுவை மன்னோல் வாடைநீ யெமக்கே" எனவும் வரும்

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், உ௰.

RangaRakes tamilnavarasam.com

(கு - பு.) செவ்வானம்போன்ற உருவம் என்றும், அந்தவானத்தில்விளங்குகிற பிறைச்சந்திரன் போன்ற விளங்குகிற வெண்மையான கூரிய பற்கள் என்றும், யானையானது - சுறாமீன்கூட்டத்தை யொத்த வாள்வீரர் சூழத் தன்னைமருவிய பாகரை யறியாது மதம்மிக்கது என்றும், மிக்கபுகழையுடைய கரிகாற்சோழனது முன்னிலையிற் செல்லும் ஆற்றலிலராய்ப் புறங்கொடுத்தோடுகின்ற பெருமிதமொழிந்த பகையரசர்கள் போல வாடைக்காற்றே! நீ எமக்கு முன் நில்லாது ஓடிச்செல்வாய் என்றும் பொருள்படும்.

அஃதேல், உவமையும் பொருளும் ஒத்தபண்பு மாவன யாவை யெனின்,— 'பவளம்போலுஞ் செவ்வாய்' என்புழி, பவளம் உவமை யெனவும், உவமான மெனவும்படும். வாய - பொருளெனவும், உவமேய மெனவும்படும். செம்மை- இரண்டற்கும் பொதுவாகிய குணமெனப்படும். போலும் என்பது - உவமை யுருபிடைச்சொல். இது பண்புவமை யெனப்படும். அன்றியே இதனை உவமையென்பது என்னை யெனின்,— பவளவாய் என்பதனை உவமைத்தொகை யென்றும், 'பவளம்போலும் வாய்' என்பதனை உவமைவிரியென்றுங் கூறுபவாதலான். அல்லதூஉம், 'பவளம்போலச் செய்யவாய்' என்பதனை முற்றுவமை யென்ப. ஈண்டு உவமையலங்காரமென்றது, அத்தொடர்ச்சொல் முழுவது மெனக் கொள்க.

(கு - பு.) ஒத்தபண்பு-பொதுத்தன்மை; சாதாரணதருமம். உவமையுருபு- உபமான வாசகம்.

மற்றும் பண்பியும் பண்பும் தொழிலும் பயனு மெனக்கூறப்படுவன நான்கு. அவற்றுள், பண்பியென்பன - காட்சிப்பொருளும் கருத்துப்பொருளுமாகிய இயங்குதிணையும் நிலைத்திணையுமாம். பண்பென்பன அவற்றின் குணமாய்த் தோன்றித் தமக்கு வேறு குண மின்றி நிகழ்வன. தொழிலென்பன-அவற்றின் புடைபெயர்ச்சியாய்க் காலம்புணர்ந்து நிற்பன. பயனென்பன-அவை காரணமாகப் புலப்படுங் காரியம். பண்பியாகிய ஒருபொருட்கு ஒருபொருள் உவமையாக்குங்கால் இரண்டற்கும் பொதுவாகியதோர் குணம் ஏதுவாகலானும், தொழில் ஏதுவாகலானும், பயன் ஏதுவாகலானும் ஒப்பித்து உரைக்கப்படும். 'என்றிவற்றின் என்பதனால், பண்பு தொழில் பயன் என்பன ஒரோவொன்றே யன்றிப் பலவுங் காரணமாக வரும். அவை "கான யானை கைவிடு பசுங்கழை, மீனெறி தூண்டிலி னிவக்குங், கான நாடன்" என்பது - தொழிலும், பண்பும். "காந்த, ளணிமலர் நறுந்தா தூதுந் தும்பி, கையாடு வட்டிற் றோன்றும்" என்பது - தொழிலும், வடிவும், வண்ணமும். அல்லதூஉம் அவ்விலேசானே, பண்பு தொழில் பயன் என்பனவேயன்றிச் சொற்பொதுமைகாரணமாகவும் பிறகாரணமாகவும் வரும் உவமையலங்கார மென்பது; அவை முன்னர் உரைக்கப்படும்.

(கு - பு.) காட்சிப்பொருள் - காணுதற்குஉரிய பொருள். கருத்துப் பொருள் - கருதப்படும் பொருள். இயங்குதிணை - அசையும்பொருள்; ஜங்கமம்: சரம். நிலைத்திணை - அசையாப்பொருள்; ஸ்தாவரம்: அசரம். பண்பி - பண்புடையது; குணி. காட்டுயானையால் துதிக்கைகொண்டு பற்றிவிடப்பட்ட பசிய மூங்கில் மீன்பிடித்தற்கருவியாகுந் தூண்டில் போல ஓங்கியெழப்பெற்ற காடுசார்ந்த நாட்டையுடையவன் என்றும், அழகியகாந்தட்பூவினிடத்து நறிய தாதினை மொய்த்து ஊதுகிற வண்டு கையிற்கொண்டு ஆடப்படுகிற வட்டென்னுந் திரண்ட ஆடுகருவி போலத்தோன்றும் என்றும் பொருள்காண்க. சொற்பொதுமை காரணமாக வரும் உவமை, சிலேடையுவமை யெனப்படும்.

RangaRakes tamilnavarasam.com

'ஒட்புமைதோன்ற' என்றதனால், அவ்வுவமை கேட்போருள்ளங்கொண்டு விளங்கத்தோன்றுவதேயாகல் வேண்டும்: யாதானுமொருமுகத்தாற் கூறற்க என்பது.

(கு - பு.) "உவமையும் பொருளு மொத்தல் வேண்டும்" என்ற தொல்காப்பியச்சூத்திரமும், 'உவமானமும் உவமேயமும் தம்மின் ஒத்தன' என்று உலகர்தார் மகிழ்ச்சிசெய்யல்வேண்டும்,' 'மயிற்றோகைபோலுங் கூந்தல் என்பதன்றிக் காக்கைச்சிறகன்ன கருமயிர் என்றுசொல்லின், அஃது ஒத்ததெனப்படாது,' 'புலிபோலப் பாய்ந்தான் என்பதன்றி, பிலழையாமற்பாயும் என்பதே பற்றி, பூசைபோலப் பாய்ந்தான் எனின், அதுவும் ஒப்பென்றுகொள்ளாது உலகம்' என்ற அதன்உரையும் இங்கு உணரத்தக்கன. (௩௰)

௫. அதுவே,
விரியே தொகையே யிதர விதர
முறைபெறு சமுச்சய முண்மை மறுபொருள்
புகழ்த னிந்தை நியம மநியம
மையந் தெரிதரு தேற்ற மின்சொ
லெய்திய விபரீத மியம்புதல் வேட்கை
பலபொருள் விகார மோக மபூதம்
பலவயிற் போலி யொருவயிற் போலி
கூடா வுவமை பொதுநீங் குவமை
மாலை யென்னும் பால தாகும்.

என்பது: அவ்வுவமையை விரித்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) அச்சொல்லப்பட்ட உவமையலங்காரம், விரியுவமையுந் தொகையுவமையும் இதரவிதரவுவமையும் சமுச்சயவுவமையும் உண்மையுவமையும் மறுபொருளுவமையும் புகழுவமையும் நிந்தையுவமையும் நியமவுவமையும் அநியமவுவமையும் ஐயவுவமையும தெரிதருதேற்றவுவமையும் இன்சொலுவமையும் விபரீதவுவமையும்இயம்புதல்வேட்கையுவமையும் பலபொருளுவமையும் விகாரவுவமையும் மோகவுவமையும் அபூதவுவமையும் பலவயிற்போலியுவமையும் ஒருவயிற்போலியுவமையும் கூடாவுவமையும் பொதுநீங்குவமையும மாலையுவமையும் என்னும் இருபத்துநான்கு பாகுபாட்டை யுடையது; (எ - று)

(கு - பு.) உரைபெறு, எய்திய என்பன - அடைமொழி; சொல்லப்படுகிற, பொருந்திய என்று பொருள். 'தெரிதரு' என்பதையும் அடைமொழியாகக் கொள்வர் ஒருசாரார்; தெளிவான என்று பொருள்படும்.

இவையெல்லாம் சொல்லின்முடியும் இலக்கணத்த வாதலான், பெரும்பான்மையுந் * தம்பொருளே இலக்கணம் புலப்படுத்தும்; அல்லது உரையினுங் கொள்க.

(கு - பு.) சொல்லின்முடியும் இலக்கணத்த - சொல்லில்தானே இலக்கணம் புலப்படுந் தன்மையன. தம்பொருள் - அவற்றின்பொருள்.

அவற்றுள்,

(க) விரியுவமையென்பது-பண்புமுதலியன விரிந்துநிற்பது. அது "பால்போலு மின்சொற் பவளம்போற் செந்துவர்வாய், சேல்போற் பிறழுந் திருநெடுங்கண்-மேலாம், புயல்போற் கொடைக்கைப் புனனாடன் கொல்லி, யயல்

* 'தம்பெயருள்ளே இலக்கணமும் புலப்படும்' என்றும் பிரதிபேதமுண்டு.

போலும் வாழ்வ தவர்" எனவரும். (இ-ள். பாலையொத்து இனிதாகிய சொல்லினையும் பவளத்தையொத்துச் சிவந்து விளங்கிய வாயினையும் சேலையொத்து உகளும் அழகோடுகூடி நெடிதாகிய கண்ணினையுமுடைய அவர் வாழுமிடம், (மின்னும் முழக்கமும் காலவரைவு மின்றிச் சான்றோராலே புகழப்பட்டு) உயர்ந்தநெறியேயொழுகிய மழை போன்ற கொடையையுடைய கையையுடையனாகிய சோழனுடைய கொல்லிமலைப்பக்கம்போலும்; எ-று. பிறழ்தல் - உகளுதல். திரு - அழகு. புயல் - மழை. புனனாடன் - சோழன். கொல்லி - ஓர்மலை. அயல் - பக்கம்)

(கு-பு.) பண்புமுதலியன-பண்பும் தொழிலும் பயனும். ஆகிய பொதுத்தன்மைவெளிப்படையாகநிற்றல், விரியுவமையின் இலக்கணம். இதனைப் பண்புவமையென்று வழங்குதலுமுண்டு. இது வடமொழியில் தருமோபமையெனப்படும். பால்போலுமின்சொல்,பவளம்போற்செந்துவர்வாய் என்றதொடர்களில் இனிமையும் செம்மையுமாகிய பண்பும், சேல்போற் பிறழுந் திருநெடுங்கண் என்ற தொடரில் பிறழ்தலாகிய தொழிலும், புயல்போற்கொடைக்கை என்ற தொடரில் கொடையாகிய பயனும் ஆகப் பொதுத்தன்மை விரிந்துநிற்றல் காண்க. இனி, பிறர்கொள்கையின்படி விரியுவமையிலக்கணம் வேறுபடும்; அது எங்ஙனமெனின்: 'பால்போலு மின்சொல்'என்ற தொடரில், பால்-உபமானம், சொல் - உபமேயம், இனிமை - பொதுத்தன்மை, போலும் - உவமவுருபு; ஆகிய உவமவுறுப்பு நான்கும் விரிந்துநிற்றலால், விரியுவமை யென்பர்; மற்றை மூன்றுதொடர்களிலும் அந்நான்கும் விரிந்துநிற்றல் காண்க; அவ்விரியுவமை, வடமொழியில் பூர்ணோபமை யெனப்படும். செந்துவர் - ஒருபொருட்பன்மொழி. கொல்லிமலையிற் சிறந்ததொரு பெண்பாவை யுண்டென்றல், மரபு. அவர் என்றது, தன்னாற் காதலிக்கப்பட்ட தலைவியையாம்; உயர்வுப்பன்மை.

(உ) தொகையுவமையென்பது - பண்பு முதலியன தொக்கு நிற்பது. அது "தாமரை போன்முகத்துத் தண்டரளம் போன்முறுவற், காமருவு வேய்புரைதோட் காரிகையீர்-தேமருவு, பூங்குழலின் வாசப் பொறைசுமந்து நொந்ததோ, பாங்குழலுந் தென்றற் பரிசு" எனவரும். (இ-ள். தாமரைபோன்ற முகத்தினையும் குளிர்ந்தமுத்துப்போன்ற நகையினையும் அழகுமருவிய வேய்போன்ற தோளினையுமுடைய மாதரீர்! உம்முடைய பக்கத்திலே யுலாவுகின்ற தென்றலின் தன்மை, உம்முடைய தேன்பொருந்திய பூவினையுடைத்தாகிய குழலின்கண் உண்டாகிய நறுநாற்றப்பாரத்தைத் தாங்கிக்கொண்டு வருகின்ற வருத்தந்தானோ, மெல்லியவுருவுடைத்தானது; சொல்லுவீராக; எ-று. பொறை - பாரம். பரிசு - தன்மை.)

(கு-பு) பொதுத்தன்மை தொகுதல் இவ்வணியின் இலக்கணம். இது உவமைப்பொருள் மாத்திரத்தை யெடுத்துக்காட்டியதனால், வடமொழியில் வஸ்தூபமை யெனப்படும். தமிழில் பொருளுவமை யெனவும்படும். தாமரைபோன்முகம், தண்டரளம்போன்முறுவல், வேய்புரைதோள் என்ற தொடர்களில், அழகிய, வெண்மையான, திரண்ட என்ற பொதுத்தன்மை மறைந்து நிற்றல் காண்க. பிறர் இதனைப் பொதுத்தன்மைத்தொகையுவமை யெனக் கொண்டு, 'புயற்கருங்குழலாள்' என்பதை உருபுத்தொகையுவமையென்றும், 'கயற்கணாள்'என்பதைப் பொதுத்தன்மை யுருபுத் தொகை யுவமை யென்றும், மற்றும்பலவாறு விகற்பித்துங் கூறுவர்; அவர்க்குத் தொகையுவமையணியிலக்கணம், உவமையுறுப்பு நான்கினுள் ஒன்றேனும் பலவேனும் தொக்குநிற்பது: அதனை வடநூலார் லுப்தோபமை யென்பர். நகை - பல், அல்லது சிரிப்பு. குழல் - கூந்தல். நொந்ததோ என்பதை நோந்ததோ எனவும் படிக்கலாம்; நோதல் - மெலிதல்.

RangaRakes tamilnavarasam.com

(௩) இதரவிதரவுவமையென்பது-பொருள் ஒருகால் உவமையாயும், உவமை ஒருகாற் பொருளாயும் ஒருதொடர்ச்சிக்கண்ணே வருவது. அது "களிக்குங் கயல்போலுநின் கணின்கண்போற், களிக்குங் கயலுங் கனிவாய்த்-தளிர்க்கொடியே, தாமரை போன்மலரு நின்முக நின்முகம்போற், றாமரையுஞ் செவ்வி தரும்" எனவரும். (இ-ள். கொவ்வைக்கனிபோன்ற வாயினையுடைத்தாய்த் தளிரோடு கூடிய கொடிபோன்ற மடவாய்! செருக்கினையுடைத்தாகிய கயல்போன்ற தன்மையையுடைத்தாயிருந்தன, நின்னுடைய நாட்டங்களானவை; இத்தன்மைத்தாகிய நின்னுடைய நாட்டங்களுக்கு உவமையாகின்றன, கயற்குலமானவை: இஃதன்றியே, நின்னுடைய முகமண்டலமானது தாமரைபோல் மலராநின்றது; அத்தன்மைத்தாகிய தாமரை நின்னுடைய முகமண்டலம்போலச் செவ்வியினையுடைத்தாகின்றது; எ-று.) "தளிபெற்று வைகிய தண்சுனை நீல மளிபெற்றார் கண்போன் றலரு-மளிபெற்ற, நல்லார் திருமுகந் தாற்ற நளிபெற்ற, கல்லாரம் போன்மலருங் கண்" என்பதூஉம் அது. (இ-ள். மழையை ஏற்றுக்கோடலின் தட்பத்தையுடைத்தாகிய சுனையிலுண்டாகிய நீலப்பூவானது தலைவரால் நலம்பாராட்டப்பெற்ற மடவார் கண்ணே போல மலராநின்றது; அத்தன்மைத்தாக அளிபெற்ற நல்லாராகிய மடவாருடைய அழகிய முகமண்டலத்து மிகக் குளிர்ச்சியையுடைத்தாகிய கண்களும் நீலம்போல மலராநின்றன; எ-று. தளி - மழைத்துளி. ஆற்ற - மிக.)

(கு-பு.) இந்த இதரேதரோபமை அந்யோந்யோபமையென்றும், உபமேயோபமையென்றும் வழங்கப்படும். இதனைத் தமிழில் புகழ்பொருளுவமையணியென வழங்குதலும் உண்டு. முன்னர் உபமானமும் உபமேயமுமாகச் சொல்லப்பட்ட பொருள்களையே பின்னர் உபமேயமும் உபமானமுமாக மாற்றிச் சொல்லுதல், இதன் இலக்கணம். இதன்கருத்து, மூன்றாவது ஒப்பதொன்று இன்றென்பது. இச்செய்யுள்களில் அங்ஙனம் மீண்டுங்கூறியமை காண்க. இதரேதரம் - ஒன்றற்கொன்று.

(௪) சமுச்சயவுவமையென்பது - அதனையன்றி இதனை இஃதொப்பது இதனானும் என்பது. அது "அளவே வடிவொப்ப தன்றிப் பச்சை, யிளவேய் நிறத்தானு மேய்க்கும் - துளவேய், கலைக்குமரி போர்துளக்குங் காரவுணர் வீரந், தொலைக்குமரி யேறுகைப்பா டோள்" எனவரும். (இ-ள். துழாய்மாலையைச் சூடிய கலைமடந்தையாகிய கன்னி போரிடத்துப் பகைவரை நடுக்கஞ்செய்யவற்றாய வெகுளியினையுடைய அசுரருடைய ஆண்மையைக் கெடுக்குஞ் சிங்கப்போத்தை வாகனமாகவுடையாளுடைய தோள்களை இளவேயானது அளவினாலும் வடிவினாலும் ஒப்பதன்றிப் பசுமைநிறத்தாலும் ஒக்கும். எ-று. ஏறுகைக்குங்கன்னிதோளெனக் கூட்டுக. கன்னியுடைய தோள்களானவை வேயைப் பண்பினாலும் ஒக்குமெனினும் அமையும். ஏய்க்கும் - ஒக்கும். காரவுணர் - வெகுளியையுடைய அசுரர்.)

(கு-பு.) இது எச்சவும்மைகொடுத்துச் சொல்லப்படுதலால் இதனைத் தமிழில் உம்மையுவமையென வழங்குதலும் உண்டு. உபமான உபமேயங்களுக்கு ஒன்றோடொன்றுள்ள மிக்க பொருத்தத்தை விளக்குவது இது. கலைக்குமரி, ஏறுகைப்பாள் - துர்க்கை. அவளுக்குக் கலைமானும் சிங்கமும் வாகனமாம். அவள் திருமாலின்தங்கையெனப்படுதலால், அவளுக்குத் துழாய்மாலை உரியதாம். சமுச்சயம் - ஒருங்குசேர்த்தல்.

(௫) உண்மையுவமையென்பது-உவமையைக் கூறி மறுத்துப் பொருளினையே கூறி முடிப்பது. அது "தாமரை யன்று முகமேயிஃ தீங்கிவையுங், காமருவண் டல்ல கருநெடுங்கண் - டேமருவு, வல்லியெனி னல்ல ளிவளென் மனங்

RangaRakes tamilnavarasam.com

கவரு, மல்லிமலர்க் கோதையே யாம்'' எனவரும். (இ-ள். இது தாமரை மலரன்று முகமே; இவையும் அழகுமருவிய வண்டல்ல கறுத்துநீண்ட கண்களே; தேன்மருவப்பட்ட கொடியல்லள் இவள் மடந்தையே. இத்தன்மையாகிய அவயவங்களையுடைய இவள் என்உள்ளங்கவர்ந்த இதழ்களையுடையபூவாற்செய்யப்பட்டமாலையினையுடையாள்; எ-று. அல்லிமலர்க்கோதையாள்-சீதேவி யென்பாரு முளர்.)

(கு-பு.) உபமேயமாகிய உள்ள பொருளையே கூறி நாட்டுதலால், இது உண்மையுவமை யெனப் பெயர்பெற்றது. வடமொழியில் தத்வாக்யாநோபமா எனப்படும். இது, உபமேயத்தின் ஒப்பற்றசிறப்பை விளக்குவது.

(௬) மறுபொருளுவமையென்பது - முன்னர்வைத்த பொருட்கு நிகராவதொரு பொருளைப் பின்னர் வைப்பது. அது ''அன்னைபோ லெவ்வுயிருந் தாங்கு மனபாயா, நின்னையா ரொப்பார் நிலவேந்த-ரன்னதே, வாரி புடைசூழ்ந்த வையகத்திற் கில்லையாற், சூரியனே போலுஞ் சுடர்'' எனவரும். (இ-ள். தாயினை யொப்பாக எவ்வகைப்பட்ட உயிர்களையுந் தாங்கும் அனபாயனே! நிலத்திலுண்டாகிய வேந்தரில் உன்னை யொப்பா ராருமில்லை; அங்ஙனமே கடல்சூழ்ந்த வையகத்திற்குச் சூரியனையொக்குஞ் சுடரு மில்லை; எ-று. சுடர் - ஒளி; விளக்குமாம்.)

(கு-பு.) இது வடமொழியில் ப்ரதிவஸ்தூபமை யெனப்படும். இதில் உபமேயம் முன்வாக்கியமும் உபமானம் பின்வாக்கியமுமாக நிற்கும். இதனைத் தமிழில் எதிர்ப்பொருளுவமையென வழங்குதலும் உண்டு. இங்கு 'அன்னதே' என்பது உவமையுருபின் தன்மையதாய் நின்றது. உவமவுருபு கொடாமல் ''அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு'' என்றாற் போலக் கூறும் எடுத்துக்காட்டுவமையணியெனப்படும் த்ருஷ்டாந்தாலங்காரமும் இதில் அடக்கப்படும். ''கற்றோ னருமைகற் றோனறியும் வந்திமகப், பெற்றோ னருமை யறியாள்'' என்றாற்போல இது எதிர்மறையாய்வருதலும் உண்டு. பிறவும் இங்ஙனங் காண்க.

(௭) புகழுவமையென்பது - உவமையைப் புகழ்ந்து உவமிப்பது. அது ''இறையோன் சடைமுடியி னெந்நாளுந் தங்கும், பிறையேர் திருநுதலும் பெற்ற - துறைபுனல்சூழ், பூவலயந் தாங்கு மரவின் படம்புரையும், பாவைநின் னல்குற் பரப்பு'' எனவரும். (இ-ள். ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட நிலப் பரப்பைத் தாங்குகிற சேடனுடைய படப்பரப்பை ஒக்கின்றது உனதல்குல்; அதுவேயன்றி, முக்கட்கடவுண்முடியினைப் பிரியாது எக்காலமுந் தங்கும் பிறையினுடைய அழகினை நின்னுடைய அழகிய நுதலும் பெற்றது: ஆதலால், பாவாய்! நின்உருவத்தன்மை யிருந்தபடி யென்! எ-று. ஏர் - அழகு. பூவலயம் - நிலப்பரப்பு)

(கு-பு.) இப்புகழ்ச்சியுவமை, வடமொழியில் ப்ரசம்ஸோபமை யெனப்படும். இங்குப் பிறையும் அரவின்படமுமாகிய உபமானப்பொருள்கள் அடைமொழிகளாற் புகழ்ந்துரைக்கப்பட்டமை காண்க.

(௮) நிந்தையுவமையென்பது - உவமையைப் பழித்து உவமிப்பது. அது ''மறுப்பயின்ற வாண்மதியு மம்மதிக்குத் தோற்கு, நிறத்தலரு நேரொக்கு மேனுஞ் - சிறப்புடைத்துத், தில்லைப் பெருமா னருள்போற் றிருமேனி, முல்லைப் பூங் கோதை முகம்'' எனவரும். (இ-ள். தில்லைக்கண் கூத்தாடுகின்ற பெரியோ னருளை யொத்த அழகிய மேனியினையுடைய முல்லைப்பூவாற்செய்யப் பட்டகோதையினையுடையாள் முகமானது, மறுப்பிரியாத ஒளியினையுடைத் தாகிய மதியமும் அம்மதியத்திற்குக் கருகுகின்ற நிறத்தையுடைத்தாகிய தாம

RangaRakes tamilnavarasam.com

ரைமலரும் உவமிக்கப் பொருந்துமே யெனினும் சிறப்புடையது; எ - று. திறத்தலர் - தாமரைமலர். தோற்றல் - கருகுதல்.)

(கு - பு.) உபமானமாக எடுக்கப்பட்ட சந்திரனும் தாமரைமலரும் 'மறுப்பயின்ற', 'அம்மதிக்குத் தோற்கும்' என்ற அடைமொழிகளால் இழித்துக் கூறப்பட்டதனால், நிந்தோபமையாயிற்று.

(கூ) நியமவுவமையென்பது - இன்னதற்கு இன்னதே உவமையாவதென்று தேற்றேகாரம்புணர்த்துத் துணிந்துசொல்வது. அது "தாதொன்று தாமரையே நின்முக மொப்பதுமற், றியாதொன்று மொவ்வா திளங்கொடியே- மீதுயர்ந்த, சேலே பணியப் புலியுயர்த்த செம்பியர்கோன், வேலே விழிக்கு நிகர்" எனவரும். (இ - ள். இளங்கொடியையொப்பாய்! எல்லாருடைய கொடிக்கும் மேலாகவுயர்ந்த பாண்டியனுடைய சேற்கொடி தாழத் தனதுபுலிக்கொடியையுயர்த்த சோழனுடைய வேலே விழிக்கு நிகராவது; தாதுகள்பொருந்திய தாமரைமலரே நின்முகத்தை யொப்பது; இவையல்லது உன்விழியினையும் முகத்தினையும் உலகத்துஉண்டாகிய யாவும் ஒவ்வா; எ - று. சேலேயென்பதில், ஏகாரம் - அசை.

(கு - பு.) மற்றவற்றை விலக்கி ஒன்றை உவமையாக நியமித்ததனால், நியமோபமையாயிற்று.

(கo) அநியமவுவமையென்பது - நியமித்தஉவமையை விலக்கிப் பிறிதும் இப்பெற்றியனவும் ஆம் என்பது. அது "கௌவை விரிதிரைநீர்க் காவிரிசூழ் நன்னாட்டு, மௌவல் கமழுங் குழன்மடவாய் - செவ்வி, மதுவார் கவிரேநின் வாய்போல்வ தன்றி, யதுபோல்வ துண்டேனு மாம்" எனவரும். (இ - ள். ஆரவாரத்தையும் பரந்ததிரைகளையுமுடைத்தாகிய நீரையுடைய காவேரி சூழ்ந்த நன்னாட்டின்கண் மௌவலினது பூவாற் செய்த மாலை நாறுங் குழலினையுடைய மடவாய்! செவ்வியும் தேனும் நிறைந்த முருக்கிதழே நின்வாயை யொப்பது; அதுவன்றியே, அப்பூப்போல்வது உலகத்து உண்டாயினும் நின்வாயை யொக்கும்; எ - று. கவிர் - முருக்கு.)

(கு - பு) மௌவல்-முல்லை, அல்லது வனமல்லிகை. முருக்கு - பலாசு.

(கக) ஐயவுவமையென்பது - உவமையையும் பொருளையும் ஐயமுற்று உரைப்பது. அது "தாதளவி வண்டு தடுமாறுந் தாமரைகொன், மாதர் விழியுலவும் வாண்முகங்கொல் - யாதென், றிருபாற் கவர்வுற் றிடையூச லாடி, யொருபாற் படாதென் னுளம்" எனவரும். (இ - ள். தாதைசகலந்து வண்டுகள்சூழப்பட்ட தாமரைமலரோ காதலைச்செய்கிற விழி யுலவுகின்ற ஒளியினையுடைய முகமண்டலமோ என் னென்று என்மனமானது ஊசலைப்போலாடி இருதலைப்பட்டு ஒன்றன்கண் துணிகின்றதில்லை; எ - று. இடையூசலாடி - ஈரிடத்தும் போய் மீண்டு. இருபாற்கவர்வுற்று - இரண்டனையும் ஆசைப்பட்டு. கொல் - ஐயம்.)

(கு - பு.) இதனைத் தடுமாறுவமையெனவழங்குதலும் உண்டு. இது வடமொழியில் ஸம்சயோபமை யெனப்படும். இதனை ஐயவணி யெனப்படும் ஸந்தேகாலங்கார மென வேறுக்கூறுவர் ஒருசாரார். தாது - மகரந்தப்பொடி 'இருபாற்கவர்வுற்று' என்பதை 'இருபாற்கவாவுற்று' என்றும் படிக்கலாம்; இருபாற்கு அவாஉற்று எனப்பிரிந்து இப்பொருளே படும். அவாஉறுதல்-விரும்புதல்.

(கஉ) தேரிதநதேற்றவுவமையென்பது- ஐயுற்றதனைத் தெரிந்து துணிவது. அது "தாமரை நாண்மலருந் தண்மதியால் வீறழியுங், காமர் மதியுங்

RangaRakes tamilnavarasam.com

கறைவிரவு - மாமிதனுற், பொன்னை மயக்கும் பொறிசுணங்கி னாண்முகமே, யென்னை மயக்கு மிது" எனவரும். (இ - ள். நாட்காலைமலரூந் தாமரையும் குளிர்ந்தமதியினாலே அழகுகெடும்; அழகிய மதியமும் களங்கத்தோடு கூடியிருக்கும்; ஆதலால், என்னைமயக்கஞ்செய்த இது, பொன்னை யொப்பாக அலங்கரிக்கப்பட்ட சுணங்கினையுடையாளுடைய முகமே; எ - று. காமர் - அழகு. மயக்கும் - ஒக்கும்.)

(கு - பு.) முன்பு சந்தேகித்துப் பின்பு காரணங்கண்டு தெளிந்ததாகக் கூறுவது இதன்இலக்கணம். இதனைத் துணிவுவமையென்று வழங்குதலும் உண்டு. இது வடநூலில் நிர்ணயோபமை யெனப்படும். இங்கு முதலில் தாமரை மலராகவும், பின்பு சந்திரனாகவும சந்தேகித்து, தண்மதியால் வீறழியாமையும், கறைவிரவாமையு மாகிய காரணங்களைக்கொண்டு அச்சந்தேகந்தீர்ந்து, முகமே யென்று தெளிந்தமை காண்க. இதனை ஐயவணியிலே அடக்குவர் ஒருசாரார். சுணங்கு - ஒருவகை நிறவேறுபாடு.

(௰௫) இன்சொலுவமையென்பது - பொருளினும் உவமைக்கு ஒரு மிகுதிதோன்றக் கூறி உவமித்து, இன்னமிகுதியுடைத்தெனினும் ஒப்பதன்றிச் சிறந்ததன் றென்பது. அது "மான்விழி தாங்கு மடக்கொடியே நின்வதன, மான்முழுதுந் தாங்கி வருமதிய - மானுலு, முற்றிழை நல்லாய் முகமொப்ப தன்றியே, மற்றுயர்ச்சி யுண்டோ மதிக்கு" எனவரும். (இ - ள். நிறைந்த அணிகளையுடைய நல்லாய்! மடக்கொடியே! நின்னுடைய முகமானது மானின் விழியொன்றனையே தாங்காநின்றது; (ஆகாயத்தின்கண்) வருகின்ற மதியமானது மானின்அவயவமுழுதுந் தாங்காநின்றது; இப்படி முழுவதுந்தாங்கினும் நினது முகத்தை யொப்பதன்றியே விசேடமுடைத்தாகவற்றோ அம்மதியம்?

(கு - பு.) இதனை இசையுவமை யென வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் சபேமை யெனப்படும். வற்று - வல்லது.

(௰௬) விபரீதவுவமையென்பது - மேல்தொட்டு உவமையாய் வருவதனைப் பொருளாக்கிப் பொருளாய்வருவதனை உவமையாக்கி உரைப்பது. அது "திருமுகம போன்மலருஞ் செய்ய கமலங், கருநெடுங்கண் போலுங் கயல்களிவை, யியல்போலு மஞ்ஞை யிடைபோலுங் கொம்பர், மயல்போலும் யாம்போம வழி" எனவரும். (இ - ள். அரிவையுடைய திருமுகத்தையொப்ப மலரும் சிவந்தகமலம்; கறுத்து நெடிதாகிய கண்கள் போலும் கயல்கள், சாயல் போலும் மயில்; மருங்குல்போலும் கொம்பு: ஆதலால், இவ்வழியில் யாம் போகின்ற போக்கு மயல்போலும்; எ - று. இயல்-சாயல், மயல் - ஆசை.) "ஓவத் தன்ன வுண்டுறை மருங்கிற், கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின், வருமுலை யன்ன வண்முகை யுடைந்து, திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை" என்பதூஉம் அது.

(கு - பு.) இதனைத் தெற்றுவமை யென்று வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் விபர்யாஸோபமை யெனப்படும். இதனை எதிர்நிலையணியெனப்படும் ப்ரதீபாலங்கார மெனத் தனிப்படுத்திக் கூறுவர் ஒருசாரார். மேல்தொட்டு-பழமைதொடங்கி. மயல் - குற்றமுமாம். கோவத்து அன்ன - இந்திரகோபத்தை யொத்த, கொங்கு - பூந்தாதை, உறைத்தலின் - (தன்னிடத்து) உதிர்த்தலால், சேர்பு - (அத்தாது) சேர்ந்து, ஓவத்து அன்ன - சித்திரத்தை யொத்த, உண் துறை மருங்கின் - நீருண்ணுந்துறையிடத்தே நின்ற,—வருமுலை அன்ன வண் முகை உடைந்து - எழுகின்ற பெரிய முலையை யொத்த பெரிய அரும்புநெகிழ்ந்து, திரு முகம் அவிழ்ந்த தெய்வம் தாமரை-அழகிய முகம் போல மலர்ந்த தெய்வத்தன்மையையுடைய தாமரைமலர் என்று பொருள்.

RangaRakes tamilnavarasam.com

இந்திரகோபம் - பட்டுப்பூச்சி. ஓவம் - சித்திரம்; அத்து - சாரியை. இச் சிறுபாணாற்றுப்படையடிகளில், பின்இரண்டேஅடிகளே இங்கு உதாரணம். உபமேயத்தினும் உபமானம் சிறந்திருத்தல்வேண்டு மென்பது அலங்காரநூலார்துணிபாதலால், அந்தப்படி, உபமேயத்தை உபமானமாகக் கூறுதல் அவ்வுபமேயத்தைச் சிறப்பித்தற் கென்க. "பொருளே யுவமஞ்செய்தனர் மொழியினு, மருளறு சிறப்பினஃ துவம மாகும்" என்ற தொல்காப்பியச் சூத்திரமும், அதனுரையில் 'சிறப்பு என்றதனான், ஒப்புமைமாத்திரையன்றித் தான்புனைந்துரைக்கக் கருதிய முலையினையும் முகத்தினையும் உயர்ந்த பொருளாகிய உவமத்தினும் உயர்ந்ததாகச் சிறப்பித்துரைத்தா னென்பது' என்றதும் இங்கு உணரத்தக்கன.

(௧௫) இயம்புநல்வேட்கையுவமையென்பது - பொருளை இன்னது போலுமென்று சொல்ல வேட்கின்றது என்உள்ளம் என்பது. அது "நன்றுதீ தென்றுணரா தென்னுடைய நன்னெஞ்சம், பொன்றுதைந்த பொற்சுணங்கிற் பூங்கொடியே, மன்றன், மடுத்தலைந்த தாமரைநின் வாண்முகத்திற் கொப்பென், றெடுத்தியம்பல் வேண்டுகின்ற தின்று" எனவரும். (இ - ள். பொன் றுதைந்தபோலும் அழகிய சுணங்கினையும் பொலிவினையு முடைத்தாகிய கொடியை யொப்பாய்! நன்று தீது என்பதனை ஒன்றுந்தெளியாது, நறுநாற்றத்தை யுடைத்தாய் மடுவிடத்துநின்று தயங்காநின்ற தாமரை நின்ஒளியினையுடைத்தாகிய முகத்திற்கு ஒப்பாமென்று எடுத்துரைக்கவேண்டுகின்றது, இன்று, என் நெஞ்சம்; எ - று. துதைதல் - செறிதல். மன்றல் - மணம். இயம்பல்-சொல்லல். வாள் - ஒளி.)

(கு - பு.) இதனைக் கருத்துவமையென வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் ஆசிங்யாஸோபமை யெனப்படும். வேட்கின்றது - விரும்புகின்றது.

(௧௬) பலபொருளுவமையென்பது - ஒருபொருட்குப் பலஉவமை காட்டுவது. அது "வேலுங் கருவிளையு மென்மானுங் காவியுஞ், சேலும் வடுவகிருஞ் செஞ்சரமும்-போலுமாற், றேமருவி யுண்டு சிறைவண் டறைகூந்தற், காமருவு பூங்கோதை கண்" எனவரும். (இ - ள். மதுவை விரும்பியுண்டு சிறைவண்டு முரல்கின்ற கூந்தலையும் அழகியமாலையையுமுடையாருடைய கண்களானவை வேலையும் கருவிளைமலரையும் மெல்லியநோக்கத்தையுடையமானையும் காவிமலரையும் சேலையும் மாவினது வடுவகிரினையும் செவ்விய சரத்தினையும் போலும்; எ - று. ஆல் - அசை. தே - மது.)

(கு - பு.) இதனைப் பலவியலுவமை யென வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் பஹூபமை யெனப்படும். சரம் - அம்பு.

(௧௭) விகாரவுவமையென்பது - உவமையை விகாரப்படுத்தி உவமிப்பது. அது "சீத மதியி னொளியுஞ் செழுங்கமலப், போதின் புதுமலர்ச்சி யுங்கொண்டு-வேதாத்தன், கைம்மலரா லன்றிக் கருத்தால் வருத்தமைத்தான், மொய்ம்மலர்ப்பூங் கோதை முகம்" எனவரும். (இ - ள். செறிந்தமலர்களாற் பொலிவுபெற்ற கூந்தலினையுடையாள் முகத்தினை, பிரமன், குளிர்ந்தமதியின் கண் உண்டாகிய ஒளியினையும் செழித்த கமலப்போதி லுண்டாகிய புதியமலர்ச்சியையுங் கொண்டு, தன்கைத்தாமரையினானன்றித் தன்உள்ளக்கருத்தால் வருத்து அமைத்தான்; எ - று. செழுமை - வளப்பம். போது - பூ. வேதா - அயன். கருத்து - உள்ளம். வருத்தல் - செய்தல். அமைத்தல் - முடித்தல் மொய்ம்மலர் - செறிமலர்.) "முத்துக்கூர்த் தன்ன முளையிளங் கூரெயிற்று, மணிதொடுத் தன்ன வைம்பான் மறுத்துடைத்து, மதியம்வைத் தன்ன வாண் முகத் தொருத்தி" என்பதூஉம் அது.

RangaRakes tamilnavarasam.com

(கு - பு) இது வடமொழியில் விக்ரியோபமை யெனப்படும். முத்து கூர்த்து அன்ன - முத்தைக்கூர்மையாக்கினாற்போன்ற, முளை இளங் கூர் எயிறு - முளைத்த இளமையான கூரிய பற்களையும், மணி தொடுத்து அன்ன - நீலமணியை ஒழுங்காவைத்தாற்போன்ற, ஐம்பால் - கூந்தலையும், மறு துடைத்து மதியம் வைத்து அன்ன - களங்கத்தை யொழித்துச் சந்திரனை வைத்தாற்போன்ற, வாள் முகத்து-ஒளியுள்ள முகத்தையு முடைய, ஒருத்தி-ஒருமகள் என்று பொருள் காண்க. இங்கு உபமானத்தை இயல்பாகக் கூறாமல் அதனைச் செயற்கைப்படுத்திக் கூறியமை காண்க.

(௧௮) மோகவுவமையென்பது - ஒருபொருள்மே லெழுந்த வேட்கையான் வந்த உள்ளமயக்கந் தோன்ற உரைப்பது. அது "கயல்போலு மென்று நின் கண்பழிப்பல் கண்ணின், செயல்போற் பிறழுந் திறத்தாற் - கயல்புகழ்வ, லாரத்தா னேமருங்கு லந்தரள வாண்முறுவ, லீரத்தா லுள்வெதும்புமி யான்" எனவரும். (இ - ள். முத்தினாற்செய்யப்பட்ட பூணால் வருந்தாநின்ற மருங்குலினையும் அழகியமுத்தினுடைய ஒளிபோன்ற முறுவலினையு முடையாய்! உன்னுடைய குறிப்பினால் மனமழியும் யான், கயல்போலுமென்று நின்கண்ணினைப்பழிபபன்; நின்கண்போற் பிறழுந் திறப்பாட்டாற் கயலைப் புகழ்வன்; எ-று. பிறழ்தல் - விளங்குதல். ஆரம் - முத்துவடம். அம் தரளம் - அழகிய முத்து. ஈரம - குறிப்பு. உள் - மனம். வெதும்பல் - அழலுதல்.)

(கு - பு.) இதனை மயக்கவுவமையென வழங்குதலும் உண்டு. இங்கு உவமைகூறுமிடத்து மதிமயக்கமுண்மைதோன்றக் கூறியமை காண்க. 'ஆரத்தா னோமருங்குல்' எனறும் பிரதிபேதம் உண்டு; பொருள் அதுவே: நோதல்-மெலிதல்.

(௧௯) அபூதவுவமையென்பது- முன்பு இல்லாததனை உவமையாக்கியுரைப்பது. அது "எல்லாக் கமலத் தெழிலுந் திரண்டொன்றின், வில்லேர் புருவத்து வேனெடுங்க - ணல்லீர், முகம்போலு மென்ன முறுவலித்தார் வாழு, மகம்போலு மெங்க ளகம்" எனவரும். (இ - ள். 'வில்லினையொத்த புருவத்தினையும் வேல்போன்ற நெடியகண்ணினையு முடைய நல்லீர்! உம்முடையமுகத்தினை யொக்கும், எங்குமுள்ள கமலப்பூக்களின் செவ்வியும் செறிந்து ஒன்றுமாயின் என, முறுவலைச்செய்தார் மருவிவாழும் இடம்போலும், எங்களுள்ளம்; எ - று. அஃதேல், விகாரவுவமையோடு இதனிடை வேற்றுமை என்னையெனின்,—விகாரவுவமையென்பது, பிறரான் விகாரப்பட்டதாகக் கொண்டதனை ஒன்றற்கு உவமையாகவியுரைப்பது: இஃது அன்னதன்று என்பது.

(கு - பு.) இதனை இல்பொருளுவமையென வழங்குதலும் உண்டு. இங்ஙனம் எங்கும் இல்லாதபொருளை உவமைகூறுவது, உள்ளபொருள் எதுவும் ஒப்பாகா தென உபமேயத்தைச் சிறப்பித்தற் கென்க. அன்னது-அத்தன்மைத்து.

(௨௦) பலவயிற்போலியுவமையென்பது - ஒருதொடர்மொழிக்கண் பல உவமைவந்தால் அவ்வந்தஉவமைதோறும் உவமைச்சொல்தோன்றப் புணர்ப்பது. அது "மலர்வாவி போல்வரான் மாதர் கமல, மலர்போலு மாதர் வதன - மலர்சூ, ழளிக்குலங்கள் போலு மளக மதனுட், களிக்குங் கயல்போலுங் கண்" எனவரும. (இ - ள். கமலமலர்ந்த வாவிபோல்வர் மாதர்; கமலமலர்போலும் மாதர்வதனம்; மலர்சூழ்ந்த வண்டின்குலம் போலும் அளகம்; அதனுட்களித்துகளாநின்ற கயல்போலும் கண்கள்; எ - று. வதனம் - முகம். அளிக்குலம் - வண்டின்திரள்)

(கு - பு.) இது வடமொழியில் வாக்யார்த்தோபமையில் அடங்கும். அதனுள் - தாமரைமலர்வாவியில். பலவயின் - பலஇடம்.

RangaRakes tamilnavarasam.com

(௨௧) ஒருவயிற்போலியுவமையென்பது - ஒருதொடர்மொழிக்கண் பல உவமை வந்தால் அவ்வந்தவுவமைதோறும் உவமைச்சொற்புணராது ஓருவமைச்சொற் புணர்ப்பது. அது "நிழறங்கோப மல்க நிறைமலர்ப்பூங் காயா, சுழற் கலவமேல்விரித்த தோகை-தழற்குலவு, தீம்புகை யூட்டுஞ் செறிகுழலார் போலுங்கார், யாம்பிரிந்தார்க் கென்னோ மினி" எனவரும். (இ-ள். காயாமலரின் நிழலின்கண் இந்திரகோபஞ்செறிந்த அப்பொலிவினையுடைய காயாவின் நிறைந்த மலரின்சூழலின்மேல் தன் கலாபத்தை விரித்த மயிலானது தழலின்கண்ணே தோன்றிய நறும்புகையினையூட்டுஞ் செறிந்த குழலினையுடைய மடவாரைப் போலும், கார்காலம், யாம்பிரிந்துபோகப்பட்டோர்க்கு என்னாம் இனி? எ-று. நிழல்-காயா நிழல். கோபம் - இந்திரகோபம் அங்க - அங்க. சுழல் - தழைப்பு. கலவம்- பீலி. விரித்தல் - ஆடுதல். தோகை - மயில். குலவல் - உண்டாதல். தீம் புகை - அகிற்புகை. கார் - கார்ப்பருவம்.)

(கு - பு) இந்திரகோபம் செறிந்த இடம் தழலுக்கும், காயாமலரின் அடர்த்தி புகைக்கும், மயிற்றோகை கூந்தலுக்கும், மயில் மாதர்க்கும் ஆகக் கூறப்பட்ட பலவுவமைகளையும் ஒருதொடராக்கி அதற்கு ஒருவமைச்சொல்லே கொடுத்தமை காண்க.

(௨௨) கூடாவுவமையென்பது - ஒருபொருட்குக் கூடாதவற்றைக் கூடுவதாகக்கொண்டு அதனை ஒன்றற்கு உவமையாக்கி உரைப்பது. அது "சந்தனத் திற் செந்தழலுந் தண்மதியில் வெவ்விடமும், வந்தனவே போலுமா றும்மாற் றம் - பைந்தொடியீர், வாவிக் கமல மதிமுகங்கண் டேக்கறுவா, ராவிக் கிவையோ ரரண்" எனவரும். (இ-ள். பைந்தொடியீர்! சந்தனத்தின்கண் செந்தழலும் குளிர்ந்த மதியினிடத்து வெவ்விடமும் பிறந்தாற்போலும், நும்முடைய வார்த்தைகள்; ஆதலால், குளிர்ச்சவாவியிடத்துக் கமலமலரும் மதியமும்போலும் நும்முகங் கண்டு ஏக்கறுவார் ஆவிக்கு இவையோ காவல்; எ-று. வெவ்விடம் - கடியவிடம். மாற்றம் - வார்த்தை. ஆவி - உயிர். ஏக்கறல் - ஆசைப்படுதல். அரண் - காவல்.)

(கு - பு) இது வடமொழியில் அஸம்பாவிதோபமையெனப்படும். இச் செய்யுளில் முன்னிரண்டடியே இதற்கு உதாரணம்.

(௨௩) பொதுநீங்குவமையென்பது - உவமையைக்கூறிமறுத்துப் பொருளையே உவமையாக்கி உரைப்பது. அது 'திருமருவு தண்மதிக்குஞ் செந் தாமரையின், விரைமலர்க்கு மேலாந் தகைத்தாற் - கருநெடுங்கண், மானே யிருளளகஞ் சூழ்ந்தநின் வாண்முகந், தானே யுவமை தனக்கு" எனவரும். (இ-ள். கரியநெடியகண்களையுடைய மானே! குளிர்ந்தமதிக்கும் திருமருவப்பட்டசிவந்த தாமரையினது நறுநாற்றத்தையுடைய மலருக்கும் மேலாகியதன்மையையுடைத்தாகலான், இருளாகிய அளகஞ்சூழ்ந்த நின்ஒளியினையுடைய முகம் தானே தனக்கு உவமையாம்; எ - று. திரு - கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கம். மருவல் - உண்டாதல். தகை - தன்மை)

(கு - பு) இதனை உயர்புவமையென்று வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் அஸாதாரணோபமையெனப்படும். இதனை இயைபின்மையணியெனப்படும் அநந்வயாலங்காரமென வேறுக்கூறுவர் ஒருசாரார். இப்பொருளுக்கு ஒப்பு வேறொன்றுமில்லை யென்பது, இதன் கருத்து.

(௨௪) மாலையுவமையென்பது - ஒருபொருட்குப் பல உவமை வந்தால் அவை ஒன்றோடொன்று இடைவிடாத தொடர்ச்சியுடையவாகப் புணர்த்துக் கடைக்கண் பொருள்கூட்டி முடிப்பது. அது "மலர்பொந்து மாதவனே போன்று மயன்பா, லலைகடலே போன்று மதனுட் - குலவு, நிலவலய மேபோன்று நேரி

RangaRakes tamilnavarasam.com

யன்பா னிற்குந், சிலைகெழுதோள் வேந்தர் திரு" எனவரும். (இ - ள். பொதிய மலையிடத்து அகத்தியனைப் போன்றும், அவன் உண்ணப்பட்ட அலையையுடைய கடல் போன்றும், அதனுள் உண்டாகிய நிலவட்டம்போன்றும், சோழனுடைய இடத்தே பேராதேநிற்கும், விற்பயின்ற தோள்களையுடைய வேந்தர் செல்வம்; எ - று.)

(கு - பு.) இது வடமொழியில் மாலோபமை யெனப்படும். (௩௧)

சூ. அற்புதஞ் சிலேடை யதிசயம் விரோத
மொப்புமைக் கூட்டந் தற்குறிப் பேற்றம்
விலக்கே யேதுவென வேண்டவும் படுமே.

என்பது: அவ்வுவமையலங்காரம் பிறஅலங்காரங்களோடுங் கூடிவருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு) அற்புதமுஞ் சிலேடையும் அதிசயமும் விரோதமும் ஒப்புமைக் கூட்டமுந் தற்குறிப்பேற்றமும் விலக்கும் ஏதுவும் எனச்சொல்லப்பட்ட எட்டு அலங்காரங்களோடு கூடியும் வரும் அவ்வுவமையலங்காரம்; (எ - று.)

அவை - அற்புதவுவமை, சிலேடையுவமை, அதிசயவுவமை, விரோதவுவமை ஒப்புமைக்கூட்டவுவமை, தற்குறிப்பேற்றவுவமை, விலக்குவமை, ஏதுவுவமை எனப் பெயர்கொடுத்து வழங்கப்படும்.

(கு - பு.) முந்தினசூத்திரத்திற் கூறப்பட்ட விரியுவமைமுதலியன போலத் தனியே வாராமல் இவை வேறு அலங்காரத்தோடு கூடி வருதலால், இவற்றை வேறுபிரித்து ஓதினர். அற்புதம் முதலிய அலங்காரங்களின் தன்மை, மேல் அவ்வவ்வலங்காரத்தின் இலக்கணங் கூறுமிடத்து விளங்கும்.

அவற்றுள்,

(௧) அற்புதவுவமை:—"குழையருகு தாழக் குனிபுருவந் தாங்கி, யுழையருயிர்பருகி நீண்ட - விழியுடைத்தாய், வண்டே திருளளகஞ் சூழ வருமதியொன், றுண்டேல் வியன்முகத்திற் கொப்பு" என வரும். (இ - ள். குழை தாழ்ந்த பக்கத்தினையுடைத்தாய் வளைந்தபுருவத்தினையுடைத்தாய்ப் பக்கத்தினின்று கண்டாருடைய உயிரை உண்டுவளர்ந்த கண்ணினையுடைத்தாய்ச் சுரும்புகளாலே மேவப்பட்டிருக்குங் குழலைச் சூழக்கொண்டு வருவதொரு மதியம் உண்டாயின், இவள்முகத்திற்கு ஒப்பாம்; எ - று.)

(கு - பு.) கீழ்க்கூறப்பட்ட தன்மைமுதலிய முப்பத்தைந்து அணிகளுள் அற்புதமென்பது ஒன்று இல்லையே யெனின்,—அவ்வணிகளுள் சுவையென்னும் அணி எட்டுவகைமெய்ப்பாட்டையும் பற்றி நடப்பதாதலால், அதன்பிரிவுகளுள் வியப்பு என்பதே இங்கு அற்புதமெனக் குறிக்கப்பட்டதென்க. அதன் தன்மையை இவ்வியலின் சுரு-ஆம் சூத்திரத்திற் காண்க. இங்கு முகத்தின் தன்மையை வியந்து அதற்கு ஒருவமையை நாடிக்கூறலுற்றதனால், அற்புதவுவமையாயிற்று. அற்புதவுவமையெனினும், வியப்புவமையெனினும் ஒக்குமெனக் கொள்க. இது இங்ஙனமாயின் இதற்கு ஒப்பாம் என்னும் வாய்பாடுபெற்றிக் கூறுதல் இதன் இலக்கண மெனப்படும்; "இப்படி யென்ப தியைபிய துடைமையி, னப்பொரு வாமெனு மற்புத வுவமை" என வீரசோழியவுரையிற் காட்டியமை காண்க. குழை - காதணி.

(௨) சிலேடையுவமை:—"செந்திருவுந் திங்களும் பூவுந் தலைசிறப்பச், சந்தத் தொடையோ டணிநழுவிச்-செந்தமிழ்நூல், கற்றார் புனையுங் கவிபோன் மனங்கவரு, முற்றா முலையாண் முகம்" எனவரும். (இ - ள். திருவென்றுந்

திங்களென்றும் பூவென்றுஞ் சொல்லப்பட்ட இவற்றது பெயரை முதற்கண்ணேயுடைத்தாய், ஓசையோடுகூடி, சொற்சோலையுடனே அலங்காரம் புணர்ந்து, பயின்றோருள்ளங் கவருந் தன்மையையுடைத்தாய், செந்தமிழ்நூல்கற்றோராலே சொல்லப்பட்ட கவி போல,—திருவினுருவத்தையுந் திங்களினுருவத்தையும் பூவையும் உச்சியிலுடைத்தாய், நிறத்தோடுகூடியிருக்கின்ற பூமாலையோடும் அழகுதழுவி, பயின்றோருள்ளங்களைக் கவருமுகம்; எ - று. கவிமேற்செல்லுங்கால்—சந்தம் - ஓசை, தொடை - சொற்சோலை, அணி - அலங்காரம். இனி, முகமேற் செல்லுங்கால்—சந்தம் - நிறம், தொடை - மாலை, அணி - அழகு. இது, செம்மொழிச்சிலேடை.)

(கு - பு.) சிலேடையணியின் இலக்கணத்தையும், செம்மொழிச்சிலேடை பிரிமொழிச்சிலேடை யென்ற அதன்பிரிவுகளின் தன்மையையும் மேல் ௩௪, ௩௫-ஆம் சூத்திரங்களிற் காண்க. இங்கு முகத்துக்கும் சான்றோர்செய்யுளுக்கும் ஒப்புமையைச் சொற்பொருமைகொண்டு காட்டியதனால், சிலேடையுவமையாயிற்று. இதில் பொதுத்தன்மையாக வந்த பலபொருட்சொற்றொடர்களெல்லாம் சொற்கள் வெவ்வேறுவகைபாகப்பிரியாமல்ஒருவகையாகவேநின்று இருபொருள்தந்து செம்மொழிச்சிலேடையாதல் காண்க. சிலேடையுவமை, வடமொழியில் ச்லேஷோபமா எனப்படும். செம்மொழியை அபிங்கபத மென்பர். கவியைநோக்கிய பொருளில், திரு திங்கள் பூ என்றவை-காப்பியத்தின் முதலில் வைக்கத்தக்க மங்கலச்சொற்களாம். முகத்தை நோக்கிய பொருளில், திரு - ஸ்ரீதேவியென்னுந் தலைக்கோலம்; திங்கள் - சந்திரன்போன்ற வடிவமாகச் செய்யப்பட்ட தலையணி.

இனி, பிரிமொழிச்சிலேடையுவமை:—"களிதடத்த வல்லியின் கண்ணெகிழ ஞாலத், தளவி னிறைகடாஞ் சிந்திக்-களிறிகலுங், கந்த மலையா நிலவுங் கவடசைய, வந்த மலையா நிலம்" எனவரும். (இ - ள். செறிவினையும் பெருமையினையுமுடைய (காலிலேசெறிந்திருக்கின்ற) விலங்கின் கண் ஊறத் தரைமீது நிறைந்தகடாம்பொழியத் தறியைச்சீறிப் புரோசைக்கயிறு அசைய வரும் யானை போன்றது, பெரியபொய்கைப் பூவல்லித் தேன் சோர உலகத்தார்நிறைகளையழித்து விரைகமழ நெருங்கியபணைகளையசைத்து வருகின்ற தென்றல்; எ-று. யானையின்மேற் செல்லுங்கால்—களி - செறிவு. தடம் - பெருமை. வல்லி - விலங்கு. கண் - மூட்டுவாய். நெகிழ்தல் - கழலுதல் ஞாலம் - பூமி. நிறைகடாம் - மிக்கமதம். சிந்தி - பொழிய. கந்தம் - தறி. மலையா - சீறா. நிலவுதல் - பொருந்தல். கவடு - புரோசைக்கயிறு. அசைதல்-அறுதல். இனி, தென்றன்மேற் செல்லுங்கால்—களி - பெருமை. தடம் - பொய்கை. அல்லி - பூ, கள் - மது. நெகிழ்தல் - சோர்தல். ஞாலம் - உலகத்தார். நிறை-ஒழுக்கம். சிந்தி - அழித்து. கந்தம் - விரை. அலைத்தல் - நாறுதல். நிலவுதல - நெருங்குதல். கவடு - மரக்கொம்பு. அசைதல் - அலைதல்.)

(கு - பு.) இங்குத் தென்றற்காற்றுக்கும் யானைக்கும் ஒப்புமை விளக்கப் பொதுத்தன்மையாய் வந்த சொல்தொடர்களிலே பெரும்பாலும் சொற்கள் வெவ்வேறுவகையாகப்பிரிந்துஇருபொருள்பட்டதனால்,பிரிமொழிச்சிலேடையுவமை யாயிற்று. வல்லி அல்லி, கண்நெகிழ கள்நெகிழ, அளவில் அளவுஇல, நிறைகடாம் நிறைகள்தாம், கந்தம்மலையா கந்தம்அலையா என வெவ்வேறுப் பிரிந்தமை காண்க. யானையை நோக்கிய பொருளில், ஞாலத்தளவில் - பூமிமுழுவதும் என்றும்; தென்றலை நோக்கிய பொருளில், அளவுஇல் - அளவில்லாத என்றும் பொருள் காண்க. தென்றலைநோக்கிய பொருளில், தாம் - அசை. சிறுபான்மை செம்மொழிகளும் இருப்பினும் பெரும்பான்மைபற்றிப்

RangaRakes tamilnavarasam.com

பெயர் கொடுக்கப்பட்டது. இங்ஙனம்வரும் பிறபதச்சிலேடோபமையை வட மொழியில் ஸமாஸோபமையென்றலும் உண்டு. புரசையெனினும், புரோசை யெனினும் ஒக்கும், யானைகட்டுங்கயிறு: யானைக்கழுத்தணிகயிறுமாம்.

இதனைச் சந்தானவுவமை யென்பாரு முளர்; சந்தானமென்பது - இரண்டு பொருளுக்கும் உபகாரமாயிருக்குஞ் சொற்களாலே பாடப்படுவது.

(கு - பு.) சிலேடையுவமையில் சொல்தொடர்கள் ஒருமுறையே வந்து உபமானத்தோடும் உபமேயத்தோடும் சார்ந்து அதற்கேற்ப இருபொருள்படு மென்றும், சந்தானவுவமையில் சொல்தொடர்கள் தனியே உபமானத்தைச் சார்ந்தும் உபமேயத்தைச் சார்ந்தும் இருமுறைவந்து அதற்கேற்ப பொருள் வேறுபடு மென்றும் இவ்விரண்டற்கும் வேறுபாடுகொள்வர் ஒருசாரார். "'திரு மேவிக் கடிகமழ்ந்து திங்களொடும் பகைத்தமையா, லுருமேவுந் தாமரையோ டொக்குநின் ஞெண்முகமே." இஃது இரண்டும் சிலேடித்துவந்தமையால், சி லேடையுவமையாயிற்று. "புரந்தசொற் பொருளையும் பொருளையு மொன்ற விரண்டையுஞ் சிலேடிக் கிசைப்பது சிலேடை" எனக்கொள்க', 'இனி, சந்தா னவுவமையாவது-உவமையும் பொருளும் தொடர்ந்து சொற்சலிப்பது. "கோ பத்தின் மிக்குக் குவிகோலம் பெய்துவிடி, லாபதனைச் செய்யு மநங்கன்போற் றுவாது, கோபததின் மிக்குக் குவிகோலம் பெய்துவிடி, லாபதனைச் செய்யு பணிவா யணிமயிலே," "தொலைப்பரும பொருளையும பொருளையுந் தொடர் ந்துசொற், சலிப்பது பொருளினிற் சந்தா னம்மே" எனக் கொள்க'என்ற வீர சோழியவுரை இங்குக் காணத்தக்கது.

இதனை இவ்வாறு வேறுபடுத்துக்காட்டியது என்னை யெனின்,— மேல், பண்புமுதலியனவேயன்றிச் சொற்பொதுமை காரணமாகவும் உவமைபுணர்க் கப்படு மென்றார்: அது காட்டுதற்கு என்பது.

(கு - பு) 'சொற்பொதுமை காரணமாக உவமைவரும்' என்பது, கீழ் நான்காஞ்சூத்திரவுரையிற் காட்டப்பட்டது.

(௯) அதிசயவுவமை —"நின்னுழையே நின்முகங் காண்டு நெடுந்தடந், தன்னுழையே தன்னையுங் காண்குவ - மென்னு, மிதுவொன்று மேயன்றி வேறுமை யுண்டோ, மதுவொன்று செந்தா மரைக்கு" எனவரும். (இ-ள். நல்லாய்! நின்னிடத்தே நின்முகத்தைக் காணுகின்றேம், பெரிதாகிய பொய் கையிலே தாமரையையுங் காணுகின்றேம் என்கிற இத்தன்மையே யன்றி வேறுபாடு கண்டிலேம், மதுவினையுடைய தாமரைக்கும் நின்முகத்திற்கும்; எ - று. உழை - இடம்.)

(கு - பு) அதிசயவணியின் இலக்கணத்தை உஎ, உஅ-ஆம் சூத்திரங்களிற் காண்க. முகமாகியபொருளின் அழகை உவந்துசொல்லும்பொழுது உலகநடை கடவாதபடி உயர்ந்தோர் வியப்ப உவமைகொடுத்துச் சொன்னதனால், இது அதிசயவுவமையாயிற்று.

"பாலினிடை நீல மணிநிறஞ்சேர் பான்மைபோன், ஞாலம் பரந்த நகை நிலவு - மாலிருளாம், வைம்மருவு மூவிலைவேல் வன்கட் டமருகக்கைச், செம் மல் கருமாமை சேர்ந்து" என்பதூஉம் அது. (இ - ள். நீலமணியானது பாலை ச்சேர்ந்து தன்னொளியைப் பாலுக்குக் கொடுத்தாற்போல, கூர்மைமருவிய முத் தலையுடைய சூலத்தையும வலிய கண்ணையுடைய தமருகத்தையுமுடைய கைய னாகிய சிவபிரானுடைய (மிடற்றிலுண்டாகிய) கருநிறத்தைச் சேர்ந்து உலகத் திற்பரந்தவெண்மையுடையநிலவும் பெரியஇருள்நிறம்பெற்றது; எ-று. பால் - பெருமை. மாமை - நிறம். செம்மல் - பெரியோன். பான்மை - தன்மை. நகை - வெண்மை.)

RangaRakes tamilnavarasam.com

(கு-பு) இது, இருளின்தன்மையை வருணிக்குங்கால் உலகாலடைகட லமல் உயர்ந்தோர்வியப்பச் சொன்னது. உயர்ந்தசாதி நீலமணியின் இலக்கணம், அதனைப் பாலின்மேலெபெய்தால் அது பாலினகத்தேயுள்ளளவும் பால் தனது இயற்கைவெண்ணிறம் மாறி அதன் நீலநிறமாகவே தோன்றும் விளங்குதலென உணர்க. "கருமணியம் பாலகத்துப் பதித்தன்ன டடியவாய்." "கறங்கு பாலினுட் காசி நிருமணி, நிறங்கி ளர்ந்துதன் னீர்மைகெட் டாங்கு" என்ற சிந்தாமணிச்செய்யுள்களையும், அவற்றின் உரையில் 'கருமணியைப் பாலிற் பதித்தாற் பால நிறங்கெடு மென்றுணர்க', 'பாலினுள்ளே நீலமணிநிறங்கிளர அது தன் னீர்மைகெட்டாற்போல' என்றவற்றையுங் காண்க. தமருகம்=டமருகம்; அது, வாத்தியவிசேடம். அதிசயவுவமையை மிகையுவமையணியென வழங்குதலும் உண்டு.

(௪) விரோதவுவமை:—"செம்மை மரைமலருந் திங்களு நும்முகமுந், தம்முட் பகைவிளைக்குந் தன்மையவே—வெம்முனைய, வெப்பாருஞ் சென்னி வளப்புகார் போலினியீ, ரொப்பாகு மென்பா ருளர்" எனவரும். (இ-ள். நாதனமாகிய சோழனது வளவிய புகார் போன்ற இனிமையையுடையீர்! செந்தாமரைமலரும் மதியமும் நுமதுமுகமும் தம்முள்ளே பகைபெருக்குந் தன்மையாயிருக்க, இவற்றை உவமைக்குப் பொருந்துமென்பாருமுளர்; இதற்குக் காரணஞ்சொல்வீராமின். எ-று.)

(கு-பு) விரோதவணியின் இலக்கணத்தை ௫௰-ஆம் சூத்திரத்திற் காண்க. இங்கு உபமானத்துக்கும் உபமேயத்துக்கும் பகைமையுண்மை கூறியதனால் விரோதவுவமையாயிற்று. மரை-முதற்குறைவிகாரம். தனம்-நிதி. சென்னி-சோழன். வளவிய-வளப்பமுள்ள. புகார்-காவிரிப்பூம்பட்டினம்; இது, சோழனது இராசதானி.

(௫) ஒப்புமைக்கூட்டவுவமை:—"விண்ணின்மேற் காவல் புரிந்துறங் கான் விண்ணவர்கோன், மண்ணின்மே லன்னை வயவேந்தே - தண்ணளியிற், சேரா வவுணர் குலங்களையுந் தேவர்கோ, னேரார்மே லத்தகையை நீ" எனவரும். (இ-ள். விண்ணின்மேலுண்டாகிய உலகத்தைக் காக்குந் தொழிலின் மிக்கு உறங்கானாயினான், தேவர்கட்குத் தலைவனாகிய இந்திரன்; மண்ணின்மேலுண்டாகிய உயிர்களைக் காக்கவேண்டி, வலிமையுடைய வேந்தனே! நீயும் உறங்காயாயினாய், உள்ளங்குளிர்ந்து பிறரைக்காக்குந் தன்மையிற் சேராத அசுரர் குலங்களைக் களையாநிற்கும், இந்திரன்; பகைவரிடத்திலே நீயும் அத்தன்மையை; எ-று. புரிதல்-மிகுதல்.)

(கு-பு.) ஒப்புமைக்கூட்டவணியின் இலக்கணத்தை ௫௩-ஆம் சூத்திரத்திற் காண்க. உபமேயமாகிய சோழனது தன்மையைக் கூறுமிடத்து உபமானமாகிய இந்திரனது தன்மையையுங் கூட்டி ஒக்கவுரைத்தமையால் ஒப்புமைக்கூட்டவுவமையாயிற்று. இது, அவ்வணியின் பிரிவுஇரண்டனுள் புகழொப்புமைக்கூட்டம். இது வடநூலில் துல்யயோகோபமை யெனப்படும்.

(௬) தற்குறிப்பேற்றவுவமை:—"உண்ணீர்மை தாங்கி யுயர்ந்த நெறியொழுகி, வெண்ணீர்மை நீங்கி விளங்குமா - றண்ணீர்த், தரம்போலு மென்னத் தருகடம்பை மாறன், கரம்போற் கொடைபொழிவான் கார்" எனவரும். (இ-ள். (முதுவேனிற்காலத்தில்) தடத்திலுண்டாகிய குளிர்ந்த நீர்போல (ச்சேர்ந்தோர்யாவர்க்கும்வருத்தம்நீங்கக்) கொடுக்கவல்ல கடம்பையென்னும் பதியிலுண்டாகிய மாறனென்னும் இயற்பெயரையுடையவனது கரம்போலக் கொடுப்பான் நினைந்து, மேகமானதும், உள்ளேநீரையுடைத்தாய் உயர்ந்த வானெறியே நடந்து வெளுத்ததன்மையை நீங்கி விளங்காநின்றது; எ-று. இவன்

RangaRakes tamilnavarasam.com

கையும், பிறர்க்குநீர்பெய்துகொடுக்குந் தொழிலானே நீர்புலராது உலகத்தார் கைகளுக்கு மேலாகப் பயின்று சிவந்ததன்மையை யுடைத்தாய் விளங்குதல் கண்டுகொள்க. தண்ணீர்த்தரம்போலுமென்னத்தரு கர மெனக் கூட்டுக. இத் தொழில் கைக்குவற்ற மென்க.)

(கு - பு.) தற்குறிப்பேற்றவணியின் இலக்கணத்தை உகூ-ஆம் சூத்திரத்திற் காண்க. இங்கு, மேகம் இயல்பாக உண்ணீர்மை தாங்கி உயர்ந்தநெறி பொழுகி வெண்ணீர்மைநீங்கிவிளங்குதற்கு, மாறன்கரம்போற் கொடைபொழியக்கருதுதலாகிய காரணத்தைக் கவி தானாக ஏற்றிக்கூறினமையால் தற்குறிப்பேற்றமாம் மாறன்கரத்துக்கும், காருக்கும் இங்ஙனம்கூறிஒப்புமைவிளங்க வைத்தமையால், தற்குறிப்பேற்றவுவமையாயிற்று. தடம் - தடாகம். தரம்- இடம், நீர்நிலை; மலையிடமுமாம்: அன்றி, இயல்பெனவுங் கொள்ளலாம். கரம் - கை. வானெறியே - ஆகாயவழியே. வெளுத்ததன்மையை நீங்கி-கறுத்து. உண்ணீர்மையென்பதில் நீர்மையென்பது - நீரையே யுணர்த்தினமையால் மை - பகுதிப்பொருள்விகுதி. புலராது - உலராது. 'தண்ணீர்த்தரம்போலத் தரு' என்ற அடைமொழியை மாறனுக்குஞ் சேர்க்கலாம். தற்குறிப்பேற்றவுவமையை நோக்குவமை யென வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் உத்ப்ரேக்ஷோபமை யெனப்படும்.

(எ) விலக்குவமை:—"குழைபொருது நீண்டு குமிழ்மேன் மறியா, வுழைபொருதென் னுள்ளங் கவரா - மழைபோற், றருநெடுங்கைச் சென்னி தமிழ்நாடனையார், கருநெடுங்கண் போலுங் கயல்" எனவரும். (இ - ள். மழையைப் போலக் கொடுக்கவல்ல பெரிய கையினையுடைய சென்னியுடைய தமிழ்நாட்டை யொப்பாருடைய கரியநெடியகண்போலும், கயலும், சங்கொடுபொருது வளர்ந்து நீர்க்குமிழிமேலே மறிந்து தன்னிடத்திலே பொருதும், என் உள்ளத்தைக் கவரமாட்டா என்ற இதனானே, கண்ணும் காதிலுண்டாகிய குழையோடு சேர்ந்து வளர்ந்து குமிழுக்குமீதே தாவுவதுபோன்று மானின் விழியோடு பகைத்து என்னுள்ளத்தைக்கவருமென நின்றவாறு காண்க. கயல்மேற் செல்லுங்கால்—குழை - சங்கு, குமிழ் - நீர்க்குமிழி, உழை - பக்கம். கண்மேற் செல்லுங்கால்—குழை - மகரக்குழை, குமிழ் - மூக்கு, உழை - மான். நீள்தல்- வளர்தல். கவர்தல் - கொள்ளுதல். மறிதல் - தாவுதல். பொருதல் - பகைத்தல். சென்னி - சோழன். தமிழ்நாடு - சோணாடு.)

(கு - பு.) இங்கு விலக்கு என்றது, முன்னவிலக்கு என்னும் அணியை. அதன் இலக்கணத்தை கரு-ஆம் சூத்திரத்திற் காண்க. இதனைத் தடையுவமை யென வழங்குதலும்உண்டு. இது வடமொழியில் ப்ரதிஷேதோபமையென்றும், ஆக்ஷேபோபமையென்றும்கூறப்படும். இங்குக் கண்ணுக்கும்கயலுக்கும்ஒப்புமை கூறி, கண்போலக் கயல் என்உள்ளங்கவராதென அதனை ஒருசார் விலக்குதலால், விலக்குவமையாயிற்று. முன்னிரண்டடி - சிலேடை, கண்ணை நோக்கும்போது, குமிழ் - குமிழம்பூப்போன்ற மூக்குக்கு, உவமையாகுபெயர்.

(அ) ஏதுவுவமை:—"வாளரவின் செம்மணியும் வன்னியிளம் பாசிலையு, நாளிளைய திங்க ணகைநிலவு - நீளொளியாற், றேனுலவு பூங்கொன்றைத் தேவர்கோன் செஞ்சடைமேல், வானுலவு விற்போல் வரும்" எனவரும். (இ-ள். ஒளியினையுடைய அரவின் சூட்டினது மணியானது சிவந்தவொளியை மிகுத்தலானும், வன்னியாகிய மரத்தின் இளையஇலை தன்னுடைய பசுமையை மிகுத்தலானும், குழவித்திங்களானது தன்னுடைய வெண்மையை மிகுத்தலானும், தேனுலவப்பட்ட பொலிவையுடைய கொன்றையினது பூத் தன்கணுண்டாகிய பொற்கென்றநிறத்தை மிகுத்தலானும், தேவர்கட்குத்தலைவனாகிய முக்

RangaRakes tamilnavarasam.com

கட்சடவுளுடைய சிவந்தசடையானது வான்மீதுண்டாகிய வில்லுப்போலத் தோன்றுகின்றது; எ - று. நகை - ஒளி. வில் - இந்திரவில்.)

(கு - பு.) ஏதுவணியின் இலக்கணத்தை, ௩௧ - ஆம் சூத்திரத்திற் காண்க. ஏதுவுவமையைக் காரணவுவமையென வழங்குதலும் உண்டு. இங்குக் காரணங்காட்டி உவமித்ததனால், ஏதுவணியாயிற்று. அரவு - சிவபிரானது ஆபரணம். வன்னியிலை - அக்கடவுள் சூடுவது. பிறைத்திங்கள் - முடியிலுள்ளது.

அஃதேல், உவமைவிரித்த சூத்திரமெல்லாம் ஒன்றாக்கி யுரையாது இரண்டாக உரைத்தது என்னை யெனின்,—மேலைச்சூத்திரத்திற் சொல்லப்பட்டன, சொல்லின்முடிவினப்பொருண்முடித்தலென்னுந் தந்திரவுத்தியன. இவை எதிரதுநோக்கலென்னுந்தந்திரவுத்தியன: ஆதலான்,இரண்டாகவைத்தாரென்பது.

(கு - பு.) முந்தினசூத்திரத்திற் சொல்லப்பட்ட விரியுவமை முதலியன தம்தம்பெயரிலேயே தமது இலக்கணம் தோன்ற நின்றதனால், 'சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல் என்னும் தந்திரவுத்தியன' என்றும், இச்சூத்திரத்தில் வந்த அற்புதவுவமை முதலியன எதிரது போற்றல் என்னும் உத்தியால் மேல்வருகிற அவ்வவ்வணியின் இலக்கணத்தை நோக்கிக் கூறப்பட்டனவாதலால்,'எதிரதுபோற்றலென்னுந் தந்திரவுத்தியன'என்றுங் கூறினர். (௩௨)

எ. மிகுதலுங் குறைதலுந் தாழ்தலு முயர்தலும்
பான்மாறு படுதலும் பாகுபா டுடைய.

என்பது: உவமைக்கு எய்தியதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) உவமேயஅடைக்குஉவமானஅடை மிகப் புணர்தலும், உவமேய அடைக்கு உவமான அடை குறையப் புணர்தலும், இழிந்தஉவமையோடு உயர்ந்தபொருள் உவமையாதலும், உயர்ந்தஉவமையோடு இழிந்தபொருள் உவமையாதலும், ஆண்பாற்குப் பெண்பால் உவமையாதலும், பெண்பாற்கு ஆண்பால் உவமையாதலும், ஒருமைப்பாற்குப் பன்மைப்பால் உவமையாதலும், பன்மைப்பாற்கு ஒருமைப்பால் உவமையாதலும் ஆகியவை வேறுபாடுடையன, (எ-று.)

* 'வேறுபாடு' என்பது-புன்புலவர் புணர்க்குங்கால் நன்புலவரால் வேறுபடுத்துச் சிறப்பின்மையிற் குற்றமெனக் கூறப்படுவதும், அல்லதூஉம் நன்புலவராற் சிறப்புடையவென்று கொள்ளப் புணர்க்கப்படுவதும் ஆமென்க.

(கு - பு) எய்தியது - பொருந்தியது. அடை - விசேடணம்.

அவற்றுட் சில வருமாறு:—

"நீலப் புருவங் குனிய விழிமதர்ப்ப, மாலைக் குழல்சூழ்ந்த நின்வதனம்-போலுங், கயல்பாய வாசங் கவருங் களிவண், டயல்பாய வம்போ ருகம்."

(இ - ள். நீலநிறத்தையுடைய புருவம் முரியக் கண் மதர்ப்பப் பூமாலையையுடைய குழலாற் சூழப்பட்ட நின்னுடைய முகம் போன்றது, கயல்மீனிர மதுவையுண்கிற களித்தசுரும்பு பக்கத்திலே டரவ மலர்ந்த தாமரை; எ-று.) என வரும் இதனுள், உவமையாகிய முகத்திற்புருவமுரிவிற்கு ஏற்பது ஒன்று பொருளாகிய தாமரைக்கண் புணராமையான், உவமேய அடைக்கு உவமானஅடை மிக்கு வழுவாயிற்று.

(கு - பு.) முரிய - வளைய. பொருள் - உபமேயம். இங்கு 'நீலப்புருவங் குனிய' என்றது பயனின்றிநின்றதனால், வழுவெனப்பட்டது.

---

* 'வேறுபாடுடைய' என்றது-இவை புன்புலவர் புணர்க்குங்கால் மிக்கோரால் வெறுக்கப்படுவதோர் சிறப்பின்மை தெரிந்து குற்றமென்று கூறப்படும்; அல்லதூஉம், தெள்ளியோரராற் சிறப்புடையது என்று கொள்ளப் புணர்க்கவும்படும் என்றவாறு' என்றும் பிரதிபேதம் உண்டு.

RangaRakes　　　　　　　　　　tamilnavarasam.com

"நாட்டந் தடுமாறச் செவ்வாய் நலந்திகழத், தீட்டரிய பாவை திருமுகங்-காட்டுமாற், கெண்டைமீ தாட நறுஞ்சே யிதழ்கிளர, வண்டுசூழ் செந்தாமரை." (இ - ள். மீதேகண் தடுமாறியுலாவச் சிவந்தவாய் அழகெறிப்ப எழுதற்கரிய உருவையுடைய பாவை போன்றுளது திருமுகத்தை யொவ்வாநின்றது, மீதேகெண்டையுலாவ நறுநாற்றத்தையுடைத்தாய்ச் சிவந்தஇதழ்விளங்க வண்டாற் சூழப்பட்ட சிவந்த தாமரை; எ - று. தீட்டரியபாவை - கொல்லியம் பாவை. காட்டும் - ஒக்கும்.) எனவரும் இதனுள், பொருளாகிய தாமரைக் கண்வண்டொழுங்கிற்கு ஏற்பதோ ருவமை உவமையாகியமுகத்துக்கண் தோன்றப் புணர்த்தலில்லாமையான், உவமேய அடைக்கு உவமான அடை குறைந்து குற்றமாயிற்று.

(கு - பு.) பாவை - உவமையாகுபெயர். காட்டும் - உவமையுருபு இங்கு 'வண்டுசூழ்' என்றது பயனின்றிநின்றதனால், வழுவாயிற்று.

"மன்னவர்க்கு நாய்போல் வனப்புடையர் வாள்வயவர், மின்மினிபுற் வெஞ்சுடரோன் போல்விளங்கு - மன்னப், பெடைபோலுஞ் சந்திரன் பைந் தடங்கள் போலு, மிடைமாசொன் றில்லா விசும்பு." (இ - ள். வேந்தரிடை நாயிடத்துண்டாகிய நற்செய்தியைச் செய்தலான், வாளினையுடைய வலியோர் நாயையொப்பர், மின்மினியும், வெய்யசுடரோனைப்போல விளங்கும்; அன்னப்பெடையை யொக்கும், மதியம்; பசியதடாகங்கள் போலும், செறிந்திருக்கப்பட்ட மாசில்லாத ஆகாயம்; எ - று.) எனவரும் இதனுள், 'மன்னவர்க்கு நாய்போல் வனப்புடையர் வாள்வயவர்' என்புழி இறப்ப இழித்து இன்னாதாகப் புணர்க்கப்பட்டது உவமை. 'மின்மினியும் வெஞ்சுடரோன்போல விளங்கும்' என்புழி-மின்மினிக்குநிகராக்கலாகாத வெஞ்சுடரோனை உவமிக்க உவமை வழுவாயிற்று. 'அன்னப்பெடைபோலுஞ் சந்திரன்' என்புழி - ஆண்பாற்குப் பெண்பால் உவமையாய்க் குற்றமாயிற்று. 'பைந்தடங்கள போலு மிடைமாசொன்றில்லா விசும்பு' என்புழி - ஒருமைப்பாலுக்குப் பன்மைப்பாலை உவமைகாட்ட வழுவாயிற்று.

* பிறவும் அன்ன. இனி, வழுவின்றிவருஞ் செய்யுளை வந்துழிக்காண்க. மிகுதல் குறைதல் தாழ்தல் உயர்தல பான்மாறுபடுதல் முதலியன குற்றமேனும் குணம்மிக்குழிக் கொள்க.

(கு - பு.) இச்செய்யுளில் முதல்வாக்கியத்தில் நாயுவமை இழிவாதலால், வழுவாயிற்று; இதனை வடநூலார் ஹீநோபமையென்னுந் தோஷமென்பர் இரண்டாம்வாக்கியத்தில் மின்மினி சூரியன்போல் விளங்குதல் அசம்பாவிதம். மூன்றும்வாக்கியத்தில் பெடையென்றது அநாவசியம். நான்காம்வாக்கியத்தில் 'கள்' என்ற பன்மைவிகுதி அநாவசியம். இவை சிறந்த பயனொன்றுந் தாராமையால், வழுவாயின. இறப்ப - மிகவும். அன்ன - அத்தன்மையன. (௩௩)

* இங்குச் சிலபிரதிகளில் அடியில் வருகிற வாக்கியங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன—பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க. இனி, அவை வழுவின்றி வருமாறு—"சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப், பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக், கட்டி னிணக்கு மிழிசனன் கையது, போழ் தூண் டூசியின் விரைநதன்று மாதோ, ஊர்தர வந்த பொருநனொ, டார்புனை தெரிய னெடுந்தகை போரே" என்பதனுள் ஆர்புனைதெரியல் நெடுந்தகை போர்த்தொழிலுவமையாகிய போழ்தூண்டூசித்தொழிற்குப் பலஅடை புணர்த்தாரெனினும் அவையனைத்தும்போர்த்தொழில்விரைவையே சிறப்பித்துவந்தமையான் சிறந்துவந்தது. அல்லதூஉம் "விசும்புதொடநிவந்த மாக்கா ளிதணப், பசுங்கேழ் மெல்லிலை யருகுசெறிந் தன்ன, வண்டுபடு மருளிய தாழிருங் கூந்

RangaRakes tamilnavarasam.com

௮. போல மானப் புரையப் பொருவ
நேரக் கடுப்ப நிகர நிகர்ப்ப
வேர வேய மலைய வியைய
வொப்ப வெள்ள வுறழ வேற்ப
வன்ன வனைய வமர வாங்க
வென்ன விகல விழைய வெதிரத்
துணைதூக் காண்டாங்கு மிகுதகை வீழ
விணைசிவண் கேழற்றுச செத்தொடு பிறவு
நவைதீர் பான்மை யுவமைச் சொல்லே.

என்பது: இடைநிற்கும் உவமைச்சொற்களை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) போல முதல் செத்து ஈறாகச் சொல்லப்பட்ட முப்பத்தைந் தும் இவைபோல்வனபிறவும் குற்றமற்றபாகுபாடுடைய உவமைச்சொல்லாம். (எ - று.)

'பாகுபாடு' என்பது - போலஎன்றுசொல்லப்பட்ட சொல் புலிபோன் மறவன், புலிபோலவந்தனன் என இடைச்சொல்வாய்பாட்டாற் பொதுவாய் நிற்கும்; அல்லது, புலிபோலுமறவ னெனப் பெயரெச்சவாய்பாட்டாற் பெயர் கொண்டும், புலிபோலவந்தா னென வினையெச்சவாய்பாட்டான் வினைகொண் டும் நிற்கு மென்பது. பிறவும் அன்ன.

'பிறவும்' என்றதனால், நாட நக நடுங்க நந்த கள்ள கருத காட்ட மிளிர எய்ப்ப மருள என்பன முதலியனவுங் கொள்க.

இவற்றுள் தொக்கும் விரிந்தும் தொகாதேவிரிந்தும் நிற்பனவெல்லாம் கண்டுகொள்க.

தல்'' என்பதுபோல்வனவற்றுள்ளுங் கண்டுகொள்க. ''தொரூஅ தொரூஅ வென்றி தோலொடு, துறுகன் மறையினு முய்குவை போலாய், நெருந லெல்லைநீ யெறிந்தோன் றம்பி, யகற்பெய் குன்றியிற சுழலுங் கண்ணன், பேரூ ரட்ட கள்ளிற், கோரிற் கோயிற் றேருமா னினனே'' என்பதனில் பொருள்உயர்ந்து உவமைதாழ்ந்து வந்தது. ''குடப்பாற் சில்லுறை போலப், படைக்குநோ ரெல்லாந் தாகு யினனே'' என்பதூஉம் அது ''கடலகண் டன்ன கணைகன் பரப்பி, னிலம்பக வீழ்ந்த வேர்முது கிழங்கிற், கழைகண் டன்ன தூம்புடைத் திரள்காற், களிற்றுச் செவியன்ன பாசடை மருங்கிற், கழுநிவந் தன்ன கொழுமுகை யிடையிடை, முறுவன் முகத்திற் பன்மலர் தயங்க'' என்பதனுள் உவமைஉயர்ந்து பொருள்தாழ்ந்து வந்தது பொருட்கு உபகாரப்பட்டுவந்தமை யான் அமைந்தது. ''கலங்கவிழ்ந்த நாய்கன்போற களைதுணை பிறிதின்றிப், புலம்புமென் னிலைகண்டுமே போகலனே யென்றியால்'' என்பதனுள் பால்மாறு பட்டுவந்தும் கையறவும் தனிமையும் விளக்கிச் சிறப்பித்தமையான் வழுவாகாதாயிற்று. ''நெடுவரைப் பெருந்தேன் கண்ட விருக்கை, முடவ னுட்கைச் சிறுகுடை கோலிக், கீழிருந்து சுட்டுபு நக்கி யாங்குக், காதலர் நல்கார் நயவா ராயினும், பலகாற் காண்டலு முள்ளத்திற் கினிதே'' எனவும், ''கன்றமர் கறவை போல, முன்சமத் தொழிந்ததன் றோழற்கு வருமே'' எனவும் வருமிவற்றுள் பால்மாறுபட்டும் திணைமாறுபட்டும வந்தும பழிப்பின்றாயிற்று. ''பெரும்பெயர்க் கரிகாலன் முன்னிலைச் செல்லாப், பீடின் மன்னர் போல, வோடுவை மன்னுல் வாடைநீ யெமக்கே'' என்பதும், ''இளம்பிறை சேர்ந்த வெயிற்றியள்'' என்பதும் பால்மாறுபட்டு வந்தும் பழிப்பின்றாயின.



RangaRakes tamilnavarasam.com

(கு - பு.) போல, மான, புரைய, பொருவ, நேர, கடுப்ப, நிகர, நிகர்ப்ப, ஏர, ஏய, மலைய, இயைய, ஒப்ப, எள்ள, உறழ, ஏற்ப, அன்ன, அனைய, அமர, வாங்க, என்ன, இகல, இழைய, எதிர, துணை, தூக்கு, ஆண்டு, ஆங்கு, மிகு தகை, வீழ, இணை, சிவண், கேழ், அற்று, செத்து என முப்பத்தைந்து காண்க. விழைய என்றும் பிரிக்கலாம். மிகு தகை என இரண்டாகக்கொண்டால் முப்பத்தாறாகும். இவற்றில், போலமுதலியன பல, பலவகைவினைவாய்பாட்டால் வரும். 'முதலியன' என்றது-ஒன்ற, ஒடுங்க, ஒட்ட, வென்ற, வியப்ப, விறப்ப, காய்ப்ப, மதிப்ப, மாற்ற, மறுப்ப, புல்ல, பொற்ப, நளிய, ஓட, நோக்க, ஆர, இன்ன, உற்ற, செய்ய, இன், சீர் என்பன ஆதியவற்றை நோக்கி. இவற்றின் பரியாயநாமங்களும் உவமவாசகமாய் வருதல் உண்டு. இங்ஙனம் உவமவுருபுகள் மிகப்பலவாதல்நோக்கி "உவமச் சொல்லே வரம்பிகந் தனவே" என்றாரும் உண்டு. இவற்றிற்கெல்லாம் உதாரணம் இலக்கியங்களில் வருமிடங்களிற் கண்டுகொள்க. (௯௪)

உவமையலங்காரம் முற்றும்.

## ௩. உருவகவணி.

௯. உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றெனை மாட்டி னஃதுருவக மாகும்.

என்பது: நிறுத்தமுறையானே உருவகமென்னும்அலங்காரத்துப் பொதுவிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) உவமையாம்பொருளையும் உவமிக்கப்படும்பொருளையும் வேறுபாடொழிவித்து ஒன்றென்றதோருள்ளுணர்வு தோன்ற ஒற்றுமைகொளுத்தின் அஃது உருவகமென்னும் அலங்காரமாம்; (எ - று)

(கு - பு) உருவகம் - ரூபகம் என்ற வடசொல்லின் திரிபு. அதன் இலக்கணம் - உபமேயத்தில் உபமானத்தை ஏற்றிக்கூறுதல். ஒற்றுமைகொளுத்துதல் - பேதமில்லாதாக்கல். (௯௫)

௧௦. தொகையே விரியே தொகைவிரி யெனாஅ
வியைபே யியைபிலி வியநிலை யெனாஅச்
சிறப்பே விரூபகஞ் சமாதான மெனாஅ
வுருவக மேக மநேகாங்க மெனாஅ
முற்றே யவயவ மவயவி யெனாஅச்
சொற்றவைம் மூன்று மற்றதன் விரியே.

என்பது: அவ்வுருவகமென்னும் அலங்காரத்தை விரித்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) தொகையுருவகமும், விரியுருவகமும், தொகைவிரியுருவகமும், இயைபுருவகமும், இயைபிலுருவகமும், வியநிலையுருவகமும், சிறப்புருவகமும், விரூபகவுருவகமும், சமாதானவுருவகமும், உருவகவுருவகமும், ஏகாங்கவுருவகமும், அநேகாங்கவுருவகமும், முற்றுருவகமும், அவயவவுருவகமும், அவயவியுருவகமும் எனச்சொல்லப்பட்ட பதினைந்தும் மேற்கூறிய உருவகத்து விரியாம்.

இவற்றிற்கெல்லாம் உருவகமென்னுஞ் சொற் கூட்டி, ஏகமென்பதனோடு அங்கமென்பதுங் கூட்டி உரைக்கப்பட்டது.

RangaRakes tamilnavarasam.com

இவையெல்லாம் சொல்லின் முடியு மிலக்கணத்தன.

(கு-பு.) இவற்றிற்கு - தொகைமுதலியவற்றுக்கு. ஏகாரங்கள் - எண்ணுப்பொருளன. என்பதும் அப்பொருள்பற்றியே வந்தது.

அவற்றுள்,

(௧) தொகையுருவகமென்பது-ஆகிய என்னும் மாட்டேற்றச்சொல் தொக்குக்கூறுவது. அது "அங்கை மலரு மடித்தளிருங் கண்வண்டுங், கொங்கை முகிழுங் குழற்காருந் - தங்கியதோர், மாதர்க் கொடியுளதா னண்பா வதற்கெழுந்த, காதற் குளதோ கரை" எனவரும். (இ - ள். அழகிய கையாகிய மலரினையும் அடியாகிய தளிரினையும் கண்ணாகிய வண்டினையும் கொங்கையாகிய அரும்பினையும் குழலாகிய மேகத்தினையு முடைத்தாய்ப் பிறர்க்குக் காதல் செய்பவற்றாயிருப்பதொரு கொடி உளது, (நான் நெருநற்கண்டது;)நண்பனே! அக்கொடிமேலெழுந்த காதலுக்கு எல்லை உலகத்து உண்டோ வெனில், இல்லையாயிருந்தது; எ - று. மாதர் - காதல். எழுதல் - செல்லுதல்.)

(கு - பு.) இது வடமொழியில் ஸமஸ்தரூபக மெனப்படும். மாட்டேற்றச்சொல் - உபமானத்துக்கும் உபமேயத்துக்கும் உள்ள ஒற்றுமைநயத்தை விளக்குஞ் சொல்;உபமேயத்தில் உபமானத்தை மாட்டியேற்றுஞ்சொல்லென்க. ஆகிய என்னும் பண்புருபே யன்றி 'என்ற' என்பதுமுதலிய சிலவும் உருவகவுருபாக வரும். இவை வெவ்வேறு வினைவாய்பாட்டானும் வரும். கைம்மலர், அடித்தளிர், கண்வண்டு, கொங்கைமுகிழ், குழற்கார் என்றவற்றில் உருவகவுருபுதொக்கமை காண்க. அங்கை - அகங்கையுமாம். கண்வண்டு என்றவிடத்து 'கண்ணம்பு' என்றும் பாடமுண்டு. 'உளதால்' என்பதில், ஆல் - ஈற்றசை; ஆதலால் என்றும் பொருள்கொள்ளலாம். 'உளதான் மண்பால்' என்றும் பாடமுண்டு. நெருநல் - நேற்று.

(௨) விரியுருவகமென்பது - அச்சொல் விரிந்துநிற்பது. அது "கொங்கை முகையாக மென்மருங்குல் கொம்பாக, வங்கை மலரா வடிதளிராத் - திங்க, ளொளிநின்ற மூர லணங்கா மெனக்கு, வெளிநின்ற வேனிற் றிரு" எனவரும். (இ - ள். கொங்கை அரும்பாக நுண்ணிடை வஞ்சிக்கொம்பாக அழகிய கை மலராக அடி தளிராக நிலவுபோல வெள்ளிய ஒளியினையுடைத்தாய் என்மேல் வைத்த தண்ணளியினை யுடைத்தாகிய நகையினையுடைத்தாய் (நெருநல்) தோன்றிய அணங்குபோன்றிருந்தாள், (இப்பொழுது) எனக்கு இளவேனிற்காலத்தைக்கொண்டு வெளிப்பட்ட திருவையொப்பாள்; எ - று.)

(கு - பு.) இது வடமொழியில் வ்யஸ்தரூபக மெனவும், அஸமஸ்தரூபக மெனவும்படும். அணங்கு - தெய்வமகள்: மோகினி,

இவையிரண்டும் எல்லாவற்றிற்கும் பொதுவிலக்கணம். இதனுள் தொகையை முற்கூறியது, உவமைவிரித்தசூத்திரம்நோக்கி முந்துமொழிந்ததன் தலைதடுமாற் றென்னும் தந்திரவுத்தியான்.

(கு - பு.) எல்லாவற்றிற்கும் - உருவகவிகற்பங்களுக்கெல்லாம். முந்துமொழிந்ததன் தலைதடுமாற்று - முன்னொருகாற் கூறிய முறையன்றிப் பின்னொருகால் தலைதடுமாறாகக் கூறுதல்.

(௩) தொகைவிரியுருவகமென்பது - அச்சொல் தொக்கும் விரிந்தும் நிற்பது. அது "வையந் தகளியா வார்கடலே நெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காகச்-செய்ய, சுடராழி யானடிக்கே சூட்டுவன் சொன்மாலை,யிடராழி நீங்கவே யென்று" எனவரும். (இ - ள். உலகமே தகழியாகவும் நெடியகடலே நெய்யாகவும் வெம்மையையுடைய பகலவனே விளக்காகவும் சிவந்தநிறத்தை

யுடைத்தாகிய சக்கரத்தை யுடையா னடிக்கே சேர்த்துவேன், சொல்லினால் தொடுத்த மாலையை, என்னுடைய துக்கமாகிய கடல் வறப்பதாக; எ - று.)

(கு - பு.) இது வடமொழியில் ஸமஸ்தவ்யஸ்தரூபக மெனப்படும். 'வையந்தகளியா' என்றது முதலியவற்றில் உருவகவுருபு விரிந்தும் 'இடராழி' என்றதில் அவ்வுருபு தொக்கும் வந்தமை காண்க. 'சொன்மாலை' என்றதையும் தொகையுருவக மாகக் கொள்ளலாம். 'சூட்டினேன்' என்றும், 'நீங்குகவே' என்றும் பாடமுண்டு.

(௩) இயைபுருவகமென்பது - பலபொருளை உருவகஞ்செய்யுங்கால் தம்முள் இயைபுடையவாகவைத்து உருவகஞ்செய்வது. அது "செவ்வாய்த் தளிரு நகைமுகிழுங் கண்மலரு, மைவா ரளக மதுகரமுஞ் - செவ்வி, யுடைத்தாந் திருமுகமென் னுள்ளத்து வைத்தார், துடைத்தாரே யன்றோ துயர்" என வரும். (இ - ள். சிவந்த வாயாகிய தளிரினையும் நகையாகிய முல்லையரும்பினையும் கண்ணாகிய மலரினையும் கரியநீண்ட அளகமாகிய வண்டினையும் செவ்வியினையு முடைய கண்டாரால்விரும்புந்தன்மையுடைத்தாகிய முகத்தை என்னுள்ளத்திலே வைத்தார். இதனாலே என்னுடைய உள்ளத்திலுண்டாகிய துயரத்தை நீக்குவாரன்றோ, சொல்லுவீராக; எ - று. முகை - அரும்பு) இதனுள், தளிரும் முகிழும் மலரும் மதுகரமும் தம்முள் இயைபுடைமையின், அப்பெயர்த்தாயிற்று.

(கு - பு.) இது வடமொழியில் யுக்தரூபக மெனப்படும். இயைபு - சம்பந்தம். தளிர் முதலியன ஒன்றுக்கொன்று சம்பந்தமுடைமை உணர்க. 'மைவாழளகம' என்ற மூலமும், 'கருமைசேர்ந்தஅளகம்' என்றஉரையும் சில பிரதிகளிற் காணப்படுகின்றன. 'துடைத்தாரேயன்றே' என்பது ஒருபிரதியின் பாடம்.

(௪) இயைபிலுருவகமென்பது - பலபொருளுந் தம்முள் இயையாமை வைத்து உருவகஞ்செய்வது. அது "தேனக் கலர்கொன்றை பொன்னாகச் செஞ் சடையே, கூனற் பவளக் கொடியாகத் - தானே, மழையாகக் கோடு மதியாகத் தோன்றும், புழைபார் தடக்கைப் பொருப்பு" எனவரும். (இ - ள். மதுவைக் காலுகிற கொன்றைமலர் பொன்னாகவும் சிவந்தசடை வளைந்து நன்மையுடைத்தாகிய பவளக்கொடியாகவும் மதம் மழையாகவும் மருப்பு மதியாகவும் தோன்றுகின்றது, துளையையுடைத்தாகிய பெரியகையையுடைய யானையாகிய மலை; எ - று. 'தடக்கைப்பொருப்பு' என்றது, விநாயகரை. தேனககலர் - வண்டுண்மலர் எனினும் அமையும்.)

(கு - பு) இது வடமொழியில் அயுக்தரூபக மெனப்படும். இதில் பொன், பவளக்கொடி, மழை, சந்திரன் என்பனவை தம்முள் இயைபுடையன அன்மை காண்க.

(௫) வியனிலையுருவகமென்பது - ஒன்றன் அங்கம் பலவற்றினுள் சிலவற்றை உருவகஞ்செய்தும் சிலவற்றை உருவகஞ்செய்யாதும உரைத்து அங்கியை உருவகஞ்செய்து உரைப்பது. அது "செவ்வாய் நகையரும்பச் செங்கைத் தளிர்விளங்க, மைவா ணெடுங்கண் மதர்த்துலவச் - செவ்வி, நறவலருஞ் சோலைவாய் நின்றதே நண்பா, குறவர் மடமகளாங் கொம்பு" எனவரும் (இ - ள். சிவந்தவாய் எயிற்றையரும்ப, செங்கரங்கள் தளிரைவிளக்க, வருத்தஞ்செய்யும் வாளாகிய கண்கள் சிவந்த அரியோடு உலாவ, புதிதாகிய தேனை யுடைத்தாய் மலருஞ் சோலையின்கண்ணே தோன்றிற்று: நண்பனே! குறவர்க்கு மடப்பத்துடனேகூடிய மகளாந்தன்மை யுடைத்தாயிருப்பதொரு வஞ்சிக்

RangaRakes tamilnavarasam.com

கொம்பு; எ - று. மை - குற்றம். மதர்த்தல் - அரிபரத்தல். செவ்வி - பதுமை. மை - அஞ்சனமுமாம்.)

(கு - பு.) இது வடமொழியில் விஷமரூபகமெனப்படும்; ஆகவே, 'வியநிலை' என்ற பெயரில், வியமென்றது விஷமமென்ற வடசொல்லின் திரிபென்க. இங்கு ஒரு பெண்ணாகிய அங்கியைக் கொம்பாக உருவகஞ்செய்து, அவளது அங்கங்களுள் பற்களை அரும்பாகவும், கைகளைத் தளிராகவும் உருவகஞ்செய்து கண்களை உருவகஞ்செய்யாமையின், வியநிலையுருவகமாயிற்று. 'மைவார் நெடுங்கண்' என்றும் பாடமுண்டு.

(எ) சிறப்புருவகமென்பது - ஒருபொருளையெடுத்து அதற்குச் சிறந்தஅடைகளை உருவகஞ்செய்து அவற்றானே உருவகமாக்கி உரைப்பது. அது "விரிகடல்சூழ் மேதினி நான்முகன்மீ காமனாச், சுரநதிபா யுச்சி தொடுத்த - வரிதிருத்தாள், கூம்பாக வெப்பொருளுங் கொண்ட பெருநாவா, யாம்பொலிவிற் றாயினதா லன்று" எனவரும். (இ - ள். பரந்தகடல்சூழ்ந்த உலகமானது, நான்முகத்தோன் மீகாமனாகவும் தேவகங்கை பாயாகவும் அப்பாயை உச்சியிலேயுடைத்தாகிய திருமால் மேனோக்கியெடுத்த சீர்பாதம் கூம்பாகவும் பலவகைப்பட்டபொருள்களையு முடைத்தாய்ப் பெரிதாகிய அழகோடுகூடிய நாவாயானது; எ - று.) இதனுள் நான்முகன் மீகாமனாகவும், சுரநதி பாயாகவும், அரிதிருத்தாள் கூம்பாகவும் உருவகஞ்செய்யப் புவி நாவாயாயினமையின், அப்பெயர்த்தாயிற்று. (பாயை உச்சியிலேயுடைத்தாகிய தாளெனக் கூட்டுக. உலகமானது இவ்வுறுப்புக்களையுடைமையின் மரக்கலமாயிற்றெனக் கொள்க. தொடுத்தல் - கட்டல். ஆல் - அசை.)

(கு - பு) இதனைப் பண்புவமையென வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் ஸவிசேஷணரூபகமெனப்படும். கூம்பு - பாய்மரம். "காமனத்தால் விழவூறி யக்காலைக் கவ ரரங்கன், காமனத்தாவென்றுரைவார்க்கமுதன் கன்னெஞ்சர்க்கிரங், காமனத்தா னளக்குங் கடற்பார் கலம்போன்றது மீ, காமனத்தாமரையோன் கங்கை பாய் மரங் கான்மலரே" என்ற திருவரங்கத்தந்தாதிச்செய்யுளிலும் இக்கருத்து விளங்குதல் காண்க.

(அ) விரூபகவுருவகமென்பது - ஒருபொருட்குக் கூடாததன்மைபலவுங் கூட்டி உருவகஞ்செய்வது. அது "தண்மதிக்குத் தோலாது தாழ்தடத்து வைகாது, முள்மருவுந் தாண்மேன் முகிழாது - நண்ணி, யிருபொழுதுஞ் செவ்வியியல்பாய் மலரு, மரிவை வதனம்புயம்" எனவரும். (இ - ள். தட்பத்தினையுடைய மதியின் தொழிற்குக் கெடாது ஆழ்ந்த கயத்தில் தங்காது முள்ளையுடைத்தாகிய தாளின்மீது மொட்டியாது காலையும் மாலையுஞ் சேர்ந்து செவ்வியையுடைத்தாய் மலர்ந்துநிற்கும், என்காதலியுடைய முகமாகிய தாமரை; எ - று.) மதிக்குஅழிதலும் தடத்துவைகுதலும் அடியின்முளளுடைத்தாதலும் மொட்டித்தலும் தாமரைக்கு உள வெனக் கொள்க.

(கு - பு.) இதனைத் தெற்றுருவகமென வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் விருத்தரூபகமெனவும் படும். மதிக்குத் தோலாமை, தடத்து வைகாமை, முட்டாள்மேல் முகிழாமை, இரவும்பகலும் ஒப்ப மலர்தல் என்ற தாமரைக்குக்கூடாததன்மைகளை அதன்மேல் ஏற்றி முகத்தை அப்படிப்பட்ட தாமரையாக உருவகஞ்செய்தமை காண்க. இதனை மிகையதன்செய்கையுருவகமென்பர் ஒருசாரார். அரிவை - பெண்.

(கூ) சமாதானவுருவகமென்பது - ஒருபொருளை நன்றாகவுருவகஞ்செய்து அதனையே தீங்குதருவதாகக்கூறி அததீங்கும் அதனானே வருகின்றதன்றென்று அதற்குப் பிறிதோர்காரணங் கூறுவது. அது "கைகாந்தள் வாய்குமுதங்

RangaRakes tamilnavarasam.com

கண்ணெய்தல் காரிகையீர், மெய்வார் தளிர்கொங்கை மென்கோங்க - மிவ்வ னைத்தும், வன்மைசேர்ந் தாவி வருத்துவது மாதவமொன், றின்மையே யன் றோ வெமக்கு" எனவரும். (இ - ள். அழகினையுடையீர்! உம்முடைய காந் தளமலராகிய கையும் குமுதமாகிய வாயும் நெய்தலமலராகிய கண்ணும் நீண்ட தளிராகிய மெய்யும் மேன்மையுடைய கோங்கரும்பாகிய கொங்கையும் என்று சொல்லப்பட்டன நும்முடைய அவயவமாகிலும் அவையனைத்துந் தன்மை திரிந்து வன்கண்மையைச் சேர்ந்து எம்முடைய உயிரை வருத்தஞ் செய்யும்; இது, முற்காலத்தில் யாமசெய்த தீவினைப்பயன் இக்காலத்து எமக்குப்பயந்த லா லன்றோ? நும்மேல் தவறு உண்டோ? எ - று. கொங்கைக்கு அடையாகிய மென்மையைத் தீவகமாக்கிக் காந்தள் உள்ளிட்ட உறுப்புகளனைத்தினுங் கொள்க. தவம் - நல்வினை.)

(கு - பு.) குமுதம் - செவ்வாம்பல்மலர். பயத்தல் - வந்து பயன்தருதல். தீவகம் - ஒருசொல் பலவிடத்துஞ்சென்றுஇயைவது; ௩௯-ஆம் சூத்திரத்திற் காண்க.

(௩௦) உருவகவுருவகமென்பது - ஒன்றனை உருவகஞ்செய்து அதனையே பெயர்த்தும் பிறிதொன்றாக உருவகஞ்செய்வது. அது "கன்னிதன் கொங்கைக் குவடாங் கடாக்களிற்றைப், பொன்னெடுந்தோட் குன்றே புனைகந்தா - மன்னவநின், ஞாகத் தடஞ்சே வகமாக யானணைப்பல், சோகித் தருளேற் றுவண்டி" எனவரும். (இ - ள். தலைவனே! நீகாதலித்த கன்னியுடைய முலையென்னும் மலையாகிய மதக்களிற்றை நின் பொற்கலனணிந்த பெரியதோளாகிய குன்றமே திரளச்செய்யப்பட்ட கந்தாகவும் மார்பாகிய பரந்த இடமே கூடமாகவும் யான்சேர்த்துவன்; நீ அழகழிந்து வருந்தாதொழிவாயாக; எ - று. கடாம் - மதம். புனைதல் - செய்தல். சேவகம் - யானைக்கூடம். துவளுதல் - அழகழிதல். கந்து - தறி. மன்னவன் - தலைவன். குவடு - மலை) இதனுள் கொங்கையைக் குவடாக உருவகஞ்செய்து அதனையே மீண்டும் களிறாக உருவகஞ்செய்தவாறு காண்க.

(கு - பு.) இது வடமொழியில் ரூபகரூபக மெனப்படும்.

(௩௧) ஏகாங்கவுருவகமென்பது - ஒருபொருளினது அங்கம்பலவற்றுள் ளும் ஓரங்கமே உருவகஞ்செய்து ஒழிந்தஅங்கங்களை வாளாவகூறுவது. அது "காதலனைத் தாவென் றுலவுங் கருநெடுங்க, ணேதிலனால் யாதென்னு மின்மொழித்தேன் - மாதர், மருண்ட மனமகிழ்ச்சி வாண்முகத்து வந்த, விரண்டினுக்கு மென்செய்கோ யான்" எனவரும். (இ - ள். நெஞ்சமே! எமக்கு ஒரு கணவனைத்தருவாயாக வென்பதுபோன்றிருந்தது,காதளவும உலவுகின்ற கரிய நெடிய கண், அயலானுற்பயனில்லை யென்பதுபோன்றிருந்தது, இனிய தேனுகிய மொழி மாதருடைய கண்டார்க்கு மயக்கத்தோடுகூடிய உள்ளக்களிப்பைக் கொடுக்கின்ற ஒளியையுடைய முகத்திலே தோற்றிய இவ்விரண்டினுக்கும் யான் என்னசெய்பக்கடவேன்? எ - று. ஏதிலான் - அயலான்.)

(கு - பு.) வாளாவே - உருவகப்படுத்தாமலே யென்றபடி. இங்கு ஒரு பெண்ணின் அங்கம்பலவற்றுள் மொழியொன்றையே தேனாக உருவகஞ்செய்து மற்றைக் கண் முகம் முதலியவற்றை யாதொன்றாகவும் உருவகஞ்செய்யாமை காண்க.

(௩௨) அநேகாங்கவுருவகமென்பது-ஒன்றன் அங்கம்பலவற்றையும் உருவகஞ்செய்து உரைப்பது. அது "கைத்தளிராற் கொங்கை முகிழ்தாங்கிக் கணணென்னு, மைத்தடஞ்சேன் மைந்தர் மனங்கலங்க - வைததேதோர், மின்னுளதான் மேக மிசையுளதான் மற்றதுவு, மென்னுளதா நண்பா வினி" எனவரும். (இ - ள். கையாகிய தளிரினாலே முலையாகிய அரும்பினைத் தாங்குகின்ற

தன்மையையுடைத்தாகவும் கண்ணெனப்பட்ட கரிய குளிர்ந்த சேல்களாலே ஆடவருள்ளங்களை யழிக்குந்தன்மையையுடைத்தாகவும் கறுத்த மேகத்தைச் சுமந்துகொண்டு நிற்பதாகவும் ஒருமின் தோன்றிப் பூமிக்கண்ணே நின்றமைதல், அது, நண்பனே! என் உள்ளத்ததுவேயாம்; எ - று. வைத்தல் - தோற்றுதல். மற்று — அசை.)

(கு - பு.) இதில் கை கொங்கை கண் கூந்தல் வடிவம் என்ற அங்கம் பலவும் உருவகஞ் செய்யப்பட்டமை காண்க.

(௧௩) முற்றுருவகமென்பது-அவயவ அவயவிகளை ஏற்றஇடத்தோடெம்பிற ழற்றேழும் முற்ற உருவகஞ்செய்து உரைப்பது. அது "விழியே களிவண்டு மென்னகையே தாது, மொழியே முருகுலாந் தேறல்-பொழிகின்ற, தேமருவு கோதைத் தெரிவை திருமுகமே, தாமரையென் னுள்ளத் தடத்து" என வரும் (இ-ள் தேன்மருவிய கூந்தலையுடைய தெரிவை திருமுகமே தாமரை, விழிகளே களிக்கின்றவண்டு, மெல்லியவாகிய நகையே தாது, வார்த்தையே நறுநாற்றமுலாவுகின்ற மது, என் உள்ளமாகிய தடாகத்து; எ - று. நகை-பல். தாது - அகவிதழ். முருகு - நறுநாற்றம். உலவுதல் - உண்டாதல். தேறல் - மது. தேம் - தேன்.)

(கு - பு) இது வடமொழியில் ஸகலரூபக மெனப்படும். இங்கு விழி நகை மொழி என்ற உறுப்புக்களையும், முக மென்ற உறுப்பியையும் அதற்கு இடமாகிய மனத்தையும் ஆக எல்லாவற்றையும் உருவகஞ்செய்தமை காண்க. தெரிவை - பெண்.

(௧௪) அவயவவுருவகமென்பது-அவயவத்தை உருவகஞ்செய்து அவயவியை வாளாவேகூறுவது. அது "புருவச் சிலைகுனித்துக் கண்ணம்பெ னுள்ளத், துருவத் துரந்தா ரொருவ - ரருவி, பொருங்கற் சிலம்பிற் புனையல்குற் றேர்மேன், மருங்குற் கொடிநுடங்க வந்து" எனவரும். (இ - ள். அலங்கரிக்கப்பட்ட அல்குலாகிய தேரின்மீதே யேறி இடையாகிய கொடி யசைய வந்து அருவியலைக்கப்பட்ட மலைச்சிலம்பினிடத்திலே தோற்றித் தம்முடைய புருவமாகிய வில்லை வளைத்துக் கண்ணாகிய அம்பினாலே என்உள்ளத்திலே உருவிப் போக ஒருவர் எய்தார்; இதற்குச் செய்யக்கடவது என்கொல்? சொல்வாயாக; எ - று. மலைப்பக்கத்திலே வந்துதோன்றி யெய்தார் எனக் கூட்டுக. சிலம்பு - மலையடி.)

(கு - பு) இதனை உறுப்புருவகமென வழங்குதலும் உண்டு. புருவம் கண் அல்குல் மருங்குல் என்ற அவயவங்களை உருவகஞ்செய்து அவயவியாகிய மகளை உருவகஞ்செய்யாமை காண்க.

(௧௫) அவயவியுருவகமென்பது-அவயவியைஉருவகஞ்செய்து அவயவங்களைவாளாவேகூறுவது. அது "வார்புருவங்கூத்தாட வாய்மழலை சோர்ந்தசைய, வேரரும்பச் சேந்து விழிமதர்ப்ப-மூரல், லளிக்குந் தெரிவை வதனம் புயத்தாற், களிக்குந் தவமுடையேன் கண்" எனவரும். (இ - ள். நல்லாருடைய புருவம் அசைய வாயின்வார்த்தையானது உருத்தெரியாது அழிந்து தளரக் குறுவியர்ப்பையுடைத்தாக விழியானது சிவந்து மதர்ப்ப முறுவலிப்பதொரு தாமரையாகிய முகத்தினாலே களிக்குந்தன்மையைப் பெற்றது: முற்காலத்தில் யான் செய்த நல்வினைப்பயத்தினாலே, எனது கண்; எ - று. மழலை - உருத் தெரியாச்சொல். சோர்தல் - அழிதல். அசைதல்-தளர்தல். சேந்து - சிவந்து. மூரல் - நகை. தவம் - நல்வினை.)

(கு - பு.) இதனை உறுப்பியுருவகமென வழங்குதலும் உண்டு. இங்கு உறுப்பியாகிய முகத்தைமாத்திரமே தாமரையாக உருவகஞ்செய்து புருவம்

RangaRakes tamilnavarasam.com

மொழி விழி முறுவல் என்னும் அதன் உறுப்புக்களை உருவகஞ்செய்யாதொ ழிந்தமை காண்க. பிறர் ஏகதேசவுருவகமெனக் கூறுவது, இங்கு வியனிலை, ஏகாங்கம், அவயவம், அவயவி என்றவற்றில் அடங்குமாறு அறிக. (௩௬)

௩௩. உவமை யேது வேற்றுமை விலக்கே
யவநுதி சிலேடையென் றவற்றொடும் வருமே.

என்பது: அவ்வுருவகவலங்காரம் பிறஅலங்காரங்களோடுங் கூடிவருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு) உவமையும் ஏதுவும் வேற்றுமையும் விலக்கும் அவநுதியும் சிலேடையும் என்னும் ஆறு அலங்காரங்களோடு கூடியும்வரும், அவ்வுருவகவல ங்காரம், (எ - று.)

(கு - பு) இதனை வேறுகூறியதன் காரணம், கீழ் உவமையணிக்குக் கூறி யதனாலேயே விளங்கும்.

அவற்றுள்,

(க) உவமையுருவகம் :— "மதுமகிழ்ந்த மாதர் வதன மதிய, முதய மதியமே யொக்கு - மதிதளர்வேன், வெம்மை தணிய மதராக மேமிகுக்குஞ், செம்மை யொளியாற் றிகழ்ந்து" எனவரும். (இ - ள். மதுவுண்டு களி த்த மடவாருடைய முகமதியம், உதயஞ்செய்த நிறைமதியம் போன்றது: அறி வழியுந்தன்மையையுடையேனுடைய ஆற்றல் அழியக் களிப்போடுகூடிய காத லைப் பெரிதும்புலப்படுத்தித் தோன்றுகின்ற சிவந்த நிறத்தாலே அழகுபெற்று; எ - று. மதம் - களிப்பு. ராகம் - காதல். திகழ்தல் - அழகுபெறுதல்.) இத னுள், முக்கியப்பொருளையும் குணப்பொருளையும் ஒப்புமைகாட்டினமையான், உவமையுருவகமாயிற்று.

(கு - பு.) இது வடமொழியில் உபமாரூபக மெனப்படும். இங்கு 'வதன மதியம்' என்ற உருவகம் 'உதயமதியமே யொக்கும்' என்ற உவமையோடு சம்பந்தப்பட்டுவந்தமைகாண்க. 'வதனமதியம் உதயமதியமே யொக்கும்'என்ற தொடர் கூறியதுகூறலென்னுங் குற்றத்துக்கு இடமாகாமையை இவ்வியலின் ௯௩ - ஆம் சூத்திரவுரையிற் காண்க. மதுவுண்டமாதர்முகம் மதர்ப்பும் செம் மையுமுடைத்தாய்; இவ்விருதன்மையும் உதயகாலத்துச் சந்திரனுக்கும் இருத் தலால், அதனோடு உவமிக்கப்பட்டது. முக்கியப்பொருள் - பிரஸ்துதம்: உப மேயம். குணப்பொருள்-முக்கியமல்லாதபொருள்: அப்ரஸ்துதம், உபமானம்.

(உ) ஏதுவுருவகம்:—"மாற்றத்தாற் கிள்ளை நடையான் மடவன்னந்,தோ ற்றத்தாற் றண்ணென் சுடர்விளக்கம்- போற்று, மியலான் மயிலெம்மை யிந்நீர் மை யாக்கு, மயலார் மதர்நெடுங்கண் மான்" எனவரும். (இ - ள். நண்பனே! எம்மை இப்படித்தாழ்வுபண்ணிய நெடிதாய்ச் சிவந்து காதலைக்கொடுக்கின்ற கண்களை யுடைமையான் மான்போன்றவள், மொழியினாற் கிள்ளையாயினாள், நடையினால் மடவிய அன்னமாயினாள், மேனியாற் குளிர்ந்த உருவத்தை யுடைய விளக்கின் நிறமாயினாள், யாவரும் பரவப்படுஞ் சாயலான் மயிலாயி னாள்; எ - று. சுடர்-விளக்கு. விளக்கம் - நிறம். மயல்-காதல். மதர் - சிவப்பு.)

(கு - பு.) இங்கு ஒருபெண்ணைக் கிளிமுதலியனவாக உருவகப்படுத்து மிடத்துச் சொல்முதலிய காரணங்களைக் காட்டினமையால், ஏதுவுருவகம்.

(௩) வேற்றுமையுருவகம்:-"வையம்புரக்குமான் மன்னவநின் கைக்காரும், பொய்யின்றி வானிற் பொழிகாருங் - கையா, மிருகார்க்கு மில்லைப் பருவ மிடிக்கு, மொருகார் பருவ முடைத்து" எனவரும். (இ - ள். அரசனே! உன்னுடைய கையாகிய மேகமும் காலம்பிழையாது ஆகாயத்தின்கண் நின்று

RangaRakes tamilnavarasam.com

பொழிகின்ற மேகமும் உலகத்தைப்புரக்குந்தன்மையின் ஒக்குமாயினும், மையெ ன்கிற இரண்டுமேகங்களுக்கும் பருவமில்லை; இடையையுடைய ஒருமேகத்துக் குப் பருவமுண்டு; எ - று. ஆல் - அசை.) இதனுள் குணப்பொருளையும் முத லியப்பொருளையும் 'வையம் புரக்கும்' என்று ஒப்புமைகாட்டி, 'மைகளிருக்குப், பருவமில்லை, எனக் கார் பருவமுடைத்து' என்று வேற்றுமைசெய்தமையின், அப்பெயர்த்தாயிற்று.

(கு - பு.) வேற்றுமையணியின் இலக்கணத்தை உஉ-ஆம் சூத்திரத்திற் காண்க. வேற்றுமையுருவகம், வடமொழியில் வ்யதிரேகரூபக மெனப்படும். அதன் இலக்கணம் - உபமான உபமேயங்களை உருவகப்படுத்தி அவற்றில் ஒன் றற்குஒன்று வேறுபாடுகொட்டுவது.

(௪) விலக்குருவகம்:—"வல்லி வதன மதிக்கு மதித்தன்மை யில்லை யுளதே லிரவன்றி - யெல்லை, விளர்த்தொளிமழுங்கு மெய்மையா லெம்மைத், தளர்க்கு மியல்புடைத்தோ சொல்" எனவரும். (இ - ள். வல்லியாயினுள் முகமாகிய மதியத்திற்கு மதியினுடைய தன்மை இல்லையோ ஆனாலும்; உண்டாயின், பகற்பொழுதும் தன்னிடத்திலே ஒளியை மிகுத்து நம்மைவருத்தி அறிவையழிக்கு மியல்புடைத்தாமோ? நண்பனே! சொல்லுவாயாக; எ - று.)

(கு - பு.) இதனைத் தடைமொழியுருவகம் என வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் ஆக்ஷேபரூபக மெனப்படும். இதன் இலக்கணம் - முத லில உருவகப்படுத்திப் பின்பு அதற்குத் தடைகூறுவது. இங்கு வதனமதிக்கு மதித்தன்மையில்லை யெனக் கூறிச் சாதித்தல் காண்க. வல்லி - கொடி.

(௫) அவநுதியுருவகம்:—"பொங்களக மல்ல புயலே யிதுவிவையுங், கொங்கை யிணையல்ல கோங்கரும்பே - மங்கைநின், மையரிக ணல்ல மதர்வண்டி வையிவையுங், கையல்ல காந்தண் மலர்" எனவரும். (இ - ள். மங்கைப் பருவத்தையுடையவளே! உன்னுடைய மிக்ககருமையையுடைய கூந்தலன்று, இது, மேகப்பரப்பே; இரண்டாகிய தனங்களல்ல, இவை, கோங்கரும்புகளே; மையணிந்த செவ்வரிபரந்த கண்களல்ல, இவை, செருக்கினையுடைய வண்டுகளே; கையல்ல, இவை, காந்தள்மலர்களே; எ - று. பொங்குஅளகம்-தழைத்த கூந்தல். மை யரிக் கண் - அரிபரந்து மையுண்ட கண்.) இது, உண்மைப்பொருளை மறுத்து ஒப்புமைப்பொருளை உடன்பட்டமையான், அப்பெயர்த்தாயிற்று.

(கு - பு) அவநுதியணியின் இலக்கணத்தை ௪௪ - ஆம் சூத்திரத்திற் காண்க. அவநுதியுருவகத்தின் இலக்கணம் - உபமேயத்தை மறுத்து உபமா னத்தால் உருவகித்து இங்ஙனம் உபமேயத்தைச் சிறப்பித்தல்.

(௬) சிலேடையுருவகம்:—"உண்ணெகிழ்த்த செவ்வித்தாய்ப் பொற் றோட்டொளிவளரத், தண்ணளிசூழ்ந் தின்பந் தரமலர்ந்து - கண்ணெகிழ்ந்து, காதல் கரையிறப்ப வாவி கடவாது, மாதர் வதனம் புயம்" எனவரும். (இ-ள். உள்ளேவிரியாநின்ற பொலிவினையுடைத்தாய் அழகிய இதழ்களின் ஒளி மிகக் குளிர்ந்திருக்கின்ற வண்டுகளாற் சூழப்பட்டுக் கண்டார்க்குஇனிமைதோன்ற இதழ்விரிந்து மதுப்பொசிந்து கண்டார்க்கு ஆசைமிகுப்பப் பொய்கையிடத்து நீங்காது தோன்றிய தாமரை யென்றும், உள்ளக்கசிவால்வந்த புதுமை யுடைத்தாய்ப் பொன்னாற்செய்த தோடுகளின் ஒளி தழைப்பக் குளிர்ந்தவிருப் பத்தைமேவிக் கண்டார்க்கு ஆசையளிக்குந் தோற்றாவினையுடைத்தாய்க் கண் ணினையுமுடைத்தாய் ஆசைபபாட்டெல்லைகடப்ப உள்ளங்கடவாது இவளு டைய வதனமாகிய தாமரை யென்றும் வந்தவாறு காண்க. எ - று.) இது, தாமரைக்கும் முகத்திற்கும் சிலேடை. இதனுள், தாமரையொழுக்கத்தையும முகவொழுக்கத்தையும் ஒருசொற்றொடர்பால் சிலேடித்து, வதனம்புயமென்று

அ

உருவகஞ்செய்தவாறு கண்டுகொள்க. (தாமரைமேற் செல்லுங்கால்—உள் - தாமரையுள். நெகிழ்தல் - விரிதல். செவ்வி - பொலிவு பொன் - அழகு. தோடு - இதழ். தண் - குளிர்ச்சி. அளி - வண்டு. இன்பம் - இனிமை. தர - தோன்ற. கள் - மது. நெகிழ்தல் - விரிதல். வாவி - பொய்கை. முகத்தின்மேற் செல்லுங்கால்—உள் - மனம். நெகிழ்தல் - பொசிதல். செவ்வி - புதுமை. பொற்றோடு - பொன்னின்றோடு. அளி - விருப்பம். இன்பம் - ஆசை. தர - கொடுக்க. மலர்தல் - தோன்றல். கண் - விழி. நெகிழ்தல் - உண்டாதல். காதல் - ஆசை. ஆவி - உயிர்.)

(கு - பு.) இதில் சிறுபான்மை பிரிமொழிச் சிலேடையும், பெரும்பான்மை செம்மொழிச்சிலேடையும் வந்தன. (௩௭)

## உருவகவுவமைக்குப் புறனடை.

௧௨. உருவக முவமை யெனவிரு திறத்தவும்
பிரிப்ப வுணர்த்தும் வரம்புதமக் கின்மையிற்
கூறிய நெறியின் வேறுபட வருபவை
தேறினர் கோட றெள்ளியோர் கடனே.

என்பது: மேற்சொல்லிய உருவகம் உவமை என்னும் இரண்டுதிறந்து அலங்காரங்களுக்கும் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(கு - பு.) புறனடை - புறன் அடை: முற்கூறியதற்குப் புறத்தில் அடுத்ததாய் வருவது; அன்றி, புறன் நடை எனப்பிரித்து, முற்கூறியதற்கு வேறு விதமாகிய நடக்கை யெனினும் பொருந்தும். இது, ஒன்றற்குக்கூறிய இலக்கணத்தின் இறுதியில் அதற்குமாற்றுச்சிறப்புவிதியாகக் கூறப்படுவதற்குப் பெயராக வழங்கும்.

(இ - பு.) உருவகமும் உவமையும் என்னும் இரண்டுதிறத்து அலங்காரங்களும் ஒழிவின்றியுணர்த்தும் வரையறை யுடையவல்ல வாதலால், சொல்லப்பட்டநெறியின் வேறுபடவருபவை யறிந்து அவற்றின்பாற் சார்த்திக்கோடல் அறிவுடையோர்கடன்; (எ - று.)

ஈண்டு உருவகம் முற்கூறியது, அதிகாரம் இடையறாமல் எனக் கொள்க.

(கு - பு.) கோடல் - கொள்ளுதல். இதற்குமுந்தின மூன்றுசூத்திரங்கள் உருவகத்தைப்பற்றினவை யாதலால, 'அதிகாரமிடையறாமல்' என்றார்; சொல்லப்பட்டுவரும்விஷயத்தின் தொடர்ச்சியறு லென்பது பொருள்.

அவற்றுள் சில உருவகம் வருமாறு:—(க) ஏதுவுருவகம்—"வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க, சொல்லே ருழவர் பகை" எனவும், (உ) இயைபுருவகம்—"எரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிறாக், காருடைய பீலி கடிகாவா - நீர்வண்ண னத்தியூர் வாயா மணிமயிலே போன்றதே, பொற்றேரான் கச்சிப் பொலிவு" (எயில் - மதில். கடி - புதுமை. கா - சோலை. அணி - அழகு.) எனவும், (௩) விலங்குருவகம்—"மலையிற் பயிலா மடமஞ்ஞை வாரி, யலையிற் பிறவா வமுதம் - விலையிட், டளவாத நித்தில மாராத தேறல், வள வாண் மதர்நெடுங்கண் மான்" (பயிறல் - தங்குதல். வாரியலை - கடல். அளத்தல் - நிறுத்தல். ஆர்தல் - உண்டல். தேறல் - மது. வள வாள் - வளப்பத்தையுடைய வாள்.) எனவும், (௪) சிறப்புருவகம்—"மழலைவாய் நவ்வி மதர்நெடுங்கண் மஞ்ஞை, குழலின் பொறைமலிந்த கொம்பர் - சுழல்கலவந், தாங்கிய வன்னந் தடங்கொங்கை யாரமுதந், தேங்கொள் கமலத் திரு" (கலவம் - தோகை.) எனவும், (௫) அற்புதவுருவகம்—"மன்றற் குழலா ருயிர்மேன்

RangaRakes tamilnavarasam.com

மதன்கடவுக், டென்றற் களிதடுக்குந் திண்கணைய-மன்றவரைக், கங்குற் கடலிற் கரையேற்று நீள்புணையாம், பொங்குநீர் நாடன் புயம்" (இ - ள். பொலிவினை யுடைய நீர்சூழ்ந்த காவேரி நாடனுடைய தோளானது, நறுநாற்றத்தை யுடைய குழலினாருயிரை அழிக்க மன்மதன் வரவிடுத்த தென்றலாகிய மதக் களிறு வாராதபடி தகைதற்கு ஏற்ற வலியகணையமும், அவர்களைக் கங்குலாகிய கடலின் கரையிலே சேர்க்கும் பெரியமிதவையுமாம்; எ - று. கணையம்-யானை வாராமல் தடுக்கும் மரம்.) எனவும், இங்ஙனம் பிறவும் வருவனவற்றை உருவகத்தின்பாற் சார்த்தியுணர்க.

(கு - பு.) (க) இ-ள். (ஒருவன்) வில்லைக் கருவியாகக்கொண்டு தொழில் செய்பவரான வீரர்களோடு பகைமைகொள்வானாயினும், நீதிநூலைக் கருவியா கக்கொண்டு தொழில்செய்பவர்களான ஆலோசனையுடையவர்களுடனே பகை மை கொள்ளாதொழிக; எ - று. இங்கு, வீரர்களையும் ஆராய்ச்சியுடையவர் களையும் உழவுத்தொழில்செய்பவர்களாக உருவகப்படுத்துமிடத்து, வில் சொல் என அவர்கள்கருவியாகிய காரணத்தைக் காட்டினதனால், இது ஏதுவுருவகத் தின்பாற்படுமென்க. 'இது-வில்லினை ஏராகவுடைய உழவ ரென்றும், சொல் லினைஏராகவுடைய உழவ ரென்றும் உருவகமாக்கி இருவரையும் பொருட்டொ ழிவால் உவமித்ததனால், உருவகவுவமை' என்பர் ஒருசாரார். இத்திருக்குறளி னைப் பரிமேலழகர் 'உருவகவிசேடம்' என்றவளவே கூறினர்.

(உ) இ - ள். இருபக்கத்திலுமுள்ள ஏரிகள் இறகுகளாகவும், இடையி லுள்ள மதில் வயிறாகவும், சுற்றிலுமுள்ள பசுமையானசோலைகள் கருநிறம்மிக் குள்ள தோகையாகவும், கடல்போலுங் கருநிறமுடைய திருமாலினது திருவத்தி யூர் வாயாகவும், பொன்மயமான தேரையுடைய சோழனது இராசதானியான காஞ்சிபுரியினது தோற்றம் அழகியமயிலினுருவத்தையே ஒத்தது; எ - று. அத்தியூர்-ஹஸ்திகிரியுள்ள இடம். இங்கு, சிறகு வயிறு பீலி வாய் என உரு வகப்படுத்தப்பட்டபொருள்கள் தமக்குள் இயைபுள்ளன வாதலால், இது இயை புருவகத்தின்பாற்படுமென்க.

(௩) இ - ள். வளப்பத்தையுடைய வாள்போன்ற செழித்த நீண்ட கண் களையுடைய மான்போன்ற பெண் - மலையில்வாழாததோர் இளமயிலும், அலை களையுடைய பாற்கடலினின்று பிறவாததோர் அமிர்தமும், விலை வரம்பிட்டுக் கூறமுடியாததோர் முத்தும், உண்டுதெவிட்டாததோர் தேனுமாவள்; எ - று. வாள் - ஒளியுமாம். இங்கு, ஒருபெண்ணை மயில்முதலியனவாக உருவகப்படு த்துமிடத்து, 'மலையிற்பயிலா' என்றது முதலிய அடைமொழிகள், மயில் முத லியவற்றிற்கு மலையிற்பயிலுதல் முதலிய தன்மைகளுள்ளமையால் அவை அத்தன்மைகளில்லாத இவளுக்கு நிகராதற்கு ஏற்பனவல்ல என்று அவற்றை விலக்கும் ஒருகருத்தை விளக்குதலால், இது விலக்குருவகத்தின்பாற்படுமென்க.

(௪) இ - ள். தேனினைக்கொண்ட தாமரைமலரில் வாழ்கிற திருமகள் போன்ற பெண் - மழலைச்சொற்களைப் பேசும் வாயையுடையதோர் மானும், செழித்த நீண்ட கண்களையுடையதோர் மயிலும், கூந்தற்பாரம்மிக்கதோர் பூங் கொம்பும், திரண்ட தோகையையுடையதோர் அன்னமும், பெரியதனங்களை யுடையதோர் அரியஅமிர்தமுமாவள்; எ - று. இங்கு, நவ்விமுதலிய உருவகப் பொருள்களை 'மழலைவாய்' முதலிய அடைமொழிகளைக் கொண்டு சிறப்பித்துக் கூறினதனால், இது சிறப்புருவகத்தின்பாற்படுமென்க. 'குழலின்பொறை சுமந்த' என்றும் பாடமுண்டு.

(௫) காவேரிநாடன் - சோழன். குழலினார் - கூந்தலையுடைய மகளிரது. அன்று - அன்றியும். கங்குல் - இரவு. மிதவை-தெப்பம்; மிதப்பது. இவனிடங்

காதல்கொண்ட பகைவிர், இவன்தோள்களைச்சேரின், தென்றலும் இரவுமாகிய காமோத்தீபகப்பொருள்களால் நேரும் துயரம் ஒழிவர் என்பது இதன்கருத்து. இங்கு, சோழன்றோளைக் கணையமும் புணையுமாக உருவகப்படுத்துமிடத்து, வியப்புச்சுவைதோன்றக்கூறினமையால், அற்புதவுருவக மெனப்பட்டது.

உவமை வருமாறு:—(க) தெரிதருதேற்றவுவமை—"நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே, கல்லார்கட் பட்ட திரு" எனவும், (உ) பலபொருளுவமை—"அடிநோக்கி னாழ்கடல் வண்ண னவன்றன், படிநோக்கிற் பைங்கொன்றைத் தாரான் - முடிநோக்கித், தேர்வளவ னென்றறிந்தேன் சென்னிமே, லாரலங்க றோன்றியது கண்டு" எனவும், (ங) பண்புவமை—"கருங்கால் வேங்கை வீயுறு துறுகல், இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை, யெல்லி வருநர் களவிற்கு, நல்லை யல்லை நெடுவெண் ணிலவே" எனவும், (௪) அற்புதவுவமை—"முத்துக்கோத் தன்ன முறுவன் முறுவலே, யொத்தரும்பு முல்லைக் கொடிமருங்குல் - மற்றதன்மேல், மின்னவிக்குங் கார்போல விரைக் கூந்தன் மெல்லியலா, டன்னளிக்கு முண்டோ தரம்" (இ - ள் முத்தைக் கோத்ததுபோன்றது,இவளது எயிறு; அவ்வெயிற்றையொத்த அரும்பையுடைய முல்லைக்கொடிபோன்றது, மருங்குல்; அம்மருங்குலாகிய கொடிமீதே மின்னைத் தோற்றிய கார்போன்றது, நறுநாற்றத்தையுடைய கூந்தல்: இத்தன்மைத்தாகிய மெல்லிய சாயலாளிடத்து உண்டாகிய அன்பிற்குத் தரமுண்டோ? எ-று.) எனவும், (ரு) சந்தானவுவமை—"ஈர்ந்து நிலந்தோயு மிரும்பிடித் தடக்கையிற், சேர்ந்துடன் செறிந்த குறங்கு குறங்கெனை, மாலவரை யொழுகிய வாழை வாழைப், பூவெனப் பொலிந்த வோதி யோதி, நளிச்சினை வேங்கை நாண் மலர் நாண்மலர்க், களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கு சுணங்கு பிதிர்ந், தியாணர்க் கோங்கி னவிர்முகை முகையெனப், பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென, வண்டோட்டுப் பெண்ணை வளர்த்த நுங்கி, னின்செறி நீர்சரு மெயிற்றின்" எனவும், (இதனை மாலையுவமையெனினும் அமையும்.) (சு) விலக்குவமை—"பாரி பாரி யென்றுபல வேத்தி, யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர், பாரி யொருவனு மல்லன், மாரியு முண்டீண் டுலகு புரப்பதுவே" எனவும், இங்ஙனம் பிறவும் வருவனவற்றை உவமையின்பாற் சார்த்தியுணர்க.

(கு - பு.) (க) இ - ள். கல்லாதாரிடத்து நின்ற செல்வம், கற்றாரிடத்து நின்ற வறுமையினுங் கொடியது; எ - று. ஏ - தேற்றம். கல்லாதாரிடத்துச் செல்வத்துக்குக் கற்றாரிடத்துவறுமை உவமைகூறத்தக்கதன்றென்று தெளிந்து கூறியதனால், இது தெரிதருதேற்றவுவமையின்பாற்படு மென்க.

(உ) இ - ள் அவனதுபாதங்களை நோக்குமிடத்து,அவன் (அழகியசீர்பாதமுடைய) திருமால்போலத் தோன்றினான்,மற்றும் அவனதுவடிவத்தை நோக்குமிடத்து, அவன் (மதிக்கத்தக்க உருவமுடைய) சிவபிரான்போலத் தோன்றினான்; பின்பு அவனதுமுடியை நோக்கி, அம்முடியின்மேல் ஆத்திப்பூமாலை விளங்கியதனைக் கண்டதனால்,இராசாதிபதியான சோழனென்று நிச்சயித்தேன்; எ - று. ஆழ்கடல் வண்ணன்-ஆழ்ந்தகடல்போலும் நிறமுடையவன். பைங்கொன்றைத் தாரான் - பசியகொன்றைப்பூமாலையுடையவன். வளவன் - எல்லாவளங்களுமுடையான். சோழர்க்கு ஆத்திப்பூமாலை அடையாளப்பூமாலையாம். சோழனாகிய ஒருவனுக்குத் திருமாலும் சிவபிரானுமாகிய இருவரை உவமைகூறியதனால், பலபொருளுவமையின்பாற்படு மென்க.

(ங) இ - ள். பரந்த வெண்ணிறமான நிலாவே! கரிய அடியையுடைய வேங்கைமரத்தின் மலர்கள் பரவப்பெற்ற வலியகல் பெரியபுலிக்குட்டிபோலத்

* 'மெய்யுவமை' என்றும் பிரதிபேத முண்டு.

RangaRakes tamilnavarasam.com

தோன்றும்படியான கானகத்துவழியே இரவில் தனியேவருகிற தலைவருடைய களவொழுக்கத்துக்கு நீ அநுகூலமல்லாய்; எ - று. துறுகல்- பொற்றைக்கல். இங்கு, முன்னிரண்டடி-உதாரணம், வேங்கைமலர்சிந்தப்பெற்ற கல் வரிகளையுடைய புலியின்உடற்புறம்போன்று தோன்றுதலைக் கூறியதனால், பண்புவமையாயிற்று. இங்கே பண்பு - வண்ணமும், வடிவும். "அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை, மாத்தகட் டொள்வீ தாய துறுகல், இரும்புலி வரிப்புறங் கடுக்கும்" எனப் புறநானூற்றிலும் இவ்வொப்புமை வந்துள்ளது. 'வீயுகு' என்றும் பாடமுண்டு. 'எல்லிவரு நற்களவிற்கு' என்ற பாடத்துக்கு- (தலைவர்) இரவிலே வருகிற நல்லகளவொழுக்கத்துக்கு என்க. அஞ்சத்தகாததும் அஞ்சத்தகுவதுபோலத் தோன்றுந் தன்மையது காடு என்றும், அவ்விடத்துப் பொருள்களை விளங்கச்செய்தலால் நீ நல்லையல்லை என்றும் பழித்தவாறு.

(ச) மருங்குல் - இடை. தரம் - எல்லை. இங்கு 'முத்தநுக்கோத்தன்ன முறுவல்' என்று முதலில் ஒப்புமைகூறி அதனை மீண்டும் எடுத்து 'முறுவலை யொத்தரும்பு முல்லை' என உவமைகாட்டினமையால், இது ஒப்புமையுவமையின் பாற்படுமென்க. 'மின்னளிக்கும்' என்றவிடத்து 'விண்ணளிக்கும்' என்றும், 'சன்னளிக்கும்' என்றவிடத்து 'தண்ணளிக்கும்' என்றும் பாடமுண்டு.

(ரு) இ - ள். இழுக்கப்பட்டு நிலத்திலே படிகின்ற பெரியபெண்யானையினது நீண்டதுதிக்கைபோலத் திரண்டுருண்டு ஒன்றோடொன்று நெருங்கியுள்ள தொடையினையும்; அத்தொடைபோலப் பெரியமலையிடத்து ஒழுங்காகவளர்ந்த வாழைமரம், அதனதுபூப்போல விளங்கிய தலைமயிர்முடியையும்; அம்மயிர்முடி போலக் கரியதாய்க் குளிர்ந்து செறிந்த பெரியகிளைகளையுடைய வேங்கைமரத்தின் புதியமலர், அவ்வேங்கைப்புதுமலரென்று கருதிக் களிப்புடைய வண்டுகள் விரும்பிமொய்த்து ஆரவாரிக்கப்பெற்ற தேமலையும்; அத்தேமல்போலப் பொறிபரந்து புதிதாகப்பூத்தலையுடைய கோங்கமரத்தின் விளங்குகின்ற அரும்பு, அவ்வரும்புபோன்ற அணிகளையணிந்தவிருப்பந்தரும் முலையையும்; பெரிய மடல்களையுடைய பனைமரம் அம்முலைபோல வளர்த்த நுங்குபோல இனிமைமிக்க நீரைத் தருகிற பற்களையும்; எ-று. (உடையார்) என இருமகளிர்க்கு அடைமொழியாம். இங்குக்கூறப்பட்ட உவமைகள் பலவும் ஒன்றோடொன்று இடைவிடாது தொடர்ச்சியுள்ளனவாகப் புணர்க்கப்பட்டமையால், இது சந்தானவுவமையின்பாற்படுமென்க. சந்தானவுவமையெனினும், மாலையுவமையெனினும் ஒக்கும். ஒன்றோடொன்றுதொடர்ச்சியையுடைய பலபொருள்களை ஒருபொருளுக்கு உவமையாகவைப்பது மாலையுவமை யென்றும், அப்படிப்பட்டபொருள்களை வெவ்வேறுபொருள்களுக்கு உவமையாகவைப்பது சந்தானவுவமை யென்றும் வேறுபாடுகொள்ளுதலும் உண்டு. இச்சிறுபாணாற்றுப்படையடிகளுக்கு நச்சினார்க்கினியர் வெவ்வேறுபாடமும் அந்வயமுங்கொண்டு வேறுவகையாகப் பொருள்கூறியுள்ளார். அங்ஙனம் பொருள்கொள்ளின், இது இவ்வுவமைக்கு உதாரணமாகாது.

(சு) இ - ள். பாரி பாரி யென்றுசொல்லி அவனதுபுகழ் பலவற்றையும் துதித்து அவ்வொருவனையேபுகழ்வர்,செவ்விய நாவையுடைய புலவரனைவரும்; பாரியாகியஒருவனுமே யல்லன்,மழையுமுண்டு, இவ்விடத்து உயிர்களைப் பாதுகாத்தற்கு ; எ - று. பாரி - கடையெழுவள்ளல்களில் ஒருவன்; மிகச்சிறந்தவன். இது, அவனுக்கு மேகத்தை உவமையாக்கொள்ளுதல் புலவர்கருத்தன்று என்னுங் கருத்தைத் தொனிப்பித்து உவமையை விலக்குதலால், விலக்குவமையின்பாற்படும். உபமேயத்தை ஒருசார் விலக்கி, உபமானத்தையும் உடன்நிறுத்தினமையால், விலக்குவமையின்பாற்படு மென்றுங் கொள்ளலாம். 'மாரியுமுண்டீண்டு' என்றும் பாடமுண்டு.

RangaRakes tamilnavarasam.com

உருவகமும் உவமையும் ஒரினமாக்கிப் புணர்த்தமையால் உருவகத்திற்கு ஓதிய இலக்கணம் உவமைக்கு ஆதலும், உவமைக்கு ஓதியஇலக்கணம் உருவகத்திற்கு ஆதலும் உள: அவை வருமாறு அறிந்துகொள்க. (௩அ)

### உருவகவலங்காரம் முற்றும்.

---

## ௪. தீவகவணி.

௩௯. குணந்தொழில் சாதி பொருள்குறித் தொருசொ
லொருவயி னின்று* பலவயிற் பொருடரிற்
றீவகஞ் செய்யுண் மூவிடத் தியலும்.†

என்பது: நிறுத்தமுறையானே தீவகமென்னும் அலங்கார முணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) குணமானுந் தொழிலானும் சாதியானும் பொருளானும் குறித்து ஒருசொல் ஓரிடத்தினின்று செய்யுளிற் பலவிடத்து நின்ற சொற்களோடு பொருந்திப் பொருள்விளைப்பது தீவகமென்னும் அலங்காரமாம்; அது, செய்யுளில் முதல் இடை கடை என மூன்றிடத்துப் பலப்படும்; (எ - று.)

எனவே, அது முதனிலைத்தீவகம், இடைநிலைத்தீவகம், கடைநிலைத்தீவகமென மூன்றாகி நடக்கும் என்றவாறு.

இம்மூன்றையும் குணம் தொழில் சாதி பொருள் என்பவற்றோடு கூட்டியுறழப் பன்னிரண்டாமெனக் கொள்க.

இதன்அகலம் உரையிற் கொள்க.

(கு - பு.) ஆனும் - ஆயினும்; விகற்பப்பொருளது: குணம்முதலிய நான்கனுள் யாதாயினுமொன்றைக் குறித்து எனக. தீவகம் - தீபகம என்ற வடசொல்லின் திரிபு. தீபம் - விளக்கு; தீபமெனினும், தீபகமெனினும் ஒக்கும். விளக்கு ஓரிடத்திலிருந்து பலவகையிற் பிறஇடங்கட்கும் உபயோகப் படுவதுபோல, ஒருசெய்யுளில ஒருசொல் ஓரிடத்தில் நின்று பிறஇடங்கட்கும் உபயோகப்படுதலால், இப்பெயர் இடப்பட்டது. முதனிலைத்தீவகம் - ஆதிதீபகம். இடைநிலைத்தீவகம்- மத்தியமதீபகம். கடைநிலைத்தீவகம்-அந்ததீபகம்.

அவற்றுள்,

(௧) முதனிலைக் குணத்தீவகம்:— "சேந்தன வேந்தன் திருநெடுங்கண் டெவ்வேந்த, ரேந்து தடந்தோ ளிழிகுருதி - பாய்ந்து, திசையனைத்தும் வீரச் சிலைபொழிந்த வம்பு. மிசையனைத்தும புட்குலமும் வீழ்ந்து" எனவரும். இதனுள், கண்களும் தோள்களும் திசைகளும் அம்புகளும புட்குலங்களுஞ் சிவந்தன என்க.

(கு - பு.) இ - ள். அரசனுடைய அழகிய நீண்ட கண்கள் (கோபத்தாற்) சிவந்தன; (அவை அங்ஙனஞ்சிவந்தவளவிலே), பகையரசர்களுடைய உயர்ந்த பெரிய தோள்கள் (ஊறுபட்டு இரத்தங்குழும்பிச்)சிவந்தன; அத்தோள்களினின்று வழிகிற இரத்தம் பாய்தலால் திக்குக்களெல்லாம் சிவந்தன; (அவ்விரத்தத்தில் தோய்தலால்) வலியவில்லினின்றுசொரியப்பட்ட அம்புகள் சிவந்தன:(அவ்விரத்தத்துளி) மேல்விழுதலால் பறவைக்கூட்டங்களெல்லாம் சிவந்தன; எ-று.

---

* 'நின்றும்' என்றும் பாடம்.

† இச்சூத்திரத்தின்பின் "மூவிட மாவன முதலிடை கடையே" என ஒரு சூத்திரம ஒருபிரதியில் தனியே காணப்பட்டது.

RangaRakes tamilnavarasam.com

இச்செய்யுளில் முதலில்நின்ற 'சேந்தன' என்னும் பண்பு கண்முதலியவற்றோடு சேர்ந்து உபகாரப்பட்டமை காண்க. சேந்தன என்பது வினைச்சொல்லாயினும் அதன்பொருள் பண்பேயாம்; இவ்வினைமுற்று, செம்மை யென்னும் பண்பி னடியாப் பிறந்த தெனை அறிக.

(௨) முதனிலைத்தொழிற்றீவகம்:—"பரியும் புனைசங்குந் தண்டளிர்போன் மேனி, வரியுந் தனதடஞ்சூழ் வம்புந் - திருமான, வாரந் தழுவுந் தடந்தோளகளங்கன், கோரந் தொழுத கொடிக்கு" எனவரும். (வரி-அழகு. கோரம்-சோழன்குதிரை.) இதனுள், வளையும் அழகும் கச்சும் பரியும் என்க.

(கு - பு.) இ - ள். திருமகளுக்கு ஒப்பாக (நின்று) முத்துமாலைபொருந்திய பெரியதோள்களையுடைய குறறமற்றவனான சோழனது கோரமென்னும் பெயருள்ள குதிரையை வணங்கிய பூங்கொடிபோன்ற பெண்ணுக்கு, கையில் அணிந்த சங்குவளைகளும் குளிர்ச்சியான தளிரைப் போன்ற உடம்பின் அழகும் தனங்களின்மீது தரித்த கச்சும் சரிதலுற்றன, எ-று. சோழன் குதிரைமேலேறி உலாச்சென்ற காட்சியைக் கண்டவளவிலே அழகியபெண்ணொருத்தி அவன்மீது பெருங்காதல்கொண்டு அதனாலாகிய ஆற்றாமையால் உடல்மெலிந்து அழகுகுறையக் கைவளைகளாங் கழிந்துவிழக் கச்சுதளர்ச்சியுற நின்றன ளென்று கருத்து. மானத் தொழுத எனை இலையும் இச்செய்யுளில் முதலில் நின்ற 'சரியும்'என்றதொழில் சங்குமுதலியவற்றோடுசேர்ந்து உபகாரப்பட்டமைகாண்க.

(௩) முதனிலைச்சாதித்தீவகம்:—"தென்றலணங்கன் றுணையாஞ் சிலகொம்பர், மன்றற் றலைமகனும் வாய்மொழிபொருண்மேற் - சென்றவர்க்குச், சாற்றவிடுந் தூதாகுந் தங்கும் பெருமபுலவி, யாற்ற வருவிருந்து மாம்" எனவரும். இதனுள், தென்றல் துணையாதலும் தலைமகனுதலும் தூதாதலும் விருந்தாதலுங் காண்க.

(கு - பு.) இ - ள். தென்றற்காற்றானது, (காமத்தைத வளர்த்தலால்) மன்மதனுக்குத் துணையாகும்; (தான்வந்தவளவில்) சிலபூங்கொம்புகள் தளிர்த்தலால் அக்கொம்புகளாகிய மகளிர்க்கு மணஞ்செய்த கொழுநனும், சிறந்த பொருளின் மேல் விருப்பங்கொண்டு தலைவியரைப் பிரிந்துசென்ற தலைவர்க்கு அவர்கள் பக்கல் ஆசையை மூட்டுதலால் அம்மகளிர் அத்தலைவர்க்குத் தமது குறையைச் சொல்லுதற்குச் செல்லவிட்ட தூதனும்; கொழுநர்மீது மகளிர் கொடிதாகக் கொண்ட பெரிய ஊடலை உடனே ஒழியச்செய்தலால் அதனைத் தணித்தற்கு வந்த ஒருபுதுமகனுமாம்; எ-று. இச்செய்யுளில் முதலில்நின்ற 'தென்றல்'என்ற பெயர் 'துணையாம்' என்றது முதலியவற்றோடு சேர்ந்து உபகாரப்பட்டமை காண்க. தென்றல் என்ற பெயர் - தெற்கிலிருந்து வருங் காற்றனைத்தையும் குறித்தலால், சாதியாயிற்று; காலபேதத்தாற் காற்றுப் பலவாம்.

(௪) முதனிலைப்பொருட்டீவகம்:— "முருகவேள் சூர்மா முதறடிந்தான் வள்ளி, புரிகுழன்மேன் மாலை புனைந்தான் - சரணளித்து, மேலாய வானோர் வியனசேனை தாங்கினான், வேலா னிடைகிழித்தான் வெற்பு" எனவரும். இதனுள், முருகவேள் - பொருள்.

(கு - பு.) இ - ள். குமாரக்கடவுள், சூரபன்மாவாகிய பெரியதலைவனைக் கொன்றான், வள்ளியம்மையினது அலங்கரித்த கூந்தலில் மாலையைச் சூட்டினான்; மேன்மைபெற்ற தேவர்கட்கு அடைக்கலமாகநின்று அருள்செய்து அவர்களுடைய பெரிய சேனையைப் பாதுகாத்தான்; வேலினால் கிரௌஞ்சகிரியை நடுவிலே பிளந்தான்; எ - று. 'சூர் மா முதல்தடிந்தான்' என்பதற்கு - கொடியதொரு மாமரத்தை வேரோடு வெட்டித் தள்ளினான் என்றும் பொருள் கொள்ளலாம்; திருமுருகாற்றுப்படையில் "கவிழிணர் மாமுதல் தடிந்த" என்றவிடத்து, நச்சினார்க்கினியர் 'அவுணரெல்லாரும் தம்முடனே யெதிர்ந்

தார் வலியிலே பாதி தங்கள் வலியிலே கூடும்படி மந்திரங்கொண்டிருந்து சாதித்தொரு மாவை வெட்டினர்' என்று உரைத்தமை அறிக. இச்செய்யுளில் முதலில் நின்ற 'முருகவேள்' என்ற பொருட்பெயர், தடிந்தான், புனைந்தான், தாங்கினான், கிழித்தான் என்பவற்றோடு சேர்ந்து உபகாரப்பட்டமை காண்க.

(ரு) இடைநிலைக்குணத்தீவகம்:—"எடுத்த நிரைகொணர வென்றலுமே வென்றி, வடித்திலங்கு வைவாளை வாங்கத் – துடித்தனவே, தண்டாரை மார்புந் தடந்தோளும் வேல்விழியு, மெண்ணாத மன்னர்க்கிடம்" எனவரும். இதனுள், துடித்தல் - பண்பு.

(கு - பு.) இ - ள். குறித்த பசுக்கூட்டத்தைக் கொண்டுவா என்று (வேந்தன்) கூறியவளவிலே, (வீரன்) வெற்றியைத் தருவதாய் வடிக்கப்பட்டு விளங்குகிற கூரிய வாட்படையை யெடுக்கையில், பகையரசர்களுக்கு, குளிர்ந்த முத்துமாலையையணிந்த மார்பும் பெரியதோளும் நீண்டகண்ணும் இடப்புறம் துடித்தன, எ-று. இடந்துடித்தல் - தீநிமித்தம். உடனேவருமதோல்வியாகிய தீங்கை விளக்கும். இச்செய்யுளில் இடையில்நின்ற 'துடித்தன' என்ற பண்புணர்த்தும் வினை, மார்பு தோள் விழி என்பவற்றோடு சேர்ந்து உபகாரப்பட்டமை காண்க. 'எடுத்த திறை கொணரார்' என்ற பாடத்துக்கு, குறித்த திறைப்பொருளைக் கொணர்ந்து செலுத்திலர் என்று ஏவலாளர்கூறியவளவிலே அரசன் வாளைக் கையி லெடுக்க வென்க.

(சா) இடைநிலைத்தொழிற்றீவகம்:—"எடுக்குஞ் சிலைநின் றெதிர்ந்தவருந் தேரும், வடிக்கொண் டுரந்துணிய வாளி – தொடுக்கும், கொடையுந் திருவருளுங் கோடாத செங்கோ, லடையும் பெரும்புலவர் நா" எனவரும். இதனுள், தொடுத்தல் - தொழில்.

(கு - பு.) இ - ள். தன்னையெதிர்த்தவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் தழும்புபட்டு மார்புதுணிபடும்படி (அரசன்) கையிலேந்திய வில்லினின்று இடைவிடாது அம்புதொடுக்கிற வள்ளன்மையும், அவனது சிறந்த கருணையும் நீதிதவறாத அரசாட்சிமுறைமையின் இயல்பும், பெரிய புலவர்களுடைய நாவினால் கவிதொடுத்துப் புகழ்ந்துகூறப்படும்; எ - று. இச்செய்யுளில இடையில் நின்ற 'தொடுக்கும்' என்ற தொழிலுணர்த்தும் வினை கொடை அருள செங்கோல்நடை என்பவற்றோடு சேர்ந்து உபகாரப்பட்டமை காண்க.

(எ) இடைநிலைச்சாதித்தீவகம்:—"கரமருவு பொற்றொடியாங் காலிற் கழலாம், பொருவில் புயவலய மாகு – மரவரைமே, னாணாமரற்கு நகைமணிசேர் தாழ்குழையாம், பூணும் புனைமாலை யாம்" எனவரும். இதனுள், அரவு - சாதி.

(கு - பு.) இ - ள். நாகம், சிவபிரானுக்கு, கையிற்பொருந்திய அழகிய தொடியென்னும் வளையாம்; காலில் அணியும் வீரக்கழலாம்; ஒப்பில்லாத தோள்வளையாம்; இடையிலணியும் அரைநாணாம்; ஒளியையுடைய மாணிக்கம் பதித்த தொங்குகிற குழையென்னுங் காதணியாம்; மற்றுமுபல ஆபரணங்களுமாம்; அழகியமாலையுமாம்; எ-று. இங்ஙனங்கூறியது, சிவபிரான் நாகாபரணனென்க. இச்செய்யுளில் இடையில் நின்ற 'அரவு' என்னும் சர்ப்பசாதிப்பெயர் 'தொடியாம்' என்பது முதலியவற்றோடு சேர்ந்து உபகாரப்பட்டமை காண்க.

(அ) இடைநிலைப்பொருட்டீவகம்:—"மானமருங் கண்ணாள் மணிவயிற்றில் வந்துதித்தான், வானவரை யென்றுந் தலையளித்தான் – யானைமுகன், றொண்டர் றன் வெங்கலியை யுள்ளத் தினிதமர்ந்து, வீட்டினா னம்மேல் வினை" எனவரும். இதனுள், யானைமுகன் - பொருள்.

(கு - பு) இ - ள். யானைமுகக்கடவுளாகிய விநாயகன், மானின் நோக்கினையொத்த நோக்கினையுடைய உமாதேவியினது அழகியவயிற்றில் வந்து

பிறந்தான்; கசமுகன் முதலிய அசுரர்களை எப்பொழுதும் தலைதுணித்தான்; கொடியபாவத்தை ஒழியச்செய்தான், நமதுமனத்தில் இனிமையாகவந்து தங்கி, நமக்குவரும் இடையூறுகளை யொழித்தான்; எ - று. இச்செய்யுளில் இடையில் நின்ற 'யானைமுகன்' என்ற பொருட்பெயர், 'உதித்தான்' என்றது முதலியவற்றோடு சேர்ந்து உபகாரப்பட்டமை காண்க.

(௩௰) கடைநிலைத்தொழிற்றீவகம்:—"துறவுளவாச் சான்றோ ரினிவரவுந் தூய. பிறவுளவா யூன்வா ழுடம்பு - பறைகறங்கக், கொண்டா னிருப்பக் கொடுங்குழையா டேயவருமொன், றுண்டாக வைகற்பாற் றன்று" எனவரும். (இனிவரவு - தாழ்தல்.) இதனுள், வைகற்பாற்றன்று - தொழில்.

(கு - பு.) இ - ள். பெரியோர்க்குத் துறவொழுக்கமுள்ளதாக மற்றைக் கூடாவொழுக்கமாகிய இழிவும், பரிசுத்தமான மற்றுமுடலைப் பற்றிய துணைவுகள் உள்ளனவாகத் தசைகலந்த உணவும், வாத்தியங்கள் ஒலிக்க மணஞ்செய்து கொண்ட கணவன் இருக்க மனைவிக்கு வேறொருவரோடு ஒருபொருளாகவுள்ள தென்று வைகுதல் தகாதன்று; எ - று. தாழ்தல் - தங்குதல் 'ஊனதுறவா வூண்' என்ற பாடத்துக்கு-இறைச்சியை யொழியாத உண வென்க. கொடுங் குழையாள் - வளைவான குழையென்னுங் காதணியை யுடையாள். இச்செய்யுளில் கடையில் நின்ற 'வைகற்பாற்றன்று' என்ற தொழில் 'இனிவரவு' முதலியவற்றோடு சேர்ந்து உபகாரப்பட்டமை காண்க.

(௩௨) கடைநிலைப்பொருட்டீவகம்:—"புறத்தன வூரன நீரன மாவின், றிறத்தன கொற்சேரி யவே - யறத்தின், மகனை முறைசெய்தான் மாவஞ்சி யாட்டி, முகனை முறைசெய்த கண்" எனவரும். இதனுள், கண் - பொருள். (புறத்தன - மான். ஊரன - அம்பு. நீரன - தாமரை. மாவின்திறத்தன - மாவடு. கொற்சேரிய - வாள். மகனை முறைசெய்தான் - மகன்மிசைத் தேரூர்ந்தான். வஞ்சி - ஊர். முகனை முறைசெய்த கண் - முகத்துக்குத் தக்க கண்.)

(கு - பு) இ - ள். (ஒருபசுவின் கன்றின்மீது தன்தேரைச்செலுத்திய குற்றவாளியான) தன்புத்திரன்மீது தான் தேரைச்செலுத்தி அவனை இங்ஙனம் தருமமுறைப்படி தண்டனைசெய்த மனுநீதிச்சோழனது சிறந்த வஞ்சியென்னும் ஊரில் வாழ்கிற ஒருமாதினது முகத்தை யலங்கரித்த கண்கள் புறவெளியிலுள்ள மான்விழி போன்றவையும், நாட்டிலுள்ளனவான அம்பு போன்றவையும், நீர்ப்பூவாகிய தாமரை (அல்லது கருங்குவளை) போன்றவையும், மாவடுவு போன்றவையும், கொல்லர்சேரியிற்செய்யப்படும் வாள் போன்றவையுமாயிருந்தன; எ - று. இச்செய்யுளில் இறுதியில் நின்ற 'கண்' என்னும் பொருட்பெயர் 'புறத்தன' என்றது முதலியவற்றோடு சேர்ந்து உபகாரப்பட்டமை காண்க. "சென்றாற் குடையா மிருந்தாற்சிங் காதனமா, நின்றான் மரவடியா நீள்கடலு - ளென்றும், புணையா மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கு, மணையாந் திருமாற் கரவு" என்பதும் இதற்கு உதாரணமாம்.

மற்றவைக்கு உதாரணம் வந்துழிக் காண்க.

அஃதேல், குணமென்று சொல்லப்பட்டனவும் தொழிலாய்க் காலம்புணர்ந்துநின்றனவா லெனின்,—அவ்வாறே குணமுந் தொழிலுங் காலம்புணர்தல்லது தோன்றா. தொழிலென்பது-பொருளது புடைபெயர்ச்சி. குணமென்பது-பொருட்குப் பண்பாய்த் தனக்குவேறு பண்பின்றிப் பொருளை நீங்காதுநிற்பது; அது, முன்னர் உணர்த்தப்பட்டது.

(கு - பு.) முன்னர் - இவ்வியலின் நான்காஞ்சூத்திர வுரையில். (௬௧)

௧௬. அதுவே,
  மாலை விருத்த மொருபொருள் சிலேடையென
  நால்வகை யாறு நடைபெறு மென்ப.

* என்பது: அத்தீவகாலங்காரம் பிறஅலங்காரங்களோடுங் கூடிவருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) அச்சொல்லப்பட்ட தீவகம் மாலாதீவகம், விருத்ததீவகம், ஒருபொருட்டீவகம், சிலேடாதீவகம் என நான்குவகையானும் நடக்குமென்று சொல்லுவர் (புலவர்); (எ - று.)

(கு - பு.) புலவர் - தோன்றாஎழுவாய்.

அவற்றுள்,

(௧) மாலாதீவகம்:—"மனைக்கு விளக்க மடவாண் மடவா, டனக்குத் தகைசால் புதல்வர் - மனக்கினிய, காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கு, ஓதிற் புகழ்சா லுணர்வு" எனவரும். (இ - ள். இல்லறத்திற்கு விளக்கம், மடப்பத்தினையுடைய பெண்டிருண்டாதல், அப்பெண்டிர்க்கு விளக்கம், அழகு சான்ற புதல்வரைப் பெறுதல்; அப்புதல்வர்க்கு விளக்கம், இனிமையான கல்வி; அக்கல்விக்கு விளக்கம், மறவாமை; எ - று) இதனுள், விளக்கமென்பதனை எவ்விடத்துங் கூட்டுக.

(கு - பு) மனக்கு இனிய - மனத்திற்குப் பிரியமான. காதல் - விரும்பத்தக்க. ஓதில் - சொல்லுமிடத்து. புகழ் சால் உணர்வு-புகழ் மிக்க அறிவு. 'விளக்கம்' என்ற ஒருசொல் பலஇடங்களில் சேர்ந்து உபகாரப்படுதலால் தீவகவணிக்கு இடமாய்நின்ற இச்செய்யுளில் வந்த வாக்கியங்கள் ஒன்றுக்கொன்று தொடர்ச்சிகொண்டதனால், மாலாதீவகமாயிற்று. இதனைத் தனியே ஓரணியாகக்கொண்டு, தீபகவணியையும் ஏகாவளியணியையும் சேர்த்துச்சொல்லுதல் இதற்கு இலக்கணமென வகுப்பர், ஒருசாரார். 'கல்விதனக்கு' என்றும் பாடமுண்டு.

(௨) விருத்ததீவகம்:—"வரிவண்டு நாணு மதுமல ரம்பாப், பொருவெஞ் சிலைக்குப் பொலிவும் - பிரிவின், விளர்க்கு நிறமுடையார் தம்மேன் மெலிவும், வளர்க்கு மலயா நிலம்" எனவரும். (இ - ள். பொறிவண்டு நாணாக மதுமலரே கணையாகக் காமன் தனியிருந்தாரைப் பொருகின்ற விருப்பந்தையுடைய சிலைக்குப் பொலிவினையும் பிரிவிற்பசலையுற்றார்தம்மேல் மெலிவினையும் வளர்க்கும், தென்றற்காற்று; எ - று.) பொலிவும் மெலிவும் வளர்க்கும் எனக்கொள்க. இதனுள், ஒருபொருளே பொலிவும் மெலிவு மாகிய இரண்டுகுணம் செய்தலின், விருத்தம்.

(கு - பு) பொறி - புள்ளி: அல்லது கோடு. நாண் - நாணி. மது - தேன். பிரிவின் பசலை உற்றார் - கொழுநரைப்பிரிதலால் நிறவேறுபாடடைந்த மகளிர். மலய அநிலம் - பொதியமலையிலிருந்து வருங் காற்று. 'மலயாநிலம்' என்ற ஒருசொல் பொலிவுவளர்த்தற்கும், மெலிவுவளர்த்தற்கும் உபகாரப்படுதலால் தீபகவணிக்கு இடமாய்நின்ற இச்செய்யுளில பொலிவும் மெலிவும் ஒன்றுக்கொன்று முரணுதலால், விருத்ததீபகமாயிற்று. விருத்தம் - சொல்லும் பொருளும் மாறுபடுதல்.

(௩) ஒருபொருட்டீவகம்:—"வியன்ஞாலஞ் சூழ்திசைக ளெல்லாம் விழுங்கு, மயலாந் துணைநீத் தகன்றா - ருயிர்பருகும், விண்கவரும் சேரிப் பொழில

* 'என்பது: அவ்வலங்காரத்திற் சிலஒழிபு உணர்த்துதல் நுதலிற்று' என்றும் பிரதிபேத முண்டு.

RangaRakes tamilnavarasam.com

புதைக்கு மென்மயில்கள் கண்கவரு மேலெழுந்த கார்" எனவரும். (இ-ள். அகன்ற உலகத்தைச் சூழ்ந்த திக்குகளெல்லாவற்றையும் தன்னிடத்து அடக்கும், துணையைப் பிரிந்த அயலவர்போலப் போயினாருயிரை யுண்ணும், ஆகாயத்தை மறைக்கும்; நறுநாற்றத்தையுடைய பொழிலை மூடும்; மென்மையையுடைய மயில்களின் கண்களை வெளவிக்கொள்ளும்: உயரவெழுந்த மேகம் எ-று.)

(கு-பு) துணை - மனைவி. 'கார்' என்ற ஒருசொல் பலவிடங்களிற் சேர்ந்து உபகாரப்படுதலால் தீவகவணிக்கு இடமாய் நின்ற இச்செய்யுளில் விழுங்கும், பருகும், மறைக்கும், புதைக்கும், கவரும் என வந்த பலசொற்கள் ஒருபொருட் கருத்தையே குறித்தலால், ஒருபொருண்மொழித்தீவகமாயிற்று. இது வடமொழியில் ஏகார்த்ததீபக மெனப்படும்.

(௫) சிலேடாதீவகம்:—"மான்மருவி வாளரிகள் சேர்ந்து மருண்டுள்ளந், தான்மறுக நீண்ட தகைமையவாங் - கான, வழியு மொருதனிநாம் வைத்தகலு மாதர், விழியுந் தருமான் மெலிவு" எனவரும். (இ-ள். மான்கள்மருவி ஒளியையுடையசிங்கங்கள் சேர்ந்து மயங்கிக் கண்டோருள்ளம் வெருவும்படி நீண்ட தன்மையுடைத்தாய காட்டுநெறியும், மயக்கம்மருவி ஒளியினையுடைய அரிகள் பரந்து கண்டோருள்ளம் மயங்கித் தடுமாறும்படி பெரிதாய நான்தனியிருக்கப் போகக்கிழத்தியுடையகண்ணும் நமக்கு வருத்தத்தைத் தாராநின்றன; எ-று.) இது - வழிக்கும், விழிக்கும் சிலேடை. வழிமேற் செல்லுங்கால்—மான் - புள்ளிமான், அரி - சிங்கம், சேர்ந்து - திரண்டு, உள்ளம் - நெஞ்சு. மறுகல் - வெருவல், தகைமை - தன்மை, கானம் - காடு. கண்ணின்மேற் செல்லுங்கால்—மால் மருவி - மயக்கம்மருவி, அரி - செவ்வரி, மருண்டுள்ளந் தான்மறுக நீண்ட தகைமைய - ஒருதன்மை

(கு-பு.) அரி - இரேகை. கிழத்தி - மனைவி 'மெலிவுதரும்' என்பது காட்டுநெறிக்கும், மாதர்விழிக்கும் உபகாரப்படுதலால் தீவகவணிக்கு இடமாய் நின்ற இச்செய்யுளில் அவற்றிற்கு அடைமொழியாய் வந்த முன்னிரண்டு அடிகள் இருபொருள்பட்டதனால், சிலேடாதீவகமாயிற்று.

'நால்வகையானும்' என்ற முற்றும்மையை எச்சவும்மையாக்கி, பிறவகையான் வருவனவும் உளவெனக் கொள்க.

அவை வருமாறு:—

உவமாதீவகம்:—"முன்னங் குடைபோன் முடிநாயகமணிபோன், பின்னுந் திலகம்போல் வாளிரவி - பொன்னகலந், தங்கு கவுத்துவம்போ லுந்திந் தடமலர்போ, லங்க ணுலகளந்தாற் காம்" எனவரும். (இ-ள். அழகியபெரிய உலகையளந்த திருமாலுக்கு, ஆதித்தன் முதலிற் குடைபோலும், பின்பு முடியிற் சூடிய நாயகமணிபோலும், அதன்கீழுண்டாய நெற்றித்திலகம் போலும், மார்பிலுள்ள கௌத்துவமாகிய மணி போலும், கொப்பூழினுண்டாய பெரிய தாமரை போலும், எ-று.)

(கு-பு.) 'இரவி உலகளந்தாற்கு ஆம்' என்றது பலவிடங்களுக்கும் உபகாரப்படுதலால் தீவகவணிக்கு இடமாய்நின்ற இச்செய்யுளில் 'குடைபோல்' என்றது முதலிய உவமைகள் பொருந்துதலால், உவமாதீவகமாயிற்று. வாள் - ஒளி. பொன் - அழகு. திருமால் திரிவிக்கிரமாவதாரத்தில் வானத்தை அளாவி ஓங்கிவளர்கையில் சூரியன் வரவரக் கீழ்ப்பட்டுப் பலவாறு உவமைகூறுதற்கு உரியனாயினனென்க. "பூமரு பொங்கர் புடைசூழ் அரங்கர் பொலங்கழலாற், பாமரு மூவுலகுங்கொண்ட போது பழிப்பில்பெருங், காமரு மோலிச் சிகாமணி யாகிக் கவுத்துவமாய்த், தேமரு நாபியந் தாமரை யானது செஞ்சுடரே" என்ற திருவரங்கத்துமாலைச் செய்யுளிலும், "மலருந்திமேல்விழமெய்சொரித்

RangaRakes tamilnavarasam.com

நான் வையமேழுந் துஞ்சா, மலருந்தினு னரங்கன் குறளாய் மண்ணளந்தவந் நான், மலருந் திபாக்கதிர் வண்குடையாய் முடிமாமணியாய், மலருந்தி யாய்த் திருக்கரநாள விரலாழியணியொத்ததே" என்ற திருவரங்கத்தந்தாதிச் செய்யுளிலும் இக்கருத்து நிகழ்தல் காண்க.

உருவகதீவகம்:—"கானற் கயலாம் வயலிற் கமலமா, மேனற் கருவிளை யா மின்புறவின் - மானுங், கடத்துமேல் வேடர் கடுஞ்சரமா நீங்கிக், கடத்து மேன் மெல்லியலாள் கண்" எனவரும். (இ-ள். நெஞ்சமே! இவளைத் தனியே யிருத்திவிட்டுப் பிரிந்து போவோமாயின், இவளுடைய கண்களானவை, நெய்த னிலத்திற் செல்வேமாயின் கயலாய்த்தோன்றியும், மருதநிலத்திற் செல்வே மாயின் தாமரைமலராய்த் தோன்றியும், முல்லைநிலத்திற் செல்வேமாயின் கரு விளைமலராய்த் தோன்றியும், குறிஞ்சிநிலத்திற் செல்வேமாயின் மானாய்த்தோ ன்றியும், பாலைநிலத்திற் செல்வேமாயின் வேடுவரது கையிலுள்ள கடிய சரமா ய்த் தோன்றியும், இப்படிச்செய்து நம்போக்கை விலக்கு மாகலான், நமக்குப் பிரிதற்கு அரிதுகாண், எ - று. கானல் - நெய்தல். வயல் - மருதம். *ஏனல் - முல்லை. புறவு - குறிஞ்சி. கடம் - பாலை.)

பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

(கு - பு) மெல்லியலாள் - மெல்லிய தன்மையையுடைய தலைவி. 'கண்' என்ற சொல் பலவற்றுக்கும் உபகாரப்படுதலால் தீவகவணிக்கு இடமாய்நின்ற இச்செய்யுளில் 'கயலாம்' என்றது முதலிய உருவகங்கள் பொருந்துதலால், உருவகதீவகமாயிற்று. சரம் - அம்பு. (௪0)

தீவகவலங்காரம் முற்றும்.

## ரு. பின் வரு நிலை யணி.

கரு. முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவயிற்
பின்வரு மென்னிற் பின்வரு நிலையே.

என்பது: நிறுத்தமுறையானே பின்வருநிலையென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு) ஒருசெய்யுளுள் முன்னர் வந்த சொல்லே பின்னர்ப் பலவிடத் தும் வரினும், முன்னர்வந்த பொருளே பின்னர்ப் பலவிடத்தும் வரினும், அது பின்வருநிலை யென்னும் அலங்காரமாம்; (எ - று.)

(கு - பு.) இதனைப் பின்வருவிளக்கணி யென்றும், மீட்சியணி யென் றும் வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் ஆவ்ருத்தியெனவும், ஆவ்ருத்தி தீபகமெனவும்படும்.

அவற்றுள்,

(க) சொற்பின்வருநிலை:—"மால்கரி காத்தளித்த மாலுடைய மாலைசூழ், மால்வரைத்தோ ளாதரித்த மாலையார் - மாலிருள்சூழ், மாலையின் மால்கட லார்ப்ப மதன்றொடுக்கு, மாலையின் வாளி மலர்" எனவரும். (இ - ள். மதத்தால் மயங்கிய யானையின் இடர் தீர்த்தளித்த அரியுடைய தொடையல்சூழப்பட்ட பெரியமலையையொத்த தோள்களை விரும்பிய இயல்புடையார்மேலே, மயங் கிருள்சூழ்ந்த அந்திப்பொழுதில் கருங்கடல்ஆர்ப்பக் காமன் இடையறாது மல ராகிய கணைகளைத் தொடுக்கும்; எ - று. மால் - மயக்கம், கரி - யானை. காத்தல் - இடர்தீர்த்தல். அளித்தல் - அருளல். மால் - திருமால். மாலை -

* 'ஏனல் - குறிஞ்சி. புறவு - முல்லை' என்றும் பிரதிபேதமுண்டு.

RangaRakes tamilnavarasam.com

தொடையல். மால் - பெருமை. வரை - மலை. ஆதரித்தல் - விரும்புதல். மாலை- இயல்பு. மாலிருள் - மயங்கிருள். மாலை - அந்தி. மால்கடல் - கருங்கடல். மாலை-இடையறுமை. வாளி - அம்பு. மலர் - தாமரை முதலியன.) இதனுள், முன்வந்த சொல்லே பின்னும் பலவிடத்து வந்தமையின், சொற்பின்வருநிலையாயிற்று.

(கு - பு.) இங்கு மால் என்னுஞ் சொல் வெவ்வேறுபொருள்படுதலால், சொல்மாத்திரமே பின்வந்தது. இது, சப்தாவ்ருத்தி.

(உ) பொருட்பின்வருநிலை:—"அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா, நெகிழ்ந்தன நோமுகை முல்லை - மகிழ்ந்திதழ், விண்டன கொன்றை விரிந்த கருவிளை, கொண்டன காந்தள் குலை" எனவரும். இதனுள் அவிழ்தலும் அலர்தலும் நெகிழ்தலும் விள்ளலும் விரிதலும் குலைகொள்ளுதலும் மலர்தலென்னும் ஒருபொருள்மேல் நின்றனவாதலின், அப்பெயர்த்தாயிற்று.

(கு - பு.) இ - ள். தோன்றிமரங்கள் மலர்ந்தன; காசாஞ்செடிகள் மலர்ந்தன; அழகிய அரும்பையுடைய முல்லைகள் மலர்ந்தன; கொன்றைமரங்கள் செழித்து இதழ்மலர்ந்தன; கருவிளைகள் மலர்ந்தன; காந்தள்கள் பூங்கொத்து எடுத்தன; எ - று. 'அவிழ்ந்தன' முதலிய வினைகளெல்லாம், ஒருபொருட் பன்மொழிகள். இது, அர்த்தாவ்ருத்தி.

'வருவது' என்றது 'வருமென்னின்' என்றதனுன், முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பலவிடத்தும் வருவது சொற்பொருட்பின்வருநிலையெனக் கொள்க. அது "வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார், வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர், வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல், வைகலை வைத்துணரா தார்" எனவரும்.

(கு - பு.) இ - ள். தினந்தோறும் நாட்கழிவு தமது ஆயுளின்மேற் செல்லுதலை அப்படிச்செல்லுதலாக வைத்து அறியாதவர்கள், தினந்தோறும் நாட்கழிவு வரப் பார்த்தும் அதனை நட்டமாக அறியாதவர்களாய்த் தினந்தோறும் நாட்கழிவைக் கழிவாக மகிழ்வர்; எ - று. இங்கு 'வைகல்' எனப் பலவிடத்து வந்த சொல் எங்கும் ஒருபொருளேபட்டமை காண்க. இது உபயாவ்ருத்தி.

இன்னும், அவ்விலேசானே, பிற அலங்காரங்களோடுங் கூடிவருவனவுங் கொள்க. "செங்கமல நாட்டஞ் செழுந்தாமரை வதனம், பங்கயஞ் செவ்வாய் பதுமம்போற் - செங்கரங்க, ளம்போருகந்தா ளரவிந்த மாரனோர், தம்போருகந்தா டனம்" என்பது உவமைப்பொருட்பின்வருநிலை.

(கு - பு.) இ - ள். மன்மதனது போரை [காமப்போரை] விரும்பியவளது கண்கள் செந்தாமரைமலர்போலும்; முகம் செழிப்பான தாமரைமலர் போலும்; சிவந்தவாய் தாமரைமலர்போலும்; சிவந்தகைகள் தாமரைமலர்போலும்; பாதங்கள் தாமரைமலர்போலும்; கொங்கைகள் தாமரையரும்புபோலும்; எ - று. கமலம், தாமரை, பங்கயம், பதுமம், அம்போருகம், அரவிந்தம் என்ற ஒருபொருட்பலசொற்கள் வந்ததனால் பொருட்பின்வருநிலைக்கு இடமான இச்செய்யுளில் உவமையணி பொருந்தியதனால், உவமைப்பொருட்பின்வருநிலையணியாயிற்று. (௪௧)

பின்வருநிலையலங்காரம் முற்றும்.

RangaRakes tamilnavarasam.com

## ௯. முன்னவிலக்கணி.

௩௯. முன்னத்தின் மறுப்பினது முன்ன விலக்கே
மூவகைக் காலமு மேவிய தாகும்.

என்பது: நிறுத்தமுறையானே முன்னவிலக்கு என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு) ஒரு பொருளைக் குறிப்பினான் விலக்கின் அது முன்னவிலக்கு என்னும் அலங்காரமாம், அஃது இறப்பு எதிர்வு நிகழ்வு என்னும் மூன்றுவகைப் பட்ட காலங்களோடுங் கூடியதாம் (எ - று.)

'மறுப்பது' என்னாது 'மறுப்பின்' என்றதனால், கூற்றினான் மறுப்பினும் அவ்வலங்காரமாம். குறிப்பினான் மறுப்பது பொருட்பொலிவுசெய்யுஞ் சிறப்பு நோக்கி எடுத்தோதினார்; ஏனையது அன்னது அன்மையின், இலேசான் உடம்பட்டார் என்பது.

இறப்பு எதிர்வு நிகழ்வு என்பனவற்றைக் கூற்றொடுங் குறிப்பொடுங் கூட்ட அறுவகையாம்.

(க - பு) முன்னம் - குறிப்பு கூற்றினான்-சொல்லினால்; வெளிப்படையாக என்றபடி. ஏனையது அன்னது அன்மையின் - குறிப்புவிலக்குக்கு மறுதலையாகிய வெளிப்படைவிலக்கு பொருட்பொலிவுசெய்யுஞ்சிறப்பில்லாததாதலால் மேன்மைதோன்றச் சாதுரியமாக ஒன்றைக் கூடாதென்று சொல்லுதலே இவ்வணிக்கு அழகு. இதனை விலக்கணியென்றும், தடைமொழியணியென்றும், உட்கோளணியென்றும் வழங்குதலும் உண்டு. எதிர்மறையணியென ஒருசாரார் வேறுகூறுவதும் இதில் அடங்கும். இது வடமொழியில் ஆக்ஷேபாலங்காரமெனவும், பிரதிஷேதாலங்காரமெனவும் படும். இவ்விரண்டற்கும் சிறிதுவேறுபாடு கூறுவதும் உண்டு. இனிவரும் அவனுதியணிக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு கருதத்தக்கது.

அவற்றுள்,

(௧) இறந்தவினைவிலக்கு:—"பாலன் றனதுருவா யேழுலகுண் டாலிலையின், மேலன்று கண்டுயின்றாய் மெய்யென்ப - ராலன்று, வேலைநீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ, சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்" எனவரும். (இ - ள். சோலைசூழ்ந்தகுன்றமெடுத்த மாயவனே! நீ உலகமேழையும் உண்டு பாலனுருவத்தைகொண்டு ஆலிலையிலேஉறங்கினின்றாயென்பது உலகத்துள்ளோர் மெய்யென்றுசொல்லுவர்; நீஉலகத்தைஉண்டுறங்கிய ஆலானது,அன்று, கடலுள்ளே நின்றதோ? மண்ணிலே நின்றதோ? ஆகாயத்தே நின்றதோ? சொல்லுவாயாக, எ - று.)

(கு - பு.) உலகமனைத்தும் விழுங்கப்பட்ட காலத்தில் ஆலிலையொன்று இருந்ததென்பது அசம்பாவிதமாகத் தோன்றுகின்றதென்று அதனைக் குறிப்பாய்விலக்கி, 'சோலைசூழ்குன்றெடுத்தாய்சொல்' என்றதனால், அற்புதச்செய்கை செய்யவல்லவர்க்கு இதுவும் பொருந்துமென அமைத்து மேன்மைவிளக்கியவாறு அன்றியும், 'சொல்' என்றதனால், உன்னாலும் உன்தன்மை சொல்லமுடியாதென்று கருத்தாகவுமாம். இது, முன்பு பிரளயத்தில் நடந்த செய்தியை விலக்கியதனால், இறந்தவினைவிலக்காம். உண்டு - வயிற்றினுள்ளே கொண்டு. அன்று - அக்காலத்தில். குன்று - கோவர்த்தனகிரி. 'ஏழுலகு' என்றவிடத்து 'பாருலகு' என்றும், 'கண்டுயின்றாய்' என்றவிடத்து 'நீகிடந்தாய்', 'நீதுயின்றாய்', 'நீவளர்ந்தாய்' என்றும், 'வேலைநீருள்ளதோ' என்றவிடத்து 'வேலைசூழ்நீரதோ' என்றும பாடபேதங்கள் காணப்படுகின்றன.

(உ) எதிர்வினைவிலக்கு.—"முல்லைக் கொடிநடுங்க மொய்காந்தள் கை குலைப்ப, வெல்லை யினவண் டெழுந்திரங்க - மெல்லியன்மேற், றீவாய நெடு வாடை வந்தாற் செயலறியேன், போவா யொழிவாய் பொருட்கு" எனவரும். (இ - ள். தலைவனே! முல்லைக்கொடியானது நடுங்க நெருங்கிய காந்தண்மல ரானது விரிய ஒளியினையுடைய வண்டின்கூட்டங்கள் எழுந்தொலிக்கத் தீயை யுடைய நெடிய வாடையானது மெல்லிய நடையையுடைய இவள்மேல் வந் தால் பின்விளையுஞ்செய்தி அறியமாட்டேன்; ஆதலின், பொருளீட்டற்குப் போவாய் ஒழிவாய்; எ - று.)

(கு - பு.) தலைவன் பிரிந்தால் தலைவி வாடைக்கு ஆற்றாது படும் பாட் டைச் சொல்லி அவன் இனிப்பிரிந்துசெல்லுவதைத் தோழி வெளிப்படையாக விலக்கியவாறு. காந்தள்மலர் கைபோலுதலால், 'காந்தள் கைகுலைப்ப' எனப்பட் டது. 'எல்லை' என்பதற்கு - அவ்விடத்திலுள்ள என்றும் பொருள் கொள்ளலாம். 'செயலறியேன்' என்றதனால், பெருந்தீங்குநேருமென விளங்கும். தீ வாய் - தீ வாய்ந்த என்க. 'கொடிநுடங்க', 'கைமெலிப்ப', 'மெல்லவினவண்டுவீழ்ந் திரங்க', 'வாடைசேர்ந்தால்', 'போவாய் மொழிவாய் பொருட்கு' என்று பாட பேதங்கள் காணப்படுகின்றன.

(ங) நிகழ்வினைவிலக்கு:—"மாதர் நுழைமருங்கு நோவ மணிக்குழை சேர், காதின் மிசைநிலங் கைபுனைவீர் - மீதுலவு, நீணீல வாட்க ணெடுங் கடையே செய்யாவோ, நாணீலஞ் செய்யு நலம்" எனவரும். (இ - ள். காத லைச்செய்யும் நுண்ணிடை வருந்த மணிக்குழையையுடைய நுமதுகாதின்மீதே மிசையாக நீலப்பூவைச் சாத்துகின்றவரே! அக்காதின்மீதே உலாவுகின்ற நீண்ட நீலமாகியநிறத்தையுடைய கண்களின் நெடியகடையே செய்யாவோ, நீவிர் நன்றாகச்சூடிய நீலப்பூச் செய்யும் நலத்தை; எ - று.) நீலம் - ஆகு பெயர். 'மிசைநீலம்' என்றது - முன்பே காதின்மீதுலவுங் கண்ணாகிய நீலப் பூவும் உண்டாயிருக்க என்றவாறு.)

(கு - பு) மிசை - அவசியமல்லாதது. புனைவீர் - மகடூஉமுன்னிலை. கடை - கடைசி. நாள் நீலம் - புதிய [அன்றுமலர்ந்த] நீலப்பூ. உமது கரிய நீண்ட கடைக்கண்ணே நீலப்பூவினழகைச்செய்யுமாதலால், நீவிர் காதின்மேல் நீலப்பூவைச் சூடுகின்றது வேண்டுவதன்று என்று குறிப்பாகவிலக்கியவாறு. 'மருங்குநோவ,' 'குழைசேர்தாய்,' 'காதின்மிசைநீலம்,' 'நெடுந்தகையே,' 'நிமிர் கடையே' என்று பாடபேதங்கள் காணப்படுகின்றன.

பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. (எஉ)

கஎ. அதுவே,
பொருள்குணங் காரணங் காரியம் புணரும்.

என்பது: அவ்வலங்காரத்துச் சிலவேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) அவ்விலக்கு, பொருள்விலக்கும் குணவிலக்கும் காரணவிலக் கும் காரியவிலக்கும் என நான்குவகையானும் வரும்; (எ - று.)

அவற்றுள்,

(க) பொருள்விலக்கு:—"கண்ணு மனமுங் கவர்ந்தவ ளாடிடமென், றண்ண லருளு மடையாளந் - தண்ணிழலின், சுற்றெல்லை கொண்டலவுஞ் சோதித் திரளல்லான், மற்றில்லை காணும் வடிவு" எனவரும். (இ - ள். நம முடைய தலைவன் தன்னுடைய கண்களையும் மனத்தையுங் கவர்ந்துகொண்ட மடவாள் விளையாடுமிடமென்று நமக்குஅருளிச்செய்த சோலையின்கண் உண் டாகிய குளிர்ந்தநிழலைச்சேர்ந்த சூழலிடத்தைக் கைக்கொண்டு உலாவித்திரிவ

RangaRakes tamilnavarasam.com

தொருசோதியுருவ மல்லது அச்சோதியுருவின் அவயவங்களைக் காண்டல் அரி தாயிருந்தது, இஃது ஒருருவத்தன்மையிருந்தபடி! எ - று. 'அடையாளந் தண்ணிழல்' - இனைமெலிந்தது)

(கு - பு.) இதனைப் பொருட்டடைமொழியென வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் தர்மியாக்ஷேப மெனப்படும். ஒருசோதியுருவத்துக்கு வடிவில்லையெனப் பொருளை விலக்கியதனால், பொருள்விலக்காயிற்று. இங் குப் பண்பாகிய சோதியை விலக்காது உடன்பட்டு அதற்குஇடமான பண்பி யாகிய வடிவத்தை விலக்கியமை காண்க.

(உ) குணவிலக்கு:—"மாதர் துவரிதழ்வாய் வந்தென் னுயிர்கவரும், சீத முறுவ லறிவழிக்கு - மீதுலவி, நீண்ட மதர்விழியென் னெஞ்சங் கிழித்துல வும, யாண்டையதோ மென்மை யிவர்க்கு" எனவரும். (இ - ள். இவருடைய அழகிய பவளம்போன்ற வாயானது, என்னுடைய உயிரை வந்துகவராநின் றது; குளிர்ந்த நகையானது, அறிவை அழிக்காநின்றது, காதின்மீது உலாவி மதர்த்துநீண்ட விழியானது, என்னுடைய நெஞ்சத்தைக் கிழித்து உலவாநின் றது: ஆதலால், இவர்க்கு மென்மை எங்குள்ளதோ சொல்லுவாயாக; எ-று. யாண்டையதோ - எவ்விடத்ததோ.)

(கு - பு.) இதனைப் பண்புத்தடைமொழியென வழங்குதலும் உண்டு. இது வடமொழியில தர்மாக்ஷேப மெனப்படும். இங்குத் தலைமகளாகிய பண் பியை உடன்பட்டு அவளது மென்மையாகிய பண்பை இல்லையென விலக்கி யமை காண்க. 'மைந்தருயிர்கவரும்', 'முறுவல்செயலழிக்கும்,' 'மீதுலவு,' 'மதர் விழிகணெஞ்சங்கழித்துலவும்' என்று பாடபேதங்கள் காணப்படுகின்றன.

(௩) காரணவிலக்கு:—"மதரரிக் கண்சிவப்ப வார்புருவங் கோட, வத ரந் துடிப்ப வணிசேர் - நுதல்வியர்ப்ப, நின்பா னிகழ்வனகண் டஞ்சாதா லென்னெஞ்ச, மென்பாற் றவறின்மை யால்" எனவரும். (இ - ள். மட வாய்! செவ்வரிபரந்துமதர்த்த கண் சிவப்ப நீண்ட புருவம் வளைய அதரம் துடிக்க அழகுசேர்ந்த நெற்றியானது வியர்ப்ப உன்னிடத்தில் நிகழ்வனவற்றைக் கண்டு என்னுடையநெஞ்சம் பயப்படமாட்டாது: என்னிடத்திற் குற்றமில்லா மையால்; எ - று. கோட - வளைய. அணி - அழகு. பால் - இடம்.)

(கு - பு) அச்சத்திற்குக் காரணமான குற்றம் தன்னிடத்து இல்லாமை யைக் கூறியதனால், காரணவிலக்காயிற்று. அதரம் - உதடு. அணிசேர்நுதல்- சுட்டியென்னும் ஆபரணம் பொருந்திய நெற்றியுமாம். நிகழ்வன - உண்டா கின்ற கோபக்குறிகள். ஆல் - அசை.

(௪) காரியவிலக்கு:—"மன்னவர் சேயா மயிலகவி யாடலும், பொன்னல ருங் கொன்றையும் பூந்தளவின் - மென்மலரு, மின்னுயிரா நீண்முகிலு மெய் யென்று கொள்வதே, லென்னுயிரோ வின்னு முளது" எனவரும். (இ - ள். நம்காதலர் (வினைகருதிச்) சேய்த்தாகியநாட்டினராக மயிலினங்கள் கூவியாடு தலும் கொன்றைகள் பொன்போல் மலர்தலும் அழகிய முல்லையின் மெல்லிய மலரும் மின்னலைக்சொடுக்கின்ற நெடியமேகமும் ஆகியஇவை மெய்யென்று கொள்வோமாயின் என்உயிரோ இன்னும் உடலோடு பொருந்திநின்றது! எ - று.) இதனுள், காரியம் - உயிரில்லாதாதல்.

(கு - பு) இச்செய்யுள், கார்காலத்தில் மீண்டுவருவதாகக் காலங்குறித் துச்சென்ற தலைவன் வாராதவளவிலே அக்காலம் வரக் கண்ட தலைவியின் வா ரத்தை. இதில், கார்காலம் வரக் கண்டும் காதலரைப் பிரிந்த யான் உயிரோ டிருத்தல் கூடாதகாரிய மென மரணமாகியகாரியம் ஆக்ஷேபிக்கப்பட்டதனால், காரியவிலக்காயிற்று. சேய்ஆ - தூரதேசத்தில்இருக்க. 'மெய்யெனறுகொள்

RangaRakes tamilnavarasam.com

வதே' என்ற பாடத்துக்கு, இவை மெய்யாய பருவத்தில் தோன்றின வென்று கருதத்தக்கனவல்ல; என்னெனில், என்உயிர் என்உடலோடு பொருந்திநின்றமையால் என்று பொருள்கொள்க; அப்பருவமன்று, இவை தன்னிடையிலே தோன்றின என்றபடி. (சரு)

கஅ. வன்சொல் வாழ்த்துத் தலைமை யிகழ்ச்சி
துணைசெயன் முயற்சி பரவச முபாயங்
கையற வுடன்படல் வெகுளி யிரங்க
லைய மென்றாங் கறிந்தனர் கொளலே.

என்பதும்: அவ் விலக்கென்னும் அலங்காரத்தை விரித்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) வன்சொல்விலக்கும், வாழ்த்துவிலக்கும், தலைமைவிலக்கும், இகழ்ச்சிவிலக்கும், துணைசெயல்விலக்கும், முயற்சிவிலக்கும், பரவசவிலக்கும், உபாயவிலக்கும், கையறல்விலக்கும், உடம்படல்விலக்கும், வெகுளிவிலக்கும், இரங்கல்விலக்கும், ஐயவிலக்கும் என்றுசொல்லிய பதின்மூன்று பாகுபாட்டை யுடையதென்று அறிந்துகோடலை யுடைத்து, அவ்வலங்காரம்; (எ - று.)

அவற்றுள்,

(க) வன்சொல்விலக்கு என்பது - வன்சொற்சொல்லி விலக்குவது. அது "மெய்யே பொருண்மேற் பிரிதியேல் வேறொரு, தையலை நாடத் தகுநினக்கு- நெய்யிலைவேல், வள்ளல் பிரிவற்றம் பார்த்தெங்கள் வாழ்நாளைச், கொள்ள வுழலுமாங் கூற்று" எனவரும். (இ - ள். ஒருதலையாகப் பொருண்மேல் ஆசையாற் பிரிதியேல், இப்பொழுதே உனக்கு ஒருமனையாளைத் தேடத் தகுவதாயிருந்தது; நெய்யையுடைத்தாகிய வேலையுடைய வள்ளலே! நீ பிரிந்த அவகாசத்தைப் பார்த்து அப்பொழுதே எங்கள்வாழ்நாளைக் கொள்வதாக நினைத்துத் திரியாநின்றது, கூற்றம்; எ - று. வள்ளல் - அண்மைவிளி. வாணாள் - உயிர்மேல்நின்றது.)

(கு - பு.) இது வடமொழியில் பருஷாக்ஷேப மெனப்படும் நீ என்னைப் பிரிந்தால் உடனே நான் இறப்பேனாதலால், நீ வேறொருமகளை மணஞ்செய்துகொள்ளுதற்கு இப்பொழுதே முயலலாமென்று கடுமையாகச் சொல்லிக் கணவன்செலவை ஒருத்தி விலக்கியதனால், வன்சொல்தடைமொழியாயிற்று. ஒருதலையாக - துணிவாக. இலைவேல - இலைவடிவமான வேல். கூற்றம் - யமன். 'கொள்ளவிழையுமாம்' என்றும் பாடம்; விழையும் - விரும்பும். அற்றம் - சமயம். இச்செய்யுளைத் தோழிவார்த்தையாகவுங் கொள்ளலாம்.

(உ) வாழ்த்துவிலக்கு என்பது - வாழ்த்திவைத்து விலக்குவது. அது "செல்லு நெறியனைத்துஞ் சேம நெறியாக, மல்க நிதியம் வளஞ்சிறக்க - வெல்லு, மடற்றேர் விடலை யகன்றுறைவ தியாங்கவ், விடத்தே பிறக்க வியாம்" எனவரும். (இ - ள். வென்றியினையும் வலியினையுமுடைய தேரினையுடைய வீரனே! நீ எம்மைப்பிரிந்துபோகக்கருதிப் போகும் வழியனைத்தும் உனக்குக் காவலாகிப் பரிகாரஞ்செய்வதாக, நினக்குப் பொருள்வருவாயும் பெருகுவதாக; செல்வம்பெருக; நீ இப்படிப்பிரிந்து நிலையாகவிருப்பது எவ்விடம்? அவ்விடத்தை எங்கட்குச் சொல்லவேண்டும்; நாங்கள் அவ்விடத்தே அறிந்து பிறப்போமாக; எ - று. இறக்குங்காலத்து உண்டாய நினைவு இறந்தபின்னர் வந்து ஊட்டுமென்பது அறிக.)

(கு - பு.) இதனை ஆசித்தடைமொழியென வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் ஆசீர்வசனாக்ஷேப மெனப்படும். வாழ்த்துக்கூறும் வாய்பாட்



RangaRakes tamilnavarasam.com

டால் தலைவி தன்னிலையைக் காட்டித் தலைவன்செலவை விலக்கியதனால், இது வாழ்த்துவிலக்காயிற்று. சேம நெறியாக - க்ஷேமமுள்ள வழியாகக்கடவன. 'நீ பிரிந்துசெல்லுமிடத்து நாங்கள் பிறக்கக்கடவோம்' என்றது, இங்குஇறந்து அங்குப்பிறந்து உன்னை மணஞ்செய்துகொள்வோமென்றவாறு. 'வளஞ்சுரக்க', 'உறைவதாங்கோரிடத்தேபிறக்கறிவேம்'என்றுபாடங்கள்காணப்படுகின்றன.

(௩) தலைமைவிலக்கு என்பது - தன்பால் தலைமைதோன்றக் கூறிவிலக்குவது. அது "பொய்ம்மை நெறிநீர் பொருளு மிகப்பயக்கு, மெய்ம்முயிர்க்கு மேது மிடரில்லை - வெம்மைதீர்ந், தேக வினிய நெறிபணிய வென்றாலும, போக லொழிவாய் பொருட்கு" எனவரும். (இ - ள். பொய்யாகியவழியினைத் தப்புவிக்கின்ற பொருளும் பெரிதுஉண்டாகும்; எங்களுயிர்க்கும் ஓரிடருண்டாகமாட்டாது: அவ்வழிநடையும் வருத்தமின்றிஇன்பமுண்டாக்கும; அவ்வழிதானும் சிறுகித்தோன்றும் என்று சொன்னேமேயாயினும், பொருள்கருதிப் போகின்ற போக்கை நீ ஒழிவாயாக; எ - று.)

(கு - பு.) இது வடமொழியில் ப்ரபுத்வாக்ஷேப மெனப்படும். இதில் முதல் மூன்றுஅடிகளில் தனதுதலைமைதோன்றக் கூறி முடிவில் விலக்கியமை காண்க. பொய்ம்மைநெறிநீர் பொருள் - நியாயமானவழியால் ஈட்டப்படும் பொருள். 'ஏகவினிய' என்றும் பாடம்.

(௪) இகழ்ச்சிவிலக்கு என்பது-இகழ்ந்து விலக்குவது. அது "ஆசை பெரிதுடையே மாருயிர்மே லப்பொருண்மே, லாசை சிறிது மடைவிலமாற் - றேசு, வழுவா நெறியின் வருபொருண்மே லண்ண, லெழுவா யொழிவா யினி" என வரும். (இ - ள். தலைமைகெடாதவண்ணம் நல்வழிக்கண்ணே யொழுகுகின்ற பொருள் கருதிப் பிரிகின்ற பெரியோனே! யாம் எங்கள் அரிதாகிய உயிரின் மேலே மிகஆசையுடையேம், நீ நினைத்துப்பிரிகின்ற பொருண்மேல் ஆசையுண்டாதற்குக் காரணம் சிறிதும்இலேம்: ஆதலால்,நீ பொருண்மேல் ஏகுவாய், அன்றி அதனைத்தவிர்வாய்; எங்கள்தன்மை, இது; எ - று. தேசுவழுவா நெறியின் வரும் அண்ணல் எனக்கூட்டுக. தேசுவழுவாநெறியின்வருபொருள் எனப் பொருட்கு அடையாக்கினும் அமையும். தேசு-தலைமை. வழுவல் - கெடுதல். நெறி - ஒழுக்கம். எழுதல் - போதல். ஒழிதல் - தவிர்தல். 'இனி'என்றது - எங்கள்நிலைவிருந்தபடிசொன்னேம் நீ செய்யுமாறுசெய் என்றவாறு.)

(கு - பு.) இது வடமொழியில் அநாதராக்ஷேப மெனப்படும். எங்கட்கு உயிராசை மிகவும்உளதே யொழிய உனக்குஇருக்கிறதுபோலப் பொருளாசை சிறிதும்இல்லை: இது எங்கள் தன்மை; நீசெல்வதானாற் செல்; இருப்பதானால் இரு என்று அன்பின்றி உதாசீனமாகக்கூறுவதுபோலக் கூறிக் கணவன்செலவை விலக்குதலால், இகழ்ச்சிவிலக்காயிற்று.

(௫) துணைசெயல்விலக்கு என்பது - துணைசெய்வார்போலக் கூறி விலக்குவது. அது "விளைபொருண்மே லண்ணல் விரும்பினையே லீண்டெ டங், கிளையழுகை கேட்பதற்கு முன்னே - விளைதேன், புடையூறு பூந்தார் புனைகழலாய் போக்கிற், கிடையூறு வாராம லேகு" எனவரும். (இ - ள். மிகுதியாகிய தேன் ஊறுகின்ற பூமாலையினையும் அலங்கரிக்கப்பட்ட கழலினையுமுடைய தலைவனே! நன்மைபயக்கும்பொருண்மேலே போதல்விரும்பினையாயின், எங்கள்சுற்றத்தார் அழுவது கேட்பதற்குமுன்னே இப்பொழுதே உன்னுடைய போக்கிற்கு விலக்கு வாராவண்ணம் போவாய்; எ - று. நாங்கள் அழிந்து படுவதற்குமுன்னமே நீபோ என்றவாறு. ஈண்டு - இப்பொழுது. விளைதல் - உண்டாதல்.)

(கு - பு.) இதனை நட்புத்தடைமொழியென வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் ஸாசிவ்யாக்ஷேப மெனப்படும். நீ செல்வதை உணர்ந்தமாத்

RangaRakes tamilnavarasam.com

திரத்தால், நீ செல்வதற்குமுன்னமே யாம் இறந்திடுவேம்; ஆதலால், செல்லா தொழி என்று விலக்குங் கருத்தை அங்ஙனங்கூறாமல் 'நீ செல்வதானால் எமது சுற்றத்தின்புலம்பொலிகேட்குமுன்னமே உன்பிரயாணத்துக்குத்தடைவாராத படி செல்' என்று அதற்குத்துணைசெய்யும் வாய்பாட்டாற் கூறியதனால், துணை செயல்விலக்காயிற்று.

(௬) முயற்சிவிலக்கு என்பது - முயற்சிதோன்றக் கூறி விலக்குவது. அது "மல்லணிந்த தோளா யிதென்கொலோ வான்பொருண்மேற், செல்க விரைந் தென் றுளந்தெளிந்து - சொல்லுதற்கே,யென்று முயல்வலியா னேகனீ யென் றிடையே, தோன்றுகின்ற தென்வாயிற் சொல்" எனவரும். (இ - ள். வளப்பத் தினையுடைய தோளினையுடையாய்! நீ நன்மைபயக்கும்பொருளினிடத்தே கடு கிப்போவாயாக என்று என்உள்ளமானது கலக்கமறச்சொல்லுவதாக நினைத்துத் தொழிற்படாநின்றது; அதற்குள்ளே ஒருசொல் போகாதொழிவாயாக என்று சொல்லுவதாகத் தோன்றுநின்றது; இதுஎன்னைகொல்? சொல்லுவாயாக; எ - று. மல்லல் - கடைகுறைந்தது. கொல் - ஐயம்.)

(கு - பு.) இது வடமொழியில் யத்நாக்ஷேப மெனப்படும். கணவன் செல விற்கு உடன்பாடான முயற்சி தன்னிடந் தோன்றியதாகக் கூறி விலக்கியமை காண்க. மல்அணிந்த - வலிமைகொண்ட எனினுமாம். இதுஎன்கொலோ - இது என்னகாரணமோ? இதற்கு யான் என்செய்வேன் என்றபடி. வான்பொருள் மேல் - சிறந்தபொருளை யீட்டுதலைக்குறித்து. முயல்வல் யான் - முயற்சிசெய் வேன் யான்.

(௭) பரவசவிலக்கு என்பது - தன்வசமல்லாமைதோன்றக்கூறி விலக்கு வது. அது "செல்கை திருவுளமேல் யானறிவேன் றேங்கமழ்தார், மல்லகலந் தங்கு மதர்விழியின் - மெல்லிமைகள், ஞேக்கு விலக்குமென நோவா ளிவள்கா தல், போக்கி யகல்வாய் பொருட்கு" எனவரும். (இ - ள். இவளைப்பிரிவதே காரி யமாகத் திருவுள்ளத்து அடைத்துப் பொருட்குப்பிரிவாயானால் அதன்மேல்அடு க்குங்காரியம் என்னாலறியப்படா தாகலான், நறுநாற்றத்தையுடைத்தாகிய தாரி னையும் வளப்பத்தினையுமுடைத்தாகிய நின்னுடைய மார்பின்கண்ணே பிரி யாது தங்கப்பட்ட விழியினிடத்து உண்டாகிய மெல்லிய இமைகள் எம்முடைய தலைவன் மார்பினைப்பார்க்கின்றபார்வையினை விலக்காநின்றன என்றதற்குவருந் துந்தன்மையையுடைய இவள் நின்மேல் வைத்த ஆசையினைப் போக்கிப் போ வாயாக; எ - று.)

(கு - பு.) இது தன்னைப் பிறள்போலக் கூறிய தலைவிவார்த்தை யென்று வது, தலைவியின்நிலைமையைக் கூறுந் தோழிவார்த்தை யென்றுவது கொள்க. கணவன்மார்பை இடைவிடாது பார்த்தற்குத் தடையாகின்றன கண்களின் இமைக ளென்று இமைகொட்டுதலாலாகுந்தடைக்கும் ஆற்றாது வருந்துகிற இவளது ஆசையைத தீர்த்துவிட்டே நீ செல்லவேண்டும்; அங்ஙனமன்றிச் சென்றால் அதனால் வருந் தீங்கு யாமொழிக்கற்பாற்றன்று என்று தன்வசமல் லாமைகாட்டிச் செலவை விலக்கியதனால, பரவசவிலக்காயிற்று. 'காதல்போக்கி யகல்வாய்'என்றது - உன்செலவை இப்படிப்பட்ட காதலுக்குச் சொல்லி அதனை யுடன்படுத்திவிட்டு நீ செல், யான்என்வசமன்றி அதன்வசமாக நடக்கிறேன் என்றவாறுமாம்.

(௮) உபாயவிலக்கு என்பது - விலக்குவதனை ஒருபாயங்காரணமாகக் கூறிவிலக்குவது. அது "இன்னுயிர் காத்தளிப்பாய் நீயே யிளவேனின், மன்ன வனுங் கூற்றுவனும் வந்தணைந்தா - லன்னோர், தமக்கெம்மைத் தோன்றாத் தகை மையதோர் விஞ்சை, யெமக்கின் றருள்புரிந்தே யேகு" எனவரும். (இ - ள். எமது இனியவுயிரைக் காக்குந் தன்மையையுடையையாகிய நீயே யினியக்

RangaRakes tamilnavarasam.com

கருதினையாயின் எம்மிடத்து இளவேனிற்காலத்துக்குத் தலைவனாகிய காமனும் உயிர்க்குத்தலைவனாகிய கூற்றுவனும் வந்துசேர்ந்தால் அவர்கண்ணுக்குநாங்கள் தோற்றாதேயிருப்பதொரு விச்சையை எமக்குத்தந்து பின்புபோவாயாக; எ-று.)

(கு - பு.) வருத்துந்தன்மையுடைய மன்மதனுக்கும் யமனுக்கும் யாம் கட்புலனாகாதபடி ஒருமாயவித்தையை எமக்கு அருள்செய்து செல் என்று,செல்லுதற்கு ஓருபாயங்காட்டுவதுபோல அதனை விலக்குதலால், உபாயவிலக்காயிற்று. நீ பிரிந்தால் எமக்கு உயிர்வாழும்வகை யில்லை யென்று குறிப்பித்து விலக்கிய வாறு. இன்று - இப்பொழுது.

(௯) கையறல்விலக்கு என்பது - தந்தமக்குவேண்டிய பொருள்மேல் முயலும் ஒழுக்க மின்மை தோன்றக் கூறுவது. அது "வாய்த்த பொருள்விளைத்த தொன்றில்லை மாதவமே, யார்த்த வறிவில்லை யம்பலத்துக் - கூத்துடையான், சீலஞ் சிறிதேயுஞ் சிந்தியேன் சென்றொழிந்தேன், காலம் வறிதே கழித்து" எனவரும். (இ - ள். நற்பொருளைவிளைத்தற்குக் காரணமாகிய யாதொருமுயற்சியுஞ் செய்யவில்லை; பெரியதவத்தைத் தேடிக்கொள்ளத்தக்க அறிவு மில்லை; சிதாகாசத்தில ஆனந்ததாண்டவஞ்செய்கின்ற நடேசனுடைய மான்மியத்தைச் சிறிதேனும் நினைக்கவில்லை, ஆதலால், என்வாணாளை வீணாக்கிவிட்டேன்; எ - று. வாய்த்தபொருள் - நற்பொருள். விளைத்தல் - தேடல். மா தவம் - பெரிய தவம். ஆர்த்தல - பிணித்தல்.

(கு - பு.) இது வடமொழியில் அநுசயாக்ஷேபமெனப்படும். கையறல்-செயலறுதல்; நடந்தசெய்தியைக்குறித்து வருந்துதல். 'மாதவமே லார்த்த' என்ற பாடத்துக்கு - பெரியதவத்தின்மேல் தொடர்ந்த என்று பொருள். 'சீலம் வறிதேயும்' என்றும், 'சென்றொழிந்தகாலம்' என்றும் பாடங்கள் காணப்படுகின்றன. மான்மியம் - மகிமை. பிணித்தல் - விடாதுகொள்ளுதல்.

(௧0) உடன்படல்விலக்கு என்பது - * உடன்பட்டார்போல விலக்குவது. அது "அப்போ தடுப்ப தறியே னருளசெய்த, விப்போ திவளு மிசைகின்றா - டப்பில், பொருளோ புகழோ தரப்போவீர் மாலை,யிருளோ நிலவோ வெழும்" எனவரும். (இ - ள் குற்றமற்ற பொருளென்ன புகழென்ன இவற்றையுண்டாக்குதற்குப் பிரிந்துபோவீர்; நீர்பிரிந்தஅப்பொழுதே இவளுக்கு அடுப்பதொன்றும் என்னால் அறியப்படாது; நீர் அருளிச்செய்த பிரிவுக்கு இப்போது இவளும் உடன்படாநின்றாள், இதுநிற்க, மாலைக்காலம்வந்தபொழுதே அதனோடு இருளோ மதியமோ வருதல்செய்யும்; இதனை நீர் அறிவீர்; எ - று.)

(கு - பு.) இது வடமொழியில் அநுஜ்ஞாக்ஷேப மெனப்படும். தலைவன் செலவிற்கு உடன்பட்டாற்போன்று கூறித் தலைவிக்கு அப்பிரிவுக்காலத்தில் இருளினாலும் நிலவினாலும் உண்டாகும் பெருந்துயரை எடுத்துக்காட்டி அவன் செலவைத் தோழி விலக்குதலால், உடன்படல்விலக்காயிற்று. 'அருள்செய்த திப்போது', 'இசைகின்றான்' என்று பாட பேதம் உண்டு.

(௧௧) வெகுளிவிலக்கு என்பது - வெகுளி தோன்றக் கூறி விலக்குவது. அது "வண்ணங் கருக வளைசரிய வாய்புலர,வெண்ணந் தளரவெதிர்நின்று-கண்ணினீர்ப், போதல் புரிந்து பொருட்காதல் செய்வீரால், யாதும் பயமிலேம் யாம்" எனவரும். (இ - ள். இவளுடைய நிறங் கருகி வேறுபடவும், கையில் வளை சிந்தவும், வாய் நீரற்று உலரவும், நன்மையெய்துவதாக நாங்கள் எண்ணிய எண்ணமெல்லாம் பழுதாகவும் எங்களெதிரே நின்று கண்ணீரின்றிப் பிரிதல்விரும்பி எங்களை வெறுத்துப் பொருளை ஆசைப்படுவீரானால் இனி எங்கட்கு ஒருபயனுமில்லை; எ - று.)

* 'உடன்பட்டாற்போன்று விலக்கிக்கூறுவது' என்றும் பிரதிபேதமுண்டு.

RangaRakes tamilnavarasam.com

(கு - பு.) இதனைச் செற்றத்தடைமொழி யென வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் ரோஷாக்ஷேப மெனப்படும். 'தளர்வேமெதிர்நின்று' என்றும பாடமுண்டு. "ஏதுவன் யானென் றெடுத்துரைத்த நீயினிப், போகிலென் போகாய்கா லென்" என்பதும், இவ்வணியாம்.

(கஉ) இரங்கல்விலக்கு என்பது - இரக்கந்தோன்றக் கூறி விலக்குவது. அது "ஊசன் மெருழிலிழக்கு மொப்பு மயிலிழக்கும், வாசஞ் சுனையிழக்கும் வள்ளலே - தேசு, பொழிலிழக்கு நாளையெம் பூங்குழலி நீங்க, வெழிலிழக்கு மந்தோ விவண்" எனவரும். (இ - ள். எம்முடைய பூவினால், அலங்கரிக்கப்பட்ட குழலினையுடைய இவள் உயிரிழப்பதேயன்றி, நாளை, ஆடுகின்ற ஊசல்களும் விளையாடற்றொழிலை யிழக்கும, மயிலும் உவமையையிழக்கும், சுனைகளும் நறுநாற்றத்தையிழக்கும, பொழிலும் ஒளியை யிழக்கும், இவ்விடமும் அழகையிழக்கும்: தலைவனே ! இனி அடுத்தவாறு செய்; எ - று.)

(கு - பு.) இது வடமொழியில் அநுக்ரோசாக்ஷேப மெனப்படும். அடுத்தவாறு — தக்கபடி.

(கங) ஐயவிலக்கு என்பது - ஐயுற்றதனை விலக்குவது. அது "மின்னோ பொழிலின் விளையாடு மிவ்வுருவம், பொன்னோ வெனுஞ்சுணங்கிற் பூங்கொடியோ - வென்னோ, திசையுலவுங் கண்ணுந் திரண்முலையுந் தோளு, மிசையிருளுந் தாங்குமோ மின்" எனவரும். (இ - ள். இப்பொழிலின்கண்ணே விளையாடுகின்றஇவ்வுருவம், மின்னினது உருவமோ? அன்றி, பொன்னோவென்று ஐயுறுநிறத்தையுடைய சுணங்கினையுடைத்தாயிருப்பதோ ருருவத்தையுடைத்தாகிய கொடியோ? யாதோவென்று ஐயுறுகின்ற நெஞ்சமே ! திக்கனைத்தும்பரந்து உலாவித்திரிகின்ற கண்ணினையும் திரண்டமுலையினையும் இரண்டு தோளினையும் தன்மீதே இருளினையும் தாங்கியிருப்பதொரு மின்னுமுண்டோ? சொல்லுவாயாக; எ - று. மின்னோ கொடியோ என்று ஐயுற்று, மின்னன்மை துணிதலான், பூங்கொடியோ என்ற ஓகாரம் - தெரிநிலைக்கிளவியான் அன்மையை விளக்கிற்று.)

(கு - பு.) இது வடமொழியில் ஸம்சயாக்ஷேப மெனப்படும். ஐயுற்றதனை - சந்தேகப்பட்டதை. பூங்கொடியோ என்றது, பெண்வடிவமோ வென்றபடி. 'பொற்கொடியோ' என்றும் பாடமுண்டு. முன்னிரண்டு அடிகளில் தோன்றிய ஐயம் பின்னிரண்டுஅடிகளால் விலக்கப்பட்டது. மின்னலன்றென்று காட்டியதனால், மகளென்று துணிந்தவாறு.

வடநூலிற் காட்டப்பட்ட மூர்ச்சாக்ஷேபம், அநுசயாக்ஷேப மென்னுங் கையறல்விலக்கில் அடங்கும். கையாறென்பது மூர்ச்சைக்கு ஒருபெயராக வழங்குமாறும் அறிக. கருணைத்தடைமொழி இரங்கல்விலக்கிலும், வெப்பத்தடைமொழி வெகுளிவிலக்கிலும் அடங்குமாறு காண்க. ஆதாரத்தடைமொழி, ஆதேயத்தடைமொழி என்றாற்போலப் பிறவாற்றான்வருவனவற்றையும் இவற்றுள்ளே அறிந்து அமைத்துக்கொள்க. "செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின், வல்வரவு வாழ்வார்க் குரை" என்பது, வன்சொல் விலக்கின்பாற்படும். "நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற், பகையு முளவோ பிற" என்பது, நிகழ்வினைவிலக்கின்பாற்படும். இங்ஙனம் ஒருவிஷயத்தையே பலவகையிலுங் காட்டியது, ஒவ்வொருகாரியத்தையுங் கவி தன்தோற்றத்தினளவு வகைப்படுத்திக் கூறலாகும் என வழியறிவித்தற்கு என்க. இதுவே பிற அலங்காரங்களின் பலவேறுவிகற்பங்களுக்கும் நியாயமாம். (௪௪)

கக. வேற்றுப்பொருள் சிலேடை யேதுவென் றின்னவை
மேற்கூ றியற்கையின் விளங்கித் தோன்றும்.

RangaRakes tamilnavarasam.com

என்பது: இவ்வலங்காரம் பிறஅலங்காரங்களோடுகூடி வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) வேற்றுப்பொருள்வைப்பும் சிலேடையும் ஏதுவும் என்று சொல்லப்பட்டவைகளோடு இவ் விலக்கென்னும் அலங்காரங் கூடி மேற்சொல்லப்பட்ட அலங்காரங்கள்போல வரும்; (எ - று.)

(கு - பு.) பிறஅலங்காரங்களோடு கூடிவருதல்பற்றி, இவற்றை வேறு பிரித்தோதினர்.

அவற்றுள்,

(௧) வேற்றுப்பொருள்வைப்புவிலக்கு:—"தண்கவிகை யாலுலகந் தாங்கு மனபாயன், வெண்கவிகைக் குள்ளடங்கா வேந்தில்லை - யுண்டோ, மதியத் துடனிரவி வந்துலவும் வானிற், பொதியப் படாத பொருள்" எனவரும். (இ - ள். உள்ளங்குளிர்ந்து கொடுக்குங் கொடையையுடைய அநபாயச்சோழனுடைய வெண்கொற்றக்குடைக்கீழ்அடங்காத வேந்தரும் இல்லை; மதியும்இரவியுந்திரியும் ஆகாயத்துள் அடங்காத பொருளும் இல்லை; எ - று.)

(கு - பு.) இதனைப் பிறபொருள்வைபபுத்தடைமொழி யென வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் அர்த்தாந்தரந்யாஸாக்ஷேபமெனப்படும். வேற்றுப்பொருள்வைப்பணியின் இலக்கணத்தை, அடுத்த சூத்திரத்திற் காண்க. அநபாயன்குடைக்கீழடங்காத அரச ரில்லை யென்ற விலக்கை, வானத்திலடங்காத பொருளில்லை யென்ற வேறுபொருள்கொண்டு சாதித்ததனால், வேற்றுப்பொருள்வைப்புவிலக்காயிற்று. கவிகையால் உலகந் தாங்கும - கவிந்த கையினால் (பொருள்களையெடுத்துக்கொடுத்து) உயிர்களைக் காக்கின்ற என்க. அனபாயன் என்றவிடத்து 'சயதுங்கன்' என்றும், 'சனநாதன்' என்றும், எங்கும் என்றவிடத்து 'உண்டோ' என்றும் பாடபேதம் உண்டு.

(௨) சிலேடைவிலக்கு:—"அம்போ ருகஞ்செற் றமுத மயமாகி, வம்பார் முறுவ லொளிவளர்க்க - விம்பர், முகைமதுவார் கோதை முகமுண் டெனின், மிகைமதியும் வேண்டுமோ வேறு" எனவரும். (இ - ள். தாமரையினது அழகை அழித்து அமிருதத்தன்மைத்தாய்ப் புதுமையோடுகூடி விரியாநின்ற ஒளியை யுடைத்தாதற்கு, முல்லைமுகைகளையுடையகோதையையுடையாளுடைய முகமல்லது, தாமரையைக் கருகுவித்து அமிருதகலைகளாலியன்ற வடிவுடைத்தாய்ச் செவ்விதராநின்ற ஒளிநிலாவிரிமதி உலகத்திற்கு மிகை; எ-று.) இஃது-முகத்திற்கும் மதிக்கும் சிலேடை. (முறுவல் - ஒளி. வம்பு - புதுமை. இம்பர்-இவ்விடம்.)

(கு - பு.) இம்மாதர்முக முள்ளதனால் மதியொன்று வேண்டுவதில்லை யென்று விலக்குதலால் விலக்கணிக்கு இடமாகிற இச்செய்யுளில் முன்னிரண்டடிகள் இருபொருள்பட்டதனால், சிலேடைவிலக்காயிற்று. முறுவலொளி - ஒருபொருட்பன்மொழி. மது வார் - தேன் சொரிகிற.

(௩) ஏதுவிலக்கு:—'பூதலத்து ளெல்லாப் பொருளும் வறியராய்க், காதலித்தார் தாமே கவர்தலா - னீதி, யடுத்துயர்ந்த சீர்த்தி யனபாயா யார்க்குங், கொடுத்தியெனக் கொள்கின்றி லேம்'' எனவரும். (இ - ள். பூமண்டலத்துள்ளே வறிஞராய் ஆசைப்பட்டார் யாவரும் தாம் ஆசைப்பட்ட பொருள்களைத் தடையின்றித் தாமேயெடுத்துக்கொள்ளுகின்றாராதலால், நீ உலகத்துவறியோர்க்குக் கொடுக்கின்றாயாக நினைக்கின்றிலோம்; நீதியைச்செய்தலாலே உயர்ந்த கீர்த்தியையுடைய அநபாயனே! எ - று. நீதியடுத்துயர்ந்த சீர்த்தி யென்றது-பிள்ளையைத் தேர்க்காலிலிட்ட குணம் என்றவாறு.)

RangaRakes tamilnavarasam.com

(கு - பு.) 'நீ யார்க்குங்கொடுத்தி யெனக் கொள்கின்றிலேம் யாம்' என்ற விலக்குக்கு, யாவரும் உன்பொருள்களை வேண்டியபடி தாமேயெடுத்துக்கொள்ளுதலால் என்று காரணங்காட்டியதனால், ஏதுவிலக்காயிற்று. கஎ-ஆம் சூத்திரத்திற் காட்டப்பட்ட காரணவிலக்கிலும் இதிற் சமத்காரம் மிகுதித்தோன்றுதலால், இது பிறிதோரணியை உட்கொண்டதென வேறுகாட்டப்பட்டது. ()

விலக்கலங்காரம் முற்றும்.

## எ. வேற்றுப்பொருள்வைப்பணி.

உ0. முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப்
பின்னொரு பொருளை யுலகறி பெற்றி
யேற்றிவைத் துரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே.

என்பது: நிறுத்தமுறையானே வேற்றுப்பொருள்வைப் பென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) முன் ஒருபொருட்டிறந்தொடங்கிப் பின்னர் அதுமுடித்தற்கு வலியுடைய பிறிதொருபொருளை உலகறிபெற்றியான் வைத்துமொழிவது வேற்றுப்பொருள்வைப் பென்னும் அலங்காரமாம்; (எ - று.)

இதன்அகலம் உரையிற் கொள்க.

(கு - பு.) இது வடமொழியில் அர்த்தாந்தரந்யாஸ மெனப்படும். ஒரு வாக்கியப்பொருளைக் கூறி நாட்டி அதனை உறுதிப்படுத்துதற்கு மற்றொரு வாக்கியப்பொருளைக் கூறிவைத்தல் இதன் இலக்கணம். ஒருவாக்கியப்பொருளை மற்றொரு வாக்கியப்பொருள்கொண்டு சாதிப்பது என்க. இவ்வணியில் பொதுப்பொருளாற் சிறப்புப்பொருளும், சிறப்புப்பொருளாற் பொதுப்பொருளும் சாதிக்கப்படும்; அவை இடம் நோக்கிக் கண்டுகொள்க. வலி - வல்லமை. உலகறிபெற்றியான் - பிரசித்தமான விதத்தால். (சுசு)

உக. முழுவதுஞ் சேற லொருவழிச் சேறல்
* முரணித் தோன்றல் சிலேடையின் முடித்தல்
கூடா வியற்கை கூடு மியற்கை
† யிருமை யியற்கை விபரீதப படுத்தலென்
றினையவை யெட்டு மதன தியல்பே.

என்பது: அவ்வலங்காரத்தை விரித்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) முழுவதுஞ்சேறலும் ஒருவழிச்சேறலும் முரணித்தோன்றலும் சிலேடையின்முடித்தலும் கூடாவியற்கையும் கூடுமியற்கையும் இருமையியற்கையும் விபரீதப்படுத்தலும் என எண்வகையான் வருவது அவ்வலங்காரத்து இயல்பு; (எ - று.)

**அவற்றுள்,**

(க) முழுவதுஞ்சேறலென்பது - ஒருதிறம் உரைத்தால் அத்திறம் எல்லாவற்றின்மேலும் முற்றச்செல்ல உரைப்பது. அது "புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச், சிறந்த வொளிவளர்க்குந் தேரோன்-மறைந்தான், புற

* 'முரணிற்றோன்றல்' என்றும் பாடமுண்டு.
† 'இருமை விபரீத மெனவத னியல்பே' என்றும் பாடமுண்டு.

RangaRakes tamilnavarasam.com

வொழி சூழ்ந்த புவனத்தே தோன்றி, யிறவாது வாழ்கின்றார் யார்" எனவரும். (இ - ள். உலகைக் காத்துப் பொலிவுடைய சக்கரத்தை நடத்தி இருள்கெட மின்னொளியை வளர்க்குந் தேரையுடைய ஆதித்தன் மறைந்தான்; கடல்சூழ்ந்த உலகிற் பிறந்தார் இறவாதே வாழ்கின்றார் யாவர்? எ - று.)

(கு - பு.) இதனைப் பொதுப்பிறபொருள்வைப்பென்று வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் விசுவவியாபி யெனப்படும். திறம் - பொருள்; விஷயம் சேறல் - செல்லுதல். புரந்தந்து - காத்து. இனி, இருள புறந்தரது இரிய- இருள் புறங்கொடுத்தோட எனினும் அமையும். 'பொன்மேனியுய்த்து' என்று பாடமோதி, பொன்னிறமான உடம்பைக் கொண்டு என்றுஉரைப்பாரு முளர். 'மறைந்தால்' என்ற பாடத்துக்கு-மறைந்தானென்றால் என்று பொருள். இச்செய்யுளில் தோன்றியிறக்குந்தன்மை உலகத்துப்பொருள்கட்கெல்லாம் பொதுவாக நிற்றல் காண்க. முந்தினவாக்கியம் - சிறப்புப்பொருள். பிந்தின வாக்கியம் - பொதுப்பொருள். மற்றை உதாரணச் செய்யுளிலும் இங்ஙனமே வந்துள்ளன. மாறிவருதல், சிறுபான்மை.

(௨) ஒருவழிநிற்றலென்பது - ஒருதிறம் உரைத்தால் அத்திறம் எல்லாவற்றின்மேலும் முற்றச்செல்லாது சிலவற்றின்மேலே சென்றொழிவது. அது "எண்ணும் பயன்றூக்கா தியார்க்கும் வரையாது, மண்ணுலகில் வாமனருள் வளர்க்குந் - தண்ணறுந்தேன், பூத்தளிக்குந் தாராய் புகழாளர்க் கெவ்வுயிருங், காத்தளிக்கை யன்றோ கடன்" எனவரும. (தூக்கல் - விசாரித்தல். வாமன்- திருமால். கடன் - முறைமை.)

(கு - பு.) இதனைச் சிறப்புநிலைப் பிறபொருள்வைப்பென்று வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் விசேஷஸ்த மெனப்படும். இ - ள். உலகத்திலே திருமால் கருதப்படும்பயன் யாதொன்றையுங் குறியாமல் எல்லோர்க்கும் வரையறையில்லாமல் கருணையை மிகுதியாகச் செய்தருளுவான்; குளிர்ந்த நறிய தேனை வெளிப்படுத்திச் சொரிகிற பூமாலையையுடையவனே! புகழுடையார்க்கு எவ்வுயிரையுங் காப்பது கடமையன்றோ? எ - று. வாமன் என்பது - அருகன், புத்தன், சிவன் இவர்கட்கும் பெயராகவழங்கும். 'என்னும் பயன்றூக்காது,' 'மன்னுலகின்', 'மின்னுறுந்தேன்' என்றும் பாடமுண்டு; இவற்றிற்கு-முறையே, யாதொரு பயனையும் எதிர்நோக்காமலென்றும், நிலைபெற்றஉலகத்தி லென்றும், ஒளிபொருந்தியதேனென்றும் பொருள்காண்க. 'வாமனருள்வளர்க்கும்' என்றவிடத்து 'மேகமழைபொழியும்' என்ற பாடமுங் காணப்படுகிறது; அது முதனூலுக்கு இயைந்ததாம். இச்செய்யுளில் எவ்வுயிருங் காத்தளித்தல் யாவர்மேலுஞ் செல்லாது 'புகழாளர்க்கு' என்று சிலர் மேலேயே செல்லுதல் காண்க. தாராய் - ஆடூஉமுன்னிலை. "தாரார்' என்ற பாடம், புகழாளர்க்கு அடைமொழியாம்.

(௩) முரணித்தோன்றலென்பது - தம்முள் மாறுபட்டிருக்கும் இயல்புடைய பொருள் வைப்பது. அது "வெய்ய குரற்றோன்றி வெஞ்சினவே றுட்கொளினும், பெய்யு முகிறன்னைப் பேணுவரால் - வையத், திருள்பொழியுங் குற்றம் பலவரினும் யார்க்கும், பொருள்பொழிவார் மேற்றே புகழ்" எனவரும். (வெய்யகுரல் - முழக்கம், சினவேறு - நெருப்பு.)

(கு - பு.) இதனை முரண்பிறபொருள்வைப்பென்று வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் விரோதி யெனப்படும். இ - ள். கொடியஇடிமுழக்க முண்டாதற்கிடமாய் மிகஉக்கிரமான இடிநெருப்பை உட்கொண்டிருந்தாலும் மழைபொழியும் மேகத்தை அனைவரும் கொண்டாடுவார்கள்; உலகத்தில் இருட்டன்மைமிக்க [கொடிய] பலகுற்றங்கள் உள்ளனவாயினும் யாவர்க்கும்

RangaRakes tamilnavarasam.com

புகழ்தல் பொருள்சொரிபவர்மேலேயே நிகழ்வதாம்; எ - று. ஆல் - ஈற்றசை. இச்செய்யுளின் முதலடி - கடுஞ்சொல்லுக்கிடமாய்க் கடுங்கோபத்தை உட்கொண்டிருந்தாலும் என்னும் பொருளையுங் கொண்டது. இங்கு, ஈகைக்கும் கடுங்குரல்முதலியவற்றிற்கும் முரண்டிருத்தல் காண்க. 'பெய்யுமழைமுகிலை', 'குற்றம்பலவெனினும்' என்றும் பாடமுண்டு.

(௪) சிலேடையின்முடிந்ததெலென்பது - முன்னர்வைத்த பொருளையும் பின்னர்வைத்த பொருளையும் ஒருசொற்றொடர்பாற் சொல்வது. அது "எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த, முற்றிழையாள் வாட முறுவலிக்கும்-முற்று, முடியாப் பரவை முழங்குலகத் தென்றுங், கொடியார்க்கு முண்டோ குணம்" எனவரும். இதனுள், கொடுமையுடையார்க்கும் கொடிக்கும் சிலேடை வந்தவாறு காண்க. (இ - ள். முல்லைக்கொடியானது, முன்பு தன்னை வளர்த்துக்காத்த குறைவற்ற அணிகளையுடையாளாகிய இவள் வருந்த முறுவல் செய்கின்றது; இஃது என்னே! முழக்கத்தினையுடைய முடிவுதெரியாத கடல் சூழப்பட்ட உலகத்துக் கொடியார்க்குங் குண முண்டாமோ? எ - று.) கொடியார் - கொடுமையுடையார்க்கும், கொடிக்கும் பெயர்.

(கு - பு.) முறுவலிக்கும் - நகைக்கும்; அரும்பெடுக்கும். குணம் - நற்குணம்; தன்னை வளர்த்தவர் வருந்தத் தான்சிரியாமை. கொடியார் என்பது-கொடியையுணர்த்தும்போது, 'ஆர்' என்னும் பலர்பால்விகுதி - உயர்வுபற்றியது.

(௫) கூடாவியற்கையென்பது-கூடாததனைக் கூடுவதாகக் கூறுவது. அது "ஆர வடமு மதிசீத சந்தனமு, மீர நிலவு மெரிவிரியும் - பாரிற், றுதிவகையான் மேம்பட்ட துப்புரவுந் தத்தம், விதிவகையான் வேறு படும்" எனவரும். (துப்புரவு - அநுபவம். விரிதல் - மிகுதல்.)

(கு - பு.) இதனை இயைபின்மைப் பிறபொருள்வைப் பென்று வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் அயுக்தகாரி யெனப்படும். (இ - ள். (குளிர்ந்த) முத்துமாலையும், மிகக்குளிர்ச்சியான சந்தனமும், குளிர்ந்த நிலாவும், (விரகவேதனையுடையார்க்கு) நெருப்புத்தன்மை மிகுகின்றன, உலகத்தில் புகழ்க்கூறுபாட்டாற் சிறந்த இனிய அனுபவப்பொருள்களும் அவரவர்விதிவகையினாலே தம்தந்நிலைமை மாறிவிடும்; எ - று. இச்செய்யுளில் இயல்பிற்குளிர்ந்த பொருள்கள் வெப்பந்தருதலாகிய கூடாதநன்மை கூடுவதாக நியாயங்காட்டி நாட்டப்பட்டவாறு காண்க.

(௬) கூடுமியற்கையென்பது - கூடுவதனைக் கூடுவதாகக் கூறுவது. அது "பொய்யுரையா நண்பர் புனைதேர் நெறிநோக்கிக், கைவளைசோர்ந் தாவி கரைந்துருகுவார் - மெய்வெதும்பப், பூத்தகையுஞ் செங்காந்தள் பொங்கொலிநீர் ஞாலத்துத், தீத்தகையார்க் கீதே செயல்" எனவரும். (இ - ள். (எக்காலத்தும்) பொய்யறியாத தலைவருடைய அலங்கரிக்கப்பட்ட தேர் வரும் வழி பார்த்துக் கைவளைவீழ உயிர்நைந்து விதனப்படுகின்ற மடவாருடைய மேனியழலப் பூத்துவிளங்கி வருத்துகின்றது, சிவந்தநிறத்தையுடைய காந்தள்; கடல்சூழ்ந்த ஞாலத்துத் தீக்குணத்தார்க்கு ஈதன்றோ செயல்; எ - று.) தீத்தகையார் என்றது, தீயகுணத்தையுடையார்க்கும், தீப்போலச் சிவந்தநிறத்தையுடைய பூத்தகாந்தளுக்கும் பெயர்.

(கு - பு.) இதனை இயைபுப்பிறபொருள்வைப் பென்று வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் யுக்தாத்மா எனப்படும். தீத்தகையார் மெல்லியலாரை வருத்துதலாகிய பொருந்துமியல்பே இதிற் கூறப்பட்டமை காண்க. 'நண்பா' என்று படித்தல் சிறப்பன்று. அசையும் - வருந்தும். தகை-குணம்.

(௭) இருமையியற்கையென்பது-கூடாததனையும் கூடுவதனையும் ஒருங்கு கூறுவது. அது "கோவலர்வாய் வேய்ங்குழலே யன்றிக் குலைகடலுங், கூ

RangaRakes tamilnavarasam.com

வித் தாழ்ந்தோரைக் கொல்லுமாற் - பாவாய், பெரியோரும் பேணாது செய்வரே போலுஞ், சிறியோர் பிறர்க்கியற்றுந் தீங்கு'' எனவரும். (இ - ள். இடைக்குல மாக்கள்வாயின் வேய்க்குழலிசையே யன்றி ஒலிக்குங்கடலுங் கதறிப் பிரிந்திருந் தாரைக்கொல்லும்; பாவாய்! பெருந்தகைமையுடையாரும் விசாரியாது செய்வர் போன்றதாகாண், எப்பொழுதுஞ் சிறியோர் அயலவர்க்குச் செய்யுந் தீமைக்காரியத்தை; எ - று பெரியோர் - கடல். சிறியோர் - குழல். தீங்கு - தீமை. ஆல் - அசை.)

(கு - பு.) இதனை விரவியற்பிறபொருள்வைப்பென்று வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் யுக்தாயுக்த மெனப்படும். இச்செய்யுளில் சிறியோர் பிறர்க்குத் தீங்குசெய்தலாகிய கூடுமியற்கையும், பெரியோர் பிறர்க்குத் தீங்குசெய்தலாகிய கூடாவியற்கையும் ஒருங்குவந்தமை காண்க. பாவாய் - சித்திரப்பாவை போன்றவளே!

(௭) விபரீதமென்பது - விபரீதப்படச்சொல்லுவது. அது "தலையிழந்தா னெவ்வுயிருந் தந்தான் பிதாவைக், கொலைபுரிந்தான் குற்றங் கடிந்தா - னுலகிற், றனிமுதன்மை பூண்டுயர்ந்தோர் வேண்டுவரேற் றப்பா, வினையும் விபரீதமாம்'' எனவரும். (இ - ள். முழுதுலகும்படைத்த பிரமன் தலையிழந்தான், பிதாவைக் கொன்ற சண்டேசன் குற்றந்தீர்ந்தான், ஒருவர்க்குமில்லாத பெருமையுடையராய் உயர்ந்தோர் நினைப்பின் தப்பாத வினைகளும் உலகத்து மாறுதலைப்படும்; எ - று.) இதனுள், நல்வினைப்பயன் தீதாகவும், தீவினைப்பயன் நன்றாகவும் வந்து விபரீதமானது காண்க.

(கு - பு) இது வடமொழியில் விபர்யய மெனப்படும். இதன் இலக்கணம் - தக்கதைத் தகாததாகவும், தகாததைத் தக்கதாகவும் மாறுபடச் சொல்வது. 'குற்றங்கடிந்தான்' என்றும் பாடமுண்டு. (௫௭)

வேற்றுப்பொருள்வைப்பலங்காரம் முற்றும்.

---

## ௭. வேற்றுமையணி.

௨௨. கூற்றினுங் குறிப்பினு மொப்புடை யிருபொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை யதுவே.

என்பது: நிறுத்தமுறையானே வேற்றுமையென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) கூற்றினாலும் குறிப்பினாலும் ஒப்புடைய இருபொருளை வைத்து அவற்றைத் தம்முள் வேற்றுமைபடச் சொல்லுவது வேற்றுமையென்னும் அலங்காரமாம்; (எ - று.)

'வேற்றுமை' என்றது 'அதுவே' என்ற மிகையால், அவை ஒருபொருளான் வேற்றுமைசெய்தலும், இருபொருளான் வேற்றுமைசெய்தலும் உடையன. அல்லதூஉம், அவ்விலேசானே, வேற்றுமைப்படக் கூறுதலேயன்றி ஒன்றினொன்று மிகுதிப்படக் கூறவும்படும்.

(கு - பு.) இது வடமொழியில் வ்யதிரேக மெனப்படும். இதன் இலக்கணம் - உபமான உபமேயங்களுள் ஒன்றற்கு வேறுபாடுகாட்டல். கூற்று - சொல்; அஃதாவது - வெளிப்படை. மிகை - அவசியமல்லாத சொல்; சூத்திரங்களில் அநாவசியமான சொல் இருந்தால், அதனால் ஏதேனும் விசேஷார்த்தங் கொள்ளுதல், மரபு.

(௧) ஒருபொருள்வேற்றுமைச் சமம் - "அனைத்துலகுஞ் சூழ்போ யரும்பொருள் கைக்கொண், டினைத்தளவைத் தென்றற் கரிதாம் - பனிக்கடல், மன்னவ

நின் சேனைபோன் மற்றது நீர்வடிவிற், றென்னு மிதுவொன்றே வேறு" என வரும். (இ-ள். முழுதுலகுஞ்சூழ்ந்து பிறர்க்கு அரிய பொருள்களையுமுடைத்தாய் இன்னதன்மையளவையுடைத்தென்றற்கு அரிதாகுங் குளிர்ந்தகடலும் எல்லா நாட்டையுங் கைக்கொண்டு அவ்வந்நாட்டரசர் அரியதிறைப்பொருள்களைக் கொண்டு எண்ணற்குஅரிய நின்னது சேனையும், மன்னவனே! ஒக்குமாயினும், கடலானதுநீராகிய வடிவையுடையதென்னும்ஒருகுணமேவேறுபட்டிருக்கும்.எ-று.)

(கு - பு.) இதனை ஒருமைவியதிரேகமென்று வழங்குதலுமுண்டு. இது வடமொழியில் ஏகவ்யதிரேகமெனப்படும். இச்செய்யுளில், முன்னிரண்டடியிலுள்ள சொற்களால் கடலுக்கும் சேனைக்கும் (வெளிப்படையாக) ஒப்புமை கூறி, பின்பு கடலென்னும் ஒருபொருளுக்கு 'நீர்வடிவிற்று' என்னும் பேதஞ் சொன்னமையால், ஒருபொருள்வேற்றுமையாயிற்று. இதில் அவ்விரண்டற்கும் உயர்வுதாழ்வு தோன்றாமையால், சம மெனப்பட்டது. முன்னிரண்டடி - சிலேடை. 'நீர்வடிவிற்று' என்பதற்கு - சற்குணம் வடிவுந் தன்மையது என்று பொருள்கொண்டால், அது சேனைக்கு அடைமொழியாகலாம்.

(உ) இருபொருள்வேற்றுமைச் சமம் - "சென்று செவிபளக்குஞ் செம்மைவாய்ச் சிந்தையுள்ளே, நின்றளவி லின்ப நிறைப்பவற்றுள், ஒன்று மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று, மலரிவருங் கூத்தன்றன் வாக்கு" எனவரும். (இ - ள். உலாவிச் செவியை யளக்குஞ் செம்மையையுடைத்தாய் மனங்களில் நின்றமாத்திரத்திலே உவகையை நிறைக்குந் தன்மையையுடையது மலர்செறியுங் கூந்தலையுடையாருடைய காதலைச் செய்யுங் கண்ணென்றும், உலகத்தார் செவியான் அளந்தறியுந் தன்மையை யுடைத்தாய்க் கேட்போர்மனங்களைவிடாதேநின்று அளவில்லாவின்பத்தைத்தோற்றுவிப்பது மலரியெனப்பட்ட ஊரி லுண்டாகிய கூத்தனென்னும் இயற்பெயரையும் கவிச்சக்கரவர்த்தியென்னுஞ் சிறப்புப்பெயரையு முடையானது கவி யென்றும் வந்தவாறு இரண்டனுள், ஒன்று - கண்; ஒன்று - கவி என்று கொள்க. மலரி என்பது-ஓரூர்.)

(கு - பு.) இதனை இருமைவியதிரேக மென்று வழங்குதலுமுண்டு. இது வடமொழியில் உபயவ்யதிரேக மெனப்படும். இச்செய்யுளில், முன்னிரண்டடியிலுள்ள சொற்களால் இரண்டுபொருளுக்கு (வெளிப்படையாக) ஒப்புமை கூறி, பின்பு அவற்றில் ஒன்று மாதர்நோக்கு, ஒன்று கூத்தன்வாக்கு என்று இரண்டுபொருளுக்கும் பேதஞ் சொன்னமையால், இருபொருள்வேற்றுமையாயிற்று. இவ்விரண்டற்கும் உயர்வுதாழ்வு தோன்றாமையால், சம மெனப்பட்டது. முன்னிரண்டடி - சிலேடை. 'மலரிவரும்' என்பது - மூன்றாமடியில மலர் இவரு மெனவும், நான்காமடியில் மலரி வரு மெனவும் பிரிந்துபொருள்பட்டது, யமகமென்னுஞ் சொல்லணியாம்.

(௩) உயர்ச்சி - "மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்முள், ஒலியும் பெருமையு மொக்கும் - மலிதேரான், கச்சி படுவ கடல்படா கச்சி, கடல்படுவ வெல்லாம் படும்" எனவரும். (மா கடல் - பெரிய கடல். மலி தேர் - மிக்க தேர். கடலிலுள்ளது கச்சியிலுண்டாகும், கச்சியிலுள்ளன கடலிலில்லை யென்க.)

(கு - பு.) இதனை உயர்புவியதிரேக மென்று வழங்குதலும் உண்டு. இச்செய்யுளில் கச்சிக்கும் கடலுக்கும் ஒலியாலும் பெருமையாலும் முன்னர் (வெளிப்படையாக) ஒப்புமைகாட்டி, பின்பு கடலிலுண்டாவனவெல்லாம் கச்சியிலுண்டாகக் கச்சியிலுண்டாவனவெல்லாம் கடலிலுண்டாகா வெனக் கடலினும் கச்சிக்கு உயர்வுகூறினமை காண்க. இது - இருபொருள்வேற்றுமையுயர்ச்சியாம்.

இவை - கூற்றுவேற்றுமை.

RangaRakes tamilnavarasam.com

(ரு) இருபொருள்வேற்றுமைச் சமம் - "கார்க்குலமும் பாய்திரையுங் காட்டுங் கடல்படையும், போர்க்களிறும் பாய்மாவும் பொங்குமா - லேற்ற, கலமுடைத்து முந்நீர் கதிராழித் திண்டேர், பலவுடைத்து வேந்தன் படை" எனவரும். (இ - ள். கரியமுகிலையும் பரந்த திரைகளையு முடைத்து, கடலானது; சோழனது சேனையும், போர்த்தொழின்மிக்க களிறும் பாயுங்குதிரையும் மிக்குத் தோன்றும்: அந்தக்கடலானது, பலபொருளுமேற்றும் மரக்கல முடைத்து; சோழனது சேனையும், பலகதிராழித்திண்டேரினையு முடைத்து; எ - று)

(கு - பு.) இச்செய்யுளில், கார்க்குலத்தையும் பாய்திரையையுமுடைய கடலுக்கும், போர்க்களிற்றையும் பாய்மாவையுமுடைய சேனைக்கும் (குறிப்பால்) ஒப்புமைகூறி, அவற்றில் கடல் மரக்கலமுடையது, சேனை தேருடையது என்று இரண்டுபொருளுக்கும் பேதஞ்சொன்னமையால், இருபொருள் வேற்றுமையாயிற்று. இவ்விரண்டற்கும் உயர்வுதாழ்வு தோன்றாமையால், சமமெனப் பட்டது. 'எற்றகலம்,' 'முன்னீர்' என்றும் பாடமுண்டு. கதிராழித்திண்டேர் - ஒளியையும் சக்கரத்தையு முடைய வலிய தேர்.

(சா) உயர்ச்சி - "பதுமங் களிக்கு மளியுடைத்துப் பாவை, வதன மதர்நோக் குடைத்துப் - புதையிருள்சூ, ழப்போ தியல்பழியு மப்போ ருகம்வதனம், மெப்போது நீங்கா தியல்பு" எனவரும். (பதுமம் - தாமரை. வதனம் - முகம். களித்தல் - மயங்குதல். புதையிருள்சூழப்போது - மாலை.)

(கு - பு.) இ - ள். தாமரைமலர், (தன்னிடத்தே) களிக்கின்ற வண்டுகளை யுடையது: மாதின்முகம், (தன்னிடத்தே) மதர்த்தபார்வையையுடையது; இவற்றில் தாமரைமலர், நிறைந்த இருள் சூழும் இராக்காலத்தில் தன்இயல்பு கெடும்: முகம், எப்பொழுதுந் தன்இயல்புகெடாது; எ - று இச்செய்யுளில் களிக்கும்வண்டுள்ள தாமரைக்கும், மதர்த்தகண்ணுள்ள முகத்துக்கும் குறிப்பால் ஒப்புமைகூறி அவற்றில் தாமரை இராப்பொழுதில் இயல்பு அழிய முகம் எப்போதும் இயல்புஅழியாது எனத் தாமரையினும் முகத்துக்கு உயர்வுகூறினமை காண்க. இது - இருபொருள்வேற்றுமையுயர்ச்சியாம்.

இவை - குறிப்புவேற்றுமை.

பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. (௨௮)

உ௯. அதுவே,

குணம்பொருள் சாதி தொழிலொடும் புணரும்.

என்பதாம்: அவ்வலங்காரத்தை விரித்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) அவ் வேற்றுமை யென்னும் அலங்காரம், குணத்தோடும் பொருளோடும் சாதியோடும் தொழிலோடும் கூடியும் வரும்; (எ - று.)

அவற்றுள்,

(க) குணவேற்றுமை - "சுற்றுவிற் காமனுஞ் சோழர் பெருமானுங், கொற்றப்போர்க் கிள்ளியுங் கேழொவ்வார் - பொற்றொடியாய், யாழி யுடையான் மகன்மாயன் செய்யனே, கோழி யுடையான் மகன்" எனவரும். (இ - ள். காமனும் சோழனும் தம்மில் நிறமொவ்வார்: பொன்னாற்செய்த வளையலை யுடையவளே! சக்கரத்தையுடையனாகிய மாயனுடைய மகனாகிய காமன் கறுத்திருப்பான்; கோழியென்னும் ஊரை யுடையவனாகிய சோழனுடைய மகன் சிவந்திருப்பான்; எ - று. கோழி - உறையூர். மாலமகன் - காமன். கேழ் - ஒளி.)

(கு - பு.) இங்கு உபமானமாகிய மன்மதனது நிறத்துக்கும், உபமேயமாகிய சோழராசகுமாரனது நிறத்துக்கும் வேற்றுமைகூறப்பட்டமை காண்க. இங்கே, குணம் - வண்ணப்பண்பு. சுற்றுவில் - கட்டுடையவில். சோழர்பெரு

RangaRakes tamilnavarasam.com

மான் - சோழநாட்டார்தலைவன். கொற்றப் போர் - வெற்றியைத்தரும் போர். மாயன் - மாயைபோலுங் கருநிறமுடையா னென்க.

௨) பொருள் வேற்றுமை - "ஓங்கு விடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி, யேங்கொலிநீர் ஞாலத் திருளகற்று - மாங்கவற்றுள், மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது, தன்னே ரிலாத தமிழ்" எனவரும். (இ - ள். உதயமலையில் தோன்றி மேன்மக்கள் தொழுதேத்த விளங்கி இரைந்தொலிக்குங்கடல்சூழ்ந்தவுலகத்துஇருளையெல்லாங் கடிவதாயும், பொதியமலையில் தோன்றி அறிவுடையோர் தொழுதேத்த விளங்கி இரைந்தொலிக்குங் கடல்சூழுலகத்தில மக்களுள்ளத்து உள்ள மயக்கந் தீர்ப்பதாயு மிருக்கின்ற இரண்டினுள்ளும், ஒன்று, ஒளியினையும் அழகினையும் தனிக்காலையுமுடைத்தாய தேரினையும் எல்லாரும்விரும்புங்கதிரினையுமுடைய ஆதித்தன்; ஏனையது, தனக்குஒப்பற்ற தமிழ்; எ - று. ஆழி - தேர்க்கால். நேர் - ஒப்பு.)

(கு - பு.) இங்குச் சூரியனும் தமிழுமாகிய இரண்டு ஒப்புடைப்பொருள்களுக்கு ஒருசார் வேற்றுமை கூறப்பட்டமையால், பொருள்வேற்றுமையாம்.

(௩) சாதிவேற்றுமை - "வெங்கதிர்க்குஞ் செந்தீ விரிசுடர்க்கு நீங்காது, பொங்கு மதியொளிக்கும் போகாது - தங்கும், வளமையான் வந்த மதிமருட்சி மாந்தர்க், கிளமையான் வந்த விருள்" எனவரும். (இ - ள். சூரியனுக்கும் விளக்குக்கும் நீங்காது மதியொளிக்கும் போகாதே நிற்கும்,செல்வமதனால் வந்த களிப்புடையமாந்தர்க்கு இளமையிலுண்டாகிய அறியாமையாகியஇருள், எ-று.)

(கு - பு.) இதில் புறவிருளினும் அகவிருளுக்கு முச்சுடராலும்அழியாமை யாகிய வேற்றுமை கூறப்பட்டமை காண்க. இங்கே இருளென்றது, பலர்க்குந் தோன்றும் அறியாமையை உணர்த்தலால், சாதி யெனப்பட்டது.

(௪) தொழில்வேற்றுமை - "புனனாடர் கோமானும் பூந்துழாய் மாலும், வினைவகையான் வேறு படுவர் - புனனாட, னேற்றெறிந்து மாற்றலரா லெய்தியபார் மாயவ, னேற்றிரந்து கொண்டமையி னால்" எனவரும். (இ - ள். நீர் நாடர்கோமானாகிய சோழனும் பொலிவினையுடைய துளசிமாலையை யணிந்த மாயனும் தொழிலான் வேறுபட்டிருப்பர்; சோழன் பகைஞர்எறிந்தவேலைத் தன்மீது ஏற்றும் தனது வேலைப் பகைஞர்மேல் எறிந்தும் அகக்கொண்ட உலகை மாயத்தையுடைய திருமால் நீரேற்றும் இரந்தும் கொண்டமையினால்; எ - று. புனனாடு - காவிரிநாடு.)

(கு - பு.) உபமேயமாகிய சோழனுக்கும், உபமானமாகிய திருமாலுக்கும் தொழிலில் வேற்றுமை காட்டப்பட்டது.

* அஃதேல், மேற்காட்டியவற்றுள் இந்நான்கும் ஒழித்துக் காட்டியன உளவோ வெனின், இல்லை. மற்று இச்சூத்திரம் வேண்டாகூறினார், வேண்டியது முடித்தற்கு. மற்றும் வேண்டியதியாதோவெனின், இவ்வலங்காரம் பிற அலங்காரங்களோடு கூடிவருவன கோடற்கு என்பது. என்னை? — "விலக்கியல் சிலேடையின் மேவவும் பெறுமே" என்றலின். அவை வருமாறு:—

(௫) விலக்கியல்வேற்றுமை - "தம்மாற் பயன்றூக்கா தியாவரையுந் தாங்கினுங், கைம்மாறுங் கால முடைத்தன்றே - யெம்மாவி, யன்னவனை யாழி யனபா யனையலராண், மன்னவனை மானுமோ வான்" எனவரும். (இ - ள். உலகத்தாராற் பயனைவிரும்பாது யாவரையுந் தாங்கினும் மேகம் கைம்மாறுங்

---

* இங்குச் சிலபிரதிகளில் அடியில்வருமாறு காணப்படுகிறது:—மேற்கூறியனவும் இந்நான்குமே யென்க. 'ஒடும்' என்ற உம்மையால், வேற்றுமை பிற அலங்காரங்களோடுங் கூடிவரும்.

RangaRakes tamilnavarasam.com

காலவரைவுடைத்து; ஆகலால், கைம்மாறுங்காலவரைவின்றிக் கொடுக்கின்ற எம்முடையஉயிரையொத்தவனை அநபாயனைத் திருமகளுக்குநாயகனை மேகம் ஒக்குமோ? எ - று. இரப்போரிடத்துப் பேறுகருதாது யாவர்க்குங் கொடுப்பினும் அநபாயன்கை மாறாது, மேகம் இப்படி கொடுத்துக் கைமாறும்; ஆகலான், அநபாயன்கையை மேகம் ஒவ்வாது என்க. 'தம்மாற் பயன்றூக்காது' என்பதற்கு - கொடையாற்பெறும்பேறு ஓராது எனினும் அமையும்.)

(கு - பு.) சோழனுக்கும் மேகத்துக்கும் உள்ள ஒப்புமையோடு வேற்றுமையையும் எடுத்துக்காட்டி அது அவனுக்கு ஒப்பாகாதெனவிலக்கியதனால், விலக்கியல்வேற்றுமையாயிற்று. தாங்குதல் - பாதுகாத்தல். கைம்மாறுங் காலவரைவு - சிலகாலங்களில் இல்லாதாதல். ஆழி - ஆஜ்ஞாசக்கரம்.

(உ) சிலேடைவேற்றுமை - "நெடர்த்து வின்முருக்கி யெவ்வுலகுங் கைக்கொண்டு, மாறடர்த்த வாழி வலவனைக் - காணெழுதற், கெஞ்சினா ரில்லெனினு மாய னிகனெடுமால, வஞ்சியா னீர்நாட்டார் மன்" எனவரும். (இ-ள். விடைதழுவி வில்லிறுத்து மூன்றுலகும் அளந்து கைக்கொண்டு பகைஞரைத் தொலைத்த சக்கரத்தையுடைய மாலை உலகத்துள்ளார்யாவரும் வணங்குவாரெனினும் மாயனென்று சொல்லப்படுவான்; பாண்டியனுடைய சுறவேற்றுக்கொடியை யழித்துச் சேரனுடைய விற்கொடியைச் சிதைத்து எல்லாநாட்டையுங் கைக்கொண்டு தன்னோடொப்பார்உலகத்திலில்லையெனச் சக்கரஞ்செலுத்திய சோழனைத் தொழுதற்கு ஒழிந்தா ரில்லையென மாயனோடு ஒப்பித்துச் சொல்லினும், சோழன், வஞ்சியான், (கருவூருடைமையின்); எ - று. மாறு - பகைஞரும், உவமையும். இறுத்தல் - வளைத்தல். எஞ்சினார் - ஒழிந்தார். வஞ்சி - கருவூர். நீர்நாடு - காவிரிநாடு. வஞ்சியான்-வஞ்சியென்னும் ஊருடையான். ஏற்றுக்கொடியென்றதற்கு - காடவர்கோன்கொடியென்று பொருள் கூறுவாருமுளர்.

(கு - பு.) திருமால் எழுஎருதுகளைத் தழுவியது, கிருஷ்ணாவதாரத்தில். வில்முறித்தது, கிருஷ்ணாவதாரத்திலும், இராமாவதாரத்திலும். சுறவேறு - சிறந்தசுறுமீன். சோழனுக்குச் சக்கரம் - ஆஜ்ஞாசக்கரம். இச்செய்யுளில் சிலேடையால் திருமாலுக்கும் சோழனுக்கும் ஒப்புமையும் வேற்றுமையுங் கூறப்பட்டமை காண்க. சிலேடையால், வஞ்சியானென்பது - வஞ்சனைசெய்யமாட்டானென்ற பொருளையுந் தந்து, மாயையுடைய திருமாலினும் வஞ்சியானாகிய சோழனுக்கு உயர்வை விளக்கும்.

ஏதுவேற்றுமையென மற்றொருவகையுங் காணப்படும்.

பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.* (௪௯)

## வேற்றுமையலங்காரம் முற்றும்.

---

* இதன்பின் அடியில்வருகிற வாக்கியங்கள் சிலபிரதிகளில் அதிகமாகக் காணப்படுகின்றன:—அஃதேல், இதனைப் பிறஅலங்காரங்களோடு கூடி வருமென்றது என்னை? பிறஅலங்காரங்கள் பிறஅலங்காரங்களோடு கூடிவருவனவும் உளவல்லவோ வெனின்,—அவையில்லை யென்பதன்று கூறியது: இதனையும் பிறஅலங்காரங்களோடு கூடிவருமென்றதனையே கூறியது என்பது. அல்லதூஉம், இன்னும் அவ்விலேசானே, பிறஅலங்காரங்கள் பிறஅலங்காரங்களோடுங் கூடிவருவன கூறாதனவுங் கொள்க; அவை வந்தவழிக் காண்க. இவையனைத்தினையும், 'கூடும்' என்று அனுப்பெற உரையாது 'புணரும்' என்றதனானுங் கொள்க.

RangaRakes tamilnavarasam.com

## ௩. விபாவனையணி.

௨௪. உலகறி காரண மொழித்தொன் றுரைப்புழி
வேறொரு காரண மியல்பு குறிப்பின்
வெளிப்பட வுரைப்பது விபாவனை யாகும்.

என்பது: நிறுத்தமுறையானே விபாவனையென்னும் அலங்கார முணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) ஒன்றன்வினையுரைக்குங்கால் அவ்வினைக்குப் பலரும் அறிய வருங் காரணத்தை யொழித்துப் பிறிதொருகாரணமாக இயல்பாகக் குறிப்பின் வெளிப்படஉரைப்பது, விபாவனையென்னும் அலங்காரமாம், (எ - று.)

(கு - பு.) பிறிதொருகாரணமாக இயல்பாக - வேறொருகாரணமாவது இயல்பாவது. குறிப்பின் வெளிப்பட - குறிப்பினால் வெளிப்படும்படி. ஒருகாரியத்தின் பிரசித்தகாரணத்தை யொழிக்க அதற்கு வேறொருகாரணம் ஊகிக்கப்படுவதாயாவது, அக்காரியம் காரணமின்றி இயற்கையில் அமைந்ததென ஊகிக்கப்படுவதாயாவது வருணித்தல் இதன்இலக்கணம். இது தமிழில் பிறிதாராய்ச்சியணியெனவும், வெளிப்பாட்டுநிலையணியெனவும்படும்.

அவற்றுள்,

(௧) அயற்காரணவிபாவனை—"தீயின்றி வேந்தமியோர் சிந்தை செ ழுந்தேறல், வாயின்றி மஞ்ஞை மகிழ்தூங்கும் - வாயிலார், சின்றிச் சிலருட நீர்ந் தா ரிகலின்றிக், கன்றிச் சிலைவளைக்குங் கார்" எனவரும். (தமியோர் - தனியிருந்தோர். மஞ்ஞை - மயில். தூங்கல் - ஆடல். வாயிலார் - ஊடல்தீர்ப்பார். கன்றல் - கறுத்தல். சிலை - வில், இந்திரதனு. கார் - கார்காலம்.)

(கு - பு.) இ - ள். இணைபிரிந்து தனியிருக்கும் விரகிகளுடைய மனம், நெருப்பில்லாமலே வேம்; மயில்கள், செழிப்பானமதுவை வாயினுட்கொள்ளாமலே களித்து ஆடும்; சிலர்[மகளிர்],சந்திசெய்வாரில்லாமலே ஊடல்தணிந்தார்கள்; மேகம்,போரில்லாமலே கோபித்து [கறுத்து] வில்லை வளைக்கும்; எ - று. இங்கு வேதல் முதலியவற்றுக்கு உலகறிகாரணமான தீ முதலியவற்றை யொழிக்கக் கார்ப்பருவமென்பதொரு காரணம் ஊகிக்கப்படுவதனால், இது அயற்காரணவிபாவனையாயிற்று. காரென்றுகூறினுரேனும் அது காலமுணர்த்தாமையின் ஊகிக்கப்படுவதேயாம். அயற்காரணம் - வேறொருகாரணம்.

(௨) இயல்புவிபாவனை—"கடையாமே கூர்த்த கருநெடுங்கண் டேடிப், படையாமே யேய்ந்ததனம் பாவாய் - கடைஞெமிரக், கோட்டாமே கோடும் புருவங் குலிகச்சே, ரூட்டாமே சேந்த வடி" எனவரும். (குலிகம் - சாதிலிங் கம. சேறு - குழம்பு. சேத்தல் - சிவத்தல்.)

(கு - பு.) இ - ள். அழகியபெண்ணே! உனது நீண்டகடைக்கண்கள், எவரும் கடையாமலே கூர்மைகொண்டன; தனங்கள்,தேடிச்செய்யாமலே தகுதியாய்அமைந்தன; புருவங்கள், கோடியமுங்கும்படி வளைக்கப்படாமலே வளைந்துள்ளன; பாதங்கள, இங்குலிகச்குழம்பில் தோய்க்காமலே சிவந்துள்ளன; எ - று. இங்குக் கடைதல் முதலிய காரணத்தை யொழிக்கக் கூர்தல் முதலிய காரியங்கள் இயல்பில்அமைந்தன வென ஊகிக்கப்படுதலால், இது இயல்புவிபாவனையாயிற்று.

சூத்திரத்தில் 'வேறொருகாரணம் இயல்பு குறிப்பின் வெளிப்பட வுரைப்பது' என்பதற்கு - பிறிதொருகாரணம் இயல்பினுலாவது குறிப்பினுலாவது வெளிப்படும்படி சொல்லுவ தென்று உரைத்து, "தீயின்றி" என்ற செய்யுளை இயல்புகாரணவிபாவனை யென்றும், "கடையாமே" என்ற செய்யுளைக் குறிப்புக்காரணவிபாவனை யென்றும் காட்டுவாரு முளர்; அது முதனூற்கொள்கைக்

(உ) அடைபொதுவாக்கிப் பொருள்வேறுபடமொழிதல்—"உண்ணிலவு நீர்மைத்தா யோவாப் பயன்சுரந்து, தண்ணளி தாங்கு மலர்முகத்துக் - கண்ணெகிழ்ந்து, நீங்க வரிய நிழலுடைத்தாய் நின்றெமக்கே, யோங்கியதோர் சோலை யுளது" எனவரும். (இ - ள். மனத்துள்ளேயுண்டாகிய குணமுடைத்தாய்ப் பலர்க்கு மேற உபகரித்துத் தண்ணளியுடைத்தாகிய விரிந்தமுகத்தையும் கண்ணோட்டத்தையுமுடைத்தாய்ப் பிரிதற்கரிய சாயலோடு கூடி நிற்பது என ஒருவள்ளல்மேலும், நடுவுண்டாகிய நீரையுடைத்தாய் மாறாது பலவளங்களைக் கொடுத்துத் தட்பமுடைய வண்டுகளைத் தாங்கிய மலர்களைத் தோற்றத்திலே யுடைத்தாய் மதுச்சோர்ந்து விட்டுப்போதற்கரிய நிழலுடைத்தாய் ஓங்கி நிற்பதென்று சோலைமேலுஞ் செலுத்துக; எ - று.) இது ஓர்வள்ளலைக்கொள்ள நின்றது. (நின்றெமக்கேயோங்கியசோலை - நிலைபேறுடைத்தாய் எமக்கு ஓங்கிய சோலை. வள்ளல்மேற்செல்லுங்கால்—உள் - மனம். நிலவல் - உண்டாதல். நீர்மை - குணம். பயம் - உபகாரம். சுரத்தல் - அளித்தல். கண்ணெகிழ்தல் - கண்ணோட்டம். நிழல் - மென்மை. சோலைமேற்செல்லுங்கால்—உள் - சோலை நடு. நீர்மை - புனல். பயம் - பழம். சுரத்தல் - கொடுத்தல். தண்ணளி-வண்டு. தாங்கல் - உடைத்தாதல். மலர் - பூ. முகம்—தோற்றம். கள் - மது. நெகிழ்தல் - சோர்தல்.)

(கு - பு.) இங்குக்கூறப்பட்ட 'உண்ணிலவுநீர்மைத்தாய்' என்பது முதலிய விசேஷணங்களெல்லாம் சோலைக்கும் வள்ளலுக்கும் பொதுவாய் நின்று, சோலையென்ற விசேஷியம் வள்ளலைப் புலப்படுத்துதல் காண்க. 'தண்ணளி சூழின்பந்தரமலர்ந்து' என்றும் பாடமுண்டு.

(ஈ) அடைவிரவிப்பொருள்வேறுபடமொழிதல் — "தண்ணளிசேர்ந் தின்சொன் மருவுந் தகைமைத்தா, யெண்ணிய வெப்பொருளு மெந்நாளு - மண்ணுலகில், வந்து நமக்களித்து வாழு முகிலொன்று, தந்ததான் முன்னைத் தவம்" எனவரும். (இ - ள். குளிர்ந்தகருணையையும் இன்சொல்லையுமுடைத்தாய் எல்லாரும் ஆசைப்பட்ட எல்லாப்பொருளையும் காலம்வரையாது மண்ணுலகிலே பிறந்து எம்போல்வார்க்கு அளித்துவாழும் என்று ஓர்வள்ளல்மேலும், உலகத்தார்க்குக் குளிர்ச்சியோடுகூடக் கொடுக்கின்ற கொடை சேர்ந்து நன்றாய புகழ் மருவி எண்ணப்பட்ட எல்லாப்பொருளையும் எக்காலமும் உலகிற்குச் சேர்ந்து கொடுத்து வாழும் என மேகத்தின்மேலுஞ் செலுத்துக; எ-று.) இதுவும் உட்கொண்ட பொருள், மேலதனோடு ஒக்கும். (வள்ளல்மேற் செல்லுங்கால்— தண்ணளி - குளிர்ந்தகுணம். மருவுதல் - பொருந்தல். எண்ணல் - ஆசைப்படல். மேகத்தின்மேற் செல்லுங்கால், தண்ணளி - குளிர்ந்தகொடை. இன்சொல்-புகழ். * 'எண்ணியவெப்பொருளு மெந்நாளு மண்ணுலகில் வந்து கொடுக்கும்' என்றது, உலகில்தோற்றும் பொருள்கட்கு முதற்காரணம் நீராதலான் அக்காரணத்தை மேகங் கொடுப்ப அதன்காரியமாகிய பொருளெல்லாம் புலப்படும் என்றவாறு.)

(கு - பு.) இச்செய்யுளும் வள்ளலைக் கொள்ளநின்றதென்க. இதில்வந்த 'தண்ணளிசேர்ந் தின்சொன்மருவுந் தகைமைத்தாய்' என்ற அடைமொழி முகிலுக்கும் வள்ளலுக்கும் பொதுவாயும், 'எண்ணியவெப்பொருளுமெந்நாளு மண்ணுலகில்வந்து நமக்களித்துவாழும்' என்ற அடைமொழி முகிலுக்குப் பொருந்தாது வள்ளலுக்கே பொருந்தியும் விரவிநிற்க, முகிலாகிய விசேஷியம் வள்ள

* இந்தவாக்கியம் சிலபிரதிகளிலில்லை; இது, இலக்கணத்துக்கு மாறுதலால், விலக்கத்தக்கது.

RangaRakes tamilnavarasam.com

லைப் புலப்படுத்தியமை காண்க. இத்தன்மைத்தான மேகமொன்றை முற்பிறப்பிற்செய்த தவம் தந்த தென்க. ஆல் - அசை.

(ரு) அடையைவிபரீதப்படுத்துப் பொருள் வேறுபடமொழிதல்—"கடைகொ ளுலகியற்கை காலத்தின் நீங்கா, லடைய வறிதாயிற் றன்றே-யடைவோர்க், கருமை யுடைத்தன்றி யந்தேன் சுவைத்தாய்க், கருமை விரவாக் கடல்" என வரும். (இ - ள். மிகவும்தாழ்வுடைத்துப்போலும் உலகநடை: காலவியற்கையாலே மிடிபாய்ச் சென்று இரப்பவும் வறுமையுற்றது, சேர்வோர்க்கு அருமையின்றித் தேன்போலுங் கிளவியுமுடைத்தாய் வெருளியல்லாத கடல்; எ-று. கடல்-வள்ளல். சேர்வோர்க்கு அருமையும் இனிமையில்லாமையும் கருமையும் கடற்கு உண்டென்க. இது, வறுமையுற்றோர் வள்ளலைக் கொள்ள நின்றது.

(கு - பு.) கொல் - இடைச்சொல்; ஒப்பில்போலிப்பொருளில் வந்தது. 'கடைபோல்' என்றும் பாடமுண்டு. வறிது - பொருளற்றது. சுவை - (சொல்லின்) இனிமை. கருமை - கருநிறத்தின்மேலும், கோபத்தின்மேலும் நின்றது. மிடி - வறுமை. கிளவி - சொல். பின்னிரண்டடிகளில் வந்த அடைமொழிகளெல்லாம் கடலுக்குப் பொருந்தாதனவாய் வள்ளலுக்கே பொருந்தி நிற்க, கடலாகிய விசேஷியம் வள்ளலைப் புலப்படுத்துதல் காண்க.

'வகையின்' என்றதனால், பிறவகையான் வருவனவும், பிறஅலங்காரங்களோடுங் கூடிவருவனவுங் கொள்க. அல்லதூஉம், இவையெல்லாம் கருதிய பொருள்நோக்கி உணர வைக்கப்படு மென்க.

(கு-பு.) பொதுப்பொருளாற் சிறப்புப்பொருள்தோன்ற வைத்தலும், சிறப்புப்பொருளாற் பொதுப்பொருள் தோன்ற வைத்தலும், காரணத்தாற் காரியந் தோன்ற வைத்தலும், காரியத்தாற் காரணந்தோன்ற வைத்தலும் முதலாகப் பலவாற்றால் வடநூல்களில் இவ்வணி விகற்பித்துக்கூறப்படு மென அறிக. ()

ஒட்டலங்காரம் முற்றும்.

---

## கஎ. அதிசயவணி.

உஎ. மனப்படு மொருபொருள் வனப்புவந் துரைப்புழி
யுலகுவரம் பிறவா நிலைமைத் தாகி
யான்றோர் வியப்பத் தோன்றுவ ததிசயம்.

என்பது: நிறுத்தமுறையானே அதிசயமென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒ கவி, தான்கருதிய பொருளினது வனப்பை உவந்துசொல்லுங்கால், உலகநடையிறவாததன்மைத்தாகி உயர்ந்தோர் வியப்புறச் சொல்லுவது, அதிசயமென்னும் அலங்காரமாம்; (எ - று.)

(கு - பு.) இதனை அதிசயோக்தி யென்பர் ஒருசாரார். இதனைத் தமிழில் பெருக்குஎனவும், மிகைமொழியெனவும், உயர்வுநவிற்சியெனவும் வழங்குதலும் உண்டு. இதன் இலக்கணம் - ஒருபொருளை வரம்புகடந்து மிகுத்துச் சொல்வது. வனப்பு - அழகு. உவந்து - மகிழ்ந்து. 'வனப்புவந்துரைப்புழி' என்றவிடத்து 'வனப்புவிதந்துரைப்புழி' என்றும், 'வனப்புமிகுத்துரைப்புழி' என்றும் பாடங்கள் காணப்படுகின்றன. அவற்றிற்கேற்ப உரையிலும் 'மிகுத்துச்சொல்லுங்கால்' என்று பிரதிபேத முண்டு. இறவாத - கடவாத. 'உலகுவரம்பிறக்கு நிலைமைத்தாகி' என்று சூத்திரமிருத்தலே முதனூலுக்கு ஏற்றதாம்;

RangaRakes tamilnavarasam.com

அதில் "சோரவியாமதிவர்த்ததி" என்று உள்ளது; அதற்கு ஏற்ப வீரசோழிய வுரையிலும் 'இனிப் பொருட்காவது - உலகத்தார்க்கு ஏற்றிராவண்ணம் மிகச் சொல்லுதல் எனக் கொள்க' என்றல் காண்க; அடுத்தசூத்திரத்து உரையிற் காணப்படும் உதாரணங்களும் உலகவரம்புகடந்திருத்தலை நோக்குக. அகவே, 'உலகுவரம்பிறவா நிலைமைத்தாகி' என்பதற்கு-'கவிகள் மிகுத்துக்கூறும் மரபு வகைக்கு முரண்படாமல்' என்று கருத்துகொள்ளலாம். வியப்புற - அதிசயிக்க, கொண்டாட. (௫௩)

௨ ௭. அதுதான்,

பொருள்குணந் தொழிலையந் துணிவே திரிபெனத்
தெருளுறத் தோன்றும் நிலைமைத் ததுவே.

என்பது: அதிசயவலங்காரம் விரிந்தவாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அவ்வதிசயம் பொருளதிசயம், குணவதிசயம், தொழிலதிசயம், ஐயவதிசயம், துணிவதிசயம், திரிபதிசயம் என ஆறுவகையான் தெளிவுறத் தோன்றும் நிலைமை யுடைத்து; (எ - று)

அவற்றுள்,

(௧) பொருளதிசயம்—"பண்டு புரமெரித்த தீயோ பரந்தின்று மண்டு முகடு நெருப்புற—தொண்டர் விளர்க்கை வாலி சுழல மருட்பூங்கோடு பெருக, விலலி நுதன்மேல் விழி" எனவரும். (இ - ள் ...) நெற்றிக்கண் ... மலைமகள் அஞ்சக் குழைந்த (சிவபெருமானுடைய) ... வில்லினையும் மேருவாகிய ... கண்ணின் ... திரிபுரத்தை நகைத்தெரித்த தீயானது ... அண்டத்துச்சியில் நெருப்பு அரும்; எ-று.) 'நெருப்பு' என்றது - தீ ...

(கு - பு.) மலைமகள் - பார்வதி. இதில் நெற்றிக்கண் ... மிகுத்துக் கூறப்பட்டமை காண்க.

(௨) குணவதிசயம்—"மாலை நிலவொளிப்ப மாதர் இழைபுனைந்த, நீல மணிக ளொளிமிழ - செல்விருப்பின், ... மருங்கு" எனவரும். (இ - ள். மாலைக்காலத்தில் தோன்றிய நிலவு ஒளிப்ப ஆசையினாற் ... அணிகளிலுள்ள நீலமணிகள் ஒளியையுமிழ, இவள் காதலனிடம் செல்லும்படி குறித்த தலைவனிடத்திற் போதற்குத் தெருக்கள் செறிந்த இருளாகின்றன; எ - று. மாலை - இரவு. மாதர் - காதல. புனைதல் - இழைத்தல், அணிதல் இழை - ஆபரணம். உமிழ - பரப்ப. செல்லுமிவள்-தலைமகள். வல்லிருள்-செறிந்தஇருள். மறுகு - தெருவு.)

(கு - பு) இதில், ஒருபெண் அணிந்த அணிகலத்தி லுள்ள நீலரத்தினங் களின் ஒளியாகிய பண்பு மிகுத்துக்கூறப்பட்டமை காண்க.

(௩) தொழிலதிசயம்—"ஆளும் பரியுங் கரியுஞ் சொரிகுருதி, தோளுந் தலையுஞ் சுழித்தெறிந்து-நீள்குடையும், வள்வார் முரசு மறிதிரைமேற் கொண் டொழுக, வெள்வா ளுறைகழித்தான் வேந்து" எனவரும். (இ - ள். மள்ளர் களும குதிரைகளும் யானைகளும் சொரிகின்ற குருதி வெள்ளமானது தோள்க ளையும் தலைகளையும் சுழித்து வீசி நீண்ட குடைகளையும் வாரிறுக்கிய பேரிகை களையும் மடங்குகின்ற அலைகளையுடைய கடலின்மேல் அடித்துக்கொண்டு ஓடும்படி அரசன் வெண்மையாகிய வாளை உறையினின்று நீக்கினான்; எ-று.)

(கு - பு.) இதில், அரசனது போர்த்தொழில் மிகுத்துக்கூறப்பட்டமை காண்க. மள்ளர் - காலாள்வீரர். குருதி - இரத்தம்.

RangaRakes tamilnavarasam.com

(௪) ஐயவதிசயம்—"உள்ளம் புகுந்தே யுலாவு மொருகாலே, னுள்ள முழுது முடன்பருகு, மொள்ளிழையின், கள்ளம் பெருகும் விழிபெரியவோ கவல்வே, னுள்ளம் பெரிதோ வுரை" எனவரும். (இ-ள். ஒள்ளிய வாபரணத் தையுடையாய்! நினது கள்ளம்மிக்க விழிகளானவை எனது உள்ளத்துப்புகுந்து உலாவுதலால் சிறிதாய்த் தோன்றின; அவை புகுந்து என்னுள்ளமுழுதும் தமதுள்ளேயடக்கினமையால் அவ்வுள்ளம் சிறிதாய்த் தோன்றிற்று: இவற்றுள் விழி பெரியவோ? உள்ளம் பெரிதோ? உரைப்பாயாக; எ-று)

(கு-பு) இதில், கண்களின்பெருமை ஐயவாய்பாட்டால் மிகுத்துச் சொல்லப்பட்டதனால், ஐயவதிசயமாயிற்று.

(௫) துணிவதிசயம்—'பொங்கிச் செறிந்து புடைதிரண்டு மீதிரண்டு, செங்கலசக் கொங்கை திகழுமா - லெங்கள்கோன், றில்லைவா யன்னார் திகழல்குற் றேரின்மேல், இல்லையோ வுண்டோ விடை" எனவரும். (இ-ள். வளர்ந்து நெருங்கி அடிபரந்து திரண்டு மேலே இரண்டுசிவந்தகலசம்போன்ற கொங்கை விளங்காநின்றன; ஆதலால், எமதுதலைவனாகிய பரமசிவனுடைய தில்லைப் பதியை யொத்த இவருடைய அல்குலாகிய தேரின்மேல் இடை இல்லையோ? உண்டு, எ-று. ஓகாரம் இரண்டனுள், முன்னது - எதிர்மறை; பின்னது - ஐயநிலை. பொங்குதல் - வளர்தல். செறிதல்-நெருங்கல். திகழ்வு-விளங்கல்.)

(கு-பு.) மிக்கநுண்மைதோன்ற இல்லையென்று மிகுத்துக்கூறப்படும் இடை, இங்கு மேலும் கீழும் மற்றையவயவங்க ளிருத்தலால் இடையில் இல்லையாயினும் உண்டு என்று துணிபுமாற்றாற் சிறப்பித்துக் கூறப்பட்டமை காண்க. தில்லை - சிதம்பரம். 'உண்டேயிடை' என்றும் பாடமுண்டு.

(௬) திரிபதிசயம்—"திங்கள் சொரிநிலவு சேர்வெள்ளி வள்ளத்துப் பைங்கிளிகள் பாலென்று வாய்மடுக்கு - மங்கையிலே, காந்தர் முயக்கொழிந்தார் கைவிரிக்கே நீட்டுவரா, லேந்திழையார் பூந்துகிலா மென்று" எனவரும். (இ-ள். நிலாமுற்றத்து இருந்த வெள்ளிக்கிண்ணத்து உள்ள நிலவைப் பசுங்கிளிகள் பாலென்று கருதி வாய்மடுக்கும்; அதுவேயன்றி, அங்கு ஓர்புறத்துத் தங் கொழுநரைப் புணர்ந்து நீங்கினாராகிய ஏந்திழையார் தாம் ஒழித்த துகிலெனக் கருதி அந்நிலவின்மேலே கையைநீட்டுவார்; எ-று. வள்ளம் - வட்டில். காந்தர் - தலைவர்.)

(கு-பு.) நிலவைப் பாலென்றும், வெண்டுகிலென்றும் மயங்குதலாகிய திரிபுணர்ச்சிவகையால் நிலவு சிறப்பிக்கப்பட்டமையால், திரிபதிசயமாயிற்று. வாய்மடுக்கும் - உண்ணத்தொடங்கும். முயக்கு - தழுவுதல். வறிதே - வீணாக. துகில் - ஆடை.

பிறவாற்றான் வருவனவுங் கண்டுகொள்க.

(கு-பு) சம்பந்தமில்லாததற்குச் சம்பந்தங்கற்பித்துக்கூறுந் தொடர்புயர்வுநவிற்சியும், காரணமும் காரியமும் ஒருகாலத்துநிகழ்வனவாகக் கூறும் முறையிலுயர்வுநவிற்சியும், காரணவுணர்ச்சிமாத்திரத்திற் காரியமுண்டாதலைக் கூறும் விரைவுயர்வுநவிற்சியும், காரியத்தை முன்னும் காரணத்தைப் பின்னும் நிகழ்வனவாகக்கூறும் மிகையுயர்வுநவிற்சியும், உபமானச்சொற்களாலே உபமேயத்தைக் கூறும் உருவகவுயர்வுநவிற்சியும் முதலாக இவ்வணி மற்றும் பலவாறு விரித்துங் கூறப்படும். இவ்வணி ஒழிப்பணியோடு கூடி ஒழிப்புயர்வுநவிற்சியென வரும். இது மற்றும்பலஅணிகளுக்கும் ஆதாரமாக நிற்கும். பொருளுக்கு அதிசயங்காட்டாதபோது அலங்காரம் சிறவாதென்னுங் கருத்தால் இதனைக் கவிகள் பலவிடத்துங் கைக்கொள்வர். இது முதனூலில் 'அலங்

RangaRakes tamilnavarasam.com

காரோத்தமம்' எனச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. மயக்கவணியெனப்படும் ப்ராந்திமதலங்காரத்தை இங்குக்காட்டிய திரிபதிசயத்தில் அடக்குவர். (௩௪)

அதிசயவலங்காரம் முற்றும்.

## கஉ. தற்குறிப்பேற்றவணி.

உகூ. பெயர்பொரு ளல்பொரு ளெனவிரு பொருளினு
மியல்பின் விளைதிற னன்றி யயலொன்று
தான்குறித் தேற்றுத றற்குறிப் பேற்றம்.

என்பது: நிறுத்தமுறையானே தற்குறிப்பேற்றமென்னும் அலங்கார முணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) பெயரும்பொருளும் பெயராதபொருளு மென்னும் இரண்டு பொருளின்கண்ணும் இயல்பாக நிகழுந்தன்மை யொழிய, கவி தான்கருதிய வேறொன்றினை அவற்றின்கண் ஏற்றிச்சொல்வது, தற்குறிப்பேற்றமென்னும் அலங்காரமாம்; (எ - று.)

(கு - பு.) பெயரும்பொருள் - ஜங்கமம், இயங்குதிணை. அல்பொருள் - ஸ்தாவரம், நிலைத்திணை. 'அல்பொருள' என்றவிடத்து 'நிலைப்பொருள்' என்றும், 'தான்குறித்தேற்றுதல்' என்றவிடத்து 'தன்குறிப்பேற்றுதல்' என்றும் பாடமுண்டு. இதனை நோக்கணி யென்று வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் உத்ப்ரேக்ஷ யெனப்படும்.

அவற்றுள்,

(க) பெயர்பொருள்தற்குறிப்பேற்றம்—"மண்படுதோட் கிள்ளி மத யானை மாற்றரசர், வெண்குடையைத் தேய்த்த வெகுளியால் - விண்படர்ந்து, பாயுங்கொ லென்று பனிமதியம் போல்வதூஉந்,தேயுந் தெளிவிசும்பி னின்று" எனவரும். (இ-ள். நிலவுலகத்தைத் தாங்கிய தோள்வலிமையையுடைய சோழ னுடைய மதயானையானது மாறுபட்ட அரசர்களுடைய வெண்கொற்றக் குடையைச் சிதைத்த கோபத்தாலே ஆகாயத்திலே நம்மேலும் வந்து பாயுமோ வென்று குளிர்ந்த நிறைமதியமெனப்படுவதூஉம் தேயாநிற்கும், தெளிந்த விசும்பின்கண் நின்று; எ - று.)

(கு - பு.) இதனை இயங்குபொருள்நோக்கு என வழங்குதலும் உண்டு. வானத்திற் சந்திரன் இயல்பிலே தேய்தற்குக் காரணமாகாததொரு கருத்தைக் கவி காரணமாகக் கற்பித்துக்கூறினமை காண்க. சந்திரன் தேவனாதலால், பெயர்பொருளாம்.

(உ) பெயராதபொருள்தற்குறிப்பேற்றம்—"வேனில் வெயிற்குலர்ந்த மெய்வறுமை கண்டிரங்கி, வானின் வளஞ்சுரந்த வண்புயற்குத் - தானுடைய, தாதுமே தக்க மதுவுந் தடஞ்சினையாற், போதுமீ தேந்தும் பொழில்" என வரும். (இ - ள். முதுவேனிற்காலத்து ஆதித்தன்வெயில்வெம்மைக்கு ஆற்றாது உலர்ந்த தமது மெய்வறுமை கண்டு இரங்கி வானின்கண் நின்று மழை வளத்தைப் பொழிந்து தமதுவாட்டம்நீக்கின முகிலுக்குப் பொழில்களானவை தங்கண்உண்டாகிய மேதக்க தாதோடு கூடிய மலர்களையும் தங்கண்மதுவினையும் தமதுபெரியகிளைகளாகிய கைகளாலே மேனோக்கித் தாங்காநிற்கும்; எ-று. மீதேந்தும் - மேனோக்கிநீட்டிக்கொடாநின்றன.)

(கு - பு.) இதனை இயங்காப்பொருள்நோக்கெ்கன வழங்குதலும் உண்டு. மரம் ஸ்தாவரமாதலால், பெயராதபொருளாம். சோலைமரங்கள் மலரையுந்

RangaRakes          tamilnavarasam.com

தேனையும் வந்ததற்குக் காரணமாகாததொரு கருத்தைக் காரணமாகக் கவி கற்பித்தமை காண்க.

இவ்வணி பொருட்டற்குறிப்பு, ஏதுத்தற்குறிப்பு, பயன்தற்குறிப்பு முதலாக மற்றும்பலவாற்றால் விகற்பித்துக்கூறவும்படும். (௫௫)

௬௦. அன்ன போலெனு மவைமுத லாகிய
சொன்னிலை விளங்குந் தோற்றமு முடைத்தே.

என்பது: அவ்வலங்காரத்திற்கு உரியதோர் இலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

(இ - ப.) 'அன்ன', 'போல' என்பவை முதலாகிய உவமைச்சொல் சில புணர்ந்துவிளங்குந் தன்மையுமுடைத்தாம், அத் தற்குறிப்பேற்ற மென்னும் அலங்காரம்; (எ - று.)

அது "காமருதேர் வெய்யவ னெங்குங் கரம்பரப்பித், தேமருவு சோலை மலர்திறக்குந் - தாமரையின், ஒருக்க விதழ்விரித்துப் பார்க்குந் தொலைந்திருள் போய்ப், புக்க புரைதிளைப்பான் போல்''எனவரும்.* (காமருதேர் - அழகுமருவிய தேர். வெய்யவன் -சூரியன். விரித்தல் - திறத்தல். புரை - இடம். திளைத்தல் - ஆராய்தல்.)

(கு - ப.) இ - ள். விரும்பப்படும் அழகியதேரையுடைய சூரியன், தனக்குத் தோற்று இருள் சென்றுஒளித்த இடத்தை ஆராய்பவன்போல, தான் எவ்விடத்தும் தன்கிரணங்களாகியகைகளை நீட்டித் தேன்பொருந்திய சோலையிலுள்ள மலர்களைத் திறந்து பார்ப்பன்; தாமரையின் மூடியஇதழ்களைத் திறந்து பார்ப்பன்; எ-று. இதில், 'போல்' என்ற உவமவுருபு தற்குறிப்பேற்றவுருபாய் வந்தது. நினைக்கின்றேன், நிச்சயம், உண்மை, துணிவு முதலியனவும் இதற்கு உருபாய்நிற்கும். (௫௬)

## தற்குறிப்பேற்றவலங்காரம் முற்றும்.

---

## ௧௬. ஏ து வ ணி.

௬௧. யாதன் றிறத்தினு மிதனினி து விளைந்ததென்
றேதுவிதந் துரைப்ப தேது வதுதான்
காரக ஞாபக மெனவிரு திறப்படும்.

என்பது: நிறுத்தமுறையானே ஏதுவென்னும் அலங்கார முணர்த்துதல் நுதலிற்று.

(இ - ப.) யாதானும்ஒருபொருட்டிறத்து இதனான் இதுநிகழ்ந்ததென்று காரணம் விதந்து சொல்வது, ஏதுவென்னும் அலங்காரமாம்; அது காரகவேதுவென்றும், ஞாபகவேதுவென்றும் இரண்டு கூறுபடும்; (எ - று.)

(கு - ப.) விதந்து - மிகுத்து; அல்லது, குறித்து. ஏது - ஹேது. காரகம்- செய்வது. ஞாபகம் - அறிவிப்பது. இவ்வணிக்கு இலக்கணம் வேறாகக்கூறுவர் ஒருசாரார். (௫௭)

---

* '"சான்றோர் வருந்திய வருத்தமுந் தமது, வான்றோய் வன்ன குடிமையு நோக்கி" எனவும்வரும். பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க' என்ற வாக்கியங்கள் சிலபிரதிகளில் இதன்பின் காணப்படுகின்றன.

RangaRakes tamilnavarasam.com

௩௨. *முதல்வனுங் கருமமுங் கருவியுந் தோன்றும்.

என்பது: காரகவேதுவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) கருத்தாவும கருமமும் கருவியும் என்று சொல்லப்பட்ட இவை மூன்றுங் காரணமாகத் தோன்றுவது, காரகவேதுவாம்; (எ - று.)

அவற்றுள், *

(௧) கருத்தாக்காரகவேது—“எல்லைநீர் வையகத் தெண்ணிறந்த வெவ்வுயிர்க்குஞ், சொல்லரிய பேரின்பந் தோற்றியதான் - முல்லைசேர், தாதலைத்து வண்கொன்றைத் தாரலைத்து வண்டார்ப்பப், பூதலத்து வந்த புயல்” என வரும். இஃது-ஆக்கம். (எல்லைநீர் - கடல். புயல் - காற்று. தோற்றியது-உண்டாக்கிற்று.)

(கு - பு.) இ - ள். முல்லைமலரிற்சேர்ந்த தாதுகளை அலைத்து வளவிய கொன்றைப்பூக்களையும் அலைத்து வண்டுகளொலிக்கும்படி பூமியின்கண் வந்த காற்றானது, கடல்சூழ்ந்த அப்பூமியிலுள்ள அளவற்றவுயிர்கட்கெல்லாம் சொல்லமுடியாத மிக்கஇன்பத்தைத் தந்தது; எ - று. இதில், புயலாகிய கர்த்தா எல்லாவுயிர்கட்கும் இன்பந்தந்ததற்குக் காரணம் ‘முல்லைசேர்தாதலைத்து’ என்றுதொடங்கிய அதன் அடைமொழியாற் கூறப்பட்டமை காண்க. இது ஒருதொழில்செய்ததாக வந்ததனால், காரகவேது; பிறவற்றிலும் இங்ஙனங் காண்க. ஆக்கம் - நன்மைசெய்தல். புயல் - மேகமுமாம்.

“கனிகொள் பொழிலருவி கைகலந்து சந்தின், பனிவிரவிப் பாற்கதிர்க டோய்ந்து - தனியிருந்தோர், சிந்தை யுடனே யுயிருணக்குந் தென்மலயந், தந்த தமிழ்மாருதம்” இதுவுமஃது. இஃது-அழிவு. (இ - ள். மலைமீதுண்டாய பொழில்களுகுத்தகனியோடு கலந்து இழியாநின்ற அருவியினுட் புக்குக்கலந்தும் அதனினுண்டாய சந்தனத்தின் தட்பத்துடன் மருவியும் பால்போன்ற சந்திரகிரணங்களின் மூழ்கியும் தனது தன்மையொழிந்து மொழுகக் காப்பிரிந்திருந்தோர்மனத்தோடு உயிரையும் உணக்காநின்றது, பொதியமலையிற் பிறந்து தமிழோடுபழகிய தென்றற்காற்று, எ - று.)

இவையிரண்டும் - கருத்தாக்காரகம்.

(கு - பு.) உணக்குதல் - வாட்டுதல். இதில் தென்றலாகிய கர்த்தா விரகிகளை மிகவருத்துதற்குக் காரணம் கூறப்பட்டமை காண்க. இங்கே காரணம், காமோத்தீபகப்பொருள்களோடு கலத்தல். தீங்குசெய்தல் கூறியதனால், அழிவெனப்பட்டது.

(௨) கருமகாரகவேது—“மலையி னலைகடலின் வாளரவின் வெய்ய, தலையிற் பயின்ற தவத்தாற் - றலைமைசே, ரம்மாதர் புல்லு மபயன் புயம்புணர, வெம்மா தவம்புரிந்தோம் யாம்” எனவரும். (இ - ள். மலையிற் றவம்புரிந்தோள் - சயமடந்தை. அலைகடலிற் றவம்புரிந்தோள் - சீதேவி. வாளரவின் வெய்ய தலையில் நின்று தவம்புரிந்தோள் - பூமிதேவி. இப்படிப் பெரியதவம் புரிதலாலே அவர்களால் தழுவப்பட்ட அபயனுடைய புயத்தை யாந்தழுவுதற்கு எத்தவம் புரிந்தேம்? எ - று.)

(கு - பு.) இங்குச் சோழன்றோளாகிய செயப்படுபொருளுக்குக் கொடுத்த அடைமொழி, அதுபுணர்தற்கரிதென்றற்கு ஏதுவாதல் காண்க. போர்வெற்

* “முதல்வனுங் கருமமுங் கருவியு மேற்பது, நீக்கமு மிடமு மெனுமிவை காரகம்” என்ற மூலமும், ‘கருத்தாவும் கருமமும் கருவியும ஏற்றுக்கொள்வதும் நீக்குநிலைமையும் இடமும் என்றுசொல்லப்பட்ட இவையாறுங் காரணமாகத் தோன்றுவது, காரகவேது’ என்ற பொழிப்புரையும், உரையிறுதில் ‘பிறவும் வந்துழிக் காண்க’ என்ற வாக்கியமும் சிலபிரதிகளிலுள்ளன.

RangaRakes tamilnavarasam.com

றிக்கு அதிதேவதையான துர்க்கை விந்தியமலையில் வசிக்கின்றனள். வாளரவு-கொடியபாம்பு. அபயன் - சோழன்; அச்சமில்லாதவன்.

(௯) கருவிக்காரகவேது —"கரடத்தான் மாரியுங் கண்ணான் வெயிலு, நிரைவயிரக் கோட்டா னிலவுஞ் - சொரியுமா, னீளார்த் தொடையதுல னேரார் கலிங்கத்து, வாளாற் கவர்ந்த வளம்" எனவரும். (இ - ள். மதத்தால் மழையையுங் கண்ணின்கடுமையால் வெயிலையுங் கோட்டின்வெண்மையால் நிலவையுங் கொடாநின்றது, நெடியஆர்த்தாரையுடைய ஒப்பில்லாதானாகிய சோழன் பகைகொண்டகலிங்கருடைய தேயத்துச் சென்று வாளாலேகவர்ந்து கொண்ட வளம்; எ-று. ஈண்டு வளம் என்றது, கலிங்கனுடைய யானைத் திரள்க ளெனக் கொள்க. கரடம் - மதம்.)

(கு - பு.) நிரைவயிரக்கோடு - வரிசையாக வைரங்களைப் பதித்த பூணை யணிந்த தந்தம். ஆல் - அசை. ஆர்த்தொடை - ஆத்திப்பூமாலை. வளம் - செல்வம். இங்கு மாரியும் வெயிலும் நிலவும் சொரிதற்குக் கரடமும் கண்ணும் கோடும் ஆகிய கருவிகள் ஏதுவாக வந்தமை காண்க. (௫அ)

௬௩. அவையல பிறவி னறிவது ஞாபகம்.

என்பது: ஞாபகவேதுவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) அச்சொல்லப்பட்ட காரண மன்றிப் பிறகாரணத்தினால் உய்த்துணரத் தோன்றுவது ஞாபகவேதுவாம்; (எ - று.)

(கு - பு.) பிறவின் - பிறவற்றின்; அற்றுச்சாரியை தொக்கது. 'பிறவென் றறிவது' என்றும் பாடமுண்டு. ஞாபகம் - வடசொல்.

அது "காதலன்மே லூடல் கரையிறத்தல் காட்டுமான், மாதர் நுதல்வியர்ப்ப வாய்துடிப்ப - மீது, மருங்குவளை வின்முரிய வாளிடுக நீண்ட, கருங்குவளை சேந்த கருத்து" எனவரும். (காதலன் - தலைவன். மேல் - இடம். முரிதல் - வளைதல். வில் - புருவம். இடுக - சிறுக. கருங்குவளை - கண். சேத்தல்- சிவத்தல். கரை - எல்லை. இறத்தல் - இல்லாமை.)

(கு - பு.) இ - ள். மகளிர் நெற்றி வியர்க்கவும், வாய் துடிக்கவும், பக்கங்கள் வளைந்த புருவங்களாகிய விற்கள் மேலேநெறிக்கவும், வாட்படை தோற்கும்படி கூரியதாய் நீண்டுள்ள நீலோற்பலமலர்போன்ற கண்கள் சிவந்ததன் கருத்து, அவர் தமதுகணவன்மேற்கொண்ட பிணக்கு அளவிறந்துமிகுதலை உணர்த்தும்; எ-று. ஆல்-அசை. இங்கே, நுதல்வியர்த்தல் முதலிய காரியங்களால் ஊடலாகிய காரணம் அறிவிக்கப்பட்டதென வந்தமை காண்க. (௫௯)

௬௪. அபாவந் தானு மதன்பாற் படுமே.

என்பது: அவ்வலங்காரத்தின் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) அபாவமாவது - ஒன்றனது இல்லாமை: அதுவும் அவ்வேதுவின்பாற்படும்; (எ - று.) (௬0)

௬௫. என்று மபாவமு மின்மைய தபாவமு
மொன்றினொன் றபாவமு முள்ளத னபாவமு
மழிவுபாட் டபாவமு மெனவைந் தபாவம்.

என்பது: அபாவத்தை விரித்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) என்றுமபாவம் முதல் அழிவுபாட்டபாவம் ஈறாகச் சொல்லப்பட்ட ஐந்துபகுதியை யுடையதாம், அவ்வபாவம்; (எ - று.)

எனவே, இவ்வைந்துஅபாவமும் ஏதுவாகத் தோன்றுவது அபாவவேதுவா மென்றவாறு.



RangaRakes tamilnavarasam.com

அவற்றுள்,

(௧) என்றுமபாவ மென்பது - எக்காலத்தும் இல்லாமை. அது "யாண்டு மொழிதிறம்பார் சான்றவ ரெம்மருங்கு, மீண்டு மயிலக ளினமினமாய் - மூண்டெழுந்த, காலையே கார்முழங்கு மென்றயரேற் காதலர்தேர், மாலையே நமபால் வரும" எனவரும். (இ-ள். இன்று காலையின்கண் இவ்விடத்து மயில்கள் கூட்டங்கூட்டமாய்ச் சேர்ந்தெழுந்து அகவாநின்றன; அதுபற்றிக் கார் முழங்காநிற்குமென்று வருந்தாதொழிக, அறிவால்நிறைந்தோர் எக்காலத்தும் சொன்ன சொற்பிறழார்; ஆதலால், அன்னராகிய நமதுகாதலர் தேரானது மாலையிலே நம்மிடத்தில் வரும்; எ - று.)

(கு - பு.) இதில், 'யாண்டும்மொழிதிறம்பார் சான்றவர்' எனப் பெரியோர் பக்கல் எப்பொழுதும் பொய்யின்மை யாகிய என்றுமபாவம் பிரிந்த தலைவர் மாலையில் தவறாதுமீண்டுவருதற்கு ஏதுவாகக் கூறப்பட்டமை காண்க. அகவா நின்றன - ஆடுகின்றன.

(௨) இன்மையபாவ மென்பது - இல்லாமையினது இல்லாமை. அது "காரார் கொடிமுல்லை நின்குழன்மேற் கைபுனைய, வாராமை யில்லை வயவேந்தர் - போர்கடந்த, வாளையேய் கண்ணி நுதன்மேல் வரும்பசலை, நாளையே நீங்கு நமக்கு" எனவரும. (இ - ள். கார்காலத்து ஓங்கிய கொடிமுல்லையினது பூவினை நின்னுடையகூந்தலின்கண் அலங்கரித்துச் சூட்ட வருகின்றார், வெற்றியையுடைய அரசர், ஆகலால், போர்த்தொழிலைமுடித்த வாள் போன்ற கண்களையுடையாய்! நின்னுடைய நுதலின்மே லுண்டாகிய பசலை விடியற்காலத்தே நீங்கும்; (ஆதலால்,) நமக்கு(யாதுகுறை?) எ - று. பசலை - வெளுப்பு.)

(கு - பு.) இதில், 'வாராமையில்லை' என இன்மையது அபாவம பசலைநீங்குதற்கு ஏதுவாகக் கூறப்பட்டமை காண்க.

(௩) ஒன்றினொன்றபாவ மென்பது - ஒன்றன்கண் ஒன்றனதுஇல்லாமையும், அதன்கண்அதனதுஇல்லாமையும. அது "பொய்ம்மையுடன்புணரார் மேலானோர் பொய்ம்மையு, மெய்ம்மைசூழ் மேலாரை மேவா-விம்முறையாற், பூவலர்ந்த தாரார் பிரிந்தாற் பொலங்குழையார், காவலர்சொற் போற்றல் கடன்" எனவரும். (இ - ள். உலகத்து மேலானஅறிவுடையார் பொய்யோடு கூடுவாரல்லர், அப்பொய்யும் மெய்தழுவிய மேலானஅறிவுடையாரைப் பொருந்தாவாகும்; இத்தன்மையால், பொலிவுவிளங்கிய மாலையையுடைய தலைவர் பிரிந்த காலத்துப் பொற்குழையையுடைய மனையறக்கிழத்தியர்க்குக் காவற்கடன் பூண்ட தலைவர் குறித்துரைத்த பருவத்தை நோக்குதல் கடனன்றோ; எ - று. இம்முறை - இத்தன்மை. பூ - பொலிவு. அலர்தல - விளங்கல்.)

(கு - பு) மேலானவர்கும் பொய்ம்மைக்கும் பரஸ்பரம் சம்பந்தமின்மை தலைவியர் தலைவர்சொல்லைப் பேணுதற்கு ஏதுவாகக் கூறப்பட்டமை காண்க. மனையறக்கிழத்தியர் - மனைவியர்.

(௪) உள்ளதனபாவ மென்பது - ஓரிடத்தும் ஒருகாலத்தும் உள்ள பொருள் பிறிதோரிடத்தும் பிறிதொருகாலத்தும் இல்லாமை. அது "கரவொடு நின்றார் கடிமனையிற் கையேற், றிரவொடு நிற்பித்த தெம்மை - யரவொடு, மோட்டாமை பூண்ட முதல்வனை முன்வணங்க, மாட்டாமை பூண்ட மனம்" எனவரும். (இ - ள். இரப்போர்க்குப்பயந்து காவல்கொண்டிருப்பவருடைய வீட்டிற போய் எங்களைக் கையேற்றிரந்துநிற்கும்படி செய்தது, பாம்பையும் பெரியஆமையோட்டையும் அணியாகக் கொண்ட பரமசிவனை முற்பிறப்பில் வணங்கமாட்டாமையைக் கொண்ட மனம்; எ - று. மோட்டாமை - பெரிய ஆமை. மாட்டாமை பூண்ட - மாட்டாமையைத் தொடங்கின.)

RangaRakes tamilnavarasam.com

(கு - பு.) இதில், சிவபிரானை வணங்குத லில்லாமை லோபிகள்வீட்டிற் போய்ப் பிச்சைக்கு நிற்றற்கு ஏதுவாகக் கூறப்பட்டது. இங்கு 'முன்' என்றதனால், இப்பிறப்பிலுள்ள தன்மை முற்பிறப்பில் இல்லாமற்போனமை விளங்கும்.

(௬) அழிவுபாடபாவமென்பது - முன்புள்ளது அழிவுபட்டு இலதாதல். அது "கழிந்த திளமை களிமயக்கந் தீர்ந்த, தொழிந்தது காதன்மே லூக்கஞ் - சுழிந்து, கருநெறியுங் கூந்தலார் காதன்மை தீர்ந்த, தொருநெறியே சேர்ந்த துளம்" எனவரும். (இ-ள். முதுமைப்பருவம வந்தடுத்தது, செல்வத்தினால் வரும் மனக்களிப்பாகிய அறியாமையும் நீங்கிற்று; காதலிக்கப்பட்ட பொருள்களைத் தலைப்படவேண்டி எழாநின்ற ஊக்கமும் ஒழிந்தது; சுருண்டு நெறிப்பையுடைத்தாகிய கறுத்த கூந்தலினையுடையார்மேல் வைத்த ஆசையாகிய நோயுந் தீர்ந்தது, ஒருதன்மைத்தாய நெறியினைச் சேர்ந்தது எனது உள்ளம்; எ - று.)

(கு - பு) முன்பிருந்த இளமைமுதலியன இப்பொழுது அழிந்து இல்லையாயின வெனக் கூறப்பட்டமை காண்க. (சூ ௯)

௩௯. ஏது காரியமு மொருங்குடன் றோற்றமுங்
காரண முந்துறாஉ காரிய நிலையும
யுத்தமு மயுத்தமு முந்தைய தெனப்படும்.

என்பது - அவ்வேதுவலங்காரத்தினையே பிறிதொருவகையால் வகுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) காரகாரியம் முதல் அயுத்தம் ஈறாகச் சொல்லப்பட்ட இவ்வைந்தும் முன்னைய ஏதுவலங்காரத்தோடு நடக்கும்; (எ - று.)

'முந்தை' என்பது, 'முதை' என விகாரப்பட்டு நின்றது.

(கு - பு.) இவையெல்லாம் டெமாழியில் ஏதரவேறது வெனப்படும்; ஆச்சரியமான காரண மென்று பொருள்.

அவற்றுள்,

(௧) காரகாரியமென்பது - ஒருவழிக் காரணம் நிகழப் பிறிதொருவழிக் காரியம் நிகழ்வது. அது "வேறொரு மாதர்மேல் வேந்த னகறுதியா, லூறுதர விம்மா துயிர்வாடும் - வேறே, யிருவரே மெய்வடிவின் னேந்திழை நல்லா, ரொருவரே தம்மி லுயிர்" எனவரும். (இ - ள். தலைமகளாயினாள் தன்னையொழித்து ஒருகாதலிமார்பகத்தே வேந்தன் நகத்தினானியினாற் குறியிட, அதுகண்டு அழுதுவருந்துவாள், ஆதலால், இவ்வேந்திழைநல்லார் உருவத்தால் இருவரெனினும் உயிரானது இவர்கட்கு ஒன்றேபோலும்; எ - று. ஒருமாது - தலைவி, வேறொருமாது - பரத்தை. 'இருவரே யேந்திழை நல்லார்' என்றது, தலைமகளையும், பரத்தையையும்)

(கு - பு) வழி - இடத்தில். ஏந்திழைநல்லார் - தரித்த ஆபரணங்களையுடைய அழகியமகளிர். இதில் ஊறுபட்டவர் ஒருவரும், உயிர்வாடினவர் ஒருவருமானதனால், காரணம ஒருவழிநிகழக் காரியம் பிறிதொருவழி நிகழ்ந்தது. நகநுதியாலூறு கர-சிருங்காரசேஷ்டையைச் செய்ய. தனதுதலைவன் அயலவளிடஞ்சேர்ந்து கிரீடித்ததனால் தலைவி உயிர்வாடினளென்பது, இங்ஙனம் சமத்காரமாகக் கூறப்பட்டது.

(௨) ஒருங்குடன்றோற்றமென்பது - காரணமும் காரியமும் ஒக்கநிகழ்வது. அது "விரிந்த மதிநிலவின் மேம்பாடும் வேட்கை, புரிந்த சிலைமதவேளபோரும் - பிரிந்தோர், நிறைதளர்வு மொக்க நிகழ்ந்தனவா லாவி, பொறைதள

* 'யுத்தமு மயுத்தமும்' என்றும் பாடமுண்டு.

RangaRakes tamilnavarasam.com

ரும் புன்மாலைப் போழ்து" எனவரும். (இ - ள். முழுமதியினது நிலவின்மேம் பாடும் வேட்கைமிகுந்த சிலையையுடையவனுகிய மதவேள் போரும் பிரிந்தோர் நிறைதளர்வும் ஒருங்குநிகழ்ந்தன: தனித்தோர் உயிராகிய பாரத்தைத் தாங்க மாட்டாத தன்மையையும் புன்கண்மையையுமுடைய இம்மாலைப்பொழுதில்.)

(கு - பு.) வேட்கை - ஆசை. சிலை - வில். மதவேள் - மன்மதன். பிரிந்தோர் - இணைபிரிந்தவர். நிறைதளர்வு - மனநிறைதளர்தல். புன்கண்மை - சிறுமை, துன்பம். நிலாத்தோற்றமும் மன்மதன்போரு மாகிய காரணமும், பிரிந்தோர்நிறைதளர்தலாகிய காரியமும் ஒருங்குநிகழ்ந்தனவாகக் கூறப்பட்டமை காண்க.

(௩) காரணம்முந்துறூஉங்காரியநிலையென்பது-காரணத்திற்குமுன்னர்க் காரியம் நிகழ்வது. அது "தம்புரவு பூண்டோர் பிரியத் தனியிருந்த, வம்புலவு கோதையர்க்கு மாரவே - ளம்பு, பொருமென்று மெல்லாகம் புண்கூர்ந்த மாலை, வருமென் றிருண்ட மனம்" எனவரும். (இ - ள். தம்மைக்காக்குந்தொழிலைப் பூண்ட தலைவர் பிரியத் தனித்துஉயிர்கொண்டிருந்த வாசனையையுடைய கோதையையுடைய மடவாருக்கு மாரன்கணைதைக்குமென்று மென்மையை யுடைய மார்பகம் புண்ணுகாநின்றது; அதுவேயுமன்றி, மாலைப்பொழுது வருமென்று அவர்களுடைய மனம் இருண்டது; எ - று.)

(கு - பு.) 'காரியமுந்துறூஉங் காரணநிலை' என்றபாடத்துக்கும் இப்பொருளே கொள்ளவேண்டும். கோதை - மாலை; அல்லது, கூந்தல். மடவார் - மகளிர். மாரன்கணை - மன்மதபாணம். அம்புதைத்தலாகிய காரணத்தின்முன் புண்மிகுதலாகிய காரியமும், மாலைவருதலாகிய காரணத்தின்முன் இருளுதலாகிய காரியமும் நிகழ்ந்தனவாகக் கூறப்பட்டன. 'பொருமுன்னே', 'வருமுன்' என்றும் பாடங்களுண்டு. புண்கூர்ந்த, இருண்ட - புண்கூர்ந்தது, இருண்டது என்பவற்றின் விகாரம்.

(௪) யுத்தமென்பது-காரணத்திற்கேற்ற காரியம் நிகழ்வது. அது "பொன்னி வளநாடன் கைவேல் பொழிநிலவான்,முன்ன ரசைந்து முகுளிக்கும்-தன்னோர், பொரவந்த வேந்தர் புனைகடகச் செங்கை, யரவிந்த நூறு யிரம்" எனவரும். (இ - ள். சோழன்ஏந்திய வேலின்கண் உண்டாகிய வெண்மைவிளக்கம் பரந்த நிலவினால் முன்னே நடுங்கி மொட்டியாநிற்கும், நேர்நின்று பொருதற்குஎதிர்ந்த வேந்தருடைய புனையப்பட்ட கடகத்தையுடைய சிவந்தகையாகிய தாமரைகள் பலவும் உண்டு; எ - று.)

(கு - பு.) யுக்தம் - வடசொல். பொன்னிவளநாடன் - காவேரி வளமுள்ள நாட்டையுடையவன். 'நாடன்வெள்வேல்' என்றும் பாடமுண்டு. மொட்டித்தல் - குவிதல். கடகம் - ஓர்கையணி. சோழனது வேலின் ஒளியைக் கண்டவளவில் பகையரசர் கைகூப்பித் தொழுவ ரென்பது கருத்து. தாமரைகுவிதலாகிய காரியத்திற்கு ஏற்ற நிலவாகிய காரணம் கூறப்பட்டது.

(௫) அயுத்தமென்பது-காரணத்திற்கேலாத காரியம் நிகழ்வது. அது "இகன்மதமால் யானை யநபாய னெங்கோன், முகமதியின் மூர வனிலவா-னகமலர்வ, செங்கயற்க ணல்லார் திருமருவு வாள்வதன, பங்கயங்கள் சாலப் பல" எனவரும். (இ - ள். வெற்றியையும் மதத்தையுமுடைய உயர்ந்த யானைகளையுடைய அநபாயனாகிய எம்மரசனுடைய முகமாகிய நிறைமதியின்கணுண்டாகிய முறுவலின் வெண்ணிலவினால், செவ்வரியையுடைய கயல்போன்ற கண்ணினையுடைய நல்லாருடைய திருமருவுவாண்முகமாகிய தாமரைகள் பல விளங்க மலர்கின்றன; எ - று.)

RangaRakes tamilnavarasam.com

(கு - பு.) அயுக்தம் - வடசொல். நல்லார் - மகளிர். திருமருவுவாள் முகம் - அழகுபொருந்திய ஒள்ளியமுகம். 'திருமருவிவாழ்' என்றபாடத்துக்கு- திருமகள் தங்கிவாழ்கின்ற என்க; அவ்வடைமொழி, பங்கயத்துக்கும் ஏற்கும். நக மலர்வ எனப் பிரிக்க; அகம் மலர்வ என்றுபிரிப்பினும் பொருள்படும். இங்கே தாமரைமலர்தலாகிய காரியத்துக்கு நிலவாகிய காரணம் ஏலாமை காண்க.

* முடியுமென்றது 'இயலும்' என்றதனான், பிறவாற்றான்வருவனவுங் கொள்க. "மாத ருமைவாய் மழலை மொழியாலோ, வேத மறையி னொலியாலோ- யாதாலோ, கோல மிருதிறனுக் கொண்டான் திருமிடற்றி, னால மமிழ்தான வாறு" எனவரும். (இ-ள். உமையாளுடைய வாயிலுள்ள மழலைச்சொல்லாகிய அமுதத்தைச் செவியாற்பருகியவதனாலோ, அன்றியே தானோதப்பட்ட வேத மந்திரவோசைத்தழைப்பினாலோ, இவ்விரண்டனுள்ளும் எதனாலோ? இரண்டு வடிவமாகத் திருமேனியைக்கொண்ட பரமசிவனுடைய சிறந்தமிடற்றிலுள்ள நஞ்சம் அமிருதமாயவாறு (தெரியாது); எ - று. ஒலி - தழைப்பு. இருதிறம் - உருவமும், அருவமும்,) இது - ஐயவேது. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

(கு - பு.) 'மாதர் மணிவா யமிழ்த மொழியானோ' என்றும் பாடமுண்டு. கோலம் இருதிறன்- ஒருபாதி ஆண்வடிவமும், ஒருபாதி பெண்வடிவமும் எனவுமாம். மிடறு - கழுத்து. (௯௨)

ஏதுவலங்காரம் முற்றும்.

## ௧௬. நுட்பவணி.

௯௭. தெரிபுவேறு கிளவாது குறிப்பினுந் தொழிலினு
மரிதுணர் வினைத்திற நுட்ப மாகும்.

என்பது: நிறுத்தமுறையானே நுட்பமென்னும் அலங்கார முணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) தெரிந்துகொண்டு வேறுபடமொழியாது குறிப்பினானாதல் தொழிலினானாதல் அரிதாக நோக்கியுணருந் தொழிற்றன்மையையுடையது, நுட்பமென்னும் அலங்காரமாம்; (எ - று.)

(கு - பு.) இதனை நுணுக்கவணியென்று வழங்குதலும் உண்டு; இது வடமொழியில் சூக்ஷ்ம மெனப்படும். தெரிந்துகொண்டு - பிறர்கருத்தையறிந்துகொண்டு. வேறுபட மொழியாது - வெளிப்படையாக் கூறாமல்.

(க) குறிப்பு—"காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததால், பேதைய ராயம் பிரியாத-மாதர், படரிருள்கால் சீக்கும் பகலவனை நோக்கிக், குடதிசையை நோக்குங் குறிப்பு" எனவரும். (இ - ள். காதலிக்கப்பட்ட தலைவனுடைய மெல்லுயிர்க்குப் பரிகாரஞ்செய்ததுபோலும், மடப்பத்தையுடைய ஆயத்தார் பிரியாதசூழப்பட்ட மாதர் உலகிற்குப் படர்செய்யும் இருளினது அடியை யறுக்கின்ற ஆதித்தனைப் பார்த்து மேற்றிசையைப் பார்க்கும் உள்ளக்கருத்து; எ - று. குடதிசை - மேற்கு.) இதிற் போந்த பொருள் - மாலைக்காலத்துக் கூட்டம் நேர்ந்தவாறு.

(கு - பு.) தோழியர்கூட்டத்தினிடையிலே நிற்கின்ற தலைவி தன்னிடங் காதல்கொண்டுவந்த தலைவன் காணச் சூரியனைப் பார்த்து உடனே மேற்றிசை

* 'முடியுமென்று அனுப்பெற மொழியாது' என்றும் பிரதிபேத முண்டு.

RangaRakes tamilnavarasam.com

யையும் பார்த்தலாகிய தன்செய்கையால் அவனைச் சூரியாஸ்தமனத்தின்பின் வருமாறு குறிப்புக்காட்டினமை உணர்க. தான் பலரிடை இருந்ததனால் வெளிப்படையாக் கூறவொண்ணாது இங்ஙனங் குறிப்பாகவுணர்த்தினளென்க. உயிர்க்குக் காவல்புரிதல் - உயிரை ஒழியாதபடி காத்தல். ஆயம் - கூட்டம். படர் - துன்பம்.

(௨) தொழில்—“பாடல் பயிலும் பணிமொழி தன்பணைத்தோட், கூடலவாவாற் குறிப்புணர்த்து - மாடவற்கு, மென்றீந் தொடையாழின் மெல்லவே தைவந்தா, ளின்றீங் குறிஞ்சி யிசை” எனவரும். (இ - ள். பாடுந்தொழிலைப் பயிலுங் குளிர்ந்தமொழியாள் தனது பணைத்தோளினால் தலைவனைத் தழுவவேண்டுமென்னும் ஆசையினாலே தலைவற்குத் தன்உள்ளக்கருத்தை அறிவியாநின்றாள், மெல்லிய இனியநரம்பையுடைய யாழிலே முறையாக ஆக்கினாள், தித்தித்தவோசையையுடைய குறிஞ்சியாகிய பண்ணை; எ - று. தொடை - நரம்பு. குறிப்பு - கருத்து.) குறிஞ்சிக்குக் காலம் இடையாமமாகலால், இடையாமத்திற் கூட்டம நேர்ந்தவாறு.

(கு - பு.) பணைத்தோள் - பருத்த தோள்; அல்லது, மூங்கில்போன்ற தோள். அறிவியாநின்றாள் - அறிவிப்பவளாய் என்றபடி. யாழ் - வீணை. ஆக்கினாள் - எழுப்பிஉண்டாக்கினாள், வாசித்தாள் என்றபடி. குறிஞ்சி - ஓர் பண். இடை யாமம் - நடு இராத்திரி: இரவில் நடுப்பத்துநாழிகை. தலைவி பலரிடையே பாடிக்கொண்டிருக்கையில் தலைவன் அவளிடங்காதல்கொண்டு வர, அவள் அப்பொழுது வெளிப்படையாகத் தன்கருத்தை உணர்த்தமாட்டாமல் உடனே குறிஞ்சியென்னும் பண்ணைப் பாடியதனால், அதற்குஉரிய இடையாமத்தில் வரும்படி குறிப்பித்தனளென்க. தைவந்தாள்-நரம்புகளைக் கைகளால் தடவி வாசித்தாள். (௫௬)

நுட்பவலங்காரம் முற்றும்.

## ௧௫. இலேசவணி.

௫௮. குறிப்பு வெளிப்படுக்குஞ் சத்துவம் பிறிதின்
மறைத்துரை யாட லிலேச மாகும்.

என்பது: நிறுத்தமுறையானே இலேசமென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு) கருதியது வெளிப்படுக்குஞ் சத்துவமாகிய குணங்களைப் பிறிதொன்றால் நிகழ்ந்தனவாக மறைத்துச்சொல்லுவது, இலேசமென்னும் அலங்காரமாம்; (எ - று)

சத்துவமென்பன - வெண்பளிங்கிற் செந்நூல்கோத்தால் அதன்செம்மை புறம்பொழிந்து தோன்றுமாறுபோல உள்ளங்கருதியது புலனாக்குங் குணங்கள்; அவை - சொற்றளர்வு, மெய்வியர்ப்பு, கண்ணீர்நிகழ்ச்சி, மெய்விதிர்ப்பு, மெய்வெதும்பல், மெய்ம்மயிரரும்பல் முதலியன.

(கு - பு.) புலனாக்கும் - வெளிப்படுத்தும். சத்துவமென்பது, தமிழில் விறலெனப்படும். இவை மெய்ப்பாட்டின்பாற்படும். லேசம் - வடசொல். குற்றத்தைக் குணமாகவும், குணத்தைக் குற்றமாகவும் சொல்லுதல் இவ்வணிக்கு இலக்கணமென்பர் ஒருசாரார்.

“நல்லுயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பனிசோர், மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று - சொல்லுவராற், பொங்கும் படைபரப்ப மீதெழுந்த பூந்துகள்சேர்ந், தெங்கண் கலுழ்ந்தனவா லென்று” எனவரும். (இ - ள்.

மலைபோலப்பெரிய தோள்களையுடைய சோழன் ஏறிய குதிரையைத் தொழுது நீர்வார்ந்த கண்ணையுடைய மெத்தென்ற நடையையுடைய நல்லார், 'எமதுகண்ணீர்வார்தற்குக் காரணம் - சினத்தையுடைய சேனை பரந்துவருதலால் ஆகாயத்தி லெழுந்த பொலிவுடைய தூளியானது உட்புக்குக் கண்ணீர்வார்ந்தது' என்று தோழியர்க்கு நிகழ்ந்ததொழிய வேறொருபாயத்தான் மறைத்துச்சொல்லினர்; எ - று. கல் - மலை.)

(கு - பு.) சோழன் குதிரைமேலேறி யுலாவுகிற அழகைக் காணுமளவில் தாம்அடைந்தகாதல்மிகுதிபா லாகிய தமதுகண் ணீர்ப்பெருக்கைச் சேனைவருதலால் மேலெழும்பிய தூளி படிதலா லாகிய தென்று மறைத்துக் கூறியமை காண்க. அடுத்த செய்யுளிலும் இங்ஙனமே கண்டுகொள்க. கிள்ளி - சோழன். 'கரிதொழுது' என்ற பாடத்துக்கு-யானைமீது ஏறி உலாவரும் அழகைக் கண்டு வணங்கி யென்க. வார்ந்த - பெருகிய.

"மதுப்பொழிதார் மன்னவனை மால்கரிமேற் கண்ட, விதிர்ப்பு மயிரரும்பு மெய்யும் - புதைத்தாள், வளவா ரணநெடுங்கை வண்டிவலை தோய்ந்த, விளவாடை கூர்ந்த தென" என்பதும் அது. (இ - ள். தேன்பொழிதாரையுடைய சோழனை உயர்ந்த களிற்றின்மேல் வரக்கண்டதனால் உண்டாகிய தன்னுடைய மேனிநடுக்கத்தையும் மெய்ம்மயிரரும்புதலையும் 'அவன்ஏறிவந்த வளப்பமுடைய களிற்றின் நெடியகையி லுண்டாகிய வளவியநீர்த்திவலையைக் கொண்டு வந்த இளவாடை என்மேனியைப் நனைத்ததனாலே வந்தது என்மேனி நடுக்கமும் மயிரரும்புதலும்' என நிகழ்ந்தது மறைத்து வேறொன்று தோழியர்க்குச் சொல்லினள்; எ - று. புதைத்தல் - மறைத்தல். மால்கரி - பெரியயானை. புதைத்தாள் - மறைத்துச்சொன்னாள்.) (௬௨)

ருக. புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்
பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலு
மவையு மன்னவென் றறைகுந ருளரே.

என்பது: அவ்விலேசத்தின்பாற்படுத்துப் பிறர் வேண்டுவன சிலஅலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) ஒன்றனைப் புகழ்ந்தாற்போலப் பழித்துஉரைத்தலும், பழித்தாற்போலப் புகழ்ந்துஉரைத்தலும் என்னும் இரண்டும் அவ்விலேசத்தின்பாற்படுமென்று சொல்லுவாரு முளர், (ஒருசார் தொல்லாசிரியர்); (எ - று.)

(கு - பு.) இது - பிறன்கோட்கூறல்.

அவற்றுள்,

(௧) புகழ்வதுபோலப் பழித்தல்—"மேய கலவி விளைபொழுது நம்மெல்லென், சாய றளராமற் றாங்குமால் - சேயிழாய், போர்வேட்ட மென்மைப் புகழாளன் யாம்விரும்பித், தார்வேட்ட தோள்விடலை தான்" எனவரும். (இ-ள். தோழீ! கேட்பாயாக; எம்மிற்பொருந்திய கலவி நிகழும்பொழுது அக்கலவிக்கண் நமதுமென்மைகுன்றாதபடி பரிகரித்தொழுகுவான்: எப்பொழுதும் போர்த்தொழிலை விரும்பிய மேலாயபுகழையுடையவன், யாம் முற்காலத்துக் காதலித்து மாலையிட்ட தோளையுடைய தலைவன்; எ - று.) அககாலத்து அறிவழியாமையால், பழிப்பாயிற்று.

(கு - பு.) இதில், போரைவிரும்பிய எமதுதலைவன் கலவியால் நமது மென்மை தளராதபடி தாங்குவனெனப் புகழ்ந்தாற்போலக்கூறியதனால், அவன் போர்விருப்பையே கொண்டு காதல்விருப்பைக் கொண்டில னென்று பழித்தவாறு காண்க. சேயிழாய் - செவ்விய ஆபரணங்களையுடையவளே! பரிகரி

RangaRakes tamilnavarasam.com

த்து - கலவியின்றி. அக்காலத்து அறிவு அழியாமை - போர்விருப்பொழிந்து காதல்விருப்புக்கொள்ளாமை.

(உ) பழிப்பதுபோலப் புகழ்தல் — "ஆடன் மயிலியலி யன்ப னணியா கங், கூடுங்கான் மெல்லென் குறிப்பறியா - னூட, விளிவந்த செய்கை யிரவா ளன் யார்க்கும், விளிவந்த வேட்கை யிலன்" எனவரும். (இ - ள். ஆடாநின்ற மயில்போலுஞ் சாயலினையுடையாய் ! நம்மீது அன்புவைத்த தலைவனுடைய அலங்கரித்த மார்பகத்தை யாம்கூடுங்கால் நம் மெல்லென்ற நலம் பாராட்ட அறியா னுதலானும், ஊடற்கண் தனக்குத்தகாதனசெய்து இரக்கும் இரவாள னுதலானும், யாவர்க்கும் வெறுக்கத்தக்க ஆசைப்பாடுடையனலல னுதலானும், இகழ்தற்கு ஏதுவாயினுன்; எ - று.) அன்பன் இரவாளன் வேட்கையிலன் எனக் கூட்டுக. அக்காலத்து அறிவழிந்தமையால், புகழாயிற்று.

(கு - பு.) 'மெல்லென்குறிப்பறியான்' என்பதற்கு - கலவியில் எமக்கு இளைப்புவிளைப்ப னென்று கருத்து. அக்காலத்து அறிவுஅழிந்தமையால்.- கலவிக்காலத்தில் காமவசப்பட்டுநடந்ததனுல். இதில், 'குறிப்பறியான்', 'இரவாளன்,' 'வேட்கையிலன்' எனப் பழித்தாற்போலக் கூறியதனுல், அவன் தனது ஊடலைத் தணித்துத் தன்னை உரியவாறு கூடியொழுகின னென்று புகழ்ந்த தாமாறு காண்க. (௬௫)

## இலேசவலங்காரம் முற்றும்.

---

## ௧௫. நிரனிறையணி.

௭0. நிரனிறுத் தியற்றுத னிரனிறை யணியே.

என்பது: நிறுத்தமுறையானே நிரனிறையென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) சொல்லையும் பொருளையும் நிரலேநிறுத்தி நேரே பொருள்கொள்வது, நிரனிறையென்னும் அலங்காரமாம்; (எ - று.)

நிரனிறுத்துத லென்றது 'இயற்றுதல்' என்றமையின், மொழிமாற்றிப் பொருள்கொள்வதூஉங் கொள்க.

(கு - பு.) நிரனிறை - நிரல்நிறை. நிரலே - வரிசையாக. நேரே - முறையே. இங்கே, 'பொருள்' என்றது, கொண்டுமுடியுஞ்சொல் என்றபடி. இது வடமொழியில் யதாஸங்க்ய மெனவும், கிரம மெனவும்படும். இவ்வணியின் வகை பொருள்கோளின்பாற்படுத்து முறைநிரனிறைப் பொருள்கோளெனவும், எதிர்நிரனிறைப்பொருள்கோ ளெனவும்படும்; [நன்னூல் - பொதுவியல் - ௬௬.] இவ்வணியை அடைவணியென்று வழங்குதலும் உண்டு. எதிர்நிரனிறை, தமிழர்க்கே உடன்பாடு. இதனைப் பெயர்நிரனிறை, வினைநிரனிறை, மயக்கநிரனிறை, உய்த்துணர்நிரனிறை, தொகைநிரனிறை என்று பல வகையாக வேறுபடுப்பாருமுளர்.

அவற்றுள்,

(க) நிரலேநிறுத்தி நேரேபொருள்கோள்வது—"காரிகை மென்மொழியா ளேக்காற் கதிர்முலையால், வார்புருவத் தாலிடையால் வாய்த்தளிரா-னேர் தொலைந்த, கொல்லி வடிநெடுவேற் கோங்கரும்பு விற்கரும்பு, வல்லி கவிர் மென் மலர்" எனவரும். (நேர் - முறை. தொலைதல் - கெடுதல். கொல்லி - ஓர்பண்.)

(கு - பு.) இ - ள். அழகியமாதினது மெல்லியசொல்லாலும் விழியாலும் ஒளிசெய்யுங் கொங்கையாலும் நீண்டபுருவத்தாலும் இடையாலும் மெல்லிய

RangaRakes tamilnavarasam.com

வாயாலும் முறையே கொல்லியென்னும் இனியபண்ணும் கூரியநீண்டவேலும் கோங்குமரத்தினரும்பும் காமனதுகருப்புவில்லும் பூங்கொடியும் மெல்லியமுருக்கமலரும் அழகுகெட்டன; எ - று. இதில், கூறப்பட்ட உபமேயப்பொருள்களுள்ளும், உபமானப்பொருள்களுள்ளும் மொழியாற் பண், நோக்கால் வேல், முலையாற் கோங்கரும்பு, புருவத்தால வில், இடையாற் கொடி, வாயால் முருக்கலர் என முறையே இயைந்து பொருள்படுதல் காண்க.

(உ) நிரலே நிறுத்தி மொழிமாற்றிப் பொருள்கொள்வது—"ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும், பாடகமு மூரகமும் பஞ்சரமா - நீடிய மா, னின்றா னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ, மன்றார் மதிற்கச்சி மாண்பு" எனவரும். (பஞ்சரம் - இடம். அகன்றொழிவார் - விட்டுநீங்குவார்.) *

(கு - பு.) இ - ள். நீண்ட திருமால் வெஃகா பாடகம் ஊரகம் என்ற தலங்களைத் தனக்குஇடமாகக்கொண்டு அவற்றில் முறையே கிடந்தான் இருந்தான் நின்றான்; பகைவரைநிறைந்ததும் மதிற்சூழ்ந்ததுமான காஞ்சீபுரியின் பெருமை இதுவன்றோ? இப்படிப்பட்ட கச்சிப்பதியை மனிதர்கள் எங்ஙனம் விட்டு நீங்குவார்? எ - று. வெஃகா பாடகம் ஊரகம் என்பன - காஞ்சிநகரத்தில் உள்ள திருமால்திருப்பதிகள், திருமால் அவற்றுள் வெஃகாவில் பள்ளிகொண்ட திருக்கோலமாகவும், பாடகத்தில் வீற்றிருந்ததிருக்கோலமாகவும், ஊரகத்தில் நின்றதிருக்கோலமாகவும் எழுந்தருளியிருக்கின்றனர்; ஆதலால், இச்செய்யுளில், முறையே கொள்ளாமல் மாறுமுறையைத் தழுவிப் பொருள் கொள்ளவேண்டியதாயிற்று. வெஃகா - யதோத்தகாரி சன்னிதி யென்றும், பாடகம் - பாண்டவதூதர்சன்னிதி யென்றும், ஊரகம் - உலகளந்தபெருமாள் சன்னிதி யென்றும் வழங்கும். (சுசா)

நிரனிறையலங்காரம் முற்றும்.

## கஎ. ஆர்வமொழியணி.

சக. ஆர்வ மொழி மிகுப்ப தார்வ மொழியே.

என்பது: நிறுத்தமுறையானே, ஆர்வமொழியென்னும் அலங்கார முணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) உண்ணிகழ்ந்த ஆர்வம்பற்றி எழும் மொழி மிகத் தோன்றச் சொல்லுவது, ஆர்வமொழியென்னும் அலங்காரமாம்; (எ - று)

'உண்ணிகழ்ந்த' என்பது மேல்வரும் அதிகாரத்தாற் கொள்ளப்பட்டது.

(கு - பு.) இதனை மகிழ்ச்சியணியென வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் ப்ரேயோலங்கார மெனப்படும். ஆர்வம் - அன்பு, மகிழ்ச்சி. அடுத்த சூத்திரத்தில் 'உண்ணிகழ்தன்மை' என வருவதுநோக்கி ஈண்டு 'உண்ணிகழ்ந்த' என்பது வருவித்துரைக்கப்பட்டது.

"சொல்ல மொழிதளர்ந்து சோருந் துணைமலர்த்தோள், புல்ல விருதோள் புடைபெயரா-மெல்ல, நினைவோ மெனினெஞ் சிடம்போதா தெம்பால், வினைதாராய் வந்ததற்கு மாறு" எனவரும். (இ - ள். நின்முன்னின்று மறுமொ

* இதன்பின் சிலபிரதிகளில் அடியில்வருமாறு அதிகபாடம் காணப்படுகிறது:—"மயில்களிக்கும் வண்டார்க்கும் வண்டளவம் பூக்குங், குயிலொளிக்குங் கோபம் பரக்கும் - வெயிலொளிக்குங், கானங் குழைகொள்ளுங் காந்த டுடுப்பெடுக்கும், வானம் பொழியு மழை" என்பதும் அது. (தளவு-முல்லை. கோபம்-இந்திரகோபம். கானம் - காடு. குழை - தளிர். கொள்ளுதல் - உண்டாதல். துடுப்பு - பூ. எடுத்தல் - ஏந்தல்.)

RangaRakes tamilnavarasam.com

சர முயல்வேமாயின், எங்கள்மொழியானது தடுமாறிச் சோர்வுபடாநின்றது; நின் இணைமலர்த்தோள்களைத் தழுவ முயல்வேமாயின், எங்கள் இரண்டு தோள்களும் இடமுண்டாக வளர்வனவல்ல; மெல்ல நின்புகழை நினைப்பேமாயின், எங்கள் உள்ளம் இடம்போதாது: அலங்கரிக்கப்பட்ட மாலையையுடையானே! எம்மிடத்து நீவந்த இதற்குக் கைம்மாறு யாதென்று சொல்லப்படும்? எ-று. மாறு - ஈடு.)

(கு-பு.) இணை - இரண்டு. மலர்த் தோள் - பூமாலையணிந்த தோள். 'யாதென்று சொல்லப்படும்' என்பது - இசையெச்சம். இது மனத்தில் நிகழ்ந்த அன்பைப் புலப்படஉரைத்ததாதல் காணக. (௬௭)

ஆர்வமொழியலங்காரம் முற்றும்.

## ௧௮. சுவையணி.

௪௨. உண்ணிகழ் தன்மை புறத்துத் தோன்ற
எண்வகை மெய்ப்பாட்டி னியல்வது சுவையே.

என்பது: நிறுத்தமுறையானே சுவையென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-பு.) உள்நிகழுந்தன்மை புறத்துப்புலனாய்விளங்க எட்டுவகைப் பட்ட மெய்ப்பாட்டானும் நடப்பது, சுவையென்னும் அலங்காரமாம்; (எ-று.)

'மெய்ப்பாட்டினியல்வதுசுவை' என்பதனை, 'பொன்னினியன்ற குடம்' என்பதுபோற் கொள்க.

(கு-பு.) இது, வடமொழியில் 'ரஸவத்' எனப்படும். எண்வகை மெய்ப்பாடு, அடுத்தசூத்திரத்திற் கூறப்படும். (௬௮)

௪௩. அவைதாம்,
வீர மச்ச மிழிப்பொடு வியப்பே
காம மவல முருத்திர நகையே.

என்பது: அவ்வலங்காரத்தை விரித்துணர்த்துதல் நுதலிற்று.

(இ-பு.) மேற்கூறிய எண்வகைப்பட்ட மெய்ப்பாடாவன - வீரமும் அச்சமும் இழிப்பும் வியப்பும் காமமும் அவலமும் உருத்திரமும் நகையுமாம்.

(கு-பு.) இவை முறையே வடமொழியில் வீரம், பயாநகம், பீபத்ஸம், அத்புதம், ச்ருங்காரம், கருணை, ரௌத்ரம், ஹாஸ்யம் எனப்படும். இவற்றோடு சாந்தமென ஒன்றுகூட்டி நவரஸமென்றலும் உண்டு.

அவற்றுள்,

(க) வீரம்—"சேர்ந்த புறவி னிறைதன் றிருமேனி, யீர்ந்திட் டுயர்துலைதா னேறினு - னேர்ந்த, கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட், படைவீர மோசென்னி பண்பு" எனவரும். (இ-ள். தன்கட் சரண்புக்க புறவினது வாரம் தனதுதசையையறுத்திட்டுந் தசைநிறைபோதாததற்குத் தானும் துலாத்தலையேறிய இது தனதுகொடையின் வெற்றியோ மெய்யொழுக்கங் குன்றாத வன்கண்மையுடைய படையின் வெற்றியோ என ஆராய்வார்க்கு இவையிரண்டு மன்று, சோழன்தனது தன்மையிருந்தபடி! எ-று.)

(கு-பு.) சூரியகுலத்தரசனான சிபிசக்கரவர்த்தியினது வரலாற்றை அக்குலத்தவனான ஒருசோழராசன்மேல் ஏற்றிக் கூறியது இது. வாரம் - எடைக்காக. துலாத்தலை - தராசில். படை - ஆயுதம். இச்செய்யுளில், தானவீரம் பொருந்துதல் காண்க. நேர்ந்த - பொருந்திய.

RangaRakes tamilnavarasam.com

(உ) அச்சம்—"கைநெரித்து வெய்துயிர்ப்பக் காறளர்ந்து மெய்பனிப்ப, மையரிக்க ணீர்ததும்ப வாய்புலர்ந்தா-ளையல், சினவேல் விடலையாற் கையிழந்த செங்கட், புனவேழ மேல்வந்த போது" எனவரும். (பனித்தல் - நடுங்கல். புனவேழம் - காட்டியானை.)

(கு - பு.) இ - ள். கோபத்தையும் வேலாயுதத்தையு முடைய வீரனால் துதிக்கையையிழந்த சிவந்தகண்களையுடைய காட்டியானை எதிர்வந்தபொழுது, ஒருபெண், தன்கைகளை நெரித்துக்கொண்டு பெருமூச்செறியக் கால்சோர்ந்து உடம்புநடுங்க மைதீட்டிய செவ்வரிகளையுடைய கண்களில் நீர்ததும்ப வாய் உலர்ந்தாள்; எ - று. இதில், அச்சம்நிகழ்தல் கூறியமை காண்க. 'வாய்புலர்ந்தேன் வெய்ய' என்றும் பாடமுண்டு.

(௩) இழிப்பு—"உடைதலையு மூளையு மூன்றடியு மென்புங், குடருங் கொழுங்குருதி யீர்ப்ப - மிடைபேய், பெருநடஞ்செய் பெற்றித்தே கொற்றப் போர்க் கிள்ளி, கருநடரைச் சீறுங் களம்" எனவரும். (கொழுங்குருதி - திணக்குருதி. பெற்றி - தன்மை. கிள்ளி - சோழன்.)

(கு - பு.) இ - ள். வெற்றியைத்தரும் போரைச் செய்யவல்ல சோழன் கர்னாடகதேசத்தரசர்களைக் கோபித்தெதிர்த்த போர்க்களமானது, உடைந்த தலைகளையும் மூளைகளையும் தசைத்திரளையும் எலும்பையும் குடலையும் மிக்கஇரத்தவெள்ளம்இழுக்க நெருங்கிய பேய்கள் பெருங்கூத்தாடுந் தன்மையுடையது; எ—று. இது, அருவருப்புத்தோன்றக் கூறினமையால், இழிப்புச்சுவையாம்.

(௪) வியப்பு—"முத்தரும்பிச் செம்பொன் முறிததைந்து பைந்துகிரின், றொத்தலர்ந்து பல்கலனுஞ் சூழ்ந்தொளிருங் - கொத்தினதாம், பொன்னேர் மணிகொழிக்கும் பூங்கா விரிநாடன், றன்னேர் பொழியுந் தரு" எனவரும். (இ-ள். பொன்னையும் அழகியமணிகளையும் அலைத்துக்கொடுவருகின்ற பொலிவுடைய காவிரிநாடனுக்கு உவமையாகச் சொல்லப்பட்ட கற்பதரு, முத்தமாகிய அரும்பை யரும்பிச் சிவந்தபொன்முறியாய தளிரினாலே செறிந்து பச்சைத் துகிராகிய கொத்துக்களை யுடைத்தாய்ப் பலவகைப்பட்ட ஆபரணங்களாற் சூழப்பட்டு விளங்கிய பணைகளை யுடைத்தாயிருக்கும்; எ - று.)

(கு - பு.) துகிர் - பவழம். பணை - கிளை. இதில், கற்பகவிருக்ஷம் வியப்புத்தோன்ற வர்ணிக்கப்பட்டமை காண்க.

(௫) காமம்—"திங்க ணுதல்வியர்க்கும் வாய்துடிக்குங் கண்சிவக்கு, மங்கைத் தளிர்நடுங்குஞ் சொல்லசையுங்-கொங்கை, பொருகாலு மூடிப் புடைபெயருங் காலு, மிருகாலு மொக்கு மிவர்க்கு" எனவரும். (திங்கள் - பிறை. அங் கை - அழகிய கை.)

(கு - பு.) இ - ள். தனங்கள் என்மீது அழுந்தும்படி இவர் என்னை வலியத்தழுவியபொழுதிலும், என்னிடத்து ஊடல்கொண்டு இவர் என்னைவிட்டு நீங்கும்பொழுதிலும், இரண்டுபொழுதிலும், இவர்க்கு, ஒருநிகராக, பிறைச்சந்திரன்போன்ற நெற்றி வேர்க்கும்; வாய் துடிக்கும்; கண் சிவக்கும்; அழகியதளிர் போன்ற கைகள் நடுங்கும்; சொற் குழறும், எ - று. நுதல்வியர்த்தல் முதலியன கலவியாலும் கோபத்தாலும் நிகழ்தற்குரியன வாதலால், இங்ஙனங் கூறப்பட்டது. இது, ஒருதலைமகன் தன்காதற்களிப்புப்புலப்படக் கூறியது.

(௬) அவலம்—"கழல்சேர்ந்த தாள்விடலை காதலிமெய் தீண்டு, மழல் சேர்ந்து தன்னெஞ் சயர்ந்தான் - குழல்சேர்ந்த, தாமந் தரியா தசையுந் தளிர் மேனி, யீமந் தரிக்குமோ வென்று" எனவரும். (இ - ள். வீரக்கழலைக்கோத்த காலினையுடைய விடலையானவன், தன்னுடைய மனைவியின் மெய்யை யெரிக்கும் அழலைச் சேர்ந்து, தன்னுடைய நெஞ்சம் வருந்தினான், 'குழலிடத்துப்பொ

RangaRakes tamilnavarasam.com

ருந்தின மாலையைப் பொருது தளருந் தளிர்போலும் மேனியானது ஈமத்து எரியைப் பொறுக்கவற்றோ' என்றது; எ - று.)

(கு - பு.) விடலை - ஆண்மகன். ஈமம் - விறகடுக்கு. வற்று - வல்லது. என்று அயர்ந்தா னென இயையும். இதில், அவலம் - வெளிப்படை. அவலம்- சோகம்.

(எ) உருத்திரம்—"கைபிசையா வாய்மடியாக் கண்சிவவா வெய்துயிரா, மெய்குலையா வேரா வெகுண்டெழுந்தான் - வெய்யபோர்த், தார்வேய்ந்த தோளான் மகளைத் தருகென்று, போர்வேந்தன் றூதிசைத்த போது" என வரும். (வேய்தல் - சூடல். தூது - தூதன். இசைத்தல் - சொல்லல்.)

(கு - பு) கொடியபோரில் வெற்றிமாலையைச் சூடிய தோளையுடைய துருபதராசனது பெண்ணை திரௌபதியைச் சபையிற்கொணர்வாயாக வென்று போரில்வல்ல துரியோதனராசன் தனது தூதனை நோக்கிச் சொன்ன போது, (அதுகேட்ட வீமன்) கைகளைப்பிசைந்து வாயைமடித்துக் கண்சிவந்து கடுமையாகப் பெருமூச்செறிந்து உடல்பதறி வேர்த்துக் கோபித்துப் போருக்கு எழுந்தான்; எ - று. ஓரரசனது மகளைத் தனக்கு வலியக்கொணர்ந்து கொடுக்கும்படி பகையரசன் தூதனுப்பியபோது அவ்வரசன் இங்ஙனம் பெருங்கோபங்கொண்டதாகவும் இச்செய்யுளுக்கு உரைகூறலாம். இதில், வெகுளிக் கொதிப்பு விளங்குதல் காண்க.

(அ) நகை—"நாண்போலுந் தன்மனைக்குத் தான்சேற லிந்நின்ற, பாண் போலும் வெவ்வழலிற் பாய்வதூஉங் - காண்டோழி, கைத்தலங் கண்ணாக் களவுகாண் பானொருவன், பொய்த்தலைமுன் னீட்டியற்றும் போந்து" எனவரும். (பாண் - பாணன். 'காண்டோழி' என்றது - கேட்பாயாக தோழி! என்றவாறு. சேறல் - வருதல்.)

(கு - பு.) தலைமகளைப் பிரிந்து சென்று பரத்தையைக் கூடிநின்ற தலைமகன் மீண்டு தலைமகளிடம் வருமளவில், அவன்செய்தியையறிந்து சினங்கொண்ட அவள் அவன்வரவை ஏற்றுக்கொள்ளாது மறுக்க, அதனால்வருத்தமுற்ற தலைமகன் அவட்குச் சமாதானங்கூறி அவளைக் கோபந்தணித்தற்பொருட்டு ஒருபாணனை அவளபக்கல் அனுப்ப, அவன் அங்ஙனமே வந்து தலைவியை நோக்கி 'நீ மறுத்தலால் நினது தலைவர் நினைமனைக்குவரக் கூசிநின்றார்; நீ இன்னமும் அவர்வரவை ஏற்றுககொள்ளாதொழியின், அவர் அத்துயரால தீப்பாய்ந்து உயிர்நீக்குந்தன்மைபா' என்பனபோன்ற சிலநயப்புரைகளை எடுத்துக்கூற, அது கேட்ட தலைவி அவனைப் பரிகசித்துத் தோழியை நோக்கிக் கூறியது, இது. இ - ள். தோழி! அறிவாயாக: தன்மனைக்குத் தான்வருவதும், தலைமகனுக்கு நாணுதற்கு இடமாயிற்றுப்போலும்; வெவ்வியதீயிற் பாய்வதாகச் சொல்வது, இப்பாணனது சமயோசிதகற்பனைவார்த்தைபோலும்: கையைப்பிடியுமாகக் களவு செய்பவனொருவன் வந்து பொய்த்தலையை முன்னே நீட்டுதலைச்செய்வான்; எ - று. இச்செய்யுளில், பின்னிரண்டு அடி - தலைவன்செயலைக் குறிக்கது. 'கைத்தலங்கண்ணாக் களவுகாணுதல்' என்றது, பலருங்காணப் பரத்தைபக்கற் செல்லுந்தன்மையை. 'பொய்த்தலை முன்னீட்டியற்றும் போந்து' என்றது, அவன் சந்தேசப் பாணனை அனுப்பியமையை. கைத்தலங் கண்ணாக் களவு காணுதல் - கண்தெரியாத இருளில் கைகளையேகண்ணாககொண்டு அவற்றால் தடவிப் பொருள்களைக்கண்டு எடுத்தலுமாம். "காண்கின்றனகளுங் கேட்கின் றனகளுங் காணி லிந்நாள், பாண்குன்றநாடர் பயில்கின்றன விதெல்லா மறிந் தோம்" என்ற திருவிருத்தப் பாசுரத்தின் வியாக்கியானத்தில் 'பாண் - பாண ருடைய தொழிலாய், அதாகிறது - நெஞ்சிலன்றிக்கேயிருக்கப் பண்ணு

RangaRakes tamilnavarasam.com

ஸ்தோத்ரங்களாய்' எனவுரைத்தது உணரத்தக்கது. இச்செய்யுளில் பரிகாசம் நிகழ்தல் காண்க.

இவையெல்லாம் தம்மிற்றோன்றலும் பிறிதிற்றோன்றலுமெனப் பல வகைப்படும்; அவையெல்லாம் கூத்தநூலிற் கூறியவாறு கண்டுகொள்க.

(கு - பு.) "தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ, மன்னுயிர்க் கின்னா செயல்" என்பது, சாந்தரசத்துக்கு உதாரணமாம். (சுசு)

சுவையலங்காரம் முற்றும்.

## கஎ. தன்மேம்பாட்டுரையணி.

சச. தான்றற் புகழ்வது தன்மேம் பாட்டுரை.

என்பது: நிறுத்தமுறையானே தன்மேம்பாட்டுரையென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) ஒருவன் தன்னைத் தானே புகழ்வது, தன்மேம்பாட்டுரை யென்னும் அலங்காரமாம்; (எ - று.)

(கு - பு.) புகழ்தல் - மேம்பாடுதோன்ற உரைத்தல். இதனை ஊக்கவணி யென வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் 'ஊர்ஜஸ்வி' எனப்படும்.

அது "எஞ்சினா ரில்லை யெனக்கெதிரா வின்னுயிர்கொண், டஞ்சினா ரஞ்சாது போயகலக - வெஞ்சமத்துப், பேரா தவராகத் தன்றிப் பிறர்முதுகிற், சாரா தென் கையிற் சரம்" எனவரும். (இதனாற் போந்தபொருள் - எனக்கு எதிராய் முன்னின்று பொருது பிழைத்தாரில்லை யென்றவாறு.)

(கு - பு.) இ - ள். போரில் எனக்கு எதிராக வந்து முன்னின்றுபொருது தமதினிய உயிரைத் தப்புவித்துக்கொண்டு பிழைத்தொழிந்தவர் எவருமில்லை; எனக்கு அஞ்சினவர்கள் அச்சமொழிந்து விலகிச்செல்வாராக; என்கையால் எய்யப்படும் அம்புகள், கொடியபோரிற் புறங்கொடாதவரது மார்பிலன்றிப் புறங்கொடுப்பவரது முதுகிற் சேரமாட்டா; எ - று. இந்தத்தற்புகழ்ச்சி புறப்பொருளிலக்கணத்தில் நெடுமொழிகூற லெனவும், நெடுமொழிவஞ்சி யெனவும் படும். (எ0)

தன்மேம்பாட்டுரையலங்காரம் முற்றும்.

## உ0. பரியாயவணி.

சரு கருதியது கிளவா தப்பொருள் தோன்றப்
பிறிதொன்று கிளப்பது பரியா யம்மே.

என்பது: நிறுத்தமுறையானே பரியாயமென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) தான்கருதியதனைக் கூறாது அப்பொருள்தோன்றப் பிறிதொன்றனைக் கூறுவது, பரியாயமென்னும் அலங்காரமாம்; (எ - று.)

(கு - பு.) வடமொழியில் பரியாயோக்த மென்றது, இங்குப் பரியாயமெனப்பட்டது. இதனைப் பரியாயமொழி யெனவும், பிறிதினவிற்சியெனவும் வழங்குதலும் உண்டு.

அது "மின்னிகரா மாதே விரைச்சாந் துடன்புணர்ந்து, நின்னிகரா மாதவிக்க ணின்றருணீ - தன்னிகராஞ், செந்தீ வரமலருஞ் செங்காந்தட் போதுடனே, யிந்தீ வரங்கொணர்வல் யான்" எனவரும். (இ - ள். மின்னுக்கு உவமையாகிய மாதே! விரையினையுடைத்தாகிய சந்தனமரத்தைத் தழுவி உனக்கு

RangaRakes tamilnavarasam.com

நிகராயிருக்கின்ற இம்மாதவிக்கீழே நிற்பாயாக; தனக்குநிகராயிருக்கின்ற சிவந்த தீயினது ஒளி புலப்பட மலர்ந்த சிவந்தசாந்தட்பூவுடனே நல்ல குவளைமலருங் கொண்டு நின்குழற்கு அணிய வாராநின்றேன் என்று இடத்துநிறீஇ நீங்கினாள்; எ - று. மாதவி - குருக்கத்தி. சாந்தம் - சந்தனம். இந்தீவரம் - குவளைமலர்.) இது, குறியிடத்து உய்த்து நீங்குவாள் கூறியது.

(கு - பு.) குறியிடத்து உய்த்து நீங்குவாள் கூறியது - தலைவனுக்குக் குறிப்பிட்டவிடத்தில் தலைவியைக் கொண்டுவந்துவிட்டுச் செல்லுந் தோழி, இனித் தான் அங்குநிற்பது அவர்களின்பத்துக்குத் தடையாகுதலால் நீங்கிச்செல்லக் கருதி அதற்கு ஒருவியாஜமாகச் சொன்னது. விரை - நறுமணம். நிறீஇ - நிறுத்தி. (எக)

பரியாயவலங்காரம் முற்றும்.

---

## உக. சமாயிதவணி.

சசு. முந்துதான் முயல்வுறு தொழிற்பயன் பிறிதொன்று
தந்ததா முடிப்பது சமாயித மாகும்.

என்பது: நிறுத்தமுறையானே சமாயிதமென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) முன்பு தன்னால்முயலப்பட்ட தொழிலினது பயன் அத்தொழிலானன்றிப் பிறிதொன்றால் நிகழ்ந்ததாகக் கூறிமுடிப்பது, சமாயிதமென்னும் அலங்காரமாம்; (எ - று.)

(கு - பு.) ஸமாஹிதம் - வடசொல். இதனைச் சமாதியென்பர் ஒருசாரார். எளிதின்முடிபணி யெனவும், துணைப்பேறணியெனவும் வழங்குதலும் உண்டு.

அது "அருவியங் குன்ற மரக்கன் பெயர்ப்ப, வெருவிய வெற்பரையன் பாவை - பெருமா, னணியாக மாரத் தழுவினா டான்முன், றணியாத வூட றணிந்து" எனவரும். (இ - ள். முன்பு தீராத ஊடலை யுடையளாயிருக்கின்ற மலையரையன்பயந்தபாவையாகிய உமையானவள், அருவியினை யுடைத்தாய் அழகுபொருந்திய கைலைமலையை இராவணன் அலைப்ப வெருவி முக்கட்கடவுளினது அழகியமார்பகத்தை ஊடல்தணிந்து தானே தழுவினாள்; எ - று.)

(கு - பு.) மலையரையன் பயந்த பாவையாகிய உமை - பர்வதராசனான இமவான் பெற்ற பெண்ணாகிய பார்வதி. அலைப்ப - இடம்விட்டுப் பெயர்த்து அசைக்க. ஆர - நன்றாக. சிவபிரான் உமையினது ஊடலைத் தணிக்கமுயல்கையில் அவள் வெருவுதலாகிய வேறொரு காரணத்தால் தழுவுதலாகிய காரியம் எளிதிற் கைகூடியமை காண்க. (எஉ)

சமாயிதவலங்காரம் முற்றும்.

---

## உஉ. உதாத்தவணி.

சஎ. வியத்தகு செல்வமு மேம்படு முள்ளமு
முயர்ச்சிபுனைந் துரைப்ப துதாத்த மாகும்.

என்பது: நிறுத்தமுறையானே உதாத்தமென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) வியக்கத்தக்க செல்வத்துஉயர்ச்சியையும் மேம்பட்ட உள்ளத்து உயர்ச்சியையும் மிகுத்துச்சொல்வது, உதாத்தமென்னும் அலங்காரமாம்; (எ-று.)

RangaRakes tamilnavarasam.com

(கு - பு.) இது தமிழில் வீறுகோளணி யெனப்படும். இதனை உதாரதை யென்பர் ஒருசாரார்.

(க) செல்வமிகுதி - "கன்றும் வயவேந்தர் செல்வம் பலகவர்ந்து, மென் றும் வறிஞ ரினங்கவர்ந்து - மொன்று, மறிவரிதாய் நிற்கு மளவினதா லம்ம, செறிகதிர்வேற் சென்னி திரு" எனவரும். (கவர்தல் - கொள்ளுதல். ஆல் - அசை. சென்னி - சோழன்.)

(கு - பு.) இ - ள். கோபிக்கிற வலிய அரசர்களுடைய செல்வங்கள் பல வற்றையும் நாள்தோறும் கவர்ந்துகொண்டு வருதலாலும், வறியோர் கூட்டத் தால் எப்பொழுதுந் தான் வேண்டியபடி எடுத்துக்கொள்ளப்படுதலாலும், வலி மைமிக்க ஒளியையுடைய வேலாயுததத்தையுடைய சோழனது செல்வமானது சிறிதும் அளவறியப்படாததாய் நிற்கும்; எ - று. அம்ம - வியப்பிடைச்சொல்; செல்வமிகுதியை வியந்து கூறியது.

(உ) உள்ளமிகுதி-"மண்ணகன்று தன்கிளையி னீங்கி வனம்புகுந்து, பண் ணுந் தவத்தசைந்த பார்த்தன்றூ, னெண்ணிறந்த, மீதண்டர் கோன்குலையும் வெய்யோர் குலந்தொலைத்தான், சோதண்ட மேதுணையாக் கொண்டு" என வரும். (இ - ள். இராச்சியத்தைக் கைவிட்டுத் தன்சுற்றத்தையகன்று காட் டிற்புகுந்து செய்யப்பட்ட தவத்தால் வருந்தியிளைத்த பார்த்தனுனவன், எண் ணளவற்ற ஆகாயத்துத் தேவர்கட்குக் கோமானாகிய இந்திரன் நடுங்க வரும் உக்கிரத்தையுடைய அசுரர்குலங் கெட அறுத்தான், தனது கோதண்டமே துணையாக; எ - று. பார்த்தன் - அருச்சுனன். அண்டர் - தேவர். கோத ண்டம் - வில்)

(கு-பு.) உள்ளமிகுதி-ஊக்கம். வெய்யோர்-நிவாதகவசரும் காலகேயரும். முறையே இவற்றினுள் செல்வமிகுதியும், உள்ளமிகுதியும் வந்தவாறு காண்க.

உதாத்தவலங்காரம் முற்றும்.

## உரு. அவனுதியணி.

சஅ. சிறப்பினும் பொருளினுங் குணத்தினு முண்மை
மறுத்துப் பிறிதுரைப்ப தவனுதி யாகும்.

என்பது: நிறுத்தமுறையானே அவனுதியென்னும் அலங்காரம் உணர்த் துதல் நுதலிற்று.

(இ - பு.) சிறப்பினானும், பொருளினானும், குணத்தினானும் ஆகிய உண் மையை மறுத்துப் பிறிதொன்றாக உரைப்பது, அவனுதியென்னும் அலங்கார மாம்; (எ - று.)

(கு - பு) அவனுதி - அபஹ்நுதி என்ற வடசொல்லின் திரிபு. இதனை ஒழிப்பணி யென வழங்குதலும் உண்டு. இதன் இலக்கணம் - ஒன்றில் ஒரு தன்மையை நீக்கி மற்றொருதன்மையை யேற்றுதல்.

அவற்றுள்,

(க) சிறப்பவனுதி - "நறைகமழ்தார் வேட்டார் நலனணியு நாணு, நிறை யு நிலைதளரா நீர்மை - யறநெறிசூழ், செங்கோல னல்லன் கொடுங்கோலன் றெவ்வடுபோர், வெங்கோப மால்யானை வேந்து" எனவரும். (இ - ள். நறு நாற்றத்தையுடைய மாலையை ஆசைப்பட்ட மடவாருடைய அழகும் அணியும் நாணும் நிறையும் நிலைதளராதபடி தாங்கும் அறநெறியினையுடைத்தாகிய செங் கோலையுடைய னல்லன்: கொடுங்கோன்மையுடையவன்; போர்க்களத்துப் பகைவரை யட்ட வெவ்விய கோபத்தையுடைய பெரிய யானையையுடைய வேந்தன்; எ - று.)

RangaRakes tamilnavarasam.com

(கு - பு.) அணி - ஆபரணம். நிறை - மனவுறுதி. அறநெறி - தருமமார்க்கம். அட்ட - கொன்ற. அரசனிடங் காதல்கொண்ட மகளிர் அழகு முதலியன சோர்கின்றன ரென்பது கருத்து. அதனை அவன்மேலேற்றி, தன்னை விரும்பிய மெல்லியலாரது பொருள்களை அழியாதபடி பாதுகாக்குஞ் செங்கோன்மை யுடையவனல்லன், அவையழியப் பார்த்திருக்குங் கொடுங்கோன்மை யுடையவன் என்றார். இங்கு 'செங்கோலன்' என்ற சிறப்புண்மையை மறுத்து 'கொடுங்கோலன்' எனப்பிறிதொருதன்மையையேற்றிக்கூறியமைகாண்க.

(உ) பொருளவனுதி - "நிலனும் விசும்பா நிமிர்காணீர் தீயா, மலர்கதிராம் வான்மதியா மன்றி-மலர்கொன்றை, யொண்ணறுந் தாரா னொருவனிய மானனுமா, மெண்ணிறந்த வெப்பொருளு மாம்" எனவரும். (இ - ள். விரிந்த கொன்றைப்பூவினாற்செய்த நறுநாற்றத்தையுடைய ஒள்ளியமாலையை அணிந்தவனும் ஏகனுமாகிய பரமசிவன், நிலமும் ஆகாயமும் உயர்ந்தகாற்றும் நீரும் தீயும் பரந்தகதிரையுடைய இரவியும வெள்ளியமதியமு மாகிய ஏழாதலுமன்றி ஆன்மாவுமாய் எண்ணிறந்த எல்லாப்பொருளு மாவான்; எ - று.)

(கு - பு.) இயமானன் - யஜமாநன்: வேள்வித்தலைவன்; ஆன்மாவுமென்பர். 'இயமானனுமாம்' என்றவிடத்து 'உயிர்க்குயிராம்' என்றும் பாடமுண்டு. ஏகன் - ஒருவன். இங்கு 'ஏகன்' என்ற பொருளுண்மையை மறுத்து 'எண்ணிறந்தவெப்பொருளுமாம்' எனப்பிறிதொருதன்மையையேற்றிக்கூறியமைகாண்க.

(௩) குணவவனுதி - "மனுப்புவிமேல் வாழ மறைவளர்க்கு மாரப், பனித்தொடையற் பார்த்திபர்கோ னெங்கோன் - றனிக்கவிகை, தண்மை நிழற்றன்று தற்றொழுத பேதையர்க்கு, வெம்மை நிழற்றாய் மிகும்" எனவரும். (இ-ள். மாநதர் பூவுலகின் இனிதுஉயிர்வாழ வேதாகமநெறியை வளர்க்குந் தண்ணிய ஆத்திமாலையையுடையவனாகிய அரசர்க்குக்கோமானாகிய எம்இறைவனான சோழராசனது தனிக்குடையானது, தண்ணியநிழலையுடையதன்று; அவனைக் கண்ட மடவார்க்கு மிக்க வெய்யதன்மையைப் பண்ணாநிற்கும்; எ-று. தொடையல்-மாலை. பார்த்திபர் - அரசர். தனிக்கவிகை-ஒற்றைவெண்கொற்றக்குடை.)

(கு - பு.) மனு - மனுவின் மக்களான மனிதர்க்கு ஆகுபெயர். அவன் குடைநிழலில் வீற்றிருக்குங் காட்சியைக் கண்ட மகளிர் காதல்நோயால் தாபமடைவ ரென்பது கருத்து. அது, குடையின்மேலேற்றிக் கூறப்பட்டது. இங்கே 'தண்மைநிழற்று' என்ற குணவுண்மையை மறுத்து 'வெம்மைநிழற்று' எனப் பிறிதொருதன்மையை யேற்றிக் கூறியமை காண்க.

அவனுதியென்றது 'ஆதும்'என்றதனால், இவ்வலங்காரம் பிறஅலங்காரங்களோடுகூடி வருவனவுங் கொள்க. "நறவேந்துகோதைநலங்கவர்ந்து நல்கா, மறவேந்தன் வஞ்சியா னல்லன்-றுறையின், விலங்காமை நின்று வியன்றமிழ் நாடைந்தின், குலங்காவல் கொண்டொழுகுங் கோ" எனவரும். இது-வினைபற்றிய சிலேடையவனுதி. (நறவு - மது. ஏந்தல் - தாங்கல். துறையின் விலங்காமை - குலதருமத்தின் வழுவாமை. இதனுள் வஞ்சியானல்லனென்பதற்கு - கருவூரையுடைய சோழனல்லனென்றும், பிறரைவஞ்சியாதொழிவானல்லனென்றும்சிலேடையாகப்பொருள்கொள்க.) பிறவும்வந்தவழிக்கண்டுகொள்க.

(கு - பு.) இ - ள். தேனினைக் கொண்ட மாலையைச் சூடிய மாதினது அழகைக் கவர்ந்துகொண்டு மீண்டும் அதனை அவட்குக் கொடுத்தருளாத கொடுமையையுடைய அரசன், பிறரைவஞ்சியாதவனல்லன் [வஞ்சியென்னும் ஊரையுடைய சோழனல்லன்]; குலதருமத்தில் வழுவாமல் நின்று பெரிய ஐவகைத் தமிழ்நாட்டையும் பாதுகாத்தொழுகும் பாண்டியன்; எ - று. வஞ்சியானல்லன் என உண்மையை மறுத்துப் பிறிதொருதன்மையை யேற்றிக்கூறுதலால் அவனுதியணிக்குஇடமாகிய இச்செய்யுளில்,'வஞ்சியானல்லன்' என்பது

RangaRakes tamilnavarasam.com

சிலேடைவகையால் வேறொருபொருளும் படுதல் காண்க. 'மறவேந்துகோதை நலங்கவர்ந்து நல்கா மறவேந்தன்' என்றது - தன்னிடங் காதற்பெருவேட்கை கொண்டு நலமிழந்த மாதைத் தான்கூடி அவட்கு அந்நலத்தை மீண்டும்உண்டாக்காமையாற கொடியவ னென்றவாறு. இவ்வணி - வெற்றொழிப்பு, காரணவொழிப்பு, வேறுபாட்டொழிப்பு, மயக்கவொழிப்பு, வல்லொரொழிப்பு, வஞ்சவொழிப்பு எனப் பலவாறு விகற்பித்துக்கூறவும்படும். (எச)

அவனுதியலங்காரம் முற்றும்.

## உச. சிலேடையணி.

சக. ஒருவகைச் சொற்றொடர் பலபொருட் பெற்றி
தெரிவுதர வருவது சிலேடை யாகும்.

என்பது: நிறுத்தமுறையானே சிலேடையென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒருவகையாகின்ற தொடர்சொல் பலபொருள்களது தன்மை தெரிய வருவது, சிலேடையென்னும் அலங்காரமாம்; (எ - று.)

சிலேடையென்றது 'ஆதும்' என்றதனால், தொடர்சொல்லேயன்றி ஒரு சொல்லே பலபொருட்பெற்றி தெரிவுதர வருவதும் அவ்வலங்காரமாம் என்க.

(கு - பு.) சிலேடை - ச்லேஷா என்ற வடசொல்லின் திரிபு. ஒருவகையான சொற்றொடர் பலபொருளமைதிக்கு உதவுமாறு கூறுதல், இதன் இலக்கணம். இதனைப் பல்பொருட்சொற்றொடரணியென வழங்குதலும் உண்டு. 'தெரிபுதரவுரைப்பது' என்றும் பாடம். (எரு)

ருO. அதுவே,
செம்மொழி பிரிமொழி யெனவிரு திறப்படும்.

என்பது: அச்சிலேடையை விரித்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அச்சிலேடை, செம்மொழிச் சிலேடையும் பிரிமொழிச் சிலேடையும் என இருவகைப்படும்; (எ - று.)

அவற்றுள்,

(க) செம்மொழிச்சிலேடை - ஒருவகையாகின்று பலபொருள்படுவது. அது "செங்கரங்க ளானிரவு நீக்குந் திறம்புரிந்து, பங்கய மாதர் நலம்பயிலப் - பொங்குதயத், தோராழி வெய்யோ னுயர்ந்த நெறியொழுகு, நீராழி நீணிலத்து மேல்" என வரும். (இ - ள். சிவந்த கரங்களான் இருள்கடியுந் திறமை மிக்குத் தாமரை காதலிக்கும் வனப்புடைத்தாக மேனோக்கிய தோற்றத்தையுடைய ஒருகாலூர்திப்பகலோன் வானெறியொழுகும், கடல்சூழ்ந்த புவிமீது எனவும்; சிவந்தகைகளான் உலகிலுள்ளோர்மிடிதீர்க்குந் தொழில மிக்குத் திருமடந்தை செல்வம் பெருக மேம்பட்டாகின்ற பொருள்வருவா யுடையானுமாய்த் தனிச்சக்கரத்தையுடையானுமாய் உலகிலுள்ளாரால் விரும்பப்படும் விசேடநெறியே யொழுகுவான், கடல்சூழ்ந்த உலகத்து எனவும் வந்தவாறு காண்க. ஆதித்தன்மேற் செல்லுங்கால்—கரம் - கதிர். இரவு - இருள். நீக்கல்-கடிதல். பங்கயம் - தாமரை. மாதர் - காதல். நலம் - அழகு. பயிலல் - உண்டாதல். பொங்குதல் - மேனோக்கிவளர்தல். உதயம் - தோற்றம். ஓராழி - தேரின் தனிக்கால். வெய்யோன் - ஆதித்தன். உயர்ந்தநெறி - ஆகாயம். சோழன் மேற் செல்லுங்கால்—கரம் - கை. இரவு - மிடி. நீக்கல் - தீர்த்தல். பங்கய மாதர் - திருமடந்தை. நலம் - செல்வம். பயிலல் - பெருகுதல். பொங்குதல் -



RangaRakes tamilnavarasam.com

மேம்படுதல். உதயம் - பொருள்வருவாய். ஓராழி - தனிச்சக்கரம். வெய்யோன் - விருப்பமுடையோன். உயர்ந்தநெறி - சான்றோராற்புகழப்படும்வழி. நெறி யென்றது, ஈண்டு ஒழுக்கம்.) இது - ஆதித்தனுக்கும், சோழனுக்கும் சிலேடை.

(கு - பு.) சொல் நின்றநிலைகுலையாமல் ஒருகாம்பில்இருகாய்போலப் பல பொருள்படுவது, செம்மொழிச்சிலேடை. இது வடமொழியில் அபிந்நபதச்லேஷை யெனப்படும். இச்செய்யுளில் சொற்கள் வெவ்வேறுவகையாப் பிரிக்கப்படாமல் ஒருவகையாகவே நின்று இருபொருள்தந்தமை காண்க. சரம் - கிரணம். கடியும் - ஒழிக்கும். ஒருகாலூர்திப்பகலோன் - ஒற்றைத்தனியாழித் தேருடைய சூரியன். வானெறி - ஆகாசமார்க்கத்திலே. ஒழுகும் - நடக்கும். மிடி - வறுமை. வருவாய் - வரும்வழி. தனிச்சக்கரம் - இரண்டற்ற ஆஜ்ஞா சக்கரம். 'நீராழிசூழ்ந்தநிலத்து' என்றும் பாடமுண்டு.

(உ) பிரிமொழிச்சிலேடை - ஒருவகையாநின்ற சொல்லைப் பிரித்துத் தொகைவேறுபடுத்துப் பலபொருளாகக் கொள்வது. அது "தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய, வெள்ளா வரிமா னிடர்மிகுப்ப - வுள்வாழ்தேஞ், சிந்துந் தகைமைத்தே யெங்கோன் றிருவுள்ள, நந்துந் தொழில்புரிந்தார் நாடு" என வரும். (இ - ள். அழகுகெடாத நிலங்களி லுண்டாய பகட்டேர் பெரியதாமரையைப் பொருந்தவும் இகழப்படாத நெற்கூட்டை உழவர் திரட்டவும் அத்தாமரை மலரிலுண்டாய தேன் பொழியும் பெருமையையுடைத்து, எங்கோமானாகிய சோழனுடைய திருவுள்ளஞ் சிறக்கும்வகை ஒழுகினோர் நாடு எனவும்; அசையாத விடத்தேரென்னும் மரமுடைத்தாய்ப் பெரிய மலைச்சிகரங்களைத் தாவும் மரைகளை யுடைத்தாய் இகழப்படாத சிங்கப்போத்துகள் துன்பமுறுத்தவும்பட்டு நல்லோருள்ளங்களில் வாழும் நாடுகளெல்லாம் அழிவுபடுந்தன்மையையுடைத்தாம், எம்கோமானாகிய சோழன் திருவுள்ளம் வேறுபடுந் தொழில் பயின்றார் நாடு எனவும் வந்தவாறு காண்க. சோழன்பகையாகாதார் நாட்டின்மேற் செல்லுங்கால்—தள்ளா இடம் - அழகுகெடாத நிலம். ஏர் - உழவெருது. தடந்தாமரை - பெரியதாமரை. தடத்தாமரை, 'தடந்தாமரை' என மெலிந்தது. அடைதல் - பொருந்துதல். எள்ளாத - இகழாத. அரி - நெற்கூடு. மானிடர் - உழவர். மிகுத்தல் - திரட்டல். உள்வாழ்தல் - உள்ளேயுண்டாதல். தேம் - தேன். சிந்தல் - பொழிதல். தகைமை - பெருமை. திருவுள்ளம் நந்தல் - அழகியமனஞ் சிறத்தல். பகைத்தார் நாட்டின்மேற் செல்லுங்கால்—தள்ளா - அசையா. விடத்தேர் - ஒருமரம். தடம் - மலை. தாமரை - தாவுமரை. அடைதல் - சேர்தல். எள்ளாத - இகழாத. அரிமான் - சிங்கப்போத்து. இடர்மிகுத்தல் - துன்பமுண்டாக்குதல். உள் - மனம். வாழ்தல் - மேவல். தேம் - நாடு. சிந்துகை - அழிவுபடுகை. தகைமை - தன்மை. நந்துந்தொழில் - வேறுபடுந் தொழில்.) இது-சோழனுடைய மனங் களிக்கும்படி நடந்தோருடைய நாட்டிற்கும், அவன்மனம் வெறுக்கும்படி நடந்தோருடைய நாட்டிற்கும் சிலேடை.

(கு - பு.) சொற்கள் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டுப் பலபொருள்கொள்ளப்படுவது, பிரிமொழிச்சிலேடை. இது வடமொழியில் பிந்நபதச்லேஷை யெனப்படும். பகடு ஏர் - உழும்எருது. கூடு - அரிக்குவியல். மரை-மான். சிங்கப்போத்து - ஆண்சிங்கம். இதில், தள்ளா இடத்து ஏர் எனவும் தள்ளா விடத்தேர் எனவும், தாமரையெனவும் தாம் மரை எனவும், அரி மானிடர் எனவும் அரிமான் இடர் எனவும் வெவ்வேறுவகையாப் பிரிந்து இருபொருள் படுதல் காண்க. 'உள்வாழ்தேஞ்சிந்துந்தகைமைத்தே' முதலிய செம்மொழிச் சிலேடையும் சிறுபான்மை இருப்பினும், பெரும்பான்மைபற்றிப் பிரிமொழிச் சிலேடையாம். (௭௯)

RangaRakes tamilnavarasam.com

௫௧. ஒருவினை பலவினை முரண்வினை நியம
நியம விலக்கு விரோத மவிரோத
மெனுமெழு வகையினு மியலு மென்ப.

என்பதும்: அச்சிலேடையலங்காரத்தை விரித்துஉணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அச்சிலேடை - ஒருவினைச்சிலேடையும், பலவினைச்சிலேடையும், முரண்வினைச்சிலேடையும், நியமச்சிலேடையும், நியமவிலக்குச்சிலேடையும், விரோதச்சிலேடையும், அவிரோதச்சிலேடையும் என்னும் ஏழு கூறுபாட்டான் நடக்குமென்று சொல்லுவர், (நூலோர்); (எ - று.)

அவற்றுள்,

(௧) ஒருவினைச்சிலேடை யென்பது - ஒரு வினையான் வருவது. அது "அம்பொற் பணைமுகத்துத் திண்கோட் டணிநாகம், வம்புற்ற வோடை மலர்ந் திலங்க - வும்பர், நவம்புரியும் வானதியு நாண்மதியு நண்ணத், தவம்புரிவார்க் கின்பந் தரும்" எனவரும். (இ- ள். அழகிய பொலிவுடைய பருத்த முகத்தின் கண்ணே திண்ணியகோட்டையுடைத்தாய் அழகுபெற்ற யானையானது, கச்சோடுகட்டிய பட்டம் விரிந்துவிளங்க முடிமீது ஒளிமிக்குப் பெரிதாகிய கங்கையும்இளம்பிறையும் பொருந்த வந்து, தவஞ்செய்வோர்க்கு வேண்டியஇந்திர பதங்கள் முதலாகிய இன்பங் கொடுக்கும் எனவும்; அழகியபொன்னோடுகூடிய வேய்மிடைந்த பக்கமுடைத்தாய்த் திண்ணியசிகரங்களையுமுடைத்தாய் அழகு பெற்ற மலை, விரைகமழும்ஓடை பூத்துவிளங்கத் தன்மீது ஒளிமிக்குப் பெரிதாகிய கங்கையும் பிறையும் மருவும்படி உயர்ந்து, தவஞ்செய்வோர்க்கு அவர் வேண்டிய பொருள்களெல்லாங் கொடுக்கும் எனவும் வந்தவாறு காண்க. விநாயகர்மேற் செல்லுங்கால்—பொன் - பொலிவு. பணை - பருத்தல். முகம் - வதனம். கோடு - மருப்பு. நாகம் - யானை. வம்பு - கச்சு. உறுதல் - கட்டுதல். ஓடை - பட்டம். மலர்தல் - பரத்தல். உம்பர் - முடி. இன்பம் - இந்திரபதம் முதலாய போகம். மலைமேற் செல்லுங்கால்—பொன் - கனகம். பணை - மூங்கில். முகம் - பக்கம். கோடு - சிகரம். நாகம் - மலை. வம்பு - மணம். உறுதல் - உண்டாதல். ஓடை - வாவி; ஒருமரமுமாம். மலர்தல் - பூத்தல். உம்பர் - மேல். இன்பம் - தவத்தொழில்புரிவார்க்கு அவர்வேண்டிய உணவுகளுந் தண்ணீருமாகிய பலவகைப்பட்ட பண்டங்கள். இப்பாட்டினுள் 'நவம்புரியும் வானதியு நாண்மதியு நண்ணத் தவம்புரிவார்க்கு' என்பதன் பொருள், இரண்டிலைக்கும் ஒக்கும்) இது - விநாயகருக்கும், மலைக்கும் சிலேடை.

(கு - பு.) விநாயகர்மேற் செல்லுங்கால் - பொற்பு அணை எனப்பிரித்து, பொலிவோடு கூடிய என்று பொருள்கொள்ளினுமாம். மருப்பு - தந்தம். மலை- இங்கே இமயம்; அதன்மேலேயே கங்கை உள்ளது. வானதி என்பதற்கு-பெரியயாறு என்று மாத்திரமே பொருள்கொண்டால், வேறுமலையு மாகலாம். 'மாநதி' என்றும் பாடமுண்டு. இங்கு, தரும் என ஒருவினையையே கொண்டு வந்தமை காண்க.

(௨) பலவினைச்சிலேடை யென்பது - பல வினையான் வருவது. அது "தவிரா மதுவுண் களிதளிர்ப்ப நீண்டு, செவிமருவிச் செந்நீர்மை தாங்கிக் - குயிலிசையு, மின்னுயிரா நுண்ணிடையார் மென்னோக்கு மேவலா, ரின்னுயிரை யீர்கின் றன" எனவரும். (இ - ள். இடைவிடாமல் நறவுண்ணவந்த களிப்புஉண்டாக நீண்டு செவியுட்புக்கு நிறைந்து கோடாத நீர்மையவாகிய குயிற்குரல் பிரிந்தோருயிர்களை வருத்தஞ்செய்யாநின்றன எனவும்; விடுதற்கரிதாகியகள்ளை யுண்ட மயக்கத்தாலே தழைத்து நீண்டு செவியளவுஞ்சென்று

RangaRakes tamilnavarasam.com

சிவந்தகுளிர்ச்சியினையுடையவாகிய மின்னையொத்த சிறுமருங்குலினையுடையார் மெல்லியவாகியகண்கள் தம்மைப்புணருந் தலைவருடைய இனியஉயிரை நலியாநின்றன எனவுங் கொள்க. குயிற்குரன்மேற் செல்லுங்கால்—மது - தேன். செவிமருவி - செவியுட்புக்கு. செந்நீர்மை-கோடாததன்மை. மேவலார் - பிரிந்தார். இன் - சாரியை. கண்ணின்மேற் செல்லுங்கால்—மது - கள். செவிமருவி - செவியளவுஞ் சென்று. செந்நீர்மை - சிவந்தகுளிர்ச்சி. மேவலார் - புணருந்தலைவர். இன்னுயிர் - இனியஉயிர்.) இது - குயிற்குரலுக்கும், மடவார் கண்ணுக்கும் சிலேடை.

(கு - பு.) இங்கு நீண்டு, மருவி, தாங்கி, ஈர்கின்றன எனப் பலவினைகளைக்கொண்டு வந்தமை காண்க. மேவலார் என்பது -பிரிந்தாரை யுணர்த்தும்போது எதிர்மறை வினையாலணையும்பெயராய்ச் சேராதவரென்று பொருள்படுதலும், புணர்ந்தாரை யுணர்த்தும்போது உடன்பாட்டுவினையாலணையும்பெயராய் மேவுதலையுடையா ரென்று பொருள்படுதலுங் காண்க.

(௩) முரண்வினைச்சிலேடை யென்பது -மாறுபட்ட வினையான் வருவது. அது "மாலை மருவி மதிதிரிய மாமணஞ்செய், காலைத் துணைமேவ லார்கடிய - வேலைமிசை, மிக்கார் கலியடங்கா தார்க்கும் வியன்பொழில்கள், புக்கார் கலியடங்கும் புள்" எனவரும். (இ - ள். மயக்கத்தைமருவிக் கருத்துவேறுபட மிகவும்மணங்கமழுங்காலத்துத் தந்துணைவரைப் பொருந்தாதார் அஞ்சக் கரைமீது மிக்குக் கடல் பொங்கியார்க்கும், அகன்றபொழில்கள்புக்கு ஒலியடங்கும் பறவைகள் எனவும்; அந்திப்பொழுது மருவித் திங்கள்உலாவ மிக்கிருந்த கூட்டம் புரியுங்காலத்துத் தந்துணைவரைப் பொருந்தினார் விளங்க எனவும் கொள்க: பின்பு ஒருதன்மை யெனக் கொள்க. பிரிந்தார்மேற் செல்லுங்கால்—மாலை - மயக்கம். மதி - கருத்து. திரிதல் - வேறுபடுதல். மணம் - வாசம். துணைமேவலார் - தம்துணைவரைப் பிரிந்தார். கடிய - அஞ்ச. புணர்ந்தார்மேற் செல்லுங்கால்—மாலை - அந்திப்பொழுது. மதி - திங்கள். திரிதல் - உலாவல். மணம் - கூட்டம். துணைமேவலார் - துணைவரைப்புணர்ந்தார். கடிய - விளங்க ) இது - பிரிந்தார்க்கும், புணர்ந்தார்க்கும் சிலேடை.

(கு - பு.) இங்கு அடங்காது ஆர்க்கும் ஆர்கலி அடங்கும் என வந்தவினைகள் ஒன்றுக்குஒன்று முரணுகுமாறு காண்க.

(௪) நியமச்சிலேடை யென்பது - சிலேடித்தவற்றை நியமஞ்செய்வது. அது "வெண்ணீர்மை தாங்குவன முத்தே வெறியவாய்க், கண்ணீர்மை சோர்வகடிபொழிலே - பண்ணீர்மை, மென்கோல யாழே யிரங்குவன வேல்வேந்தே, நின்கோ லுலாவு நிலத்து" எனவரும். (இ - ள். வெற்றியையுடைய வேல்வேந்தனே! நின்செங்கோல்உலாவும உலகத்து வெண்மைநிறத்தையுடைத்தாயிருப்பன முத்தே யெனவும், விரைநாற்றத்தையுடைத்தாய் மதுச்சோரநிற்பன பெரியபொழிலே யெனவும், குளிர்ந்தஓசையையுடைத்தாய் அழகோடுகூடி மெல்லியதாய்ப் பிறர்க்குமனக்குழைவுகொடுப்பன யாழே யெனவும் கிடந்தமையால், என்னப்பட்டஇவையொழிய அறிவின்மை தாங்குவதும், மிடியையுடைமையாற் கண்ணீர்சொரிவதும், பிறர்மனந்தளர்வதும் இல்லை யெனக் கிடந்தவாறு கண்டுகொள்க. வெண்ணீர்மை-வெண்ணிறமும், அறியாமையும். வெறியவாதல் - வாசமுடையனவாதலும், வெறுமையுடையனவாதலும். கண்ணீர்மை - கள்ளாகியநீரும், கண்ணினீரும்.)

(கு - பு.) 'மென்கோலியாழ்' என்ற பாடத்துக்கு - கோல் யாழ் எனப் பிரித்து, மெத்தென்றநரம்பையுடைய வீணை யென்க. சிலேடையால் இருபொருளுக்குப் பொதுவாகிய தன்மையை ஒருபொருளினிடத்தே வரையறுத்துக்காட்டியதனால், இது நியமச்சிலேடையாயிற்று.

RangaRakes tamilnavarasam.com

(ரு) நியமவிலக்குச்சிலேடை யென்பது - சிலேடித்தபொருளை நியமஞ் செய்து அந்நியமத்தை விலக்குவது. அது "சிறைபடுவ புட்குலமே தீம்புனலு மன்ன, விறைவநீ காத்தளிக்கு மெல்லை - முறையிற், கொடியன மாளிகையின் குன்றமே யன்றிக், கடியவிழ்பூங் காவு முள" எனவரும். (இ - ள். தலைவனே! நீ காத்தளிக்கும் நிலவரைப்பிற் சிறையுடைத்தாயிருப்பன புட்சாதியே, 'தீம்புனலும் அன்ன' என்றதனால், தித்தித்தபுனல்களும் சிறையுடைய; கொடியையுடையன குன்றம்போன்ற மாளிகைகளே, அன்றி 'கடியவிழ்பூங்காவு முள' என்றதனால், நாற்றம்பரந்த பூவையுடைய சோலைகளும் கொடியையுடையன; எ - று. இதனால், சிறைபடுதலும் கொடுமையும் இவன்காக்கின்ற நிலத்தின்கண் இல்லை யெனக் கிடந்தவாறு கண்டுகொள்க. சிறை - சிறகும், கரையும், சிறைச்சாலையும். கொடி - பதாகையும், வல்லியும், கொடுமையும்.)

(கு - பு.) நியமித்ததை விலக்கி அத்திறத்தை மற்றொன்றிலுங் காட்டியதனால், இது நியமவிலக்குச்சிலேடையாயிற்று.

(சா) விரோதச்சிலேடை யென்பது - முன்னர்ச்சிலேடித்தவற்றைப் பின்னர் விரோதிப்பச் சிலேடிப்பது. அது "விச்சா தரனேனு மந்தரத்து மேவானு, லச்சுத னேனுமம் மாயனல - னிச்ச, நிறைவான் கலையா னகளங்க னீதி, யிறையா னநகனெங் கோ" எனவரும். (இ - ள். விஞ்சையர் ஆகாயத்திலே யேவுவார், சோழன் கேட்டின்கட் செல்லான்; திருமால் மாயமுடையானாதலால் மாயனெனப்படுவன், இவன் அம்மாயமிலனாதலால் மாயனெனப்படான்; நாடோறும் நிறைந்த வெண்மைபெய்துங் கலைகளையுடையனாகிய சந்திரன் களங்கமுடையவன், நாடோறுங் கலைநூல்களாற் பெருக்கமுடையனேனும் சோழன் அகளங்கனெனப்பட்டான்; முக்கட்கடவுள் பொருப்புடையனாதலால் நகனெனப்பட்டான், சோழனாகிய எங்கோன் தீவினையின்மையால் அநகனெனப்பட்டான்; எ - று. விச்சாதரனென்பது - விஞ்சையராகிய தேவசாதிக்கும், வித்தையையுடையசோழனுக்கும் பெயர். அந்தரமென்பது - ஆகாயத்திற்கும், கேட்டிற்கும் பெயர். அச்சுதனென்பது - திருமாலுக்கும், கேடில்லாதசோழனுக்கும் பெயர். நிறைவான்கலையானென்பது - கலையையுடைய சந்திரனுக்கும், கல்வியால்நிறைந்த சோழனுக்கும் பெயர். களங்கமென்பது - மாசுக்கும், பாவத்துக்கும் பெயர். நீதியிறையான் என்பது - முக்கட்கடவுளுக்கும், நீதிநெறியரசனானசோழனுக்கும் பெயர். அநகன் என்பது-மலையில்லாதோனுக்கும், பாவமில்லாதோனுக்கும் பெயர். இதனை நகன் அநகன் எனப்பிரித்துக்கொள்க )

(எ) அவிரோதச்சிலேடை யென்பது - முன்னர்ச்சிலேடித்தபொருளைப் பின்னர் விரோதியாமற் சிலேடிப்பது. அது "சோதி யிரவி கரத்தா னிரவொழிக்கு, மாதிடத்தான் மன்மதனை மாறழிக்கு - மீதா, மனகமதி தோற்றிக் குமுத மளிக்குந், தனத னிருநிதிக்கோ னான்" எனவரும். (இ - ள். ஒளியினையுடைத்தாகிய ஆதித்தன் தன்கதிர்களாலே இருளை நீக்குவான், புகழையுடையனாய் இரவிகுலத்தில் தோன்றிய இரவியென்னும் பெயரினை யுடையனாகிய சோழன் கைகளாலே பிறருடைய வறுமையைத் தீர்ப்பான்; உமாதேவியை இடப்பாகத்திலுடையான் காமனை மாறாக்கி யழிப்பான், இவன் மிகுந்த திட்பமுடையனாதலால் மன்னவர்வலியினை மாறுகொண்டு கெடுப்பான்; ஆகாயத்தில்தோன்றிய குற்றமற்ற மதி உதயஞ்செய்து குமுதங்களை அலர்த்தும், இவன் மேலாய குற்றமற்ற அறிவு தோன்றிப் பூதலத்துக்குவற்ற மகிழ்ச்சியைக் கொடுப்பான்; குபேரன் தனதனென்னும் பெயரையுடையவனாய் இருநிதிக்குத் தலைவனாவான், இவனும் பிறருக்குப்பொருளையளித்து மிக்கபொருளுக்கு முதல்வனென்னப்படுவான்; எ - று. சோதி - ஒளியும், புகழும். இரவி -

RangaRakes tamilnavarasam.com

சூரியனும், சோழனும். கரம் - கிரணமும், கையும். இரவு - இருளும், இரத்தலும். மாதிடத்தான் - சிவனும், மிக்கதிட்பத்தையுடைய சோழனும். மன்மதன் - காமனும், மன்னரதுவலியும். மதி - சந்திரனும், அறிவும். குமுதம் - ஆம்பலும், பூதலமகிழ்ச்சியும். தனதன் - குபேரனும், செல்வத்தைக்கொடுக்கிற சோழனும். இருநிதி - சங்கநிதி பதுமநிதியும், மிக்க பொருளும்.)

(கு - பு.) மாதிடத்தான் - மாது இடத்தான் எனவும், மா திடத்தான் எனவும் பிரிக்க. மன்மதன் என ஒரு சொல்லாகவும், மன் மதன் என இருசொல்லாகவும் அமையும். மேல்வருஞ் சொல்லணியியலில், இடையிட்டுவந்த இடைமுற்றுமடக்குக்கு உதாரணமாகக் காட்டப்படும் "பரவி நாடொறும் படியவாம் பல்புகழ்ப் பரப்பி, விரவி சீறிய படியவாம் பரியெரி கவர" என்னுஞ் செய்யுளிலும் இரவியென்பது சோழனென்னும்பொருளில் வருதல் காண்க.

இனி, இயலும் என்று ஒழியாது 'என்ப' என்ற மிகையான், இவ்வாறன்றிப் பிறவேறுபாட்டான் வருவனவுங் கொள்க; அவை வந்தவழிக் காண்க.

(கு - பு.) இது பலஅணிகளுக்கு அங்கமாய்நிற்றலை அவ்வவ்வணியிலக்கணத்திற் காணலாம். (எஎ)

சிலேடையலங்காரம் முற்றும்.

---

## உ௫. விசேடவணி.

௫உ. குணந்தொழின் முதலிய குறைபடு தன்மையின்
மேம்பட வொருபொருள் விளம்புதல் விசேடம்.

என்பது: நிறுத்தமுறையானே விசேடமென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-பு.) குணமும் தொழிலும் சாதியும் பொருளும் உறுப்பும் முதலாயின குறைபடுதல்காரணமாக ஒருபொருட்குமேம்பாடுதோன்ற உரைப்பது, விசேடமென்னும் அலங்காரமாம்; (எ - று.)

(கு - பு) முதனூலில் விசேஷோக்தியெனப்பட்ட அணியே இங்கு விசேடமெனப்பட்டது. இதனைச் சிறப்பணியென்று வழங்குதலும் உண்டு. ஒன்றன்சிறப்புத்தோன்ற அதன்கருவிகளிற் குறைபாடுகூறுவது, இதன் இலக்கணம். இவ்விலக்கணத்தை விபாவனையணியில் ஒருபகுப்பாக அடக்கிவிட்டு, 'குறைவில்லாதகாரணமிருந்தும் காரியம்பிறவாமையைச் சொல்லுதல் விசேஷோக்தியின் இலக்கணம்' என்பர் ஒருசாரார்; அது தமிழிற் காரணவாராய்ச்சியணி யெனப்படும்.

அவற்றுள்,

(க) குணக்குறைவிசேடம் - "கோட்டந் திருப்புருவங் கொள்ளா வவர் செங்கோல், கோட்டம் புரிந்த கொடைச்சென்னி-நாட்டஞ், சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கஞ், சிவந்தன செந்தீத் தெற" எனவரும். (கோட்டம் - வளைதல். திருந்தார் - பகைவர். கலிங்கம் - கலிங்கதேசம். சென்னி - சோழன்.)

(கு - பு.) இ - ள். ஈகைக்குணமுள்ள சோழனுடைய அழகியபுருவங்கள் கோட்டத்தைக் கொள்ளவில்லை [வளையவில்லை]: பகைவர்களுடைய செங்கோல் கோட்டத்தை யடைந்தன [கெட்டுப்போயின]; சோழனுடைய கண்கள் சிவக்கவில்லை: பகைவர்களுடைய கலிங்கதேசங்கள் சிவந்ததீஎரித்தலாற் சிவந்தன; எ - று. சோழன் நன்றாகச்சினங்கொள்ளாதமுன்பே அவன்பகைவர் நிலைகுலைந்தன ரென்பது கருத்து. கலிங்கம் எழுவகைப்படுதலால், சிவந்

தன வெனப் பன்மையாற் கூறினர். 'செந்நீத்திறம்' என்று பாடமோதி, சிவந்தநெருப்புப்போல உதிரத்தாற்சிவந்தன வென்று உரைப்பாரு முளர். இது, குணத்திலே குறைவுகூறிக் காரியத்திலே மேம்பாடுதோன்றச் சொன்னமையால், குணக்குறைவிசேடமாம்.

(௨) தொழிற்குறைவிசேடம் - "எங்கா முகில்பொழியா நாளும் புனறேங்கும், பூங்கா விரிநாடன் போர்மதமா - நீங்கா, வளைபட்ட தாளணிகண் மாறெதிர்ந்தார்க் கந்நாட், டளைபட்ட தாட்டா மரை" எனவரும். (இ - ள். இடித்தலைச்செய்து முகில்பொழியாத நாளும் நீர்இரைத்தேறுங் காவிரியாற்றையுடைய நாடனுடைய போரில் வலியயானைகளின்கால்களெல்லாம் கழலாதபடி வளைத்திடப்பட்ட வீரக்கழல் பூண்டன; இவை இவ்வண்ணஞ்செய்ய, மாறுபட்டமன்னவர் கால்களாகிய தாமரைகளெல்லாம் தளையாகிய விலங்கு பூண்டன; எ - று. அந்நாட்டளைபட்ட வென்றது, யானைகளின்கால்கள் வீரக்கழல் பூண்டவன்றே பகைவர்தாள்களும் தளைபட்டன வெனக்கொள்க.)

(கு-பு) சோழன்யானைகள் போரணிபூண்டவளவிலே பகைவர் வென்று விலங்கிடப்பட்டன ரென்பது கருத்து. போரணிபூண்டுசென்று எதிர்த்துப் போர்செய்தலாகிய தொழிலில் போரணிபூணுதல்மாத்திரமே கூறிக் குறைபாடு காட்டிக் காரியத்தில் மேம்பாடுதோன்றச் சொன்னமையால், தொழிற்குறைவிசேடமாயிற்று. 'எங்காமுகில்பொழியாநாளும்புனல்தேங்கும்' என்றவிடத்தும் இவ்வணி அமைதல் காண்க. 'மாறெதிர்ந்ததெவ்வர்' என்றும் பாடமுண்டு.

(௩) சாதிக்குறைவிசேடம் - "மேய நிரைபுரந்து வெண்ணெய் தொடுவுண்ட, வாயனூர் மாறேற் றமர்புரிந்தார் - தூய, பெருந்தருவும் பின்னுங் கொடுத்துடைந்தார் விண்மேற், புரந்தரனும் வானோரும் போல்" எனவரும். (புரத்தல் - காத்தல். தொடுவுண்டல் - தோண்டியுண்டல். போல் - ஒப்பில்போலி.)

(கு - பு.) இ - ள். பொருந்தியபசுக்களைக் காத்து வெண்ணெயை முற்றும் எடுத்துஉண்ட இடைச்சாதியராகிய கண்ணபிரான் மாறுகநின்று எதிர்த்துப் போர்செய்தார், செய்யவே, மேலுலகத்து இந்திரனும் தேவர்களும் பரிசுத்தமானபெருமையையுடைய பாரிசாததருவையும் தமதுபின்புறத்தையுங் கொடுத்துத் தோல்வியுற்றார்கள்; எ-று. இங்கு 'ஆயனூர்'எனச் சாதியிற் குறைவுகூறிச் சிறந்ததேவசாதியரை வெல்லுசலாகிய காரியததில் மேன்மைதோன்றச் சொன்னமையால், சாதிக்குறைவிசேடமாயிற்று. மேயநிரைபுரந்து- பசுக்கள்மேயாநிற்க அவற்றைப் பாதுகாத்து எனினுமாம். 'தொடுபுண்ட' என்றும் பாடம். வாயனூர் எனப் பிரித்து, வெண்ணெயெடுத்துண்ட வாயையுடையவர் என்று உரைப்பது, சாதிக்குறைபாடுகாட்டாமையிற் சிறவாது. போல் என்றது - உரையசைமாத்திரமாய் நின்றது.

(௪) பொருட்குறைவிசேடம்-"தொல்லை மறைதேர் துணைவன்பாலி யாண்டுவரை, யெல்லை யிருநாழி நெறகொண்டோர் - மெல்லியலாள், ஓங்குலகில் வாழு முயிரனைத்து மூட்டுமோ, லேங்கொலிநீர்க் காஞ்சி யிடை" எனவரும். (தொல்லை - பழமை. மறை - வேதம். தேர்தல்-ஓதுதல். துணைவன்-தலைவன். பால் - இடம். மெல்லியலாள் - உமாதேவி. ஆல் - அசை. இடை - இடம்.)

(கு - பு.) இ - ள். மிக்கஒலியைச்செய்யும் நீர்வளத்தையுடைய காஞ்சீபுரத்தில் மெல்லியதன்மையையுடைய ஓர்மாது [அம்பிகை], பழமையானவேதங்களை யுணர்ந்த தன்கணவனிடத்து ஓராண்டளவும் இருநாழிநெல்லைப் பெற்று அதனைக்கொண்டே (முப்பத்திரண்டுதருமங்களையுஞ் செய்து) உயர்ந்தவுலகத்தில் வாழும் உயிர்களையெல்லாம் பரிபாலித்துவருவாளாயினாள்; எ - று. இங்கு

RangaRakes tamilnavarasam.com

'இருநாழிநெற்கொண்டு' எனப் பொருட்குறைகாட்டி அதனைக்கொண்டு 'உயிரனைத்துமூட்டும்' எனக் காரியத்தில் மேம்பாடுதோன்றக் கூறினமையால் பொருட்குறைவிசேடமாயிற்று. 'நெற்கொண்டே' என்றும் பாடம்.

(௫) உறுப்புக்குறைவிசேடம் - "யானை யிரதம் பரியா ளிவையில்லை, தானு மனங்கன் றனுக்கரும்பு - தேனார், மலரைந்தி னால்வென் றடிப்படுத்தான் மார, னுலகங்கண் மூன்று மொருங்கு" எனவரும். (இரதம் - தேர். பரி - குதிரை. ஒருங்கு - ஒருபடித்தாக.)

(கு - பு.) இ - ள். மன்மதனுக்கு யானை தேர் குதிரை காலாளாகிய சதுரங்கசேனைகள் இல்லை; அவன்தானும் உடம்பில்லாதவன்; வில்லோ (வலிமையில்லாத) கரும்பு; (அங்ஙனமிருந்தும்), அவன் தேன்நிறைந்த ஐந்துபூக்களைக் கொண்டே மூன்றுஉலகங்களையும் ஒருங்கேவென்று தன்கீழ்ப்படுத்தினான்; எ - று. இங்குக் கருவிகளிற் குறைபாடுகூறிக் காரியத்தில் மேம்பாடுதோன்ற உரைத்தமையால், உறுப்புக்குறைவிசேடமாயிற்று. 'தேனாண்மலரம்பாலெய்து வடுப்படுததான்காமன்' என்றும் பாட முண்டு. "நறைத்துளவம்புனை நம்பெருமாள் விற னாஞ்சொல்வதோ, மறைப்பரிபூட்டிய மாநிலத்தே ரில்லை வாளெயிற்றின், கறைப்பணிநாணுடை மேருவில் லில்லை கடும்பவனச், சிறைத்தழலம் பில்லை யொன்னாரறுபுரஞ் செற்றதற்கே" என்பதும் இதற்கு உதாரணமாம்.

பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

(கு - பு.) விபாவனையணியில் காரணமில்லாமற் காரியமுண்டாதல், இங்குக் காரணக்குறைவுபாட்டிற் காரியமுண்டாதல் என வேறுபாடு உணர்க. (௭௮)

விசேடவலங்காரம் முற்றும்.

## ௨௫. ஒப்புமைக்கூட்டவணி.

௫௩. கருதிய குணத்தின் மிகுபொரு ளுடன்வைத்
தொருபொரு ளுரைப்ப தொப்புமைக் கூட்டம்.

என்பது: நிறுத்தமுறையானே ஒப்புமைக்கூட்டமென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) ஒருபொருளைச் சொல்லுமிடத்து, தான்கருதியகுணம் முதலாயினவற்றின் மிக்கபொருளைக் கூடவைத்துச் சொல்லுவது, ஒப்புமைக்கூட்டமென்னும் அலங்காரமாம்; (எ - று.)

(கு - பு.) இதனை உடனிலைச்சொல்லணி யெனவும் வழங்குதல் உண்டு; இது வடமொழியில் துல்யயோகிதை யெனப்படும். உயர்விலாயினும் இழிவிலாயினும்சிறந்தவையோடு ஒருபொருளைக்கூட்டியுரைப்பது, இதன் இலக்கணம்.

௫௪. புகழினும் பழிப்பினும் புலப்படு மதுவே.

என்பது: அவ்வலங்காரத்தை விரித்துஉணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) அவ்வொப்புமைக்கூட்ட மென்னும் அலங்காரம், ஒன்றனைப் புகழ்தற்கண்ணும் பழித்தற்கண்ணுந் தோன்றும்; (எ - று.)

(௧) புகழொப்புமைக்கூட்டம்-"பூண்டாங்கு கொங்கை பொரவே குழைபொருப்புந், தூண்டாத தெய்வச் சுடர்விளக்கு - நாண்டாங்கு, வண்மைசால சான்றவருங் காஞ்சி வளம்பதியி, னுண்மையா லுண்டிவ் வுலகு" எனவரும். ('பூண்டாங்கு கொங்கைபொரவே' என்பது - உமாதேவியினுடைய அணிந்த அணிகலங்களையுடைய முலை பொரவே யென்றவாறு. 'குழைபொருப்பு' என்றது, திருவேகம்பத்துஇறையை. தெய்வச்சுடர்விளக்கு - நந்தாவிளக்கு.)

RangaRakes tamilnavarasam.com

(கு - பு.) இ - ள். ஆபரணங்களையணிந்த (உமாதேவியின்) தனங்கள் அழுந்துதலாலே திருமேனிநெகிழ்ந்த மலையும் [ஏகாம்பரநாதரும்], தூண்டவேண்டாத தெய்வத்தன்மையுள்ள ஒள்ளிய விளக்கும் [விளக்கொளியெம்பெருமானும்], (பிறர்) நாணங்கொள்ளும்படியான ஈகைக்குணம் மிக்க பெரியோரும் வளப்பமுள்ள காஞ்சீபுரியில் இருத்தலால், இந்நிலவுலகம் நிலைபெறுகின்றது; எ - று. இங்கு, பெரியோரைக் குழைபொருப்பும் தூண்டாவிளக்கு மாகிய உயர்பொருள்களோடு வைத்து உயர்த்திக்கூறியமை காண்க. 'காஞ்சிவண்பதியும்' என்று பாடமோதுவாரும் உளர்.

(உ) பழிப்பொப்புமைக்கூட்டம் - "கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும், உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும், இல்லிருந் தெல்லை கடப்பாளு மிம்மூவர், வல்லே மழையருக்குங் கோள்" என வரும்.
(இ - ள். கொள்ளுதற்குரிய பொருளை ஆசைப்பட்டுத் தன்கீழ்க்குடியை அல்லல்செய்யும் அரசனும், உண்மைசொல்லாது சலம்பற்றி வெவ்வேறு வழக்குச் சொல்லுவாரும், ஒருவனில்லிருந்து அவ்வெல்லை கடக்கின்றாளும் இம்மூவராலும் மிகுதியாக இவ்வுலகத்துக் காலமழை அருக்கப்படும்; எ - று. வல்லே என்றது - மிக என்றவாறு.)

(கு - பு.) அல்லல்செய்யும் - வருத்தும். சலம் - மாறுபாடு. ஒருவன்இல் இருந்து - ஒருவன் மனைவாழ்க்கையில் அவனுக்கு மனைவியாய் நின்று. அருக்கப்படும் - அருமையாக்கப்படும். வல்லேமழையருக்குங்கோள் - விரைவில் மழைபெய்யவொட்டாது தடுக்கிற கிரகமாவாராக வெனக். 'அறுக்கும்' என்று பாடமோதுவாருமுளர். இங்கு உடன்வைக்கப்பட்ட இழிபொருள்களால் இகழ்ச்சிதோன்றுதல் காண்க. (அ௦)

ஒப்புமைக்கூட்டவலங்காரம் முற்றும்.

## உஎ. விரோதவணி

௬௫. மாறுபடு சொற்பொருண் மாறுபாட் டியற்கை
விளைவுதர வுரைப்பது விரோத மாகும்.

என்பது: நிறுத்தமுறையானே விரோதமென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மாறுபட்ட சொல்லானும் பொருளானும் மாறுபாட்டுத்தன்மை விளைவுதோன்ற உரைப்பது, விரோதமென்னும் அலங்காரமாம்; (எ - று.)

(கு - பு.) இஃது முரணணியெனவும் வழங்குதலும் உண்டு. ஒன்றுக்கு ஒன்று முரணானவற்றை இசைப்பது, இதன் இலக்கணம். முரண்விளைந்தழிவணி யெனப்படும் விரோதாபாஸாலங்காரமும் இதன்பாற்படும். இதனை முரண்தொடை யெனச் செய்யுளிலக்கணத்தின்பாற்படுத்திக் கூறுவது, தமிழ்நூலார் கொள்கை. தொல்காப்பியத்துச் செய்யுளியலில் "மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே" என்றமை காண்க. அதன்உரையில் நச்சினார்க்கினியர் 'சொல்லும் பொருளும் பகைத்தல்காரணமாக முரண்தொடை வரும்,' 'அவை ஐவகைய: சொல்லுஞ் சொல்லும் முரணுதலும், பொருளும் பொருளும் முரணுதலும், சொல்லும் பொருளும் சொல்லொடு முரணுதலும், சொல்லும் பொருளும் பொருளொடு முரணுதலும், சொல்லும் பொருளும் சொல்லொடும் பொருளொடும் முரணுதலும் என,' 'இவை விரித்துநோக்கப் பலவாமாறும் விரித்துணர்ந்து கண்டுகொள்க' என உரைத்ததும் உணரத்தக்கது.

RangaRakes tamilnavarasam.com

அது "சோலை பயிலுங் குயின்மழலை சோர்ந்தடங்க, வாலு மயிலினங்க ளார்த்தெழுந்த - ஞாலங், குளிர்ந்த முகில்கறுத்த கோபஞ் சிவந்த, விளர்ந்த துணைபிரிந்தார் மெய்" எனவரும். (விளர்த்தல் - வெளுத்தல்.)

(கு - பு.) இ - ள். சோலைகளிற் பொருந்திய குயில்கள் அழகியசொற் களைச் சொல்லாமல் அடங்கிக்கிடக்க, ஆடுகின்ற மயிலின்கூட்டங்கள் ஆரவார ஞ்செய்துகொண்டு எழுந்தன; பூமிகுளிர்தற்குக்காரணமான மேகங்கள் கறுத் தன;இந்திரகோபமென்னும் பட்டுப்பூச்சிகள் சிவந்தன;இணைபிரிந்தவருடைய உடம்புகள் வெளுத்தன; எ - று. இது, கார்காலவருணனை. இதில் முன் னிரண்டடிகளில் மழலைசோர்ந்தடங்கலும் ஆர்த்தெழுதலும் ஒன்றோடொன்று மாறுபடுதலும், பின்னிரண்டடிகளில் கறுப்பும் சிவப்பும் வெளுப்பும் ஆகிய மாறுபட்டசொற்கள் இருத்தலுங் காண்க.

"காலையு மாலையுங் கைகூப்பிக் காறொழுதான், மேலை வினையெல்லாங் கீழவாங் - கோலக், கருமான்றோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப், பெருமானைச் சிற்றம் பலத்து" என்பதும் அது.

(கு - பு.) இ - ள். அழகியகரியயானைத்தோலையும் வெண்மையானவிபூதி யையும் சிவந்ததிருமேனியையும் பசிய கொன்றைப்பூமாலையையு முடைய சிவபிரானைச் சிதம்பரத்தில் காலையிலும் மாலையிலும கைகூப்பித் திருவடிதொ ழுதால், மேம்பட்ட ஊழ்வினைகள்யாவும் கீழ்மைப்படும்; எ - று. 'மேலைவினை யெல்லாங் கீழவாம்' என்பதற்கு - முற்பிறப்பிற்செய்த வினையனைத்தும் அழி வடையும் என்றும் பொருள்கொள்ளலாம். இங்கு காலை, மாலை; கைகூப்பு தல், கால்தொழுதல்; மேல், கீழ்; கருமை, வெண்மை, செம்மை, பசுமை என் பன ஒன்றோடொன்று மாறுபடுதல் காண்க.

இனி, இவ்வலங்காரம் பிறஅலங்காரங்களோடு கூடியும் வரும். "இனமா னிகல வெளிய வெனினும், வனமேவு புண்டரிகம் வாட்டும் - வனமார், கரியு ருவங் கொண்டு மரிசிதறக் காயும், விரிமலர்மென் கூந்தல் விழி" எனவரும். இது சிலேடைவிரோதம். (இ - ள். இனமாயுள்ள மான்கள் மாறுபடுதற்கு எளிவந்தும் காட்டுள்வாழும் புலிகளை வருத்தவல்லவாயின: காட்டியானைதன் வடிவைக்கொண்டும் சிங்கம் இரிந்தோடக் காயாநின்றன எனவும், இனிக் கண்களின்மேற் செல்லுங்கால், இனமாயுள்ள மான்விழிபோன்று வெண்மை யையுடையவாய் நீருடனேபொருந்திய கமலமலரை அழகழித்து அழகமர்ந்த மைமதர்ப்புடையவாய் அரிசிதற வெம்மைசெய்யவல்லன, விரிந்த மலரை யுடைய மெல்லியகூந்தலையுடைய இவளுடைய விழிகள்; எ - று. இகலுதல் - பகைத்தலும், ஒத்தலும். எளிய, வெளிய. வனம் - காடும், நீரும். புண்டரிகம் - புலியும், தாமரையும். வனம் - காடும், அழகும். கரி - யானையும், மையும். அரி - சிங்கமும், செவ்வரியும். சிதறல் - அழித்தலும், பரத்தலும். காய்தல் - கோபித்தலும், வருத்தலும்.) பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

(கு - பு.) அரி - (சிவந்த) இரேகை. கரியுருவம் - கறுத்தவடிவமுமாம். 'அரிசிதறிக்காட்டும்' என்றும் பாட முண்டு. (அக)

விரோதவலங்காரம் முற்றும்.

---

## உ௭. மாறுபடுபுகழ்நிலையணி.

௫சு. கருதிய பொருடொகுத் தாங்கது பழித்தற்கு
வேறொன்று புகழ்வது மாறுபடு புகழ்நிலை.

என்பது: நிறுத்தமுறையானே மாறுபடுபுகழ்நிலை யென்னும் அலங்கா ரம் உணர்த்துதல் நுதலிற்று.

RangaRakes tamilnavarasam.com

(இ-பு.) கவி, தான்கருதிய பொருளை மறைத்து அதனைப் பழித்தற்கு வேறொன்றனைப் புகழ்வது, மாறுபடுபுகழ்நிலையென்னும் அலங்காரமாம்; (எ-று.)

(கு-பு.) இதனைத் தெரிவில்புகழ்ச்சியணி யென வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் அப்ரஸ்துதப்ரசம்ஸை யெனப்படும். ஒருபொருளுக்குப் பழிப்புத்தோன்றப் பிரகிருதமல்லாததொன்றைப் புகழ்வது, இதன் இலக்கணம். அப்ரஸ்துதத்தைக் கூற அதனால் ப்ரஸ்துதம் தோன்றுதல் அப்ரஸ்துதப்ரசம்ஸாலங்கார மென்பது, ஒருசாரார்கொள்கை; அதனை இவர் ஒட்டணியில் அடக்கிவிட்டனர். ப்ரஸ்துதத்தால் அப்ரஸ்துதம் தோன்றின் ஸமாஸோக்தி யென்றும், அப்ரஸ்துதத்தால் ப்ரஸ்துதம் தோன்றின் அப்ரஸ்துதப்ரசம்ஸை யென்றும் வேறுபடுப்பர் பிறர்; இவர்க்கு இரண்டும் ஒட்டணியில் அடங்கினதால், அப்ரஸ்துதப்ரசம்ஸைக்கு வேறுஇலக்கணங் கூறினர்.

அது "இரவறியா யாவரையும் பின்செல்லா நல்ல, தருநிழலுந் தண்ணீரும் புல்லு-மொருவர், படைத்தனவுங் கொள்ளாவிப் புள்ளிமான் பார்மேற், றுடைத்தனவே யன்றோ துயர்" எனவரும். இரப்பவனைப் பழித்தற்கு மானைப் புகழ்ந்தது. (இரவு - இரத்தல். பின்செல்லல் - குறையுறுதல். துடைத்தல் - நீக்குதல்.)

(கு-பு.) இ-ள். இந்தப்புள்ளிமான்கள், இரத்தலை அறியமாட்டா; எவர் பின்னும் குறையுற்றுச்செல்லமாட்டா; நல்லமரத்தின்நிழலையும் குளிர்ந்தநீரையும் புல்லையும் ஒருவரீட்டியவற்றைக் கொள்ளாமல் தாமே பெறும்; ஆதலால், இவை பூமியில் துன்பத்தை யொழித்தனவன்றோ? எ-று. பிரபுக்களைச்சார்ந்து இரந்து அவர்பின்சென்றுநின்று குறையுறறுவருந்தும் யாசகனொருவன் தன்னை நிந்தித்தது, இது. இதில், மானைப் புகழ்தலால் யாசகனது நிந்தை தோன்றுதல் காண்க.

"போதுந் தளிரும் புனைந்து மணம்புணர்ந்து, சூதப் பணைதழுவித் தோன்றுமான் - மாதே, பலமா தவங்கள் பயின்றதோ பண்டிக், குலமா தவியின் கொடி" என்பதும் அது. (இ-ள். இந்தச் சிறந்த மாதவிக்கொடி, பூவினாலும் தளிரினாலும் அலங்கரிக்கப்பட்டு மணக்கோலத்தையுமுடையராய் மணஞ்செய்து தங்காதலரைத்தழுவிக்கொண்டுநின்ற நற்குலமடவாரைப் போலத் தானும் பூவினானுந் தளிரினானும் அலங்கரிக்கப்பட்டு நறுநாற்றக்கோலத்தையுடைத்தாய்ச் சூதப்பணைகளைச்சேர்ந்து தோன்றுகின்றன; ஆதலால், தோழீ! முற்காலத்திலே பலதவஞ்செய்தனவோ? சொல்லுவாயாக; எ-று.) இது - களவிற்கூடிவந்த தலைவியைப் பழித்தற்கு, மாதவியைப் புகழ்ந்தது. (சூதம் - மாமரம். பணை - கிளை. மாதவி - குருக்கத்தி. ஆல் - அசை.) (௮௨)

மாறுபடுபுகழ்நிலையலங்காரம் முற்றும்.

---

## உ௬. புகழாப்புகழ்ச்சியணி.

௫௭. பழிப்பது போலும் பான்மையின் மேன்மை
புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி.

என்பது: நிறுத்தமுறையானே புகழாப்புகழ்ச்சியென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-பு.) பழித்தல்போலும் பாகுபாட்டான் ஒன்றற்கு மேம்பாடுதோன்ற உரைப்பது, புகழாப்புகழ்ச்சியென்னும் அலங்காரமாம்; (எ-று.)

(கு-பு.) இதனை நுவலாச்சொல்லணியென வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் வியாஜஸ்துதி யெனப்படும். புகழ்ச்சியாற் பழிப்புத்தோன்றலை

யும், புகழ்ச்சியாற் புகழ்ச்சிதோன்றலையும் இதில் அடக்குவர் ஒருசாரார். நிந்தையால் நிந்தைதோன்றுதல், இதன் இனமாம்.

அது "போர்வேலின் வென்றதூஉம் பல்புகழாற் போர்த்ததூஉந், தார்மேவு திண்புயத்தாற் றாங்குவதூஉ - நீர்நாடன், தேரடிக்கூர் வெம்படையாற் காப்பதூஉஞ் செங்கண்மா, லோரடிக்கீழ் வைத்த வுலகு" எனவரும். (நீர்நாடன் - சோழன். போர்த்தல் - பரப்புதல். தாங்குதல் - எடுத்தல். தேரடிக்கூர்வெம்படை - தேர்க்காலொத்துக் கூர்த்த சக்கரம்)

(கு - பு.) இ - ள். நீர்வளப்பமுள்ள நாட்டையுடைய சோழன் போர்செய்யவல்ல வேலினாற் சயித்ததும், பலவகைப்புகழைப்பரப்பி அதனாலமூடியதும். மாலைபொருந்திய வலிய தோளினால் தாங்குவதும், தேர்க்காலின் பெயரையுடைய கூரியகொடியபடைக்கலத்தால் [சக்கராயுதத்தால்] காப்பதும், சிவந்த திருக்கண்களையுடைய திருமால் ஒருபாதத்தின்கீழ் அடக்கிய இப்பூமியேயாம்; எ - று. இங்கு, ஒருவர் ஓரடியின்கீழ்க்கொண்ட உலகைச் சோழன் பலவாறு சிரமப்பட்டுப் பரிபாலிக்கின்றனனெனப் பழித்தாற்போலக் கூறிய வாய்பாட்டால், "மடியிலாமன்னவனெய்து மடியளந்தான், றாஅய தெல்லா மொருங்கு" என்றபடி பூமிப்பரப்புமுழுவதையும் சோழன் ஒருவனே சக்கரவர்த்தியாய் அரசாளுகின்றனனென்ற புகழ்ச்சி தோன்றுதல் காண்க. புயத்தாற்றாங்குவது - தோள்வலிமையால் ஆட்கொள்வது. சக்கரத்தாற்காப்பது - ஆஜ்ஞாசக்கரத்தாற் பாலிப்பது.

"நினைவரிய பல்புகழார் நின்குலத்துத் தொல்லோ, ரனைவரையும் புல்லினா ளன்றே - மனுநூல், புணர்ந்த நெறியொழுகும் பூழியநீ யின்நாண், மணந்த தடமலராமேன் மாது" என்பதும் அது. (பூழியன் - சோழன். நீ இக்காலத்து உரிமைச்சுற்றமாகக் கைப்பிடித்த சீதேவியானவளே, நின்குலத்து முன்னோர்க்கும் மடவாள் என்றவாறு. தொல்லோர் - பழையோர். புல்லுதல் - தழுவுதல்.)

(கு - பு.) இ - ள். மனுதருமசாஸ்திரத்திற்கூறிய முறைமையின்படியே நடக்கின்ற சோழனே! உன்னால் இப்பொழுது உரிமையாகக்கொண்டு சேரப்பட்ட பெரியதாமரைமலரில்வாழுந் திருமகள், எண்ணுதற்குமரிய பலவகைப் புகழையுடையவராகிய உன்குலத்துமுன்னோரெல்லோரையும் உரிமைபூண்டு சேர்ந்தவளன்றோ? எ-று. இதில், உன்னால் உரிமையாகக்கொள்ளப்பட்டவள் பலர்க்கும் உரிமைபூண்டவள் என்று பழித்தாற்போலக்கூறியதனால், நீ பரம்பரையாகவுரிய அரசாட்சித்திருவைச் சேர்ந்தனையெனப் புகழ்ச்சிதோன்றுதல் காண்க.

அஃதேல், மேல்இலேசத்தின்பாற்படுத்துக்கூறிய பழிப்பதுபோலப்புகழ் புலப்படுத்தலோடு இப்புகழாப்புகழ்ச்சிக்கு வேற்றுமையும், புகழ்வதுபோலப் பழித்திறம்புனைதலோடு மேற்கூறிய மாறுபடுபுகழ்நிலைக்கு வேற்றுமையும் யாதோ வெனின்,—பழிப்பதுபோலப் புகழ்புலப்படுத்தல் - ஒன்றனையே பழித்தாற்போலப்புகழ்வது. புகழாப்புகழ்ச்சி - ஒன்றனைப்பழிக்க வேறொன்றற்குப் புகழாய்த் தோன்றுவது. புகழ்வதுபோலப்பழித்திறம்புனைதல் - ஒன்றனையே புகழ்ந்தாற்போலப் பழிப்பது. மாறுபடுபுகழ்நிலை - ஒன்றனைப்புகழ வேறொன்றற்குப் பழிப்பாய்த் தோன்றுவது எனஉணர்க. அல்லதூஉம், அவையிரண்டும் ஒருசாராசிரியர் இலேசத்தின்பாற்படுத்துக கூறினாரென்பது அறிவித்தற்கு ஆண்டுக்கூறப்பட்டது; ஒருசாராசிரியர் வேறுபடுத்து வேறலங்காரமென்று வேண்டுவரென்றது அறிவித்தற்கு ஈண்டுக் கூறப்பட்டதென்க. (அரு)

புகழாப்புகழ்ச்சியலங்காரம் முற்றும்.

RangaRakes tamilnavarasam.com

## கூ௦. நிதரிசனவணி.

ருஅ. ஒருவகை நிகழ்வதற் கொத்தபயன் பிறிதிற்குப்
புகழ்மை தீமை யென்றிவை புலப்பட
நிகழ்வ தாயி னிதரிசன மதுவே.

என்பது: நிறுத்தமுறையானே நிதரிசனமென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) ஒருவகையான்நிகழ்வதொன்றற்குப் பொருந்தியதொருபயனைப் பிறிதொன்றற்கு நன்மைபுலப்பட நிகழ்வதாதல, தீமைபுலப்பட நிகழ்வதாதல் செய்வதெனச் சொல்லுவது, நிதரிசனமென்னும் அலங்காரமாம்; (எ-று.)

(கு - பு.) நிதர்சநம் - வடசொல். இதனைத் தமிழில் காட்சியணியெனவும் சுட்டணியெனவும் வழங்குதலும் உண்டு. ஒன்றன்தொழிலால் ஒருநன்மையாயினும் தீமையாயினுங் காட்டப்படுவதாகக் கூறுவது, இதன் இலக்கணம். இதற்கு வேறுவகையிலக்கணமுங் கூறுவர் ஒருசாரார்.

அவற்றுள்,

(க) புகழ்மை—"பிறர்செல்வங் கண்டாற் பெரியோர் மகிழ்வுஞ், சிறியோர் பொறாத திறமு - மறிவுறீஇச், செங்கமல மெய்ம்மலர்ந்த தேங்குமுத மெய்யசந்த, பொங்கொளியோன் வீறெய்தும போது" எனவரும். (பொங்கொளியோன் - ஆதித்தன். வீறெய்துதல் - கதிர்விரித்தல்.)

(கு - பு.) இ - ள். பிறர்க்குச் செல்வஞ்சேரக் கண்டால் பெரியோர்மகிழ்வதையும் சிறியோர்பொறாமைகொள்வதையும் தாம் அறிவித்து, முறையே, சூரியன்உதயமாம்பொழுது செந்தாமரைகள் மலர்ச்சிபெற்றன; தேன்பொதிந்த ஆம்பல்கள் குவிந்தன; எ - று. இது - நற்பொருட்காட்சி.

(உ) தீமை—"பெரியோ ருழையும் பிழைசிறி துண்டாயி, னிருநிலத்துள் யாரு மறிதல் - தெரிவிக்குந், தேக்குங் கடலுலகில் யாவர்க்குந் தெள்ளமுதம், வாக்கு மதிமேன் மறு" எனவரும். (இ - ள். மதியத்தின்மீதுஉண்டாகிய மறு, பூமிக்கண்உண்டாகிய பெரியோரிடத்துக் குற்றங்கள் மறைத்தற்கரிதாய் யாவர்க்கும் புலப்படுமென்பது தெரியச்சொல்லுவதுபோ லிருந்தது; எ-று. உழை - இடம். இருநிலம் - பெரியநிலம். தெரிவித்தல் - தெரியக்காட்டுதல். தெள்ளமுதம் - தெள்ளிய அமுதம். வாக்குதல் - ஒழுக்குதல்.)

(கு - பு.) இ - ள். நிறைந்தகடல்சூழ்ந்த உலகத்தில் தெளிவான அமிருதத்தை(த் தன்கிரணங்களாலே) யாவர்க்கும் பொழிகின்ற சந்திரனிடத்து உள்ள களங்கமானது, மேலானவரிடத்துச் சிறிதுகுற்றம்உண்டானாலும் அது பெரிய உலகத்தில் எல்லோராலும்அறியப்படுமென்பதைத் தெரிவிக்கின்றது; எ - று. மறுவிளங்குதல் பிழைவிளங்குதலைஉணர்த்துவதுபோலு மென்க. இது - தீப்பொருட்காட்சி. (அக)

நிதரிசனவலங்காரம் முற்றும்.

---

## கூக. புணர்நிலையணி.

ருகூ. வினைபண் பெனவிவை யிருபொருட் கொன்றே
புணர மொழிவது புணர்நிலை யாகும்.

என்பது: நிறுத்தமுறையானே புணர்நிலையென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) வினையானும் பண்பானும் இரண்டுபொருளுக்கு ஒன்றேபொருந்தச் சொல்லுவது, புணர்நிலையென்னும் அலங்காரமாம்; (எ - று.)

RangaRakes tamilnavarasam.com

(கு - பு.) இதனை ஒருங்கியலணியெனவும், உடனிகழ்ச்சியணியெனவும் வழங்குதலும் உண்டு. இது வடமொழியில் ஸஹோக்தி யெனப்படும். இரண்டுவிஷயங்களைச் சொல்லவேண்டி, இதனோடுஇதுஎனப்புணர்த்துக்கூறுதல், இதன் இலக்கணம். 'வினைபண்பெனுமிவை' என்றும் பாடமுண்டு.

அவற்றுள்,

(க) வினைப்புணர்நிலை—"வேண்டுருவங் கொண்டு கருகி வெளிபரந்து, நீண்ட முகிலுடனே நீர்பொழிந்த - வாண்டகையோர், மேவல் விரும்பும் பெருநசையான் மெல்லாவி, காவல் புரிந்திருந்தோர் கண்" எனவரும். (இ - ள். தான்வேண்டியஉருவத்தைக் கொண்டு கறுத்தநிறத்தையுடையதாய் ஆகாயத்திலே பரந்து பெரிதாயிருக்கப்பட்ட மழைமுகிலுடனே நீர்பொழியாநின்றன, பிறரிச்சிக்குந்தன்மையையுடைத்தாகிய உருவத்தை யுடைத்தாய் அலங்கரித்தெழுதப்பட்ட மையோடு கூடிய வெண்மையா னீண்டிருக்கப்பட்ட கண்கள்; எ - று. ஆண்மைத்தன்மையையுடையதலைவரைச் சேரதலை விரும்பிய காதலாலே தம்முடைய மெல்லிய உயிர் போகாதபடி காக்குந்தொழில் மிக்கிருக்கின்ற மடவாருடைய கண் ணெனக் கூட்டுக.

(கு - பு.) இதில், முகிலுடனே கண் நீர்பொழிந்த என வந்தமை காண்க. தலைவரைப்பிரிந்த தலைவியர், அவர்மீண்டுவருவதாகக் குறித்த கார்காலம் வந்தவுடனே அவர்வாராமைபற்றிக்கண்ணீர்சொரிந்தன ரென்பது கருத்து. இதில் முன்னிரண்டடியின் சிலேடை இவ்வணிக்கு உதவியாய் நின்றது. சிலேடையின்றியும் இவ்வணி வரும். கொண்டு, கருகி, பரந்து, நீண்ட, நீர்பொழிந்த என்ற வினைகளில் உடனிகழ்ச்சி சொல்லியதனால், வினைப்புணர்நிலையாயிற்று.

(உ) பண்புப்புணர்நிலை—" பூங்காவிற் புள்ளொடுங்கும் புன்மாலைப் போழ்துடனே, நீங்காத வெம்மையவாய் நீண்டனவாற்-றாங்காதல், வைக்குந் துணைவர் வருமவதி பார்த்தாவி, யுய்க்குந் தமியோ ருயிர்" எனவரும். (இ-ள். காதலிக்கப்பட்ட துணைவர் வருங் காலம் பார்த்திருந்த மடவாருடைய உயிரானது, பூம்பொழிற்கண்ணே புட்களெல்லாம் ஒடுங்கப்பெற்ற மாலைப்பொழுதுடனே, நீங்காததுயரஞ்செய்து தானுங் கழியாதேநின்றது; எ - று.)

(கு - பு.) துணைவர்- கணவர். ஆவிஉய்க்கும் தமியோர்- உயிர்வைத்திருக்கும் தனித்தமகளிர். இதில், மாலைப்பொழுதுடனே உயிர் நீங்காத வெம்மையவாய் நீண்டன என வந்தமை காண்க. வெம்மையும் நீட்சியும் பண்பாதலால், பண்புப்புணர்நிலை யெனப்பட்டது. அவதி - எல்லை; வடசொல். 'வரும்வழி' என்றும், 'வருமாறு' என்றும் பாட முண்டு. 'தமியேனுயிர்ப்பு' என்பது, ஒரு பிரதியின் பாடம்.

'ஒன்றேமொழிவது' என்றொழியாது 'புணரமொழிவது' என்ற மிகையான், மூன்றும்வேற்றுமை அதனோடியைந்த வொருவினை யெனப் பொருள்பட வரினே இவ்வலங்காரமாவது எனக் கொள்க.

(கு - பு.) ஒடு, ஓடு, உடன், ஒருங்கு என்ற ஒருவினையொடுச்சொற் பெற்றே இவ்வணி வரும். (அரு)

புணர்நிலையலங்காரம் முற்றும்.

---

## ௩உ. பரிவருத்தனையணி.

சுo. பொருள்பரி மாறுதல் பரிவருத் தனையே.

என்பது:நிறுத்தமுறையானே பரிவருத்தனையென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

RangaRakes tamilnavarasam.com

(இ - பு.) பொருள்கள் ஒன்றற்கொன்றுகொடுத்து ஒன்றுகொண்டனவாகச் சொல்லுவது, பரிவருத்தனையென்னும் அலங்காரமாம்; (எ - று.)

அது "காமனை வென்றோன் சடைமதியுங் கங்கையுந், தாம நிழலொன்று தாங்கொடுத்து - நாமப், பருவா ளரவின் பணமணிக டோறு, முருவா யிரம் பெற் றுள" எனவரும். (இ - ள். காமனைவென்ற முக்கட்கடவுளுடைய சடைமீது உண்டாகிய மதியும் கங்கையும், வருத்தஞ்செய்யுந் தன்மையுடைத்தாய்ப் பெரிதாயிருக்கப்பட்ட ஒளியினையுடைத்தாய் அங்கேயிருந்த அரவின் படங்களி லுண்டாகிய மணிகடோறும் தத்தம் உருவத்தைக் கொடுத்து ஆயிரமாயிரம் உருவத்தைப் பெற்றன; எ - று.)

(கு - பு.) பரிவர்த்தநா - வடசொல். இது வடமொழியில் பரிவ்ருத்தியெனவும்படும். இதனைத் தமிழில் பரிமாற்றவணி யெனவும், மாறாட்டணியெனவும், மாற்றுநிலையணியெனவும் வழங்குதலும் உண்டு. பொருளை மாற்றிக் கொண்டதாகக் கூறுவது, இதன் இலக்கணம். இது பெரும்பாலும் சிறியதைக் கொடுத்துப் பெரியதைவாங்கியதாகவே வரும். மாறிவருதல், சிறுபான்மை. சமமும் உண்டு. இதில், ஒருருவங்கொடுத்துப் பலவுருவம் பெற்றன வென வந்தமை காண்க. பிரதிபிம்பத்தோற்றத்தை இங்ஙனங் கூறினர். நாம - அச்சம்; அ - சாரியை. "சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறா, நோயும் பசலையுந் தந்து", "சிந்தனை யுனக்குத் தந்தேன் திருவரு ளெனக்குத் தந்தாய்,வந்தனை யுனக்குத் தந்தேன் மலரடி யெனக்குத் தந்தாய், பந்தனை யுனக்குத் தந்தேன் பரகதி யெனக்குத் தந்தாய்" என்பனவும் இதற்கு உதாரணமாம். (அசு)

பரிவருத்தனையலங்காரம் முற்றும்.

---

## ௩௩. வாழ்த்தணி.

௬௧. இன்னார்க் கின்ன தியைக வென்றுதா
முன்னியது கிளத்தல் வாழ்த்தென மொழிப.

என்பது: நிறுத்தமுறையானே வாழ்த்தென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) இன்னதன்மையர்க்கு இன்னது நிகழ்க என்று கவிகள்தாம் கருதியதனை விதிப்பது,வாழ்த்தென்னும் அலங்காரம் என்று சொல்லுவர் (புலவர்.)

(கு - பு.) இது வடமொழியில் ஆசியெனப்படும். வாழ்த்துக்கூறுதல், இதன் இலக்கணம். இதனைப் பலர் அலங்காரமாகக் கொண்டிலர் வாழ்த்து என்பது - ஒரு பொருளிலக்கணத்துறைவகையாம். 'முன்னியதுவிரித்தல்' என்றும் பாட முண்டு.

அது "மூவாத் தமிழ்பயந்த முன்னூன் முனிவாழி, யாவாழி வாழி யருமறையோர் - காவிரிநாட், டண்ண லனபாயன் வாழி யவன்குடைக்கீழ், மண்ணுலகில் வாழி மழை" எனவரும். (முன்னூன்முனி - அகத்தியன்.)

(கு - பு.) இ - ள். அழியாத தமிழ்ப்பாஷையை வளர்த்த பழையநூல்களையுணர்ந்தஅகத்தியமுனிவர் வாழ்க; பசுக்கள் வாழ்க; அரியவேதங்களையுணர்ந்த அந்தணர் வாழ்க; காவிரிசூழ்ந்த சோழநாட்டுக்குத் தலைவனான அநபாயனென்னுஞ்சோழன் வாழ்க; அவனரசாட்சிக்கு உட்பட்ட உலகத்தில் மழை வாழ்க; எ - று. 'முந்நூன்முனி' என்ற பாடத்துக்கு - இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்னும் மூவகைநூலுக்கும் உரிய முனி யென்க;முந்நூல்-முப்புரிநூலுமாம். பயந்த - தந்த. (அஎ)

வாழ்த்தலங்காரம் முற்றும்.

RangaRakes tamilnavarasam.com

## ௩௫. சங்கீரணவணி.

௯௨. மொழியப் பட்ட வணிபல தம்முட்
டழுவ வுரைப்பது சங்கீரணமே.

என்பது: நிறுத்தமுறையானே சங்கீரணமென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - பு.) மேற்சொல்லப்பட்ட அலங்காரங்கள் பலவும் தம்முட்பொருந்த உரைப்பது, சங்கீரணமென்னும் அலங்காரமாம்; (எ - று.)

(கு - பு.) ஸங்கீர்ணம் - வடசொல். இதனைத் தமிழில் விராவணியென்றும், விரவியலணியென்றும் வழங்குதலும் உண்டு. பலஅணிகள் ஒருங்குபொருந்திவருதல், இதன் இலக்கணம். 'சித்திரவர்ணம்போலவும், நவமணிமாலைபோலவும், இது தனியலங்காரமாயிற்று' என்பர். முத்தும்பவழமும்போல வேற்றுமைதோன்றச் சேர்ந்ததும், பாலும்நீரும்போல வேற்றுமை தோன்றாது ஒற்றுமைப்படக்கலந்ததும் என இதனை இருவகையாக்கி, முன்னதைச் சம்சிருஷ்டியென்றும், பின்னதைச் சங்கரமென்றும் கூறுவாருமுளர். அவை தமிழில் முறையே சேர்வையணியும், கலவையணியும் எனப்படும். பொருளணிகள் பல சேர்ந்துவருதலும்,சொல்லணிகள் பல சேர்ந்துவருதலும்,சொல்லணியும் பொருளணியுஞ் சேர்ந்துவருதலும், ஓரணி தலைமைத்தாயும் ஒழிந்தவணிகள் தலைமையில்லனவாயுங் கலந்துவருதலும், பலவணிகளுந் தலைமையுடையனவாய்க் கலந்துவருதலும், இதுவோ அதுவோ என்று ஐயப்படும்படி பல அணிகள்கலந்துவருவதும் முதலாக இது பலவாற்றான் விகற்பிக்கப்படுதலும் உண்டு. 'தழுவவைப்பது' என்றும் பாடம்.

அது "தண்டுறை நீர்நின்ற தவத்தா லளிமருவு, புண்டரிக நின்வதனம் போன்றதா - லுண்டோ, பயின்ற ருளம்பருகும் பான்மொழியாய் பார்மேன், முயன்றான் முடியாப் பொருள்" எனவரும். (இ - ள். குளிர்ந்த துறைநீரிலே தவம்புரிந்தவிதனாலே வண்டுமருவப்பட்ட தாமரை நின்முகமண்டலத்தையொப்பப்பெறுதலால், அணைந்தாருள்ளத்தை வவ்வும் பால்போன்ற மொழியினையுடையாய்! உலகத்தில் முயற்சியான் முடியாத பொருள் யாது மில்லை; எ - று. உண்டோ என்ற வினா, இல்லையென்றவாறு.) இதனுள், 'தண்டுறை நீர்நின்றதவம்' என்பது - தற்குறிப்பேற்றம். 'தவத்தால்' என்பது - காரகவேது. 'அளிமருவு' என்பது - சிலேடை. 'புண்டரிகநின்வதனம்போலும்' என்பது - உவமை. 'உண்டோமுயன்றான்முடியாப்பொருள்' என்பது - வேற்றுப்பொருள்வைப்பு. 'உளம்பருகும்பான்மொழியாய்' என்பது - சுவை. இவ்வண்ணமே பலஅலங்காரங்களுங் காண்க.

(கு - பு.) அளிமருவு என்பதற்கு - அருள்பொருந்திய என்றுங் கொள்க.

இது, உறுப்பனைத்துங் கூட்டிய கலவை போல்வதோர் தன்மைத்தாய், ஒன்றற்கு மிகுதிதோன்றாமல் உரைப்பதாமெனக் கொள்க. அல்லதூஉம், சந்தனத்தோடு கருப்பூரம் விரவினும் மான்மதத்தோடு கருப்பூரம் விரவினும் சந்தனமும் மான்மதமும் எனபதல்லது கலவையெனப்படா; அவ்வாறே இரண்டு அலங்காரம் கூடின் இவ்வலங்காரமெனப்படாது: பலஅலங்காரங்களும் இரண்டிறந்தனவே கூடின் இவ்வலங்காரமாவது. இரண்டிறந்த பல என்பதே ஈண்டு ஆசிரியர்கருத்து எனக் கொள்க.

(கு - பு.) கலவை - பலவகைவாசனைப்பொருள்களுங் கலந்த சந்தனம். கருப்பூரம் - பச்சைக்கர்ப்பூரம். மான்மதம் - கஸ்தூரி. இரண்டிறந்தன - இரண்டுக்குமேற்பட்டன. எனவே, இரண்டுஅணி தம்முட்கூடிவருவனவாக மேற்கூறியனவெல்லாம் சங்கீரணமெனப்படா வென்பது கருத்து. (அஅ)

RangaRakes tamilnavarasam.com

## உவமையுருவகங்கட்குப் புறனடை.

௬௩. ஒப்புமை யில்லது மையமு முவமையிற்
செப்பிய திறமு முவம வுருவக
முருவகத் தடக்கலு முணர்ந்தனர் கொளலே.

**இது: உவமையுருவகங்களைக்குறித்ததோர்புறனடையுணர்த்துதல் நுதலிற்று.**

ஒப்புமையில்லதுஎன்பது - பொதுநீங்குவமை; அது *"தானே யுவமை தனக்கு" எனவரும். ஐயமென்பது - ஐயவுவமை; அது †"காதளவிவண்டு ........உளம்" எனவரும்; இதனுள், தாமரைகொல் முகங்கொல் என்பது - ஐயம். இவையிரண்டும், முன்னர் உவமையினைத்திற்கும்பொதுவாக ஓதிய சூத்திரத்துள் 'பண்பு தொழில் பயன் என்பன காரணமாக ஒன்றாகியும் பலவாகியும் வரும் பொருளோடு பொருள் இயையவைத்து ஒப்புமைபுலப்படஉரைப்பதே உவமை' என்பதே கொண்டு, 'பொதுவாகியகுணம் முதலாகியன காரணமாகப் பொருளோடு பொருள் இயையவைத்து ஒப்பித்தனவில்லை' என்று குற்றங்கூறப்படாது. என்னையெனின், — 'தானேயுவமைதனக்கு' என்றவழியும், ஒக்கும் பொருளையெடுத்தே அவற்றினுஞ் சிறந்தது இஃது என்று உரைத்ததனையே; அவற்றோடு ஒப்புமைவேண்டியதிலனாயின் முன்னர்க்கூறான்: அதனால், பொருளோடு பொருள் இயையவைத்து அவற்றின்ஒப்புமைகருதியே உரைத்தானும் எனக்கொள்க. ஐயவுவமையும், 'தாமரைகொல் முகங்கொல' என்றவழித் தாமரைக்கும் முகத்திற்கும் பொதுவாகியதொருதன்மை கருதியே யுரைத்தது; அவ்வாறன்றேல், தாமரையோடு முகத்திடை ஐயந்தோன்ற உரையா னென்பது.

இனி, உவமவுருவகம் ‡"வதனமதிய முதயமதியமே யொக்கும்" என்றவழி, முன் குணப்பொருளை முக்கியப்பொருளோடு உருவகஞ்செய்து 'வதனமதியம்' என்றான், பின்னர் முக்கியப்பொருளோடு உவமித்து 'உதயமதியமே யொக்கும்' என்றான் என்பது. எனவே, முன்னர் உருவகஞ்செய்த அதனைப் பின்னரும் உவமிப்பது புனருத்தமாம்பிற வெனின்,—ஆகாது. அஃதுஓர்சொல்லுதல்வகைமையான், முன்னர் இயல்பாகியவிளக்கமும் கிளர்ச்சியும் குளிர்ச்சியும்நோக்கி முக்கியப்பொருளோடு குணப்பொருளை ஒற்றுமைகொளுத்தி உருவகஞ்செய்து, பின்னரும் செயற்கையால்உளவாகிய மதர்ப்புஞ் செம்மையும் நோக்கி 'மதுநுகர்ந்தார்முகம் உதயமதியம்போலும்' என்று உவமித்தமையின், வேற்றுமையுடைத்தாதலால், உருவகத்துள்ளே அடக்கப்பட்டது. உவமைப் பாற்படுப்பினும் இஃதுஒக்கும். (புனருக்தம்-கூறியதுகூறல் என்னுங் குற்றம்.)

'ஐயமும் ஒப்புமையில்லதும்' என்னாது, முறைபிறழக்கூறியவதனான்,இவ்வோத்தின்ஒழிபுள்ளன தழீஇக்கொள்க என்பது. அவை - இடத்திற்கேற்றவுவமையும், காலத்திற்கேற்றவுவமையும், பொருளிற்கேற்றவுவமையும், பண்பிற்கேற்றவுவமையும், சாதிக்கேற்றவுவமையும், மரபிற்கேற்றவுவமையும், பிறவாறும் பொருத்தமுடையன சிறப்புடையன வெனக் கொள்க. (ஓத்து - இயல்.)

அவற்றுள், (௧) இடத்துக்கு ஏற்றது - "பரற்பகை யுழந்த நோயொடு சிவணி, மரற்பழுத் தன்ன மறுகுநீர் மொக்குள்" என்பது. (௨) காலத்துக்கு ஏற்றது - §"கிழறகோபமல்க" என்பது. (௩) பொருளுக்கு ஏற்றது - "கடலு மலையும் போலக் கரியோய்" என்பது. (௪) பண்பிற்கு ஏற்றது - "புலிநா

* இதுவருஞ்செய்யுளை இப்புத்தகத்தின் ௪௧ - ஆம் பக்கத்திற் காண்க.
† இச்செய்யுள்முழுவதையும் இப்புத்தகத்தின் ௩௭ - ஆம் பக்கத்திற் காண்க.
‡ இது வருஞ்செய்யுளை இப்புத்தகத்தின் ௫௯ - ஆம் பக்கத்திற் காண்க.
§ இச்செய்யுள்முழுவதையும் இப்புத்தகத்தின் ௬௧-ஆம் பக்கத்திற் காண்க.



RangaRakes tamilnavarasam.com

வன்ன புல்லிதழ்த் தாமரை" என்பது. (ஞ) சாதிக்கு ஏற்றது - "சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ், நூற்றித ழலரி னிரைகண் டன்ன, வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து, வீற்றிருந் தோரை யெண்ணுங் காலை" எனவும், "விலங்கொடு மக்க ளனையர்" எனவும் வரும். (சு) மரபிற்கு ஏற்றது - "கவிர் போலுஞ் செவ்வாய்" எனவும், "பவளம்போலுஞ் செவ்வாய்" எனவும் வரும்: இவை செம்பருத்தியும் கரவீரமும் உரையாமையின். பிறஅலங்காரங்கட்கும் இவ்வாறே ஏற்புடைமை அறிந்து பாடுவன சிறப்புடையன வெனக் கொள்க.

அல்லதூஉம், பண்பு தொழில் பயன் என்பனவற்றின்மேல் நிகழுஞ் சொல் லின்றி அவற்றிற்கு முதலாகிய பொருள் கூறவே அவ்வாற்றாற் பண்புமுதலா யின பெறப்படும் உவமையும் உள. அவை வருமாறு:—"மயில்போன் மடப் பிடிபோன் மான்போன் மழலைக், குயில்போ லொளிர்மென் கொடிபோற் - பயிலுங், கொலைவா ரணத்துங்கன் கோழிக்கோன் கொல்லி,மலைவாணர் காதன் மகள்" என வரும்; இதனுள், மயில்போலும் இயலினையுடையாள் எனவும், பிடிநடைபோலும் நடையினையுடையாள் எனவும், மானோக்குப்போலும் நோக் கினையுடையாள் எனவும், குயின்மொழிபோலும் மொழியினையுடையாள் என வும் கொள்ளக்கிடந்தமை அறிந்துகொள்க; என்னை? *"சுட்டிக் கூறா வுவமை யாயிற், பொருளெதிர் புணர்த்துப் பொருந்துவ கொளலே" என்பவாகலின்.

(கு - பு.) (க) சுக்கான்கல்லாகிய பகையாலே வருந்தின நோயோடே பொருந்தி மரல்பழுத்தாற்போன்ற துளும்புநீரையுடைய கொப்புளம் என்று பொருள். பரல் - ஒருவகைக்கல். மரல் - ஒருவகைக்கற்றாழை. இவ்வடிகள் பொருநராற்றுப்படையில் கடுஞ்சுரத்தைக் கூறுமிடத்து உள்ளன. ஆகவே, அக்காட்டிடத்து நடத்தலாற் காலிலுண்டாகும் கொப்புளத்துக்கு அவ்விடத்து உண்டாகும் மரலென்னுங் கற்றாழையை உவமைகூறியது, இடத்துக்கு ஏற்ற தாம். சீவகசிந்தாமணியில் கோவிந்தையாரிலம்பகத்தில் இடையாதலைவனை நந்தகோனைக் கூறுமிடத்து "ஆய்ந்தியர்தலைக்கு ஆசெல்தூணனுன்" என்று அவனுக்கு ஆதீண்டுகுற்றியை உவமைகூறியதும், மற்றும் அவ்விலம்பகத்தில் "ஆயர் மத்தெறிதயிரினுயிஞர்"என்றதும், வில்லிபுத்தூரார்பாரதத்து நிரைமீட் சிச்சருக்கத்தில் "முந்தவான்றெறுமீட்டலு முற்கவர்பொதுவர், வெந்தநெய் யென வாரவமடங்கினர் மிகவு, மந்தநெய்யினிற் பாற்றுளியுகுத்தென வார்த் தார், வந்தமசசர்கோமகனெடும்வந்த கோபாலர்" என்றதும், இடத்துக்கு ஏற்ற உவமையாம்; இவற்றைச் சாதிக்குஏற்றனவெனினும் அமையும். (உ) "நிழற் கோபமல்க" என்ற செய்யுள் - கார்காலவர்ணனை. அதில் அக்காலத்துக்கு உரிய இந்திரகோபமும், காயாமலரும், தோகைவிரித்தாடும்மயிலும் என்பவற் றை எடுத்து அக்காலத்திற் பெரும்பாலும் தழலில்தோன்றியபுகையையூட்டுங் குழலையுடைய மகளிரோடு ஒப்பித்துக்கூறியமை காண்க. (ங) கடலும் மலை யும்போலக் கருநிறமுடையவனே! அல்லது,அவைபோலப் பெருமிதத்தோற்ற முடையவனே! என்று பொருள். இது, உவமேயத்தின்நிலைமைக்கு ஏற்ற உவ மையாம். (ச) புலியினது நாக்கை யொத்த நெருங்கியஇதழ்களையுடைய தா மரை யென்று பொருள். இதில் வந்த உவமை, செந்நிறமிகுதிக்கும் மென்மைத் தன்மைக்கும் ஏற்றதாம். (ஞ) சேற்றில்வளருந்தாமரைபூத்த ஒள்ளியநிறத்தை யுடைய நூறுஇதழ்களையுடைய மலரினது வரிசையைக் கண்டாற்போன்ற ஏற்றத்தாழ்வில்லாத சிறந்தகுடியிற் பிறந்து வீற்றிருந்த அரசர்களை எண்ணுங் காலத்து என்று பொருள். இதில் வந்த உவமை சாதிகௌரவத்துக்கு ஏற்ற தாதல் காண்க. "விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல், கற்றாரோ டேனை யவர்" என்ற திருக்குறளுக்கு-மிருகங்களினும் மனிதர் எவ்வளவுசிறப்புடைய

* தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமவியல், எ.

ரோ அவ்வளவு இழிவுடையர் சிறந்தநூல்களைக் கற்றவரினுங் கல்லாதவர் என்று பொருள். இங்குப் படியாதமனிதசாதிக்கு விவேகமில்லாத மிருகசாதியை உவமைகூறியது ஏற்குமாறு காண்க. இனி, சீவகசிந்தாமணியில் கோவிந்தையாரிலம்பகத்தில் "ஒருவன் றேறினுடைதுஞ் சுடுவிற்றே னுடைந்த தொப்பவே" என்று வேடர்கள் ஒருசேர்வீரனாற் கெடுதற்குத் தீச்சுடுதலால் தேனீயினங் கெடுதலை ஒருவேட்டுவனிமித்திகன் உவமைகூறியதும், "மத்தம் புல்லிய கயிற்றின் மற்றவ, ரத்தலை விடி னித்தலை விடார்" என்று வேடர்கள் அப்பக்கத்தை நெகிழவிட்டால் இப்பக்கத்தை நெகிழவிடாமைக்கு மத்தைச்சுற்றிய கடைகயிற்றை இடையர்கள் உவமைகூறியதும், இடையர்தலைவனான நந்தகோன் தன்மகளைப்பற்றிக் கூறுமிடத்து "வெண்ணெய்போன் றூறினியள் மேம்பால்போல் தீஞ்சொல்லள், உண்ணவுருக்கிய வானெய்போல் மேனியள்" என்று வெண்ணெய் பால் நெய் இவற்றை உவமைகூறியதும், "ஊழிதோ றூழிவுந் தோழும் போன் றுடன்மூக்க" என்று இடைச்சியர் மணமகளையும் மணமகனையும் பசுவுந் தொழுவும் போலச் சேர்ந்துவாழ்க வென்று வாழ்த்தியதும் சாதிக்குஏற்ற உவமையாதல் காண்க. (௩) கவிர் - முருக்கிதழ். கரவீரம் - செவ்வலரி. செம்பருத்தியையும் செவ்வலரியையும் வாய்க்கு உவமைகூறுதல் மரபன் றென்றும், முருக்கிதழையும் பவழத்தையும் வாய்க்கு உவமைகூறல் மரபென்றும் உணர்க.

இயல் - சாயல். பிடி - பெண்யானை. மழலை - நிரம்பாமென்சொல். பகைவரைக்கொல்லுதற்குரிய யானையையுடைய சிறந்தவனும் கோழியென்னும் படைவீட்டிற்குத் தலைவனுமான அரசனது கொல்லிமலையில் வாழும் வேட்டுவருடைய அழகியபெண் மயில்முதலியனபோலப் பயிறுமென்க. தொல்காப்பியச் சூத்திரத்தின் பொருள்: உபமானத்திற்கும் உபமேயத்திற்கும் பொதுவாகிய ஒப்புமைத்தன்மையை விவரித்துச்சொல்லாதவிடத்து அவ்விரண்டையும் ஒப்பிட்டு நோக்கி அவ்விடத்துக்குப் பொருந்தியதன்மையைக் கொள்ளவேண்டுமென்பது. 'பவளம்போற் செந்துவர்வாய்' என்பது - இரண்டுக்கும் பொதுவாகிய செம்மைகுணத்தைச் சொல்லியே உவமஞ்சொன்னமையால், சுட்டிக்கூறியஉவமம். அது 'பவளவாய்' என்கின்றவழிச் சுட்டிக்கூறாஉவமமாம். அங்குப் பவழத்தையும் வாயையும் ஒப்பிட்டுப்பார்த்துச் செம்மைகுணம்பற்றி உவமஞ்செய்தது தென்று அறியவேண்டும். அல்லாக்கால், வலியபவழத்திற்கும் மெல்லிய வாயிதழுக்கும் உள்ளதோர் ஒப்புமை யில்லையா மென்க. (௩௧)

சங்கீரணவலங்காரம் முற்றும்.

## ௫௫. பாவிகவணி.

௬௬. பாவிக மென்பது காப்பியப் பண்பே.

இவ் வ...: நிறுத்தமுறையானே பாவிகமென்னும் அலங்காரம் உணர்த்

றனடை ?கமென்று சொல்லப்படுவது, பொருட்டொடர்நிலைச்செய்
ாகிய நுட கருதிச்செய்யப்படுவதொரு குணம்: (எ - று)
"கூட்டமு ர்நிலைச்செய்யுள் முழுவதும் நோக்கிக் கொள்ளப்படுவ
ழித ரே பண்ட டால் நோக்கிக் கொள்ளப் புலப்படாதது. "பிறனில்
றைத் கெடுப, பொறையிற் சிறந்த கவச மில்லை, வாய்மை
கொள் லை" என்பனபோலக் கிடப்பது.
த்தினி ாரச்சூத்திரத்துப் பிறஅலங்காரங்களுடன் வைத்த
பின்பின்னாக வைத்தது என்னை யெனின்,—பிற

RangaRakes tamilnavarasam.com

அலங்காரங்கள் ஒருபாட்டானே உணரப்புலப்படும்; இஃது அன்னதன்று ஆகலான். ஆசிரியன் வாழ்த்தென்னும் அலங்காரத்தின் பின்னரே சங்கீரணம் வைத்தது, முன்னரளவேவிரவுவனவென்பது அறிவித்தற்கும், இஃது அன்னதன்றென்பதற்கும், வேறுகத் தனித்து இலக்கியப்பாட்டின்றென்பது அறிவித்தற்கு மென்க.

(கு - பு.) பாவிகம் - வடசொல். இது, ஒருகாப்பியம்முற்றிலும் கவியின் கருத்தால் அமைந்ததோர் பண்பு; என்றுல், நூலில் தலைமையாகநின்ற சரித்திரமும், அதனைப்பற்றித் தொடர்ந்த சரித்திரமும் ஆகிய இவற்றுல் கவி கருதிய திறம் விளங்கும் வனப்பு என்றதாயிற்று: இராமாயணத்தில் பிரதானமான இராமசரித்திரத்தாலும், அதைத்தொடர்ந்த வாலிசுக்கிரீவாதியர்சரித்திரங்களாலும், சத்தியமும் தருமமும் கருணையும் வீரமும் கற்புநிலையும் உடன்பிறந்தோரொற்றுமையும் பழியச்சமும் அதருமத்தின்விளைவும் இழிசனரியற்கை இன்னபலவிஷயங்கள் கவிகருதியபடி அமைந்துதோன்றுவதைக் காண்க. பிறனமனைவியைவிரும்புவோர் சுற்றத்துடனேகெடுவ ரென்பது இராமாயணத்திலும், பொறுமைபோலச் சிறந்த பாதுகாவல் வேறில்லை யென்பது பாரதத்திலும், சத்தியத்தினுஞ் சிறந்ததோர் விருதில்லை யென்பது அரிச்சந்திரசரித்திரத்திலும் விளங்குமாறு அறிக. இவ்வணிக்கு வேறுவகையிலக்கணங் கூறுவர் ஒருசாரார்; அவ்விலக்கணத்தின்படி அது நிகழ்வினவிற்சியணி யெனப்படும்.

'முன் அதிகாரச்சூத்திரம்' என்றது, இவ்வியலின் முதற்சூத்திரத்தை. முன்னரளவே விரவுவன - முற்கூறிய முப்பத்துமூன்று அணிகளே ஒருங்கு கூடிவருதற்கு உரியன.

இங்ஙனம் முப்பத்தைந்து அலங்காரங்களும், அவற்றின்விகற்பங்களுமிய காட்டப்பட்டன. நூறறுப்பதினுறு அலங்காரங்களைக் காட்டினுரு முளர். அவற்றையும் ஏக்கபடி ஊகிந்து இவற்றுள் அடக்குக. என்னெனின், அலங்காரமென்பது, பொருளமைத்துக்கூறுந்திறத்தினுல் விளைவது: அத்திறமோ இன்னும்பலவகைப்படுத்தவுங் கூடியது; ஆதலின், அலங்காரங்களுக்கு அளவேயின்றும். ஆனதுபற்றி, மொழித்திறத்திற்போந்த சமத்காரநிலைமையைக்கொண்டு ஒன்றன்பாற்படுத்துக் கொள்ளவேண்டு மென்றது இவ்வாசிரியர்கருத்தென்க. கீழ்ப் பொதுவணியியலின் இறுதியில் "எற்ற செய்யுட் கியன்றவணியெலாம, முற்ற வுணர்த்தும் பெற்றிய தருமையிற், காட்டிய நடைநெறி கடைப்பிடித் திவற்றொடு, கூட்டி யுணர்த லான்றோர் கடனே" என்று புறனடை கூறியதும், மேற் சொலலணியியலின் இறுதியில் "மொழிந்த நெறியினொழிந்தவுங் கோட, லான்ற காட்சிச் சான்றோர் கடனே" என்று புறனடை கூறுவதுங் காண்க. மொழித்திறன் இருவகைப்படும். இயற்கை ... மொழியும், செயற்கைப்பொலிவுமொழியு மென. இயற்கைப்பொலிவு - ... மையணியொன்றே. *செயற்கைப்பொலிவோ உவமை முதலிய பலவுமாம் அவற்றுள் உவமையும் அதிசயமும் சிலேடையுமே பலவிகற்... அடியாம்.

மைத்
பகிறத்தை
...ற்போன்ற
...ள.

பாவிகவலங்காரம் முற்றும்.

---

பொருளணியியல் முற்றி...

வத்துக்கு ஏற்ற
ற்றுரொ டேனை
வளவுசிறப்புடைய

---

* இது, வடமொழியில் வக்ரோக்தி யென... ல், எ.
உசு-ஆம் பக்கத்தில் 'பிற வக்கிரநடையலங்காரங்கள்

RangaRakes tamilnavarasam.com

# அநுபந்தக் குறிப்பு.

ரு - ஆம் சூத்திரம்: — இதரவிதரவுவமத்துக்குத் தடுமாறுவமமென்னும் மறுபெயரு முண்டு; "தடுமாறுவமங் கடிவரை யின்றே" என்ற தொல்காப்பிய உவமவியற்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் இரண்டுவகை உரையெழுதி, அவ ற்றுள், உவமையைப் பொருளாக்கியும் பொருளை உவமையாக்கியுந் தடுமாறச் சொல்லுந் தடுமாறுவமத்துக்கு, இந்நூலில் இதரவிதரவுவமைக்கு உதாரணமா க் காட்டப்பட்ட "தனிபெற்றுவைகிய" என்ற செய்யுளையே உதாரணங்காட் என்புழி நீலத்தோடு கண்ணிணையும் கண்ணிணோடு நீலத்திணையும் ஒன்றற்கு ஒன்று உவமையாக்கியும் பொருளாக்கியும் ஒருங்கே தடுமாறக் கூறினமையின் இதுவும் தடுமாறுவமமெனப்பட்டது' என்று எழுதியுள்ளமை காண்க. ஐய வுவமையையும் தடுமாறுவமையென்றல் அவர்கொள்கை; மேற்காட்டிய சூத் திரவுரையில், அவர், உவமையும் பொருளும் வேறுநிறீஇ இதுபோலும் இது வென்றுது அவ்விரண்டினையும் உவமையுறச் சொல்லுந் தடுமாறுவமத்துக்கு "அரிமலர்ந் தன்னக ணம்மா கடைசி, திருமுகமுந் திங்களு நோக்கித் - தெரு மந்து, வையத்தும் வானத்துஞ் செல்லா தணங்காகி, வையத்து நின்ற தரா" ஞுஞ்செய்யுளை உதாரணங்காட்டி 'என்பதனுள் உவமையினையும் பொரு ளினையும் வேறுவேறுதுணியாது ஐயுற்று வையத்தும் வானத்துஞ் செல்லாது அரா என்றமையின் இது தடுமாறுவமமாயிற்று' என்றமையுங் காண்க.

ருக - ஆம் சூத்திரம்:—சிலேடையணி பெரும்பாலும் இருபொருள்பட்டு வருதலே யன்றிச் சிறுபான்மை இரண்டுக்குமேற்பட்ட பொருள்கள் படவும் வரும்; அனதுபற்றியே,"ஒருவகைச்சொற்றொடர் பலபொருட்பெற்றி, தெரிவு தரவருவது சிலேடையாகும்" என்று இலக்கணம்வகுத்துள்ளார்:"கொங்கையுங் கணுங் குதலையும், அங்கரும்பிணையாகுமால்" என்றவிடத்து 'அங்கரும்பிணை யாகும்' என்றது-அங்கு அரும்பு இணையாகும் என்றும், அம் கரும் பிணையாகும் என்றும், அம் கரும்பு இணையாகும் என்றும் பிரிபட்டு, முறையே, கொங்கை ...த்து இரண்டுஅரும்புகளாகு மென்றும், கண் அழகிய கரிய பெண்மா ...பார்வையா மென்றும், குதலை இனிய கருப்பஞ்சாற்றுக்கு ஒப்பானதா மென்றும் பொருள்படுதல் காண்க. இது - முப்பொருட்சிலேடை. இதற்கு ...ல் வரினுங் கண்டுகொள்க.

...றனடை:—தற்புகழ்ச்சிவகையாகிய தன்மேம்பாட்டுரையும், பிறகுறிப்பு ...ாகிய நுட்பமும், பரியாயமும், உவமவகையில்அடங்கக்கூடிய ஒட்டும், ...கூட்டமும், மூன்றும்வேற்றுமையுடனிகழ்ச்சிப்பொருள்பட வரும் ...பண்டமாற்றாகிய பரிவர்த்தனையும், ஆசீர்வசனமாகிய வாழ்த்தும் ...றைத் தனியே அணியாகக்கொள்ளுதல் தகுதியன் றென்பது ...கொள்கை, அதனை உவமவியலிறுதியில் நச்சினார்க்கினியர் ...த்தினிற் கூறுகின்ற உவமங்களுட் சிலவற்றையும், சொல்லதி

RangaRakes tamilnavarasam.com

காரத்தினுள்ளுஞ் செய்யுளியலுள்ளுஞ் சொல்லுகின்றன சிலபொருள்களையும் வாங்கிக்கொண்டு, மற்று அவை செய்யுட்கண்ணே அணியாமென இக்காலத்து ஆசிரியர் நூல்செய்தாருமுளர்: அவை ஒருதலையாகச் செய்யுட்கு அணி யென்று இலக்கணங்கூறப்படா; என்னை? வல்லார்செய்யின் அணியாகியும், அல்லார் செய்யின் அணியன்றாகியும் வரும், தாங்காட்டிய இலக்கணத்திற் சிதையாவழியும் என்பது' என்றும், 'அல்லதூஉம், பொருளதிகாரத்துட் பொருட்பகுதிகளெல்லாம் செய்யுட்கு அணியாகலான், அவை பாடலுட் பயின்றவை யெனப்பட்டன;என்றதனான், அவையெல்லாம் தொகுத்து அணியெனக்கூறாது வேறு சிலவற்றை வரைந்து அணியெனக் கூறுதல் பயனிலகூற்றா மென்பது' என்றும், 'இனி, இரண்டுபொருள் எண்ணி அவற்றை வினைப்படுக்குங்கால் 'ஒருங்கு' என்பதோர் சொற் பெய்தல் செய்யுட்கு ஓர் அணியென்ப; பிறவும் இன்னோரன்ன பலவும் செய்யுட்கு அணியா மென்பது அவர் கருத்து: ஒருங்கு';என்பதே யன்றி மூன்றுதாழிசையுள் மூன்றுபொருள்கூறி 'எனவாங்கு' என்பதொரு சொல்லான் முடிந்தவழியும் ஓரலங்கார மெனல் வேண்டு மாகலான், அவ்வாறு வரையறுத்துக்கூற அமையா தென்பது. பிறவுமன்ன' என்றும், 'இனிச் செய்யுட்கு அணிசெய்யும் பொருட்படையெல்லாங் கூறாது சிலவேகூறி யொழியின் அது குன்றக்கூறலா மென்பது' என்றும், 'இனி இங்ஙனங் கூறினவெல்லாம் குற்றமென்று கொள்ளப்படா; என்னை? வேறுகாரணம் உணரப்பெறாது பிறழ்ந்து இடையறவுபட்டகாலை இடர்ப்பட்டுச் செய்தனவாதலான், அவையும் அவ்வாற்றான் அமையு மென்பது' என்றுங் கூறியதனானும், பிறவாற்றானும் அறிக.

RangaRakes tamilnavarasam.com